826

T.N.L.A.D

OFFICIAL REPORT

C

VOl-18 NO-2

MAR-1992

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அதே
நிலைதான் என்று நீங்கள் சொல்கிறபோது அதற்கு பொறுப்
பேற்றுக் கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் நான்
அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு). சாதாரண
மாக அடுக்குமாடிக் கட்டிடங்களாக வீடு கட்டியிருக்கிற இடத்தி
லேகூட, 20, 30 குடும்பங்கள் ஒன்றாக இருக்கின்ற இடங்
களிலே ஒரே மீட்டரை வைத்து, ஒட்டு மொத்தமாக ஆகிற
அந்த மீட்டர் சார்ஜை பகிர்ந்துகொள்கிற முறை கூட
இருக்கிறது. எனவே, துறையினுடைய சார்பாக அந்தப்
பணம் வசூலிக்கப்படவில்லை. அது, எலக்ட்ரிசிட்டி போர்ட்
சார்பாக வசூலிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அங்கே என்ன
மீட்டர் சார்ஜ் ஆகி இருக்கிறதோ, மொத்தத்திலே, அதற்கு
மேலே அவர்கள் நிச்சயமாக வசூலித்து இருக்கவே முடியாது.
எனவே, துறையிலே போய், ஏதோ, மொத்தமாக நாலா
யிரம் ரூபாய் வாங்குகிறார்கள் என்று சொல்கிற குற்றச்சாட்டு
தவறானது. அங்கே குடியிருக்கின்ற குடியிருப்புகள், 100 பேர்
இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த 100 பேர்களுக்கும்
மொத்தமாக எவ்வளவு மீட்டர் சார்ஜ் ஆகிறதோ, அதிலே
வீட்டுக்கு இவ்வளவு என்றுதான் பிரித்துத்தான் வாங்கி இருக்க
முடியுமே தவிர, துறையின் சார்பாக 2 ஆண்டுக்காலத்திற்கு
ஏதோ மொத்தமாக நாலாயிரம் ரூபாய் வாங்கி இருக்க
முடியாது. நீங்களே இதை யோசித்து இருந்தால் கூட அது
புரிந்து இருக்க முடியும் என்று கருதுகிறேன். எனவே, இதைப்
பற்றி தனியாக, அவர்கள் பார்ப்பது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றிய குறிப்புகள்
உங்களிடத்திலே இருந்தால், அதை அமைச்சரிடத்திலே கொடுத்து
விடவும், நேரம் ஆகிவிட்டது, அடுத்த பிரச்சினைக்குப் போகவும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : எனவே, நான்
சொன்ன குறைபாடுகள், அவைகளை நிவர்த்தி செய்ய
வேண்டிய முறைகள், இந்தச் சாதாரண காவல் நிலையங்
களிலே பாலை வார்க்கக் கூடிய, சாதாரண காவல் துறைக்
காரர்களுக்குக் கிடைக்க வேண்டிய உற்சாகம், பெரிய அதி
காரிகள் மத்தியிலே ஏற்பட வேண்டிய மனத் தெம்பு, அந்த
மனத்தெம்பின் விளைவாக தமிழ்நாட்டு காவல் துறைக்கு
கிடைக்கின்ற ஒரு புதிய பார்வை, இவை எல்லாவற்றிற்கும்
இந்த அரசு வழி செய்ய வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

Issued. 7-1-1993

826/93

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 17, 1992-தொகுதி 18 எண். 2
Tuesday, the 17th March 1992 - Volume 18 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] Price Rs. 3-00

போராளிகளைப் பற்றிய முடிவிலே, நீங்கள் எடுத்து இருக்கின்ற முடிவும் உறுதியும், அந்த தைரியமும் தொடர்ந்து வரக்கூடிய ஆண்டுகளிலே இருக்க வேண்டும் என்று நான் உங்களை நெஞ்சார வாழ்த்துகிறேன். நீங்கள் எடுத்து இருக்கக் கூடிய இந்த நல்ல முடிவுகள், எடுக்கக்கூடிய நல்ல விளைவுகள் போலீஸ் துறைக்கு ஒரு புதிய பொலிவையும், ஒரு புதிய சரித்திரத்தையும் தரமுடியுமானால், அதைப் பார்த்து, மகிழ்ச்சி அடைபவர்கள் காங்கிரஸ் இயக்கத்தைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம், ஜெய் ஹிந்த். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன். (குறுக்கீடு). நீங்கள் பேசுகிறபோது, சந்தேகத்தைப் பற்றிப் பேசலாம்.

திரு. .க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறை, ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் சிறப்பாக உள்ளது. இன்றைக்கு புரட்சித்தலைவி பொறுப்பேற்றதற்குப் பிறகு, மக்கள் நிம்மதியாக நடமாடுகிறார்கள். பெண்கள் நகை நட்டுகளோடு, எந்த நேரத்திலேயும் வெளியே செல்லலாம். நகை நட்டுகளோடு, எந்த நேரத்திலேயும் வெளியிலே சென்று வரலாம் என்ற உணர்வு இன்றைக்கு தமிழகத்திலே உருவாகி இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புரட்சித் தலைவியின் முறையான அணுகுமுறையால்தான், இன்றைக்குக் காவல் துறை ஒழுங்காகச் செயல்படுகிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு ஆட்சிக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும் விதத்தில் காவல்துறை செயல்படுவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த ஆட்சியில் காவல் துறையை சுதந்திரமாக செயல்படவிட்டதன் காரணத்தால், இன்றைக்கு காவல்துறை தன்னுடைய கடமையை செவ்வனே செய்து, நேர் வழியிலே செயல்படுகிறது என்ற நல்ல பெயரை பெற்றுள்ளார்கள்.

இன்றைக்கு காவல் துறை, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு பார்ப்பதில்லை. சொல்லப் போனால், ஆளும் கட்சியினர் கூட தவறு செய்தாலும், நடவடிக்கை எடுக்கப் படுவதைப் பார்த்து. இந்த நாடே, புரட்சித் தலைவி அவர் களை இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. முந்தைய

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 4, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023
1992, மார்ச் 17, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தைய அவர்கள் 'தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு ''

செய்யும் வகையை அறிந்து, தன்னை வலிவுபடுத்திக்கொண் டும், தற்காப்புத் தேடிக் கொண்டும் செயல்படுவது, பகைவர் டத்தில் ஏற்பட்ட செருக்கைத் தானாகவே அழிக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 239., டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு நிதி அமைச்சர்.

239—

பதிவான வாக்குகளில் செல்லாத வாக்குகள்.

*2397 டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பதிவான வாக்குகளில் செல்லாத வாக்குகள் எத்தனை சதவிகிதம் ?

(ஆ) அவை எந்த மாவட்டத்தில் அதிகம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1991 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தல்களின்போது பதிவான வாக்கு களில் செல்லாத வாக்குகளின் சதவிகிதம் 3.2 ஆகும்.

(ஆ) அவை தர்மபுரி மாவட்டத்தில் தான் அதிகம். அதன் சதவிகிதம் 4.4 ஆகும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் தேர்தலுக்கு முன்பாக மக்களுக்கு எப்படி வோட்டு போடவேண்டும் என்பது பற்றி சொல்லிக் காடுப்பதற்கு ஒவ்வொரு கிராமம்தோறும் பயிற்சி வகுப்புகள்

ஆட்சியின் போது, எதிர்க்கட்சியை அடக்குவதற்காகவே, காவல் துறை பயன்படுத்தப்பட்டது. முந்தைய ஆட்சியில் ஒரு வால் போஸ்டரைக்கூட அடித்து ஒட்ட முடியாது. பேரவைத் தலைவர் அவர்கள், அன்றையதினம் நீங்கள் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்தீர்கள். நாடாளுமன்ற உறுப்பின ராக இருந்த நேரத்தில், ஒரு வால் போஸ்டரை அடித்து ஒட்டியதன் காரணமாக, அன்றையதினம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கண்டிசன் 'பெயிலிலே சேலத்திலே தங்கியிருக்கக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எந்த அளவிற்கு அன்றைக்கு காவல் துறையை அன்றைய ஆட்சியாளர்கள் தவறான முறையிலே பயன்படுத்தினார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் கூற விரும்புகிறேன்.

25–3–1989-ஆம் தேதி, புரட்சித் தலைவி இந்த அவை யிலே தாக்கப்பட்ட நாள், அன்று இந்த அவையிலே நான் இருந்தபோது, எனது வீட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாக்கினார்கள், காரை நொறுக்கினார்கள். அன்றைய தினம் வன்முறையாளர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வந்து காரை நொறுக்கினார்கள். அந்த காரி னுடைய நம்பர் எப். ஐ. ஆரிலே இருக்கிறது. இந்த அவையிலே அன்றைய தினம், உறுப்பினர் என்ற முறையிலே இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, அன்றைய முதல்வர் அளித்த பதில் என்ன என்று சொன்னால், என்னுடைய காரினுடைய நம்பர் இந்த ஊருக்கே தெரியும், தமிழ்நாட்டிற்கே தெரியும், காரினுடைய நம்பரைச் சொல்லிவிட்ட காரணத்தாலே, அவர் கள் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது நடவடிக்கை எடுத்துவிட முடியாது என்று சொல்லி, அன்றைய தினம் அந்த வன்முறைக் கும்பலுக்கு ஆதரவு அளித்தவர் அன்றைக்குக் காவல் துறைக்கு பொறுப்பேற்றிருந்த முதலமைச்சர் என்பதை நான்

முற்பகல் 11–35 மணி

தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் இன்றையதினம் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினரே தவறு செய்தால்கூட அவரைப் புரட்சித் தலைவி அவர்கள் பாதுகாக்க முன்வரவில்லை. அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் காவல் துறையின் கைகள் கட்டிப் போடப்படாமல் தன்னிச்சையாக கடமையைச் செய்ய விட்டிருக்கிறார்கள் என்பதனை நான் இந்த நேரத் திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்ற துறைகளை விட இந்தத் துறைக்கு அதிகமான கடமை யும் பொறுப்பும் உள்ளது. எந்த மூலை முடுக்கில் எந்தத் தவறு நடந்தாலும், அதிலே காவல் துறையைத்தான் விமர்சிப் பார்கள். அது ஆட்சியின் மீது பிரதிபலிக்கும். உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால், மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி.



என்பார்கள். காவல் துறை பல பக்கமும் விமர்சனத்திற்கு ஆளாக வேண்டி நேரிடும். இப்படிப்பட்ட நிலையிலுள்ள காவல் துறைக்கு எவ்வளவு சௌகர்யங்களைச் செய்து கொடுத்தாலும், அது நல்லதுதான். புரட்சித் தலைவியினுடைய அரசு காவல் துறைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிறைய சௌகர்யங் களை அறிவித்துள்ளது பாராட்டுக்குரியது. அதே சமயத்தில் ஒரு சில பிரச்சினைகளை நான் இந்த அவையினுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பிரமோஷன் ஸ்கோப் என்று சொல்லுகின்றபோது, சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் டெபுடி சூப்பரின்டெண்டெண்டு அளவில் இன்றைக்கு பிரமோஷன் ஸ்டேக்னேட்டாகி இருக்கிறது. அதையும் சீர்செய்து அவர்கள் மத்தியில் நிலவுகின்ற அந்த விரக்தியை களைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று வீட்டு வசதியை அதிகரிக்க வேண்டும். மெட்ராஸ் சிட்டி, டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்களில் மாறுதல் செய்யக் கூடிய நேரத்தில், சில அதிகாரிகள் அங்கே வர மறுப்பதற்குக் காரணம், அவர்களுக்குப் போதிய வீட்டுவசதி இல்லாததுதான். அந்த வீட்டுவசதியை அவர்களுக்கு உடனடி யாக செய்து கொடுக்கும் வகையில், வீடுகள் கட்டிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நிதி நிலை இப்போது ஒத்துக்கொள்ளாவிட்டா லும் கூட வீட்டு வசதி வாரியத்திலே 10 சதவீத அளவிற்கு உண்டான வீடுகள் இந்த காவல்துறை அதிகாரிகளுக்கு ஒதுக்கப் பட்டால், அவர்கள் அந்த இடத்திலே வந்து பணியாற்றுவதற்கு மிகச் சிறப்பாக இருக்கும்.

இன்னொரு விஷயம். 20 வருடங்களுக்கு முன்பு, கிட்டத் தட்ட 1971-ஆம் ஆண்டு இந்த ஸ்பெஷல் போஸ்ட்ஸ், சி.ஐ.டி., நக்சலைட் விங், கிரைம் பிரேஞ்ச் இப்படிப்பட்ட விங்குகளிலே, பணியாற்றுகின்றவர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ் வெறும் ரூபாய் 100 தான் கொடுக்கப்பட்டு வந்தது. 22 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றைக்கு 1992-லும் அதே ரூபாய் 100 தான் இருக் கிறது. இதை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த பர்சென்டேஜ் கூடச் சொன்னார்கள். இன்றைக்கு குறைபட்டுக் கொண்டார்கள். ஒட்டு ட்ப் டிடெக்ஷன் பற்றி கிரைம்சை வைத்துத்தான் பர்சென் மொத்தமாக டோட்டல் கிரைம்சை வைத்துத்தான் பர்சென் டேஜ் போடப்பட்டிருக்கிறதே ஒழிய, ஒவ்வொரு இனவாரியாக பர்சென்டேஜ் எடுத்துக் கொண்டு போனால், ஒன்று 45 சதவீத மாக இருக்கும், இன்னொன்றில் 55 ஆக இருக்கும், மற்றொன்று 95 சதவீதமாக இருக்கும். எனவே இந்த பர்சென்டேஜ் கணக்கு என்பது ஒட்டுமொத்தமாக சென்ற ஆண்டுக்கு நிகராக

இவ்வளவு டிடெக்ஷன் நடைபெற்றிருக்கிறது என்ற புள்ளி
விவரம் பாராட்டுக்குரிய வகையில் இன்றைக்கு காவல் துறை
செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு அடையாளம்
தான். இன்றைக்கு சொல்லப்போனால், விஞ்ஞான ரீதியில்
குற்றம் செய்பவர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தோம்
என்றால், வன்முறையாளர்கள் சோபிஸ்டிகேட்டட் வெப்பன்ஸ்
வைத்துக் கொண்டு, குற்றம் புரிகிற நிலைமைகளை உருவாக்கி
யிருக்கிறார்கள். இதைத்தான் இப்போது விஞ்ஞான முறையில்,
நவீனப் படுத்துகின்ற முறையில், காவல்துறைக்கு ஊக்கம் அளிக்
கின்ற வகையில், செயல்படவேண்டுமென்று சொல்லி, மத்திய
அரசிடத்திலிருந்து ரூபாய் 80 கோடி வேண்டுமென்று நாம்
கேட்டிருக்கிறோம். அதில் ரூபாய் 10, ரூபாய் 15 கோடி
அளவிற்கு மத்திய அரசு கொடுத்திருக்கிறது. இந்த ரூபாய் 10,
15 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு, இன்றைக்கு ஓரளவிற்கு
கடலோரப் பகுதிகளிலே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற வன்முறை
யாளர்களை சமாளிப்பது ஒருபுறம். மற்றொருபுறம்.வெளிநாட்டில்
இருக்கிற வன்முறையாளர்களையும் சமாளித்தாக வேண்டும்,
பழைய 303 துப்பாக்கிகளையும். பழைய வாகனங்களையும்
வைத்துக்கொண்டு இன்றைக்கு இப்படிப்பட்ட வன்முறை கும்பலை
அடக்குவது என்பது சாத்தியமல்ல, ஆகவே மத்திய அரசு
மேலும் நிதி உதவியை அளிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

விடுதலைப் புலிகளுடைய நடமாட்டமும். செயல்பாடு
களும் தி.மு.க. ஆட்சியில் இருந்ததைப்போல புரட்சித்
தலைவி அவர்கள் இன்றைக்கு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு
சுதந்திரமாக அனுமதிக்கப்படவில்லை என்பது நாம் அனை
வரும் அறிந்த உண்மை, ஆனால் வேறு போர்வையிலே தமிழ்
நாட்டிற்குள் அவர்கள் நுழைந்து விட்டதாக நான் கேள்விப்
படுகிறேன், சக்தி வாய்ந்த ஒயர்லஸ்களை விடுதலைப் புலிகள்
வைத்துக்கொண்டு பல மலையடிவாரங்களிலே, சேலம்
மாவட்டத்திலே சுற்றியுள்ள பகுதிகளிலே கல்ராயன். மலை
ஏர்க்காடு மலை போன்ற பகுதிகளிலே இருப்பதாக போலீஸ் ஒயர்
லஸ்ஸினுடைய இண்டர்செப்ஷனுக்கு கிடைத்திருப்பதாக தகவல்,
இது மீண்டும் ஊடுருவல் நடைபெற்றிருப்பதற்கான அறி
குறியாகத் தென்படுகிறது, சென்னையிலும் ஊடுருவி இருப்ப
தாகச் செய்திகள் வருகிறது, எதற்காக இதையெல்லாம்
சொல்கிறேன் என்று சொன்னால், தமிழ்நாட்டில் விடுதலைப்
புலிகளுடைய கைக்கூலிகளாக அன்றைக்கு ஆட்சி நடத்திய
வர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, புலிகளையெல்லாம் யாழ்ப்
பாணக் காட்டிற்கு விரட்டிய வீராங்கனையாக ஆட்சி நடத்தும்
புரட்சித் தலைவியினுடைய உயிருக்கும் இன்றைக்கும்
புலிகள் குறி வைத்திருப்பதாகவும் இங்கே இருக்கின்ற சில
நா[illegible]ள் குறி வைத்திருக்கின்ற காரணத்தினாலே இதை நான்
சொல்கிறேன்.





முற்பகல் 11-40

புரட்சித் தலைவிக்கு அளிக்கப்படுகிற பாதுகாப்பை
சிலர் விமர்சிக்கிறார்கள், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி
அவர்கள் கூண்டுக்குள் குடியிருக்கிறார்கள் என்றும் பாதுகாப்
பிற்காக பலகோடி ரூபாய் விரயம் ஆகிறது என்றும் விமர்
சித்து கூறியதன் விளைவாக அன்றைய தினம் அவர்கள் தன்
னுடைய பாதுகாப்பை சற்று தளர்த்திக் கொண்டார்கள்.
அந்த விமர்சனத்தைக் கேட்டு பாதுகாப்பை தளர்த்திக் கொண்ட
தன் விளைவாக அன்றைக்கு விபரீதமாக முடிந்தது என்பதை
இந்த அவைக்கு நான் குறிப்பிட்டாக வேண்டும், எனவே
எங்கள் புரட்சித் தலைவிக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை
மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன், தமிழகமும் தமிழக
முதல்வரும் பாதுகாப்பாக இருந்தால்தான் அங்கே டெல்லி
யில் இருப்பவர்கள் கவலை இல்லாமல் ஆட்சி நடத்த முடியும்,
தென் மாநிலங்களில் இந்திய ஒற்றுமைக்கு வலிமை சேர்க்கிற
மாபெரும் சக்தியாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்கு
கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது, எனவே
எல்லை ஓர மாநிலங்களுக்கு மைய அரசு சிறப்பு நிதி அளிப்
பதை போல போராளிகளுடைய தொல்லைகளுக்கு ஆட்படு
வதினால் அதை மாற்றி தமிழகத்தை அமைதிப் பூங்காவாக
மாற்றும் முயற்சியில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக்
கொண்டுள்ள புரட்சித் தலைவிக்கு உதவிக்கரம் நீட்டுவதில்
தயக்கம் காட்டக் கூடாது என்பதனை இந்த அவையின் மூலமாக
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி. இ.பி.ஆர்.எல்.எப். தலை
வர் பத்மநாபா போன்றவர்களின் கொலையில் சம்பந்தப்
பட்ட பலபேர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் கைதாகிக்
கொண்டு வருகிறார்கள், இந்த நடவடிக்கைகளை நான் முழு
மனதோடு வரவேற்கிறேன், படு பாதகமான இந்தப் பயங்
கர கொலைகளின் பின்னணியில் இருந்த சில பேர் இன்றைக்கு
எங்கே தாங்களும் சிக்கி விடுவோமோ என்ற அச்சத்தில்
அலறுகிறார்கள், 'ஐயையோ அரசியல் வாதிகள் மீது தடாவா'
தடாவை பயன்படுத்தாதீர்கள் என்றெல்லாம் வாதாடு
கிறார்கள், ஈவு இரக்கமின்றி பத்மநாபாவையும் அவரது
தோழர்களையும் கொலை செய்தவர்களுக்கு அடைக்கலம்
கொடுத்தவர் ஒரு முன்னாள் அமைச்சர் என்பதற்காக
அவரை விட்டு விட முடியுமா? அந்தக் கொலைகளுக்கு பிற
காவது இங்கே அப்போது ஆட்சி நடத்தியவர்கள் இனி விடு
தலைப் புலிகளுக்கு இங்கே இடம் அளிப்பது ஆபத்து என்பதை
உணர்ந்தார்களா? உணரவே இல்லை, அது மட்டும் அல்ல,
புலிகளே இங்கு இல்லவே இல்லை என்று சாதித்தார்கள்,
14 பேர்களைக் கொன்றவர்களுக்கு ஒரு அமைச்சர் அடைக்

டெமான்ஸ்ட்ரேஷன் கிளாஸ், மாதிரி வாக்கு சீட்டுகள் வைத்து நடத்தினால், இவ்வாறு செல்லாத வாக்குகள் போடுவது குறைவாகும். என்னுடைய தொகுதியான பரமக்குடி தொகுதியில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் செல்லாத வாக்குகள் மாத்திரம் 6,232 ஆகும். இராமநாதபுரம் பாராளுமன்றத் தொகுதியில் செல்லாத வாக்குகள் கிட்டத்தட்ட 25,671 வாக்குகள் ஆக இருந்தன. தமிழ்நாட்டிலேயே திண்டிவனம் பாராளுமன்றத் தொகுதியில் 30,339 வாக்குகள் செல்லாமல் இருந்திருக்கின்றன. இவ்வாறு செல்லாத வாக்குகள் அதிகமாக இருப்பதனால் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பாக மக்களுக்கு எப்படி வோட்டுப் போடுவது என்பதற்காக பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பொதுத் தேர்தலின் போதும் வாக்காளர்கள் எவ்விதம் சரிவர வாக்கு அளிக்க வேண்டும் என்பதற்கான விளக்கங்கள் தருகின்ற துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, தொலைக் காட்சியின் மூலமும் வானொலி மூலமும் அந்தக் கருத்துக்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இந்தப் பிரசுரங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் அனுப்பி வைத்து அந்தந்த அரசியல் கட்சி மூலமாகவும் வாக்காளப் பெரு மக்களுக்கு விளக்கங்கள் தருவதற்கு வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது தவிர, தேர்தல் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் இந்த பிரசுரம் அளிக்கப்பட்டு இருப்பதோடு ஆங்காங்கு நடைபெறுகின்ற தேர்தல் அலுவலர்கள் கூட்டத்திலும் சிறப்பாக எடுத்துத் தெரிவித்துப் பொது மக்களுக்கு விளங்க வைக்கவேண்டும் என்கின்ற முறையிலும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு என்று தனிப் பயிற்சி கூடம் தேவையில்லை. விளம்பரங்களைஅதிகப்படுத்த வேண்டும். அந்தப் பொறுப்புகளை தேர்தல் களத்திலே நிற்கின்ற வேட்பாளர்களின் சார்பாக சிறப்பாக எடுத்துக்கொள்வார்களேயானால் ஓரளவுக்கு வாக்காளப் பெருங்குடிமக்களைத் திருத்த வசதி ஏற்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கடந்த 1989-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் தபால் வாக்குகள் 39 பதிவாயின. இதில் 12 வாக்குகள் செல்லாத வாக்குகளாகப் போயிற்று. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ் தபால் வோட்டுகள் அனைத்துமே தேர்தல் நடத்துகின்ற அதிகாரிகள் போடுகின்ற வோட்டுகள் அல்ல, சர்வீஸ்மென் எல்லாம் அதிலே இருக்கிறார்கள் * * எனவே அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தபால் வாக்குகளை படித்தவர்கள் தான் போடுகிறார்கள். ஆகவே, படித்தவர்கள் போடுகின்ற தபால் வாக்குகளில் கூட 39 வாக்குகளில் 12 வாக்குகள் செல்லாதவையாகப் போயிற்று. ஆகவே படித்தவர்கள்கூட செல்லாத வாக்குகள் அளிக்கின்ற காலகட்டத்தில் படியாத பாமர மக்களும் வாக்குகள் அளிக்கின்ற போது ஒட்டுமொத்தமாக செல்லத்தக்க வாக்கு அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு அரசு வேறு ஏதாவது பயிற்சி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் தேர்தலில் வாக்கை எப்படி அளிக்க வேண்டும் என்பதற்கான விளம்பரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும், விளம்பரங்களும் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றை ஓரளவுக்குப் புரிந்து கொண்டு வருகிறார்கள். சில சமயங்களில் வேண்டுமென்றே வாக்களிக்கக்கூடாது என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில் வாக்கை தீய முறையில் பயன்படுத்துகின்றவர்களும் இருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களே வாக்களிக்கும்போது ஒன்றிரண்டு செல்லாத வாக்குகள் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற பொழுது (சிரிப்பு) வாக்காளப் பெருங்குடி மக்களைப் பற்றி நாம் எண்ண வேண்டிய அவசியம் இல்லை. தர்மபுரி மாவட்டத்தில்தான் அதிகமான வாக்குகள் செல்லுபடி ஆகாத வாக்குகள் இருக்கின்றன. அதாவது 4.4 சதவிகிதமாக இருக்கிறது. செல்லாத வாக்குகள் மிகக் குறைந்த அளவில் இருக்கின்ற மாவட்டம் சென்னை மாவட்டம் தான். அதாவது 1.6 சதவிகிதம் தான் செல்லாத வாக்குகளாக சென்னையிலே இருக்கின்றன. சட்டமன்றத் தொகுதிகளைத் தனியாக நாம் கணக்கெடுத்துப் பார்ப்போமானால் அவினாசி தனி சட்டமன்ற தொகுதியில்தான் செல்லுபடியாகாத வாக்குகளின் சதவீதம் 6.8 ஆக இருக்கிறது. அதைத் தவிர குறைந்த அளவு செல்லுபடியாகாத வாக்குகள் உள்ள சட்டமன்றத் தொகுதி எது என்று கேட்டால் அது எழும்பூர் தொகுதி தான். அதாவது 0.6 சதவிகிதம். ஒரு சதவிகிதம் கூட இல்லாமல், புள்ளி 6 சதவிகிதம் தான் எழும்பூர் தொகுதியில் செல்லுபடியாகாத வாக்குகள் இருக்கின்றன. ஆகவே, ஆங்காங்கே பிரச்சாரத்தின் வலிவைப் பொறுத்தும், மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற தன்மையைப் பொறுத்தும், மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்துவதைப் பொறுத்தும் இதில் இருக்கின்ற சீர்கேடுகளை ஓரளவுக்கு எதிர்காலத்தில் நீக்க நாம் தக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

கலகம் கொடுத்தது அன்றைய முதலமைச்சருக்கு தெரியாமல் தான் நடைபெற்றது என்பதை நினைத்துப் பார்க்க முடியுமா? போலீஸ் துறையில் பணியாற்றியவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன், நிச்சயமாக அன்றே குற்றவாளிகள் எங்கே இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு தெரியும், அதனால் தான் அடுத்தப்படி தடா தன்னை நோக்கி பாயும் என்ற பயத்தில், அச்சத்தில் இன்று ஊர் ஊராகச் சென்று ஓப்பாரி வைக்கிறார், தி.மு.க. ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்த பல பேர் நிறைய சம்பாதித்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளை வைத்து நிறைய சம்பாதித்திருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் யார் யார் என்று இன்டெலிஜென்ஸ் துறைக்கு நன்றாக தெரியும், எனவே முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட நபர்களுடைய இன்றைய நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்,

அதேபோல கடந்த முறை போலீஸ் மானியத்தில் நான் பேசும்போது கூட ஒரு கருத்தை வலியுறுத்தினேன், அதை நான் திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறேன், தமிழகத்தில் பல பிரிவினைவாத நக்சலைட் இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன, ஜனநாயக உரிமை மக்கள் உரிமை என்ற போர்வையில் வெளிப்படையாக பொதுக் கூட்டங்களின் மூலமாக பேசுகிறார்கள், ஆயுத போராட்டம் மூலம் தான் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் தமிழர்களுக்கு என்று தனி நாடு உருவாக இனி ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் பேசுகிறார்கள், புரட்சித் தலைவி பொறுப்பேற்றபிறகு இப்படிப்பட்ட பேச்சுக்களுக்கு இடம் அளிக்காமல் சில கூட்டங்கள் தடை செய்யப்பட்டன என்றாலும் இந்த அமைப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப் பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சில கல்லூரி பேராசிரியர்களே இத்தகைய பிரிவினை வாத கூட்டங்களில் கலந்துக் கொண்டு பேசுகிறார்கள், இவர்கள் மாணவர்கள் மத்தியில் எப்படி விஷ விதைகளை தூவுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அவர்களில் சிலரையாவது தண்டித்தால்தான் மற்றவர்கள் திருந்துவார்கள் என்ற யோசனையை இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன், தமிழ்நாடு காவல் துறையை அதன் பெருமை குறையாமல் பாதுகாத்து சிறப்பாக சட்டம் ஒழுங்கை நிலை நாட்டிவருகிற தமிழ் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அவர்களுக்கு புகழ் சேர்க்கிற வகையில், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வரும் காவல் துறைக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பு அளித்த ஆற்றல் மிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.





முற்பகல் 11-45

## 5. விதி 110-இன்கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை.

### மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்விப் பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டம் நிறுத்தப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு இன்றியமையாத பிரச்சினையைப் பற்றிய தன்னுடைய அறிக்கையை பேரவை விதி 110-ன் கீழ் அளிக்க அனுமதி கேட்டுள்ளார், அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, இப்போது அந்த அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பார்கள்,

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே. மேல்நிலைப் பள்ளி பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களின் கோரிக்கை சம்பந்தமாக 4-3-1992 முதல் நடைபெற்று வந்த போராட்டத்தைத் தொடர்ந்து 10-3-1992 அன்று இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பதிலளிக்கையில் முழு தகுதி பெற்ற 600 இருபகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களை நிரந்தரமாக்கவும் முழுத் தகுதி பெறாத மீதம் உள்ள 450 இருபகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தும். ஒருபகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளவர்களை இடைநிலை ஆசிரியர்களாகவும் மீதம் உள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெறாத ஒரு பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தும் அவர்களது பணியினை நிரந்தரமாக்கப்படும் என்று அறிவித்தேன், இந்த அறிவிப்புக்குப் பின்பு இந்த பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள், இந்த ஆசிரியர்களின் சங்கம் 16-3-1992 அன்று நடந்த போராட்டக் குழுவின் தீர்மானத்தில் 4-3-1992 முதல் நடந்து வந்த போராட்டத்தை நிறுத்திக் கொள்வதாகவும். போராட்டம் நடத்திய காலத்திற்கு ஊதியம் வழங்கிடவும், சிறை சென்றுள்ள ஆசிரியர்களை விடுதலை செய்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் போட்ட தீர்மானத்தின்படி அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டார்கள், கைதானவர்களை விடுதலை செய்யவும். போராட்டத்தில் ஈடுபட்ட பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 17

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 சதவிகிதம் எழுத்தறிவுக்கு நமது அரசு முயற்சி செய்துகொண்டிருக்கின்ற இந்நேரத்தில், தேர்தல்களில் செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஏதாவது விசேஷ திட்டம் அரசு தீட்டியிருக்கிறதா அல்லது தீட்ட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமான வேட்பாளர்கள் இருப்பதன் காரணமாக குழப்பங்கள் ஏற்பட்டு அதன் காரணமாக செல்லுபடியாகாத வாக்குகள் அதிகமாக ஆகின்றதா என்று கணக்கெடுத்துப் பார்த்தால் சென்ற பொதுத் தேர்தலின் போது 249 வேட்பாளர்கள் போட்டியிட்ட அரவக்குறிச்சி தொகுதியில் செல்லுபடியாகாத வாக்குகள் 5.1 சதவிகிதமாக இருந்தது. ஆனால், அந்த நிலை நாடு எங்கும் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லையென்று தெரிய வருகிறது. பள்ளிப்பட்டு தொகுதியில் 264 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அங்கு செல்லுபடியாகாத வாக்குகளினுடைய எண்ணிக்கை 2.7 சதவிகிதம்தான். ஒட்டுமொத்தமாக நாம் பார்க்கின்றபோது சட்டமன்றத் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் இணைந்து நடக்கின்றபோது செல்லுபடியாகாத வாக்குகளின் சதவிகிதம் கூடுதலாகத்தான் அமைந்திருக்கிறது. 1952ஆம் ஆண்டு செல்லுபடியாகாத வாக்குகள் 4.35 சதவிகிதம், 1957இல் 2.92 சதவிகிதம், 1962இல் 3.91 சதவிகிதம், 1967இல் 3.87 சதவிகிதம். 1971இல் 4.89 சதவிகிதம், 1984இல் 4.60 சதவிகிதம், 1991இல் 3.20 சதவிகிதம். ஆனால், சட்டமன்றத் தேர்தல் மட்டும் தனியாக நடக்கின்றபோது எப்படி வாக்குகள் அளிக்கிறார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் 1977இல் சட்டமன்றத் தொகுதித் தேர்தல் தனியாகவும், பாராளுமன்றத் தேர்தல் தனியாகவும் நடைபெற்றன. அந்த வகையில் 1977இல் சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடைபெற்றபோது மொத்தத்தில் 1.35 சதவிகிதம் தான் செல்லுபடியாகாத வாக்குகள். 1980ஐ எடுத்துப் பார்த்தால் 1.34 சதவிகிதம் தான். 1989இல் 1.97 சதவிகிதம்தான். இரண்டு தேர்தலும் சேர்ந்து நடக்கின்றபோது கொஞ்சம் கூடுதலாகச் செல்லுபடியாகாத வாக்குகள் வருவதும், தனித்தனியாக நடக்கின்ற போது குறைந்த அளவு இருக்கின்ற நிலைமையும் இருக்கின்றது என்பதைத் தான் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் தான் அதிகமாக செல்லுபடியாகாத வாக்குகள் பதிவு ஆகின்றன என்று இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அதைப்



1992 மார்ச் 17]

போக்குகின்ற வகையில் விளம்பரங்கள் செய்தால் மட்டும் போதாது, சினிமா படம் எடுத்து, மக்களுக்குப் போட்டுக் காட்டி, எப்படி ஓட்டுப் போடுவது என்பதை போட்டுக் காட்டி, அந்த வகையில் சினிமா மூலம் விளம்பரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியது போல வானொலி மூலமாகவும் விளம்பரப்படுத்தப்படுகின்றது. அதைத் தவிர, தொலைக்காட்சி மூலமாகவும் விளம்பரப்படுத்தப் படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல தனி சினிமா எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. டாக்குமெண்டரி பிலிம் என்கின்ற அளவுக்கு மக்களுக்கு விளக்கங்கள் தருகின்ற வீடியோ படமாக எடுத்து ஆங்காங்கு விளம்பரத் துறையின் மூலமாக பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மக்களுக்கு விளக்கங்களைத் தருகின்றபோது விளக்கங்கள் தரலாம். கூடுமானவரை கிராமப் பகுதிகளில் விளக்கங்கள் தந்து, அவர்களுக்கு தெளிவு பிறப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

மு.ற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 240, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

240—

கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம்.

*4578 திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உயர்நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.

[1992 மார்ச் 17

4. மானியக்கோரிக்கைகள் 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானிய கோரிக்கையின் மீதான விவாதம், திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாடு தீயணைப்புத் துறை, காவல் துறை, மதுவிலக்குத் துறை ஆகியவை மீதான கொள்கை குறிப்பிலே விவாதிப்பதற்கு முன்பாக சமீபத்திலே தொழில் கல்வி ஆசிரியர்கள் பல ஆண்டுக்காலமாகப் போராட்டம் நடத்தி சிறை சென்று தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள். அதற்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நடைபெறக் கூடிய காவல் துறை மது விலக்கு ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மானிய கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தைச் சொல்ல நான் முன் வருகிறேன். நம்முடைய காவல்துறை மீது தமிழக அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்தைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

தமிழ்நாட்டினுடைய காவல் துறைக்கு அநேகமாக 276 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் காவல்துறையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ. 80.45 கோடி மத்திய அரசிடத்திலே கேட்டு மத்திய அரசிடத்திலே 10 கோடி ரூபாய்கள் அனுமதி பெற்றிருப்பதாகவும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டினுடைய காவல் துறையை நவீனப்படுத்துவது என்பது ஏதோ இன்றைக்கு மட்டும் சொல்லப்படுவதல்ல. 1985-86 ஆம் ஆண்டிலே கூட ஒரு கமிஷன் அமைத்து இந்த காவல்துறையை நவீனப்படுத்த வேண்டும் என்று ஒரு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று 1980 ஆம் ஆண்டு கூட அந்தக் கமிஷன் அந்த நோக்கிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆக காவல் துறையினுடைய செயல்பாடு என்பது நாட்டு மக்களுக்கு தேவையான ஒன்று. இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய ஜாதி மதக் கலவரங்கள், திருட்டு, கொலை, கொள்ளைகள் போன்ற பிரச்னைகளில் காவல் துறை நேரடியாக ஈடுபட்டு மக்களுடைய சேவைகளில் முழுமையாகச் செயல்பட வேண்டும். ஆனால் காவல் துறை தொடர்ந்து எப்படி செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று நாம் பார்த்தோமானால் இப்படிப்பட்ட கலவரங்களில் அரசியல் தலையீடு இல்லாமல் காவல்துறை தனித்துறையாகச் செயல்படுவதில்லை. இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை



ான் சொல்லவில்லை. தொடர்ந்து எந்தக் கட்சி ஆட்சிக்கு ருகின்றதோ, அந்தக் கட்சியினுடைய ஒரு இயந்திரமாக சமீப ாலமாக காவல்துறை செயல் பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. தனால் தான் இன்றைக்கு சாதாரண சமூக விரோதிகள் நாட்லே குற்றம் புரிபவர்கள், கொலை செய்யக் கூடியவர்கள், ாதி மதக் கலவரங்களைத் தூண்டக் கூடியவர்கள் கூட தைரியாக அவற்றைச் செய்யக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

முற்பகல் 11-50

காரணம் எப்படியும் ஆளும்கட்சியிலுள்ள முக்கியமான தலைவர்களை அல்லது பொறுப்பாளர்களைப் பிடித்தோம் என்று சொன்னால் தன்னுடைய காரியங்களைச் செய்து விடலாம் என்று ஒரு நம்பிக்கை கூட இன்றைக்கு சாதாரணமாக சமூக விரோதிகளுக்குக் கூட ஏற்படுகிறது. அரசினுடைய காவல் துறையை ஆட்சியில் இருப்பவர்கள் காலங் காலமாக— நான் இன்றைக்கு நேற்று சொல்ல வில்லை தொடர்ந்து காவல் துறையை — ஆளும்கட்சிக்கு சாதகமாக பயன்படுத்தக் கூடிய நிலைமை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காவல் துறையை நவீனப்படுத்துவது மட்டும் அல்லாமல் அதிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கத்தினுடைய முக்கியமான கடமை சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது ஆகும். அரசாங்கத்திற்கு ஆதரவு தரவேண்டிய கடமை ஆளும்கட்சிக்கு இருக்கிறது. ஆகவே, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் ஆளும் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறது. ஆனால் எதிர்க் கட்சிகள் தெரிந்தோ தெரியாமலோ போராட்டம் என்ற பெயரால் சட்டங்களை, விதிகளை மீறுவதில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு ஆதரவாக ஆளும்கட்சி இருக்கின்றது என்கின்ற நிலைமையும், ஆதரவு தராத நிலையில் எதிர்க் கட்சியினர் இருக்கிறார்கள் என்ற நிலையும் இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாவதற்கு காரணமாக இருக்கிறது. அதை அப்படித்தான் பார்க்கவேண்டுமே தவிர ஏதோ ஆளும் கட்சியினர் காவல்துறையை கையில் வைத்துக்கொண்டு செயல்படுவது போல் பேசுவது சரியல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அமைச்சர் பேசியதில் என்ன கிளாரிபிகேஷன்? உட்காருங்கள் அவர் பேசுகிறார். திரு. தாமரைக்கனி உட்காருங்கள்; (குறுக்கீடு) திரு. ஜீ. பழனிசாமி நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, சட்ட மன்றந்
தில் அனேகமாக எதிர்க்கட்சியிலிருந்து எழுந்து பேசக்கூடிய
சட்டப் பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து இப்படி பேசுகிற
போது இடையில் புகுந்து ஒரு கலாட்டா செய்வது; அந்த
சட்டமன்ற உறுப்பினர் ஒரு வரம்புக்கு மீறி இப்படி நடந்து
கொள்வதை தாங்கள் ஒரு ஒழுங்கு நடவடிக்கை எடுத்து—
தடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் சட்டமன்றத்
தில் . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி. இது
உங்களுக்கு எச்சரிக்கை. தொடர்ந்து இதுபோன்று செய்து,
கொண்டிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். திரு.
ஜீ. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, நான் இன்று
இருக்கக்கூடிய அரசை குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக
சொல்லவில்லை. காவல்துறைக்கு ஒரு பெருமையைத் தேடிக்
கொடுக்க வேண்டுமென்று சொன்னால் ஆட்சியாளர்களால்
தான் அந்தப் பெருமையைத் தேடி கொடுக்க முடியும். அவர்கள்
சுயேச்சையாக குற்றம் செய்யக் கூடியவர்கள் மீது உரிய நட
வடிக்கை எடுப்பதற்கு தலையிடாமல் நடவடிக்கை எடுக்க வேண்
டும். அதைத் தான் நான் சொல்ல வந்தேன். அந்தவகையில்
தான் நம்முடைய காவல்துறையினுடைய கோரிக்கைகளைப்
பற்றி எனக்கு முன்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.
பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விரிவாக சொன்னார்கள். அவர்
களுடைய குடியிருப்புத் தன்மைகளைப் பற்றி எல்லாம் கூட
சொன்னார்கள். உண்மையில் தொடர்ந்து நான் வெட்டுத் தீர்
மானங் கூட அந்த அடிப்படையில் தான் கொடுத்து இருக்கிறேன்.
குறிப்பாக காவல்துறையில் இருக்கக்கூடிய அந்த பணி
யாளர்களுக்கு குடியிருப்புப் பகுதிகள், குடிநீர் வசதி இப்படி
அவர்களுடைய வசதிகளை எல்லாம் நவீனப்படுத்திக் கொடுக்க
வேண்டும். புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது
அவசியமானது தான். அந்த வகையில் காவல் துறையைப்
பாதுகாப்பதில் நமது அரசுக்கு மிகப் பெரிய கடமை இருக்க
வேண்டும்.

அதேபோல் காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்
றைக்கு பல்வேறு சம்பவங்களைப் பற்றி எனக்கு முன்பாக பேசிய
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்
கிறார்கள். சமீபத்தில் 1990-91 ஆம் ஆண்டில் நடந்து இருக்
கிற குற்றங்களை எல்லாம் அவர்கள் வரிசைப்படுத்தி இதிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். கொலைகள், கொள்ளைகள், வழிப்
பறி திருட்டுகள் இதுபோன்ற சம்பவங்கள் இன்றைக்கும் நடந்து
கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் இதில், இந்
தப் பட்டியலில் வருகிறதோ இல்லையோ எனக்குத் தெரிய
வில்லை. குறிப்பாக எந்த ஆண்டும் இல்லாத வகையில்





இந்த ஆண்டு அதிகமாக குற்றங்கள், வழிப்பறிகள், கொலைகள் கொள்ளைகள் நடந்து இருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு நம்முடைய காவல் துறை கடுமையான முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும்.

குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ்நாட்டுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு இங்கே வந்தார்கள். அப்படி வருகிறபோது அவரை இங்கே கோரமான முறையில் படுகொலை செய்துவிட்டார்கள். அதற்கு மூல காரணமாக இருந்த வேதாரண்யத்தில் இருக்கக்கூடிய கடத்தல் பேர்வழி விடுதலைப்புலிக்கு ஆதரவாக இருந்த சண்முகம் கொலை செய்யப்பட்டார். மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். ஆனால் இன்று வரை அந்த கொலையாளி யார் என்று கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. யார் கண்டுபிடித்தார்கள்.? எந்த பின்னணியில் நடந்தது? அந்த கொலைக்கு காரணம் யார்? இதுவரையில் கண்டுபிடிக்கமுடியவில்லை. திறமையான போலீஸ்தான். ஆனால் பல்வேறு திருட்டுகள், கொலை, கொள்ளை எல்லாம் பட்டியல் போட்டுக் காட்டப் பட்டிருக்கிறது. ஆனால் காவல்துறையால் இந்த ஒரு ஆண்டு காலத்தில் 19 துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–55

ஆனால் அதனுடைய பட்டியல் இன்றைக்கு காவல் துறையினரால் போடப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? எதனால் அந்தச் சம்பவங்கள் நடந்தன? நேற்றுகூட நான் பத்திரிகையிலே செய்தி பார்த்து வந்தேன். கடலூரிலே கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குச் சென்றபோது, காவல் துறையினரின் கையிலே இருந்த துப்பாக்கியைப் பிடுங்கி, முன்னாள் தண்டனை பெற்றிருக்கிற அந்த குற்றவாளி சுடுவதற்கு முயற்சி செய்ததாகவும், காவல்துறையினர் அவர்மீது சுட்டதாகவும் அதனால் அந்தக் குற்றவாளி இறந்ததாகவும் பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. எப்போதுமே இப்படிப்பட்ட சமூக விரோதிகளுக்கு நாட்டு மக்கள் துணை போக மாட்டார்கள். வேறு ஏதோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதனால் தான் ஊரிலே இருக்கிற மக்கள் அனைவரும் சேர்ந்து வந்து அவரை விடுதலை செய்யவேண்டுமென்கிற அளவிற்கு, முற்றுகையிடக்கூடிய அளவிற்கு அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. பொதுவாக, குற்றம் செய்யக்கூடியவர்கள் மீது வழக்கு போடுவதிலோ, அவர்களை தண்டிப்பதிலோ எந்தவித தயக்கமும் இருக்க வேண்டியதில்லை. ஆனால் சம்பந்தமில்லாதவர்கள் மீதெல்லாம், அரசியல் விரோதங்கள், அரசியல் காழ்ப்புணர்ச்சிகள், தமக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்கள் மீதெல்லாம் வழக்கு போடுகிறபோதுதான் பொது மக்களே அந்தக் குற்றவாளிகளுக்கு ஆதரவாக வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய காவல்துறையினர் இதிலே நிதானத்தோடு செயல்படவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மங்கம்மாள் தனக்குப்பின் தமிழ் நாடான
மங்கையர்கள் இல்லை எனும்நிலையைப் போக்கி
" எங்கம்மா " இத்திறமை பெற்றாய் என்று
எல்லா நாட்டவரும் வியக்கும் வண்ணம்
சத்துணவு நாயகனின் சரித்திரத்தை
அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து
தமிழகத்தின்-ஏன்-பாரதத்தின் தலை
எழுத்தையும் சேர்த்து எழுதும்
முதல்வர் பொறுப்பை ஏற்ற புரட்சிக்கோர்
தலைவி அவர் பொலிந்து வாழ்க

என்று சொல்.ி, தென்னாற்காடு மாவட்டம் இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 2 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, விழுப்புரத்திற்கு வள்ளலார் மாவட்டம் என்ற பெயரிட்டும், கடலூரைத் தலைநகராகக் கொண்டு தென்னாற்காடு மாவட்டம் என்று பெயரிட்டும், நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு ஏற்பாடு செய்து தந்த எங்கள் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தென் ஆற்காடு மாவட்டம் கடலூரைத் தலைநகராகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் தலைநகரிலே 10, 11 நீதி மன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் கடலூரிலே உள்ள தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலக வனாகத்திலும் மற்றும் ஏனைய தனியாருடைய இடங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே வரும் கட்சிக்காரர்கள் பல்வேறு இடையூறுகளுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். சரித்திரப் புகழ் பெற்ற இடம் கடலூர் என்பது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடலூர் சரித்திரப் பிரசித்திப் பெற்ற இடம் என்பது எல்லோருக்கும் தெரியும். உங்களுடைய கேள்வி என்ன ?

திரு. கு.சிவசுப்பிரமணியன்: அங்கே கட்டப்பட்டுள்ள பல கட்டிடங்கள் பல ஆண்டுக்காலம் ஆனவை. நூற்றாண்டுக் காலம்கூட ஆயிருக்கிறது. ஆகவே, அவைகள் எல்லாம் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன. அங்கே அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே இடத்தில் கட்டுவதற்கு இடம் இருக்கிறகி. அதற்கான குறிப்புகள் நீதிமன்றத்தின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு உயர் நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டன. நம்முடைய பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அது 80 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் செய்யப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கிடப்





பிலே போடப்பட்டது. இன்றைக்கு இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே சட்டத்துறை அமைச்சராக இருக்கின்ற............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கிறீர்களா அல்லது உட்காருகிறீர்களா ?

திரு. கு.சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்கும் உறுப்பினர்கள் கேள்வியாக மட்டும்தான் கேட்க வேண்டும். வேறு விதமான பிரசங்கங்கள் செய்துகொண்டிருந்தால் உடனடியாக உட்கார வைக்க வேண்டி வரும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : போற்றுதற்குரிய
மாண்புமிகு உறுப்பினர் அவர்
பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக்
கள் சொன்னதுபோல கடலூரில் ஒருங்கிணைந்த அதற்
கட்டிடங்கள் அமைவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இன்
உயர்நீதிமன்றம். **
குக் காரணம் தமிழக அரசு அல்ல. வரைக்
றைக்கும் கடலூரிலே ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றம் ஆட்
காலதாமதமாகிறது. 1987ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் நீதிமன்றம்
சிக் காலத்திலேயே கடலூரிலே ஒருங்கிணைந்த அரசிடம்
வர வேண்டுமென்று சொன்ன நேரத்திலே, அவர்கள் A Standard Type D ign
ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். சரி, அது கோவை
தேவை—தமிழகத்தில் எங்கு இருந்தாலும் வேலூராக இருந்தா
யாக இருந்தாலும், சேலமாக இருந்தாலும் எல்லாம் ஒரே
லும், மாவட்டத் தலைமை நீதிமன்றங்கள் A Standard Type Design இருக்க
மாதிரியாக இருக்க வேண்டும். 4 ஆண்டுகளாக ஆலோ
வேண்டும் என்று சொல்லி, அதை கடந்த நீதிமன்றக் கட்டிடப் பணி
சனை செய்த உயர்நீதிமன்றம் இந்த இல்தான் ஒப்புதல் அளித்திருக்
களை **அவர்கள் டிசம்பர் 1991 விரைவில்
கிறார்கள். இன்றைக்கு அதைப் பரிசீலனை செய்து, அனுப்ப வேண்டுமென்று
தமிழக அரசுக்கு உயர்நீதி மன்றம் கேட்டுக் கொள்கிறேன். கடலூர்
இந்த மாமன்றத்தின் மூலமாகக் போன்ற மாட்ட நீதி
மட்டுமல்ல, வேலூர், சேலம் **
மன்றப் பிரச்சினைகளும் அங்கே தேங்கியிருக்கிறது.
இந்தக் கட்டிடப் பணிகள் எல்லாம் சுணக்கமாக இருக்கின்றன.
தாமதப்படுகின்றது. எனவே, உயர்நீதிமன்றம் துரிதமாக இதன்
மீது நடவடிக்கை எடுத்து அந்தப் பரிந்துரைகளை அருள்கூர்ந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 17

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எண்ணி, தெளிவாகத்தான் சொல்கிறேன். நீதிபதிகளை நான் சொல்லவில்லை. ** அங்கேயிருந்து பரிந்துரை அனுப்பாத காரணத்தால், கடலூரில் நீதிமன்றம் ஏற்பட காலதாமதமாகி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு இருக்கலாம். (குறுக்கீடு). அனுப்பாத காரணத்தால்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : I am not Casting any aspersion on the individual Judges. எந்த நீதிபதி மீதும் அல்ல. ** இதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்களோ அவர்கள் நான்கு ஆண்டுகளாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** மாண்புமிகு அமைச்சர் அறியாதது அல்ல. எனவே, அமைச்சர் அவர்கள் இரண்டாவதாகச் சொன்ன அவர்கள் விரைந்து அனுப்பாத காரணத்தால் தாமதமாக இருக்கிறது என்பதை மட்டும் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ** ஏனென்றால், ஒரு முதலமைச்சரைப்பற்றி, 8 நாளைக்குக் கையெழுந்துப் போடவில்லை என்றால் சொல்வதற்கு நீதிமன்றத்திற்கு உரிமை இருக்கிற பொழுது, ஒரு அரசாங்கத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி)........ நான்காண்டுகளாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள். அரசாங்கத்தைப் பற்றி நீதிமன்றம் சொல்வதும், அரசாங்கம் நீதிமன்றத்தைப் பற்றிச் சொல்வதும் சரியாக அமையும். ஆனால், சட்டமன்றம், நீதிமன்றம், தனி மேலாண்மை கொண்டிருக்கின்ற அமைப்புகள். ஒன்றுக்கொன்று விமர்சித்துக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதற்காகத்தான் சொல்கிறேன். சட்டமன்றம் என்பது வேறு. அரசாங்கத்தின் சார்பில் சொல்கிற கருத்துக்கள் வேறு. சட்டமன்றத்தில் அது ஒலிப்பது நல்லதா? நீங்கள் இரண்டாவதாகச் சொன்ன கருத்துக்கள் அப்படியே அவைக் குறிப்பில் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 17]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றத்தின்மீது மதிப்பு வைத்திருப்பவன். அதனை அங்கீகரிப்பவன். அது வேறு. அங்கே சுணக்கமாக இருக்கிற காரணத்தாலே, அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. மக்கள் மத்தியில் நற்பெயர் கெடுகிறது. நீதிமன்றங்கள் வரவில்லையென்றால், அதற்கு போற்றுதலுற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசுதான் காரணம் என்று கடலூர்க்காரர்கள் நினைப்பார்கள். இந்த நீதிமன்றத்திற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். விதி எண் 92 :

"A Member while speaking must not reflect upon the conduct of the President, Governor or any Court of Justice" என்று இருக்கிறது. எனவே, அவர்கள் இரண்டாவது சொன்னது அவைக் குறிப்பில் இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : விமர்சனம் செய்யவில்லை. என்னுடைய கருத்தை, மனத்தாங்கலை வெளியிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனவே, அமைச்சர் அவர்கள் சொன்னதில், "தேவையற்ற தாமதம் ஏற்பட்ட காரணத்தால் இதைக் கட்டிமுடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது" என்று இரண்டாவதாகச் சொன்ன அந்த வாசகங்கள் மட்டும் அவைக் குறிப்பில் இருக்கிறது. முதலில் அவர்கள் தெரிவித்தது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் 11 ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிலம் வாங்கப்பட்ட 10 ஏக்கர் 22 சென்ட், அதில் இன்னும் கோர்ட் வளாகம் கட்டப்படாமல் இருக்கிறது. நான் பலமுறை இந்தப் பிரச்சினையை இதே மாமன்றத்தில் எடுத்துரைத்தபோது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அந்த ஸ்டாண்டர்டு டைப் டிசைன் வரவில்லை என்று சொன்னார்கள். அதே காலதாமதம் தான் இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஸ்டாண்டர்டு டைப் டிசைனை எப்போதுதான் அந்த நீதித்துறை அனுப்பிவைக்கும்? எப்போதுதான் நீதிமன்றத்தைக் கட்டி முடிக்கக்கூடும். * *

** மாண்புமிகு பேரவை
அகற்றப்பெற்றது.

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 17

அதே போன்று, கள்ளச்சாராயக் குற்றம் சம்பந்தமாக நான் நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, எனக்கு அவர்கள் பதில் அளித்தார்கள். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் அவருடைய கவனத்துக்குக் கொண்டு வந்தேன். அவர்கள் கூட பதில் சொன்னார்கள். அநேகமாக கள்ளச்சாராயத்தால் சமீபத்திலே சேலத்திலே நடந்திருக்கிற சம்பவம் என்பது வேதனையான ஒன்று. மதுரையிலே தயாரிக்கப்பட்ட சாராயம் அது. அது கள்ளச் சாராயம். சேலத்திலே எட்டு இடங்களிலே விற்கப்பட்டிருக்கிறது. 8 கடைகளிலே விற்கப் பட்டிருக்கிறது. அதை சாப்பிட்டவர்களில் 120 பேர்களுக்கு மேல் செத்தார் கள். 22 பேரைத்தான் போஸ்ட்மார்ட்டம் செய்திருக்கி றார்கள். அப்படித்தான் வழக்கிலே இருக்கிறது. மற்றவற்றை யெல்லாம் அவர்கள் வழக்கிலே சேர்த்துக்கொள்ளவில்லை. சமூக விரோதிகள் இன்றைய தினத்திலே வெளியேற்றப்படுகி றார்கள். அவர்கள் வெளியேறுவதால் மீண்டும் இந்த மாதிரியான தவறுகள் நடப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. அப்படிப்பட்ட சமூக விரோதிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு கள்ளச் சாராயத்தையும், விஷச்சாராயத்தையும் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந் தாலும்கூட, சாதாரண ஏழையெளிய மக்கள், குடிப்பழக்கத் திலே ஊறிப்போனவர்கள் மீண்டும் எதையாவது போதைக்கு அருந்தவேண்டுமென்ற நோக்கத்தோடு பலவற்றை வாங்கி சாப்பிட்டுக்கொண்டு இறக்கக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக் கின்றன. இதை நான் குறிப்பாக காவல்துறையினரின் கவனத் துக்குக் கொண்டுவருகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு கள் இறக்குகிற தொழிலைத் தொடங்கி விட்டார் கள். இன்றைக்கு பனங்கள், தென்னங்கள்ளை இறக்கி வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால், சாதாரண ஏழையெளிய மக்கள் கள்ளச்சாராயம் அருந்து வதிலேயிருந்து விடுபட முடியாத சூழ்நிலையில் உயிரை பலி கொடுப்பதைவிட நீங்கள் கள்ளுக் கடைகளை திறந்து விடுங்கள். கள்ளுக் கடையை திறப்பதால் ஏழையெளியவர்கள் அருந்து வதோடு, அதிலேயிருக்கிற பல லட்சக்கணக்கான தொழிலாளர் களுக்கு வாழ்வும் கிடைக்கும். கள்ளச்சாராயம் அருந்தி ஏழை யெளியவர்கள் இறந்தால் காரணங்களைச் சொல்லிக் கொண் டிருக்கக்கூடிய தேவையும் இல்லை. அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்துவதால் அரசுக்கு வருமானம் கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பும் ஏற்படும். அந்த விதத்திலேதான் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிற உறுப்பின ருடைய கவனத்தை திசை திருப்புவதைப் போல சீட்டுகள் கொடுக்கிற முயற்சிகள் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 மார்ச் 17]

திரு. ஜி. பழனிசாமி : இன்றைக்கு பிராந்தி, விஸ்கி, பீர், போன்ற மதுவகைகள் விற்கப்படுகின்றன. அதை 'பார்' எல்லாம் வைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சென்று யாராவது சாப்பிட்டுவிட்டு போனால் நம்முடைய காவல்துறையினர் அவர்களைக் கைது செய்கிறார்கள். நீ மது சாப்பிட்டுவிட்டு செல்கிறாய், போதையில் இருக்கிறாய் என்று சொல்லி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். மதுவகைகளை வாங்கிக் கொண்டுபோய் வீட்டிலே சாப்பிட முடியாது. பாரிலேதான் உடைத்து சாப்பிட முடியும். அப்படி பாரிலே வியாபாரம் நடக்கிறது என்று சொன்னால் போலீசுக்கு மாமூல் கொடுக்க வேண்டியது இருக்கிறது. ஒவ்வொரு இடங் களிலும் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று மாமூல் கொடுக்க வேண்டியதிருக்கிறது. பிராந்திக் கடைகளை ஏலம் எடுக்கக்கூடியவர் அமைச்சர் வீட்டு வாசலில் நின்றுகொண் டிருந்தார். நான் ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டேன். நாங்கள் காவல்துறையினருக்கு மாமூல் கொடுப்பதால், தனியாக பாட்டிலாக வியாபாரம் செய்ய வேண்டும். அதை ஓப்பன் பண்ணி வியாபாரம் செய்யக்கூடாது. என்று சொல்கி றார்கள். நான் காவல்துறையினருக்கு மாமூல் கட்ட வேண்டிய திருக்கிறது. 500, ஆயிரம், இரண்டாயிரம் என்று மாமூல் கட்டினால் வேறு ஏதாவது ஒரு சாராயத்தைத்தான் விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்று அவர் சொன்னார். இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. அப்படியா யானால் சீமைச் சாராயம் சாப்பிடக்கூடியவர்கள் வாங்கிக் கொண்டுபோய் மனைவி, குழந்தைகளோடு சாப்பிட முடியுமா? வீட்டிலே குடும்பத்தோடு சாப்பிடமுடியுமா? அது என்ன சட்டம் என்று தெரியவில்லை, முழுமையாக அதையும் ஒழியுங்கள். சாராயம்.. ... (குறுக்கீடு)

165045

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, இது கடைசி எச்சரிக்கை. அடுத்து உங்கள் குறுக்கீடு எந்த விதத்தில் இருந்தாலும் நீங்கள் வெளியேற்றப்படுவீர்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: நானே போகிறேன். (திரு இரா. தாமரைக்கனி அவையிலிருந்து வெளியேறினார்).

நண்பகல் 12-00

திரு. ஜி. பழனிசாமி : என்னுடைய பேச்சையே இன்றைக்கு கெடுத்து விட்டார்; பேச்சையே குளோஸ் பண்ணி விட்டார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது

[1992 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குள் போக வேண்டாம். நானே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) எப்போது முடிக்கப்படும் என்பதோடு உங்களுடைய கேள்வி முடிகிறது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. கடந்த 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அது தன்னுடைய ஸ்டாண்டர்டு டைப் டிசைன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்துவிட்டார்கள். துரிதமாக அது அரசாங்கத்திற்கு அனுப்பப்படும். அதன் மீது, வேலூர் கோர்ட் பணிகளும் துரிதப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சிவகங்கையிலும் மாவட்ட உயர்நீதிமன்றம் அமைக்கப்படும் என்று பலமுறை உறுதியளித்துள்ளார்கள். அந்த கட்டிட வசதிக்காக இப்போது இருக்கிற சப்கோர்ட் நீதிமன்றத்திலே மாவட்ட நீதிமன்றம் அமைக்கலாம் என்று மாண்புமிகு நீதிபதி** பார்வையிட்டு, அவர்களும் கட்டிடம் சரியாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்துவிட்டார்கள். அப்படியிருந்தும் இப்போது இருக்கிற மாவட்ட நீதிபதி * * அவர்கள் இந்த இடம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பெயர்கள் எல்லாம் வேண்டாம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : நீதிபதி அவர்கள் அரசு உத்தரவிடவில்லை என்றும் சொன்னதால், இது காலதாமதமாகியிருக்கிறது. இதற்கு என்ன வழி என்பதை சட்ட அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து நான் மீண்டும் சில தகவல்களைச் சொல்லுவதற்காக, சட்ட வரம்பிற்குட்பட்டு சில ஆதாரங்களைச் சொல்வதற்காக, நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் காலத்திலே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 17]

தான் ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட், சிவகங்கை கோர்ட், இராமநாதபுரம் கோர்ட் ஆகியவற்றை அமைக்க அவர்கள் முடிவு எடுத்தார்கள் போற்றுதலுக்குரிய நம்முடைய முதல்வர் அவர்கள், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்பே அங்கீகாரம் அளித்துவிட்டார்கள். நேரிடையாக உயர்நீதிமன்றத்திலேயிருந்து, பதிவாளரைக் கூப்பிட்டு, ஹோம் செக்கரட்டரியோடு, ஃபைனான்ஸ் செக்கரட்டரியோடு, பி.டபிள்யூ.டி. அதிகாரிகளோடு கலந்து எல்லாம் முடிந்து அவர்களுக்குத் தேவையான ஸ்டாஃபையும் கொடுத்தாகி விட்டது. பில்டிங்கையும் கொடுத்தாகிவிட்டது. எல்லா வசதிகளையும் கொடுத்துவிட்ட பிறகும் இன்னும் உயர்நீதிமன்றத்தினர் அதைத் திறப்பதற்கு நாள் குறிக்காமல் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 241, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

241—

## பத்திரப்பதிவுக் கட்டணத்தைக் குறைத்தல்

*1331 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்தில் பதிவாளர் அலுவலகப் பகுதிகளில் உள்ள பத்திரப் பதிவுக்கு அதிக மதிப்பீடு இடுவதால் அங்குள்ள மக்கள் நிலம் வாங்கவும் விற்கவும் துன்பப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பத்திரப்பதிவுக் கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்திரப் பதிவிற்கு அதிக மதிப்பீடு இடுவதாகப் புகார் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும்போது புகார் எதுவுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் உள்ள பொது மக்கள்

போன்று இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பார் வைத்து நடத்தக்கூடியவர்கள் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. பாண்டிச்சேரியிலிருந்து நிறைய சாராயம் தமிழ் நாட்டிற்கு வருகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயம்புத்தூரிலே, ஈராச்சிபாளையம் என்கின்ற அந்த ஊரில் பெரிய தொழிற்சாலை நடத்திக்கொண்டிருந்த விஷ சாராய வியாபாரி கைது செய்யப்பட்டார். ஆனால், அதைக் கண்டுபிடித்து கைது செய்த அதிகாரியை உடனடியாக மாற்றம் செய்தார்கள். என்ன இரகசியம் இருக்கிறது என்று தெரியவில்லை. அதற்கு என்ன காரணம்? சட்டத்திற்கு விரோதமாக, சமூக விரோதமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த இடங்களை, கண்டுபிடிக்க முடியாத இடத்தில் இருக்கக்கூடிய அந்தக் கள்ளச் சாராயத் தொழிற்சாலையை கண்டுபிடித்திருக்கக்கூடிய அந்த அதிகாரி போலீஸ் அதிகாரி உடனடியாக மாற்றப்படுகிறார். சமூக விரோதிகளைக் கண்டு பிடிக்கக் கூடாதா? என்ன காரணம்? அதற்கான அடிப்படைக் காரணம் என்ன? இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையினால் தான் காவல் துறையைப் பொறுத்த மட்டில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயத்தைப் பிடித்தார் என்பதற்காக அவர் மாற்றப்படவில்லை. அவர்கள் ஏதோ காரணத்தின் அடிப்படையிலே மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை உறுப்பினரவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தை பிடித்ததற்காக அவர்கள் மாறுதல் செய்யப்படவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. டிரான்ஸ்பர் பண்ண வேண்டியதுதான், வேண்டாமென்று சொல்லவில்லை. அதிகாரிகளையெல்லாம் டிரான்ஸ்பர் பண்ண வேண்டியதுதான். 3 வருஷம், 4 வருஷம் இருந்து விட்டார்கள் என்றால் டிரான்ஸ்பர் பண்ண வேண்டும், கண்டிப்பாக, காவல் துறையில் 3 வருஷத்திற்கு இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை காவல் துறையில் டிரான்ஸ்பர் பண்ண வேண்டியது நல்லது. அதிகாரிகளை டிரான்ஸ்பர் பண்ணினால் நல்லது. ஏன் என்றால் எங்கே அவர்கள் சிறப்பாக காவல் துறை செயல் பட்டாலும் அவர்களுக்கு நல்ல பெயரே கிடை



யாது. அதனால் மாற்றம் செய்வது ரொம்ப அவசியமானது. அதனாலே டிரான்ஸ்பர் பண்ண வேண்டியது தான், ஆனால், இவர் அந்தக் கேஸைப் பிடித்த பிறகு, உடனடியாக அன்றைய நாளிலேகூட மாற்றப்படுகிறார். அந்த நிலையிலே இந்த மாறுதல் என்றுதான் சொல்கிறோம். அப்படிப்பட்ட சமூக விரோதிகளை பிடிக்கிற முயற்சி செய்யக்கூடிய சூழ்நிலை வருகிறபொழுது அவர்களை மாற்றக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்,

எங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற இரண்டொரு பிரச்சினைகளைச் சொல்ல வேண்டும். இன்றைக்கு எல்லாயிடங்களிலும் சீட்டுக் கம்பெனி, மிக மோசமாக தமிழகம் முழுவதும் துவக்கப்பட்டிருக்கின்றன, போலித் தனமான சீட்டுக் கம்பெனிகளைத் துவக்கியிருக்கிறார்கள். பார் வைத்து நடத்துகிறார்கள். போதை மாத்திரை விற்கிறார்கள், குடிப்பழக்க வழக்கங்களை இன்றைக்குச் சாதாரண மாணவர்கள் மாணவிகளைக் கெடுப்பதிலே பல்வேறு சமூக விரோதிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடக்கூடியவர்களை நீங்கள் சொல்லிக் குறிப்பிட்டிருந்தாலும் அதைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முயற்சியெடுக்க வேண்டும். எனக்கு முன்புகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு, பீட்டர் அல்போன்ஸ் குறிப்பிட்டார்கள், அந்த பீர் தொழிற்சாலையை ஏற்கெனவே வாங்கியவர்களிடத்திலே திரும்பவும் விற்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள், முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஏற்கெனவே 8 கோடி ரூபாய்க்கு அது வாங்கப்பட்டு, இப்பொழுது 10.31 கோடிக்கு விற்கப்படுவதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள், அதில் இருக்கக்கூடிய இலாப நட்டம் என்ன என்பதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நாளைக்குப் பதில் சொல்லும் பொழுது நிச்சயமாகச் சொல்வார் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் இந்தப் பிரச்சினையில் சொல்வார் என்று கருதுகிறேன்.

திருவாரூரிலே ஏற்கெனவே ஒரு டி.எஸ்.பி. அலுவலகம் இருந்தது. திருத்துறைப்பூண்டிக்கு மாற்றப்பட்ட பின்னால் அந்தத் திருவாரூரிலே அந்த டி.எஸ்.பி. அலுவலகத்தை நீங்கள் துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

என்னுடைய தொகுதியில் தீயணைப்பு நிலையம் வந்து நீண்ட காலமாகிவிட்டது. அதற்கான இடங்கள் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடங்களிலே வாங்கி கட்டிடங்கள் கட்டாமல், வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. வாகனங்கள் சென்று வருவதற்கு மிகப் பெரிய ஒரு இடையூறான காரியமாக இருக்கிறது. அந்த இடத்திலே தீயணைப்பு நிலையத்தைக் கட்டிக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1992 மார்ச் 17

ஆலங்குளம் பகுதியில் உள்ள மக்கள் இந்தப் பத்திரப் பதிவினால் வாங்கவும் முடியாமல், விற்கவும் முடியாமல் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இந்தப் பத்திரப் பதிவின் மதிப்பு அதிகமாக இருக்கிறது. திருநெல்வேலி நகரிலே கூட இடம் வாங்கலாம். ஆனால், ஆலங்குளத்தில் ஒரு இடம் வாங்கி வீடு கட்ட முடியாது என்ற நிலை இருக்கிறது. அதைப் போல விவசாயிகள் நிலத்தை வாங்கவும், விற்கவும் அதிகமான மதிப்பீடுகள் போடப்படுகின்றன என்ற புகார் பொதுமக்களிடம் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கேரளத்திலேயிருந்து வருகிறவர்கள் அந்தப் பகுதியிலே நிலத்தை வாங்குவதால் அவர்கள் அதிக விலையைக் கொடுத்து வாங்குகிறார்கள். கறுப்புப் பணத்தைக்கூட ஒரு வேளை வெள்ளையாக ஆக்குவதற்காக அங்கே இது போன்ற நிலங்களை வாங்குவதால், அங்கே விலையை ஏற்றிவிடுவதால், மதிப்பீடுகள் அதிகமாகப் போடப்பட்டு அந்தப் பகுதி பொது மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனமாக, உன்னிப்பாக கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டுமென்றால், 13 ஆவணங்களை எடுத்துப் பார்க்கிற போது 12 ஆவணங்களிலே அந்த ஊரில் உள்ள இடத்தின் மதிப்பு சதுர அடிக்கு ரூ. 22 என்று இருக்கிறது. அரசினுடைய மதிப்பு அது. ஆனால், அதைப் பதிவு செய்கிறவர்கள் ரூ. 22க்குப் பதிவு செய்யாமல் ரூ. 23க்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் அரசினுடைய வழிகாட்டி மதிப்புக் குறைவாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. அங்கே ஒரு பெரிய பணக்காரர்தான், அவர் மட்டும்தான், இது சரியாக இல்லை என்று வழக்கிற்குப் போயிருக்கிறார். அதைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த நிலத்தின் மதிப்பு ரூ. 1,30,625; அதிலே இருக்கிற கட்டிடத்தினுடைய மதிப்பு ரூ. 1,09,820; ஆகமொத்தம் ரூ. 2,40,445. ஆனால், ஆவணங்களில் அவர் என்ன மதிப்பு போட்டிருக்கிறார் என்றால் ரூ. 25,000தான். அப்படி போட்டிருந்தாலும்கூட, அப்படிப் பதிவு செய்கிறபோது அரசினுடைய வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருந்தால் தனி துணை ஆட்சியாளரிடத்திலே மனுச் செய்தால் நேரிடையாகப் பார்த்துக்கூட அந்த மாதிரி சில இடங்களில் குறைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப்போல யாராவது கேரளாவிலிருந்து கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக ஆக்குவதற்காக அப்படி செய்கிறார்கள் என்று சொல்லியிருப்பது பற்றி எனக்குத் தெரியாது. அப்படி பார்க்கிறபோதுகூட சிலவற்றைக் குறைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளால் அங்கே யாருக்கும் சங்கடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 மார்ச் 17]

முற்பகல் 9-55

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகப் பத்திரப் பதிவுகள் அதிகமாக தேவைப்படுவதனால் சிலர் 2 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் எழுதி அவர்களாகவே ஒரு அக்ரிமெண்ட் போட்டுக்கொள்கிறார்கள். ஏழை விவசாயிகள் நிலம் வாங்கும்போதும் விற்கும்போதும் அவர்களாகவே அக்ரிமெண்ட் போடுவதனாலே அரசாங்கத்திற்கு அதனால் வரவேண்டிய வருமானம் போய்விடுகின்றது. அப்படி நாம் இந்தப் பத்திரப் பதிவை கொஞ்சம் குறைவாக போடாததனால் சில பேர் கேரளாவுக்கு செல்வதைக்கூட தவிர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலைகள் இல்லாமல் இருப்பதற்கு, இடையிலே 2 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரத்தை எழுதி முடிக்காமல்—சில நேரங்களில் இந்த மாதிரி பத்திரங்கள் பதிவதனால், ஏழைகள் ஒரு கடன் வாங்க வேண்டுமென்றால்கூட வங்கிகளிலே ரெஜிஸ்ட்டர்ட்டு டாக்குமெண்ட்ஸ் கேட்கிறார்கள். அப்போது ரெஜிஸ்ட்டர்ட்டு டாக்குமெண்ட்ஸ் இல்லாத சமயங்களில் மிகவும் துன்பப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆதலால் இதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு அவர்கள் ரெஜிஸ்டர் பண்ணுவதற்கு இந்த வேல்யூவை பத்திரப் பதிவுஅலுவலகத்தில் கொஞ்சம் குறைவாகப் போடுவதற்கு, அவர்கள் பத்திரச் செலவுகளைக் குறைப்பதற்கு மக்களுக்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபோதுகூட அந்த ஊரில் நடந்த பத்திரப் பதிவில் அரசினுடைய மதிப்பீட்டைவிட அதிகமாகப் போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னேன். அப்படி ஒருவர் மட்டும் தான் அப்படிச் செய்து இருக்கிறார் என்பதை நான் அவருடைய நிலையை எடுத்துக் காண்பித்தேன். இன்னொன்று கூட நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆவண எண். 1478/90, ஆலங்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட மதிப்பு குறைவாக இருக்கிறது என்று அது துணை ஆட்சியாளரிடம் அணுகப்பட்டது. அவரும் அந்த மதிப்பு சரிதான் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அதையும் எதிர்த்து தென்காசியில் இருக்கிற கோர்ட்டுக்கு போய் இருக்கிறார்கள். அந்த ஆவணம் எண் 1478/90 உடைய நபர் யார் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலையில் ஒரு சதவீதம் தான் இப்படி எதிர்த்துப் போகிறார்கள். ஆனால் பொதுமக்களுக்கு எங்கெங்கே சங்கடங்கள் இருக்கின்றது என்பதையெல்லாம் ஆராய்ந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நேற்றுகூட சொல்கிறபோது, பொது மக்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். இதற்கு சம்பந்தப்

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 17

திருத்துறைப்பூண்டி ஒரு தாலுக்கா நகர். அந்தப்
பகுதியிலே இருக்கிற சுற்றுப்புறங்களில். வேதாரண்யம்,
திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி போன்ற அந்தப் பகுதிகளில்
இருக்கக்கூடிய இடங்களில் ஏதாவது ஒரு விபத்து நடந்தால்
உடனடியாக, அவசரமாக அந்த விபத்துக்கு உட்பட்டவர்களைக்
கொண்டு வருவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்
தத் தீயணைப்பு நிலையத்திற்கு ஆம்புலன்சு ஒன்றை நம்முடைய
தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள் வழங்க வேண்டுமென்று
கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி
கூறி, முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

*திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. காவல்துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்
தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.
பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், விடுதலைப் புலிகளைப் பற்றி
இங்கே குறிப்பிட்டார்கள். நேற்றைய தினம், இங்கே பேசிய
மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் விடு
தலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கிறேன், தமிழ் ஈழத்தை
ஆதரிக்கிறேன் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதே ஆதரித்தார்கள், அத
னால் நான் ஆதரிக்கிறேன் என்று சொன்னார். புரட்சித் தலை
வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்திலே, தமிழகத்திலே
இருக்கிற அனைத்துக் கட்சிகளும், இலங்கையிலே நடந்த தமிழர்
களுடைய கொடுமைக்காக நாம் ஆதரித்தோம். அன்றைக்கு
பிரபாகரன் கையிலே இருந்த துப்பாக்கி, இலங்கையை நோக்கி
இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்தத் துப்பாக்கி, இந்திய
நாட்டிலே இருக்கிற தமிழ் மண்ணை நோக்கி இருக்கிறது என்
பதுதான் வேதனையான செய்தி. புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, தமிழ் மண்ணிலே, இந்திய
நாட்டிலே இருக்கிற எந்தத் தலைவர்களும் ''ஹிட்லிஸ்ட்''-டிலே
இல்லை. ஆனால், தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் விடு
தலைப் புலிகளாலே கொல்லப்பட்டார் என்ற செய்தியை, உல
கத்திலே இருக்கிற அத்தனை மக்களும் இன்றைக்கு தெரிந்து
வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன், குறிப்பாகச் சொல்
கிறேன். இந்த மாமன்றத்திலே இன்றைக்கு மக்களுடைய சக்
தியை ஒட்டுமொத்தமாகப் பெற்றிருக்கிற நம்முடைய முதலமைச்
சர் அவர்களும் இன்றைக்கு அந்த ''ஹிட் லிஸ்ட்''டிலே இருக்
கிறார்கள். தமிழகக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்
வாழப்பாடி அவர்களும் இன்றைக்கு அந்த ''ஹிட்லிஸ்ட்''டிலே



1992 மார்ச் 17] [திரு. போளூர் வரதன்]

இருக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியர் சோ அவர்களும் இருக்
கிறார். மரியாதைக்குரிய பெரியவர் ம.பொ.சி. அவர்களும்,
அந்தகையோர் எல்லாம் இன்றைக்கு அந்தப் பட்டியலிலே
நீண்டு கொண்டே போகிறார்கள். கொலை வெறிக் கும்பலை
தமிழ் மண்ணிலே நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சில பத்திரிகை
கள் இன்றைக்கு தமிழகத்திலே வெளிப்படையாகப் பேசி வரு
கிறது. இந்த மாமன்றத்திலேகூட, நேற்றைக்கு அந்த உறுப்
பினர் அவ்வாறு அறிவித்திருக்கிறார். மத்திய சர்க்கார் அந்த
இயக்கங்களுக்குத் தடை விதிப்பதற்கு பரிந்துரை செய்கிறோம்
என்று சொல்கிற அதே நேரத்தில், இந்த மாமன்றத்தில் ஒருவர்
இப்படி ஆதரவு தருகிறோம் என்று பகிரங்கமாக சொல்கிறார்
என்று சொன்னால், அப்படிப்பட்ட தேச விரோத சக்திகளை
ஆதரிக்கிற சக்திகளை தமிழகத்திலேயிருந்து நீங்கள் தடை
விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டு
மல்லாமல், இப்படிப்பட்ட தேச விரோத சக்திகள் இந்திய
நாட்டினுடைய ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும்
கெடுக்கின்ற விதத்திலே, விடுதலைப் புலிகள் இன்றைக்கு நடந்து
கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், யாராக இருந்
தாலும், அப்படிப்பட்டவர்களை ஆதரிக்கிறவர்களை, ''தடா''
சட்டத்திலே கைது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதற்கு மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமி
ழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்த முதலமைச்சர்
பொறுப்பை ஏற்ற பிறகு—தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு
எங்கே இருக்கிறது என்ற ஒரு பதட்டமான சூழ்நிலையிலே நீங்கள்
முதலமைச்சராகப் பொறுப்பிற்கு வந்தீர்கள்—கடந்த எட்டு
மாதங்களிலே தமிழகத்திலே விடுதலைப் புலிகள் இல்லை என்ற
ஒரு நிலையை உருவாக்கி, சட்டம், ஒழுங்கை இன்றைக்கு
கட்டுக்குள்ளே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிற
போது, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான மக்களுடைய
ஆதரவை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்ற காரணத்தினால்,
உங்களிடத்தில் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்:
விடுதலைப் புலிகளை ஆதரிக்கக்கூடிய இயக்கங்கள் எதுவாக
இருந்தாலும், தமிழகத்திலே அவற்றை துணிந்து நீக்க தடை
விதித்து, அந்தத் தலைவர்களை ''தடா'' சட்டத்திலே கைது
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக
ஆட்டோ சங்கர் வழக்கிலே '' ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு'' என்று
வருகிறது. கவர்னர் ஆட்சிக் காலத்திலே, அந்த வழக்குகள்—
கொலைகள்—கொண்டு போகப்பட்டபோது, பல்வேறு போலீஸ்
அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். பல இடங்க
ளுக்கு மாற்றப்பட்டார்கள். தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பின்
னாலே, அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் பதவி கொடுத்
திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை

[1992 மார்ச் 17

படவில்லை என்றாலும், நேற்று எங்களிடத்திலே, எனக்கு
உத்திரவு போடுகிறபோது, எந்த மாவட்டத்திலும், எங்கேயும்
வரி வசூலுக்காக ஜப்தி செய்யக்கூடாது; ஜப்தி செய்து இருந்
தால் அந்த பொருட்களை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று
உத்திரவு போட்டார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி),
இதிலிருந்து பொது மக்கள் எந்தவிதத்திலும் சங்கடப்படக்
கூடாது என்பதை அவர்கள் உணர்ந்து இந்த அரசு நடவடிக்கை
எடுக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும்
நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன், மாண்புமிகு திரு.
எஸ். எஸ். ராமசுப்பு அவர்களுக்கு, ஆவண எண் 1478/90 யார்
என்பது அவருக்கே தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

242—

**சூரங்கொல்லையிலுள்ள மிகவும் பின்தங்கிய ஏழைகளுக்கு காலனி வீடுகள்.**

*1911 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டையைச் சேர்ந்த சூரங்கொல்லையிலுள்ள மிகவும் பின்தங்கிய (Denotified Communities) ஏழை மக்க ளுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை
" இல்லை " என்று சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும்
இந்த மிகவும் பின்தங்கிய பட்டியலில் இருக்கின்ற அம்பலக்காரர்
இனத்தைச் சேர்ந்த மக்கள் என்று தான் நான் குறிப்பிட்டு இருக்கி
றேன். அது " டி. என். டி. " என்று குறிப்பிடப்பட்டு இருக்
கிறது. அந்த மக்கள் ஆதிதிராவிட மக்களைவிட மிகவும் கீழ்
நிலையிலே பல கிராமங்களில் இருந்து வருகிறார்கள். அது
அமைச்சருக்கும் தெரியும்; நம்முடைய முதல்வர் அவர்களுக்குத்
தெரியும். ஆனால் இந்த மக்களுக்கு காலனித் திட்டம் கொண்(



1992 மார்ச் 17]

வந்தால் நிச்சயம் அந்த மக்கள் அதனால் பலன் பெறுவார்கள்.
மேலும், ஆதிதிராவிட மக்களினுடைய காலனித் திட்டம்
ஒன்றிரண்டு ஆண்டுகளில் முடிந்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்
கிறது. அதேநேரத்தில் இந்த திட்டத்தையும் கொண்டுவந்தால்
இது போன்ற மக்களுக்கு பயன் கிடைக்கும். ஆகவே மீண்டும்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து பரிசீலிப்பாரா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் சொன்ன
தைப் போல பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்
மரபினர் என்ற பிரிவைச் சார்ந்தவர்களில் பலர் ஆதிதிராவிட
மக்களைவிட மிகக் கீழான நிலையில் பொருளாதாரத்திலே
இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், எப்படியோ அரசியல்
சட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு செய்ய வேண்டிய சில கடமை
களை வற்புறுத்தியதைப் போல இந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும்
பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பற்றி எதுவும் குறிப்பிடாத
காரணத்தினால் இதற்கான திட்டங்களை அரசு நிறைவேற்று
வதற்கு முயற்சி செய்கிறபோது பல சங்கடங்கள் உண்டாகி
இருக்கின்றன. 1980-ஆம் ஆண்டு வரை சுமார் 4,300 ரூபாய்
செலவில் இப்படி மிகவும் பிற்படுத்தப்பட்ட டிநோட்டிஃபைடு
சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுகிற திட்டம் இருந்து இருக்கிறது.
ஆனால், 4,300 ரூபாய்க்குள்ளே வீடு கட்ட இயலாது. சுமார்
16,350 ரூபாயாவது குறைந்த அளவு வேண்டும் என்று திட்ட
மிட்டபோது அதற்குப் பிறகு பொருளாதார நெருக்கடியின்
காரணமாக சட்டபூர்வமாக வீடு கட்டித்தர வேண்டும்
என்கின்ற ஒரு சூழ்நிலை இல்லாத இந்த நிலையில் இந்த வீடு
கட்டுகிற திட்டம் முயற்சிக்கப்படவில்லை. ஆனால் நாம்
எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 500 வீடுகளாவது
கட்ட வேண்டுமென்று திட்டக் குழுவினிடத்தில் கேட்டிருக்கிறோம்.
இவை எல்லாவற்றையும் விட மாண்புமிகு முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள், இதற்கு முன்னால் எப்படி நடை
பெற்று இருந்தாலும் இனிமேல் இதை ஒரு சிறப்பான திட்டமாகக்
கருதி இதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள்
தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, வருகிற காலத்தில் இதை
ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி சீர் மரபினருக்கு, மிகவும் பிற்
படுத்தப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக பல இடங்களில் ஆதி
திராவிட மக்களை விட தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு
வீடு கட்டுகிற திட்டத்தை அரசு இனிமேல் தொடங்கும் என்பதை
—அதுவும் பொருளாதார சூழ்நிலையையொட்டி எந்த அளவுக்கு
வீடுகள் கட்ட இயலுமோ அதற்கான முயற்சிகளை எதிர்காலத்
தில் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 243,
(குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள், எதிர்காலத்தில் செய்யப்படும்
என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், உங்களுக்கு
உரிய பதில் வந்துவிட்டது என்று கருதினேன்.

எடுத்தீர்கள் என்பதை இன்றைக்கு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல; ஆட்டோ சங்கர் சிறையிலே இருந்து தப்பிச் சென்றபோது, எப்படி தப்பித்தான் என்பதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து, அவன் எப்படித் தப்பித்தான் என்பதற்கு ஒரு '' என்கொயரி '' நடந்தது. அந்த நீதி விசாரணை என்ன ஆனது என்பதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். காவல் துறை என்பது, 100 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் தீட்டி, தமிழ் மண் ணுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற நேரத்திலே, காவல் துறையின் பணிகள் சிறப்பாக இருந்தன. ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 300 கோடிக்கு மேலாக, இன்றைக்கு காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்து நவீன முறையிலே ஒரு ''அப்ரோச்''சைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணுகிற இந்த நேரத்திலே, தமிழகத்திலே பத்திரிகையிலே பார்க்கிறோம். என்ன பார்க்கிறோம்? எல்லாப் பகுதிகளிலும் கொலை என்று சொல்கிறோம்; கொள்ளை என்று சொல்கிறோம். பெண்கள் நடமாட முடிய வில்லை, தாய்மார்கள் வேலைக்குச் செல்ல முடியவில்லை; பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. ஏன், குறிப்பாகச் சொல்கிறேன்; அபிராமபுரம் பகுதியில் ஒரு சாலையிலே கோலமிட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்மணி, தான் அணிந் திருந்த தாலியைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாத ஒரு நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. காவல் துறை தலை குனிந்து நிற்பதற்கு யார் காரணம்? (குறுக்கீடு).

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்கார வேண்டும் (குறுக்கீடு).

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பற்றி மட்டும் பேசுவதற்கு இந்த அவையிலே நீங்கள் எனக்கு அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். வேண்டு மானால் தாமரைக்கனி போன்றவர்கள் வேறு மாநிலத்திலே இருக்கிறது என்று சொன்னால் வெளியிலே வந்து சொல்லட்டும். நான் அதற்கு பதில் சொல்லுகிறேன். தேவையில்லாத விஷயத் திலே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் தலையிடு வார்களேயானால், என்னுடைய தலையீடும் வேறு விதமாக இருக்கும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி பேசியது எதுவும் அவைக்குறிப்பில் வராது. நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம்.

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்ினுடைய காவல்துறையைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்திய நாட்டிலே ஒரு காலத்தில் காவல்





துறை என்பது தமிழ் மண்ணிலே இருக்கின்ற காவல் துறைதான் சிறப்பான காவல் துறை என்ற பெயரைப் பெற்றிருந்ததனாலே தான் நான் இன்றைக்கு இதைக் குறிப்பிடுகிறேன். நான் வேறு ஒன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

என்னுடைய மைத்துனி, வங்கி ஒன்றில் வேலை பாரார்க்கிறார் கள். அவர்கள் சர்ச் பார்க் கான்வென்ட் அருகே நடந்து வந்து கொண்டிருக்கும் போது, காலை 11–00 மணிக்கு, பட்டப் பகலிலே அவர் அணிந்திருந்த சங்கிலியை ஒருவன் அறுத்துச் செல்கின்றான். அப்போது அங்கே சிக்னலில் நின்று கொண் டிருந்த போலீஸ் அதிகாரியைப் பார்த்து நகையைப் பறித்துக் கொண்டு ஓடுகிறான் என்று சொல்கிறார். ஒன்றும் தெரியாதவர் போல் நின்று விட்டு 10 நிமிடங்கள் கழித்து அவரைப் பார்த்து, என்னம்மா என்று கேட்கிறார். அதற்குள் செயினை அறுத்துக் கொண்டு ஓடியவன் ஓடி விடுகிறான். என் மைத்துனி, நகையை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான் என்று சொல்கின்றபோது அந்தக் காவல் அதிகாரி நான் பார்க்க வில்லையே என்று மழுப்பிவிட்டு சென்றிருக்கிறார். அதற்குப் பின்னாலே டி. 2 காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுப் பதற்குச் சென்றால் புகாரை ஏற்க மறுத்துவிட்டார்கள். பின்னர் 3 மணிக்கு எனக்குத் தகவல் வருகிறது. நான் அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்றபின் அதற்குப் பின்னாலே F.I.R. போடு கிறார்கள். இது சம்பந்தமாக இங்கே ஒரு அமைச்சரிடத்தில் எடுத்துச் சொன்னேன். அந்த அமைச்சரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். இதுநாள்வரை எந்தக் குற்றவாளியும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதே ஆயிரம் விளக்குப் பகுதியிலே ஒரு கிரைம் இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்டு, அவரிடத்திலேயிருந்து பொருள்கள் பறிக்கப்படுகின்றன. பல் வேறு உயர் அதிகாரிகள் வீடுகளிலே கொள்ளையடிக்கின்றார் கள். காவல் துறை அதிகாரிகள் வீட்டிலேயே கொள்ளையடிக் கின்றார்கள். சாதாரணக் குற்றங்கள் என்று வருகிறபோது, சாதாரண மக்கள் வாழ்கின்ற பகுதியிலேதான் நடக்கிறது என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால், இன்றைக்குக் குற்றவாளிகள் யாரிடத்திலே கொள்ளையடிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுகின்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, காவல் துறை உயர் அதிகாரிகள் கொள்ளையடிக்கிறார்கள் என்று பொதுப்படையாக இப்படிக் குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. எனவே, மாண்புமிகு உறுப்பினர் விவரங்களைத் தெரிவித்தால், எந்தக் காவல் அதிகாரி, எந்த உயர் அதிகாரி, எந்தத் தவறு செய்தார்.

[1992 மார்ச் 17

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவான விளக்கத்தை கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள், இவர்களில் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கிற மக்களுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுத்தால் போதும் என்பது தான் என்னுடைய கேள்வியின் அடிப்படையாகும். ஆகவே, மீண்டும் இதை பரிசீலனை செய்து, வருகிற திட்டத்தில் நம் முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இந்த புரட்சியை செய்து மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு காலனித் திட்டத்தைக் கொண்டு வர மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் விளக்கமாகவே சொன் னேன். ஆனால் ஒரு புதிய வார்த்தையை சேர்த்து இருக்கிறார்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் என்று. ஆதிதிரா விடர் மக்களுக்கு கீழே பொருளாதார நிலையில் வாழ்கிறார்கள் என்று சொன்னாலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்றுதான் பொருள். இதிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர், ஏன், பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கிற பலரும் இன்றைக்கு வறுமைக்கோட்டிற்கு கீழேதான் இருக்கி றார்கள். ஆனால், அரசியல் சட்டத்தை செய்தபோது இவர் களைப் பற்றியெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத காரணத் தால், நீண்டகாலமாக இது புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் இதைப்பற்றி சிந்தித்து சுமார் 13,000, 14,000 ரூபாய் செலவில் வீடுகள் கட்டித்தரலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார சூழ்நிலைகளையொட்டி அது ஒத்திப்போடப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே தான் இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டபோது இதை ஒரு புதிய திட்டமாகக் கருதி இதற்காக நிதி ஒதுக்க வேண்டுமென்றார்கள். எனவே, மிகவும் பிற்படுத்தப் பட்ட, சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்குதான் இந்த வாய்ப்புகளே கிடைக்கும். வசதியாக இருப்பவர்களுக்கு அல்ல. ஆகவே, இதை யெல்லாம் கவனத்தில் கொண்டுதான் எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 243, டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1992 மார்ச் 17]

243—

## காலியாக உள்ள உதவிப் பேராசிரியர்கள் பதவிகளை நிரப்புதல்

*1399 டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுக் கலைக்கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பதவிகளை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசுக் கலைக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங் களில் ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள் நிய மனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இனிமேல் முறையாக ஆசிரியர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப் படும் விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்வு முறை ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்டு பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் அசிஸ்டெண்ட் புரபசர்ஸ் தேர்வுக்கான ஸ்கிரீனிங் டெஸ்ட்டை முடித்து எவ்வளவு பேர்கள் பணிக்காக துறைவாரியாக— டிபார்ட்மெண்ட் வைஸ்—காத்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இப்போது பணியாற்றி வருகின்றனர் என்றுதான் சொன்னேன். இனி மேலும் அப்படித்தான் செய்வோம் என்று நான் சொல்ல வில்லை. இனிமேல் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் ஆசிரி யர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுவரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் ஆட்சி வரம் புக்கு உட்பட்டிருந்த இந்தத் தேர்வு தனியாக ஆசிரியர் தேர் வாணையம் என்று அமைக்கப்பட்டு அதன்மூலம் தேர்ந்தெடுக் கப்படுகிற ஒரு முறையை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது அதிலே பங்கு கொள்ள வேண்டிய ஆசிரியர்களுக்கு 'ஸ்கிரீனிங் டெஸ்ட்' நடத்தி, நம்முடைய சென்னைப் பல் கலைக்கழகமே அதை நடத்தி, ஒரு பட்டியல் தயாரித்து இருக் கிறார்கள். அந்தத் தேர்வு ஆணையத்திற்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அந்தஸ்தில் ஒரு உறுப்பினரை நாம் போடவேண்டும்.

எந்த வகையில் கொள்ளையடித்தார் என்பதையெல்லாம் விவரங் களுடன் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போளூர் வரதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். குற்ற வாளிகள் காவல் துறை அதிகாரிகளிடத்திலேயே இன்றைக்குக் கொள்ளையடிக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். சிவராமன் என்கிற கிரைம் இன்ஸ்பெக்டர் ஆயிரம் விளக்குப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுது கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறார். ஒரு டி.எஸ்.பி. வீட்டிலே கொள்ளையடிக்கப் பட்டதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. பல்வேறு இடங்களில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையிலே வந்திருப் பதைச் சொல்லவேண்டாம். நீங்களே பொறுப்பேற்றுக்கொண்டு சொல்ல வேண்டும். ஒரு இன்ஸ்பெக்டரைப் பற்றிச் சொன்ன தைப் போல, டி.எஸ்.பி. வீட்டில் கொள்ளை நடந்ததைப்பற்றி ஆதாரத்துடன் சொல்ல வேண்டும். பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்லக் கூடாது.

திரு. போளூர் வரதன் : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை என்பது இந்த நாட்டிலே சுதந்திரமாக இயங்குவதாக நாம் சொல்லுகிறோம். எல்லாப் பத்திரிகைகளிலேயும் ஒரு டி.எஸ்.பி. வீட்டிலே கொள்ளையடிக்கப்பட்ட செய்தி எட்டுக் கால செய்தியாக வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் எது வேண்டுமானாலும் வரும். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் பேசுகின்ற பொழுது கிடைத்திருக்கிற, சரியான, நம்பிக்கைக்குரிய தகவலின் அடிப்படையில்தான் பேச வேண்டும் என்றிருக்கிறது

திரு. போளூர் வரதன் : பிறகு நான் அதைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள்.

திரு. போளூர் வரதன் : எனவே, இன்றைக்கு பொதுமககள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பது மட்டுமல்ல. வேறு ஒன்றை யும் சொல்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் பஸ்ஸிலே வரு கின்றபொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் கொடுக்கப்பட்ட 'சூட் கேஸ்' கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது.





என்ற உண்மையையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். அது உண்மையா, இல்லையா என்பதை அந்த உறுப் பினர் இங்கே இருக்கிறார் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, இப்படி காவல்துறையின் மீது இருக்கின்ற நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது. அதை உங்கள் காலத்திலாவது சரி செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் இதை நான் சுட்டிக் காட்டுகிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்குப் பல்வேறு .... (குறுக்கீடு.)

(முற்பகல் 12-15

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். இன்னொரு உறுப்பினர் இடையில் குறுக்கிட்டு ஏதோ சொல்லிக் கொண்டே இருக்கிறார். இது அவையினுடைய சட்டத்திற்கு உட்பட்டதா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே அவர் களை எச்சரித்து இருக்கிறேன். இனிமேல் தொடர்ந்து இப்படிச் செய்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று எச்சரித்து இருக்கிறேன். தொடர்ந்து செய்தால் நடவடிக்கை எடுக்கப் படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நீங்கள் சொன்னதைக் கேட்காமல் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொடர்ந்து செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. போளூர் வரதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போலீஸ் அதிகாரிகள் கொடுத்த ஒத்துழைப்போடுதான் அந்த அரசு தவறான காரியங் களைச் செய்து தமிழ் மண்ணை அழித்து இருக்கிறது என்ற வரலாறுகளை நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மனதில் கொண்டு இன்றைக்கு இருக்கிற காவல் துறை அதிகாரிகள் சொல்கிற அத்தனையும் ஏற்றுக் கொள்ளாமல் தாங் களே முடிவெடுப்பார்களேயானால் தமிழகத்தில் சிறந்த காவல் துறையை உருவாக்க முடியும் என்று நான் எண்ணுகிறேன்.

அதை விரைவிலே நாம் போட இருக்கிறோம். அதைப் போட்ட வுடனே, ஆசிரியர்கள் தேர்வு ஆணையம் உடனிப் பேராசிரியர் களைத் தேர்ந்தெடுக்கும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 244, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் நியமித்தல்.

*3333 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேரன்மகாதேவி தொகுதி வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு விடுதி இருந்தும், பெண் மருத்துவர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பெண் மருத்துவர் நியமிக்கப் படுவார் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலை யத்தில் பெண் மருத்துவர் ஒருவர் 2—11—1991 முதல் பணி யாற்றி வருகிறார்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் 11–வது மாதத்திலே பெண் மருத்துவர் ஒருவரை நியமித்ததாக சொன் னார்கள், நானும் அதை அறிந்தேன், ஆனால் அந்த மருத்து வர் வேலையில் ஜாயின் பண்ணிவிட்டு. ஒருசில நாட்கள் மட்டும் வேலை செய்துவிட்டு. மீண்டும் வரவில்லை, அவர், மாறு தலைத் தேடி, நாடி வந்து கொண்டு இருக்கிறார், இப்படி கிராமப்பகுதிகளிலே பெண் மருத்துவர்களை நியமிக்கின்ற போது, அவர்கள் அந்தப் பகுதிகளிலே வேலை செய்ய விரும்பு வதில்லை, தமிழகம் முழுவதும் உள்ள பெண்கள்—அதிலும்



குறிப்பாக அதிகமான கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய என்னுடைய சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதியில் சட்ட மன்ற உறுப்பினர்களிடம் பேசுகின்றபோதுகூட, கதவுகளுக்கு இடையிலேயும், ஜன்னல்களுக்கு இடையிலேயும் நின்றுகொண்டு பேசுகின்ற பெண்கள் அதிகம் உள்ள தொகுதியான என்னுடைய தொகுதியில், ஆண் மருத்துவர்களிடம் பெண்கள் தங்களுடைய சிறு குழந்தைகளுக்கு சுகம் இல்லாமல் இருந்தாலும் கூட காட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில், கண்டிப்பாக ஒரு உத்தரவை அமலுக்குக் கொண்டு வந்து, பெண் மருத்துவர்களை நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழு மூலமாக பெறுகிற, புதியவர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிற பட்டியலிலிருந்து வரு கிறவர்கள், கிராமப்புறங்களிலேதான அவர்கள் கட்டாய மாகப் பணியாற்ற வேண்டும், எம்.பி.பி.எஸ். மட்டும் முடித் தவர்களாக இருந்தால் 3 ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டும், டிப்ளமோ முடித்தவர்களாக இருந்தால், இரண்டு ஆண்டுக் காலமும், போஸ்ட்—கிராஜுவேட் முடித்தவர்களாக இருந் தால், 1 ஆண்டுக்காலம் கண்டிப்பாக பணியாற்ற வேண்டும் என்ற ஒரு முறையை நாம் ஏற்கனவே வைத்திருக்கிறோம், இருந்தும் சில இடங்களிலே தொடர்ந்து அவர்கள் விடுமுறை யிலே போய்விடுகிறார்கள், குறிப்பாக ஒதுக்குப்புறமாக, தள்ளியிருக்கிற மற்றும் மலைப்பகுதிகளிலே இருக்கின்ற இடங் களில் உள்ள மருத்துவமனைகளிலே குறிப்பாக பெண்கள் போய்ச் சேருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதை எல்லாம் அறிந்த பின்னாலேதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை இப்போது வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக வருகிற டிமாண்டிலே, 20 ஆம் தேதி மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக வர இருக்கிற மானியக் கோரிக்கையில் விரிவாக அதற்கான ஒரு திட்டத்தை அறிவிக்க இருக்கிறோம். எனவே, நிச்சயமாக எல்லா இடங் களுக்கும் பெண் மருத்துவர்கள் தேவையான அளவிற்கு நிரப்பு வதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 245 திரு, ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

245—

சேத்துப்பட்டு நகரப் பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்த நடவடிக்கை.

*3583— திரு. ஆ. கு. சீனிவாசன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[திரு. போளூர் வரதன்] [1992 மார்ச் 17

இன்றைக்குச் சென்னையில் முற்றிலும் பெண்களால் நடத்தப்படுகின்ற காவல் நிலையத்தை நீங்கள் உருவாக்க இருக்கிறீர்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். ஒரு நல்ல திட்டம். இப்படி நல்ல திட்டங்களை நீங்கள் ஆக்க பூர்வமாக செய்து கொண்டிருக்கிறீர்கள் என்கிறபோது தமிழக மக்கள் உங்களிடத்தில் நிறைய எதிர் பார்க்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. தாங்கள் இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் பேசுகின்றபோது கொடூரமான முறையில் போராட்டங்கள் அல்லது வேறு விதமான வகையில் பணியில் இருக்கிறபோது இறக்கின்ற காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும் அவர்கள் பணியில் இருக்கின்ற காலங்களுக்கு சம்பளத்தையும் வழங்குவேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக மக்கள் உங்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால் அதற்கும் மேலாக ஒன்று. பணியில் இருக்கும் போது வேறுவிதமான வகையில் அதாவது ஹார்ட் அட்டாக் போன்றவற்றால் இறந்த காவலர்களுடைய குடும்பங்கள் 100-க்கு மேற்பட்டவர்கள் இன்றைக்கு க்யூவில் நின்று கொண்டிருக்கிறார்கள். வேலை கிடைக்குமா என்று அவர்கள் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் குறைந்தது 100 பேருக்காவது வேலை கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

இன்றைக்குத் தமிழக காவல் துறையில் கான்ஸ்டபிள் பதவியில் 4,000-க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். (மணியடிக்கப்பட்டது) அப்படி காலியாக இருக்கின்ற இடங்களை நீங்கள் நிரப்புவதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பந்தோபஸ்து போதவில்லை என்று சொல்வதை நீக்குவதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதே மாதிரி காவலர்கள் குடியிருப்பு என்று சொல்கிறோம். இன்றைக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு 40 சதவீதம தான் வீட்டு வசதி இருக்கிறது. அதுவும் இன்ஸ்பெக்டர் வரையில்தான். பி.சி., ஹெட் கான்ஸ்டபிள், எஸ்.ஐ. போன்றவர்களுக்கு வீடுகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. அரசே கட்டித் தர வேண்டும் என்று சொன்னால் கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது. இன்றைக்கு இருக்கிற நிதிநிலை அதற்கு ஒத்து வராது என்பது எனக்கும் தெரியும். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு எதைக் கேட்டாலும் கொடுக்கின்ற உள்ளத்தோடு இருக்கின்ற தாங்கள், தனியார் துறையில் அவற்றைக் கட்ட முன்வருபவர்களுக்கு நீங்கள் அனுமதி கொடுத்து அப்படிக் கட்டித் தருபவர்களுக்கு—ஒவ்வொரு அதிகாரிக்கும் எச். ஆர். ஏ. கொடுக்கிறோம். அந்தப் பணத்தை—தவணை முறையாக அவர்களுக்குச் செலுத்தி அப்படி இறுதி வரையில் அந்தப் பணத்தைச் செலுத்துகிறபோது அந்தக் குடியிருப்புகள் அரசாங்கத்திற்குச் சொந்தம் ஆகிறது. ஒரு அதிகாரி மாற்றம் செய்யப்படுகிறார் என்று



1992 மார்ச் 17] [திரு. போளூர் வரதன்]

சொன்னால் அப்போது அங்கே வருகின்ற அதிகாரிகளை அங்கே குடியேற்றலாம். அப்படி குடியேற்றுவதன் மூலம் அவருடைய எச். ஆர். ஏ. அதற்கு சரி செய்யப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களை நீங்கள் தீட்டி அவர்களுக்கு நல்ல வகையில் உதவி செய்யவேண்டுமென்று எண்ணுகிறேன்.

மேலும் இன்றைக்கு பெரிய அதிகாரிகள் பணி நிமித்தம் சென்னைக்கு வருகிறார்கள் என்று சொன்னால் நல்ல வசதியான ஹோட்டல்களில் அவர்கள் தங்கிவிடுகிறார்கள். ஆனால் சாதாரண கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் போன்றவர்கள் வருகிறபோது அவர்களுக்குக் கொடுக்கிற அலவன்ஸ் போதவில்லை. எம்.எல்.ஏ. ஹாஸ்டல் போன்ற இடங்களில் வந்து படுத்துக் கொள்ளட்டுமா, பெர்மிஷன் இருக்கிறதா என்று கேட்டு அலைவதை நான் பார்க்கிறேன். கர்நாடகத்திலும், ஆந்திராவிலும், இப்படிப்பட்ட வழக்குகளுக்கு வருகின்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ரெஸ்ட் ஹவுஸ் கட்டி குறைந்த வாடகையில் அவர்கள் அங்கே தங்க வசதி செய்து அந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை நீங்களும் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆயத் தீர்வைத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நீங்கள் எடுத்திருக்கிற கடுமையான முடிவை இன்றைக்கு தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல. இன்றைக்கு நீங்கள் சாராயத்தை மட்டும் ஒழித்திருக்கிறீர்கள். முழு மதுவிலக்கு என்பது இன்றைக்கு இல்லை. பிராந்திக் கடைகள் இருக்கின்றன. சென்னை நகரிலேயும், மற்ற பகுதிகளிலேயும் பார்க்கிறபோது பிராந்திக் கடைகளில் ஒரு அவுன்ஸ் அல்லது இரண்டு அவுன்ஸ் என்று பாட்டிலில் பிரித்து வைத்து எல்லோரையும் இன்றைக்கு குடிக்க வைக்கிற விதத்திலே அந்தக் கடைக்காரர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காவல் துறையினர் உடந்தையாகவும் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் எல்லா இடங்களிலும் (மணியடிக்கப்பட்டது) ஒரே நிமிடத்தில் நான் முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 12–20

குறிப்பாகச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் எல்லா இடங்களிலுமே இருக்கிறது. (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும்...... எல்லா இடங்களிலுமே இன்றைக்கு கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. இது குறித்து தமிழகத்தினுடைய எல்லா காவல்துறை அதிகாரிகளிடத்திலேயும் எடுத்துச் சொன்னேன். இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(அ) பெரணமல்லூர் தொகுதியில் சேத்துப்பட்டு நகரத்தில் மூன்று பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டும் பேருந்துகளை அங்கு நிறுத்தாமல் கடைவீதியில் நிறுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து நிலையத்தில் நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேத்துப்பட்டு பேருந்து நிலையத்தில் மூன்று பேருந்துகள்தான் ஒரே நேரத்தில் நிறுத்த இயலும், தவிரவும் பேருந்து நிலையத்திற்குச் செல்லும் சாலை மிகவும் குறுகியதாக இருக்கின்ற காரணத்தால் இரண்டு பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சாலையின் இரு புறமும் கடைகள் போன்ற ஆக்கிரமிப்பினாலும், பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு செல்ல இயலவில்லை.

(ஆ) எனினும். ஓட்டுநர்களும். நடத்துநர்களும் பேருந்து நிலையத்தின் வழியாகப் பேருந்துகளை இயக்கும்படி பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சேத்துப்பட்டு பேருந்து நிலையம் ஒரு புதிய பேருந்து நிலையம், சுமார் 20 ஆயிரம் ஜனத்தொகைக்குத் தேவையான பேருந்து நிலையம்—புதியதாக கட்டப்பட்டு உள்ளது, அந்தப் பேருந்து நிலையத்திற்கு சில தனியார் பஸ்கள் மட்டும் வருகின்றன. அரசுக் கழகம் சம்பந்தப்பட்ட சில பஸ்கள், டிரைவர்கள் அங்கு வருவதில்லை, ஏன் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட பேருந்து நிலையம். அப்போது சரியாக பஸ்கள் வந்தன. சென்ற ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில் சில பஸ்கள், சில டிரைவர்கள், அவர்களுக்கு வசதியாக எங்கே கடைகள் இருக்கின்றனவோ, அவர்கள் சம்பந்தப்பட்ட ஹோட்டல் கடைகள் எங்கே இருக்கின்றனவோ, அந்த இடங்களுக்குச் சென்று, ஜனநெருக்கடி உள்ள இடங்களில் பஸ்கள் நிறுத்தப்படுவதால், அங்கே சிலர் இறந்தும், சிலர் அடிபட்டும் விடுகிறார்கள். எனவே, ஜனநெருக்கடியான அந்தப் பகுதியில் நிறுத்துவதால் பொது மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படும் அளவிற்கு, இரண்டு ஆண்டுக் காலமாக ..............................



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன், முன்பே உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். ஜனநெருக்கடியான இடத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறது என்று. அடுத்து, இது சம்பந்தமாக உங்களுடைய கேள்வியைக் கேளுங்கள்,

முற்பகல் 10–10

திரு. ஆ. கு. சீனிவாசன் : ஆகையால் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகம் சம்பந்தப்பட்ட எல்லா பஸ்களும் வந்து செல்ல வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு பேருந்து நிலையம் தான் கட்டப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டும் இனிமேல் தான் கட்டப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கச் சொன்னேன். பேருந்து நிலையம் என்றாலே ஒரு பேருந்து நிலையம் தான் இருக்கும். அங்கே அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடவேண்டுமென்று கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : அந்தப் பேருந்து நிலையத்தில் எல்லா பஸ்களும் வந்து செல்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை இந்த அரசு கவனத்திலே கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 246. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

246—

திருப்பத்தூர் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலை,

*5282— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பத்தூர் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1992 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அது நன்றாக இருக்காது.** அது வெளியிலே போகிறபோது நன்றாக இருக்காது. அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. அது எந்தப் பகுதி என்று சொல்லுங்கள். ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ** என்று இருப்பது நன்றாக இருக்காது. அவைக் குறிப்பிலேயிருந்து அது நீக்கப்படுகிறது.

திரு. போளூர் வரதன் : தலைவர் அவர்களே, அந்த பகுதியில் (குறுக்கீடு).... அந்தப் பக்கத்தில் இன்றைக்கு அந்தச் செயல் நடந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே சினிமா தியேட்டரிலே, ஒரு சினிமா தியேட்டர் சொந்தக்காரர் மாலை நேரங்களிலே சினிமா காட்சி தொடங்குகின்றபோது பாக்கெட் கள்ளச் சாராயத்தை விற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூர் பகுதியைச் சார்ந்த காவலர்கள் இன்றைக்கும் மாமுல் பெற்று வருகிறார்கள். ஆர்.எஸ். பவுடர் என்பது என்னுடைய தொகுதியிலே சர்வ சாதாரணமாக கிடைக்கின்ற ஒரு பொருளாக இன்றைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. இதைமாற்றியமைக்க முதல்வர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. போளூர் வரதன் : என்னுடைய தொகுதிக்கு ஒரு 'பையர் நிலையம்' வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்திலே ஒரு டி.எஸ்.பி., ஒரு ஆர்.டி.ஓ. ஹெட் குவார்ட்டர்ஸ்.... (குறுக்கீடு).

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அவர் முடிக்கட்டும்.

திரு. போளூர் வரதன் : அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் ஜாதிக் கலவரங்கள். (குறுக்கீடு) ஒரே ஒரு பாயிண்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி, அந்த இடத்திலே கள்ளச்சாராயம் விற்பதாகச் சொன்னார்கள். (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். நான் அவைக்குறிப்பிலே யிருந்து நீக்கின பிறகு அதிலே பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) வேண்டாம் உட்காருங்கள். நான் அவைக் குறிப்பிலே யிருந்து நீக்கின பிறகும் அதன் மீது நீங்கள் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். திரு. எம். கே. சுந்தரம்.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காவல் துறை மானிய கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை இங்கே நல்கித் தந்த பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பை சாதாரண குடும்பத்திலே பிறந்த என்னைப் போன்ற வர்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே அமரச் செய்து எங்களுடைய உடம்பிலே ஒவ்வொரு அணுவிலும் உயிர்த் துடிப்பாக கலந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர் களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இங்கே காவல்துறை மானிய கோரிக்கையிலே பேசுகிறபோது எனக்கு முன்னால் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் குறைகளை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைகளை சுட்டிக் காட்டியிருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம், நான் இங்கே ஒன்றைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக கால ஆட்சியிலே தமிழ்நாட்டிலே ஆயுத கலாச்சாரம் தலை விரித்தாடி இருந்தது. இங்கே தமிழன் அச்சுறுத்தல் இல்லாமல் வாழ்கின்ற ஒரு நிலையை உருவாக்காத அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விடுதலைப் புலிகள் இங்கே வளர்க்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட விடுதலைப் புலிகளை, இதுவரை இந்த சபையிலே அமர்ந்திருந்த எப்படிப்பட்ட தலைவரும் அதை ஒடுக்குவதற்கோ, விரட்டுவதற்கோ ஆயத்தமாக இல்லை. காரணம் தன்னுடைய உயிருக்கு அஞ்சி விடுதலைப் புலிகளை விரட்டுவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறியவர்கள், திராவிட முன்னேற் றக் கழகத்தைப் போன்ற ஒரு சில கட்சியினர்.

(மண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்டவர்களும் இருந்தார்கள். இங்கே தன்னுடைய உயிருக்கு ஆபத்து இருந்தாலும் தங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு அவர்கள் ஈன்றெடுத்த பிள்ளைகளை காத்தும் இங்கே அவர்கள் அமைதியோடு வாழவேண்டும் என்று சொன்னால், தன்னுடைய உயிர் போனாலும் பரவாயில்லை, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுடைய அமைதி காக்கப்பட வேண்டும் என்று சொல்லி விடுதலைப் புலிகளை இங்கே வீழ்த்திய வீராங்கனையாக அமர்ந்திருப்பவர் எங்களுடைய

[1992 மார்ச் 17

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே உயர்ந்த சந்தன மரங்கள் எனது திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில்தான் விளைகிறது. ஆகையால் எங்கள் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற கேள்வி அங்கே இருக்கின்ற சந்தன ஆயில் தொழிற்சாலையை மீண்டும் நடத்த முடியுமா என்பதுதான். அதை முதலில் துவக்குகின்ற நேரத்திலே, ரூ. 1 கோடி செலவில் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை முதன் முதலிலே நாம் துவக்கினோம், கட்டிடப் பணிகள் ரூ. 76.64 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே அன்றையதினம் 1984—85 முதல் 1987—88 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர்கள் 58 தினக் கூலிகளும், 9 பணியாளர்களும், 6 மேற்பார்வையாளர்களும் ஆவர். அதில் ஏறத்தாழ 1.25 டன் எண்ணெய் தயாரிக்கப்பட்டது, அதனால் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டம் ரூ, 75 இலட்சம். 5—11—1990 அன்று இந்த ஆலை மூடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு ஒரு முறை வனத் துறை சார்பாக திருப்பத்தூர் தொகுதியிலே தான் சந்தன மரக் கட்டைகளை ஏலம் விடுகிறார்கள், வட நாட்டு வியாபாரிகள் அவற்றை ஏலம் எடுத்து. அவற்றிலிருந்து சோப், சென்ட், ஊது பத்தி போன்ற வாசனைப் பொருட்களை தயார் செய்து, நமது மாநிலத்திலே விற்பனை செய்கின்றார்கள், ஆகவே ஜவ்வாதுமலை அடிவாரத்தில் அரசு சந்தன மரத் தொழிற்சாலை ஒன்றை துவக்கினால் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பும் அரசுக்குப் போதிய வருமானமும் கிடைக்கும். ஆகவே திருப் பத்தூர் பகுதியில் சந்தன தொழிற்சாலை தொடங்க ஆவன செய்யப்படுமா என்று அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த சந்தன ஆயில் தொழிற்சாலையை மூடிவிட்டோம், உறுப்பினர் அவர்கள் புதியதாக துவங்கப்படுமா என்று கேட்கிறார்கள், ஆயில் தொழிற்சாலையைக் காட்டிலும், தனியாருக்கு ஏலம் விடு



1992 மார்ச் 17]

வருமானம் கின்றபோது அரசுக்கு கூடுதலாக இரண்டு மடங்கு வருகிறது. ஆகவே சந்தன ஆலை இப்போது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 247, திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

247—

ஆண்டிமடம் தொகுதியில் அதிகமான கைத்தறிகள் அமைத்தல்,

*2931 திரு. ஆர். தங்கராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அதிகமாக வாழும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், அதிகமான கைத்தறிகள் அமைப்பதில் உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திருச்சி மாவட்டம். ஆண்டிமடம் தொகுதியில் வாழும் நெசவாளர்களில். அதிக எண்ணிக்கையில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு, அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர், கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்கள், தங்களுக்கு கூட்டுறவு அமைப்புகள் வேண்டுமென கோரினால் அவை பரிசீலிக்கப்பட்டு தேவைக்கேற்ப அமைக்க துறை அதிகாரிகள் உதவி புரிவார்கள்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியினுடைய பெயரை வைத்தே அங்கே வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து இரண்டு முறை அங்கு வருகை புரிந்திருக்கிறார்கள், அங்கே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உணர்ந்திருக்கிறார்கள், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற துணி வகைகளை ஆந்திரா விலே இருக்கின்ற துணி வியாபாரிகள் வாங்கிக் கொண்டு சென்று அதிக லாபத்திற்கு விற்கிறார்கள், எனவே அந்த மக்களுடைய நலனை முன்னிட்டு, அங்கே உற்பத்தியாகின்ற துணி வகைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, அதை நல்ல லாபத்திற்கு விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி
என்பதை இங்கே நான் தெள்ளத் தெளிவாகக் கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

இங்கே காவல் துறை இன்றைக்கு யார் கையில் இருக்கப்பட
வேண்டுமோ, எப்படிப்பட்டவர் கையில் இருக்கப்பட வேண்டுமோ
அப்படிப்பட்டவர்கள் கையிலே அது இருக்கிறது. பேரறிஞர்
அண்ணா அவர்கள், அக்காலத்தில் இருக்கின்றபொழுது, இங்கே
முதலமைச்சராக பணியாற்றி இன்றைக்கு பொதுமக்களால்
விரட்டி அடிக்கப்பட்ட ஒருவர் நான் வருங்காலத்தில் அமைச்ச
ராக பொறுப்பேற்றால் இந்த காவல் துறையினரை பழிவாங்கு
வேன் என்று சொன்னார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா
அவர்கள் இப்படிப்பட்ட தீய சக்திகளிடத்திலே இந்தத் துறை
செல்லக்கூடாது என்று சொல்லி முதலமைச்சராக பொறுப்
பேற்ற உடனே தன்னுடைய கையிலேயே இந்தத் துறையை
வைத்துக்கொண்டு இந்தத் தமிழகத்திலே ஒரு அமைதியை
ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வழியில் வந்த, பேரறிஞர்
அண்ணாவினுடைய வாரிசாக, புரட்சித் தலைவருடைய வாரி
சாக, தந்தை பெரியாருடைய வழித் தோன்றலாக, மூதறிஞர்
இராஜாஜியினுடைய வழித் தோன்றலாக, இன்றைக்கு எங்க
ளுடைய உள்ளங்களிலே வீற்றிருக்கின்ற எங்களுடைய தங்கத்
தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி, சந்தியத் தாய்
ஈன்றெடுத்த தெய்வப் புதல்வி இன்றைக்கு எங்களுடைய
இதயத்திலே வீற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் தமிழகத்திலே
இருக்கின்ற மக்களைக் கட்டிக் காத்துக் கொண்டு, காவல்
துறையையும் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பத்மநாபா அவர்கள்
இங்கே கொலை செய்யப்பட்டார்கள். தமிழ் ஈழ விடுதலை
இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பத்மநாபாவை கொலை
செய்கின்ற போது, இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சார்ந்தவர்கள் ஆளுங் கட்சியினராக இருந்தார்கள். ஆனால்
பத்மநாபாவை பட்டப் பகலிலே, தமிழ்நாட்டுக்கு தலைநகராக
விளங்கிக் கொண்டிருக்கின்ற சென்னை மாநகரத்திற்கு வந்தவர்
கள் கொலை செய்துவிட்டு இங்கிருந்து தப்பி ஓடுவதற்கு
அன்றைக்கு அரசாங்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது.

ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் 'இன்றைக்கு ஒரு
தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவனே
என்றாலும் விடமாட்டேன்' என்று சொல்லியதற்கு ஏற்ப,
இன்றைக்கு தன்னுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தவறு
செய்திருந்தாலும், காவல் துறையைப் பணித்து, அவர்கள்
குற்றம் புரிந்திருந்தால் அப்படிப்பட்டவர்களை கைது செய்
யுங்கள் என்று சொல்லுகின்ற ஒரு உன்னத தானைத் தலைவி
எங்களுடைய புரட்சித் தலைவி என்பதை இங்கே நான்
சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்
டும் ஒலி).



எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் பழனிச்
சாமி அவர்கள் இன்றைக்கு காவல் துறை இங்கே ஆளுங்
கட்சியினுடைய கையிலே இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஆளுங் கட்சியினுடைய கையிலே இருப்பதற்கு இது புரட்சித்
தலைவியினுடைய தலைமையை ஏற்று இருக்கின்ற இயக்கம்,
பிற இயக்கமாக இருந்தால் இன்றைக்கு காவல் துறை ஆளுங்
கட்சியினர் சொல்லுகின்றபடி நடக்கும். ஆனால் புரட்சித்
தலைவி அவர்கள் தன்னுடைய இயக்கத்தை விட இந்த
தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களுடைய நலம் முக்கியம் என்று
சொல்லி தன்னுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்
தாலும், இன்னும் சொல்லப் போனால் சட்டமன்ற உறுப்பின
ராக இருந்தாலும் கூட அவர்களை கைது செய்ய வேண்டுமென்று
பணித்திருக்கிற ஒரே தலைவி, உத்தம தலைவி எங்களுடைய
தானைத் தலைவி புரட்சித் தலைவி என்பதை நான் இங்கே
தெள்ளத் தெளிவாக கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற நிதியாண்டிலே புரட்சித் தலைவி அவர்கள் தான்
காவல் துறைக்காக எவ்வளவோ திட்டங்களை இங்கே
அறிவித்திருந்தார்கள். இதற்கு முன்னால் ஆண்ட இயக்கங்
கள் எல்லாம் திட்டங்களை அறிவித்ததோடு மட்டும் நிறுத்திக்
கொண்டு அவற்றை செயல்படுத்த தவறிவிட்டது. ஆனால்
புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு திட்டங்களைப்
போடுவதோடு மட்டுமல்லாமல் அவற்றை செயல்படுத்திக்
கொண்டும் இருக்கிற ஒரு உத்தம தலைவியை இங்கே உங்க
ளுக்குப் பாராட்ட மனது இல்லையென்று சொன்னாலும்கூட
தயவுசெய்து அவர்களுடைய சேவையை இங்கே குறைத்து
மதிப்பிடக் கூடாது என்பதை இங்கே நான் பணி
வன்புடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நேற்றைய தினம் இங்கே திருநாவுக்கரசு அவர்கள் பேசு
கின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். விடுதலைப் புலிகளை
ஆதரிக்கின்றோம் என்று சொன்னார்கள். பத்மநாபாவை
இங்கே சுட்டு வீழ்த்திய தமிழ ஈழத்தைச் சேர்ந்தவர்கள்
தனி ஈழத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.
அதற்கு ஆதரவு தர வேண்டுமென்றும் இங்கே சொன்னார்கள்.
அப்படிப்பட்ட ** தயவுசெய்து புரட்சித் தலைவி அவர்கள்
தடா சட்டத்தின்கீழ் சிறையில் தள்ள வேண்டுமென்று நான்
உளமார வேண்டி கேட்டுக்கொள்கிறேன் அதைக் கூறுவதற்குக்
காரணம் . . . . . . .

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. டி. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களாக இருந்தால் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் இருக்கிற ஆடைகளை கோவாப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்து நல்ல லாபத்தை ஈட்டித் தரும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 248,– திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்,

248—

ஜீவ நதிகளிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர்

*2104 திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜீவ நதிகளில் இருந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு விவசாயத்திற்காக தண்ணீர் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இத்தகைய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் எங்கள் மாவட்டத்திலே மழை பெய்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் போல் எங்கள் பகுதியும் நிச்சயமாக விவசாயம் செய்ய வேண்டுமென்றால் ஒரு ஜீவ நதியிலிருந்து எங்கள் மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டு வந்தால்தான், நாங்கள் விவசாயம் செய்யமுடியும் என்ற நிலை இருக்கிறது. இதை அந்தப் பகுதி மக்கள் இந்தக் காலக் கட்டத்திலே நிச்சயமாக செய்வீர்கள் என்று நம்புகிறார்கள். அதை இந்த அரசு செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள நிலங்களுக்கு வைகையாற்றின் மூலமாகவே சில பகுதிகளுக்கு பாசனம் அளிக்கப்படுகிறது, இப் பாசனத்தின் அளவு இருக்கிற தண்ணீரின் அளவைப் பொறுத்து பாசன விதிகளை ஒழுங்குபடுத்தி அங்கே தண்ணீரை வழங்கிக் கொண்டு இருக்கிறோம், ஜீவ நதியிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகளான திட்டங்கள் தற்போது அரசிடத்திலே இல்லை. இருந்தாலும் மேற்கு நோக்கி பாய்கின்ற ஆறுகளை கிழக்கே திருப்பி விடுவதற்கான ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிற காரணத்தாலே அந்த முயற்சியின் நடவடிக்கைகள் வெற்றி பெறுகிற நேரத்திலே, அந்தப் பகுதிகளுக்கு பாசனம் தந்து மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே அவர்களுக்கு போக மீதித் தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்கின்றது, அதை நமது தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இருப்பதாக கூறினார்கள், அதைப்போன்ற ஒரு பெரிய திட்டமான கங்கையையும் காவிரியையும் இணைத்தால் நிச்சயமாக அந்த வறட்சி பகுதிகள் செழுமை பகுதிகளாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அதற்கான திட்டத்தை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: இது சம்பந்தமாக சென்ற மானியக் கோரிக்கையில் விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டும். நம்முடைய அரசு இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம், ஆகவே இது சம்பந்தமாக மைய அரசு நல்ல முடிவு எடுக்குமானால், மாநில அரசு இதைச் செயல்படுத்துவதற்குத் தமிழ்நாட்டிலே செயல்படுத்துவதற்கு, நம்முடைய பகுதிகளிலே செயல்படுத்துவதற்கு, முழுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 249. திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

திரு. மா. சுந்தரநாம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்ற சொல்லை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் என்று குறிப்பிட்ட சொல் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எம். கே. சுந்தரம் : அப்படிப்பட்ட தீய சக்திகளை புரட்சித் தலைவி அவர்கள் 'தடா' சட்டத்தின்கீழ் இங்கே சிறைப்படுத்த வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் இந்த நிதி ஆண்டிலே காவல் துறைக்கு எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் 276.31 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைய தினம் இங்கே, காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக 80.45 கோடி ரூபாயை மத்திய அரசாங்கத்திலேயிருந்து புரட்சித் தலைவி அவர்கள் கோரியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் 10 கோடி ரூபாய் இன்றைக்கு அனுமதித்திருக்கிறது. இங்கே எனக்கு முன்னாலே பேசிய இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் காவல் துறையினர் செய்ய வேண்டிய காரியங்களைச் சொன்னார்கள். அந்த இயக்கத்தைச் சேர்ந்த அவரைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தயவு செய்து இந்த நாட்டிலே அமைதியைக் கட்டிக் காக்க வேண்டுமென்று தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் இங்கே அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டுக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களைப் போற்றுகின்ற வண்ணம், மத்திய அரசிலே சொல்லி, மீதமுள்ள 70 கோடி ரூபாயை வாங்கித் தர வேண்டுமென்று இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

மேலும் புரட்சித் தலைவி அவர்கள் சீருடைப் படைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சிக் கட்டிலிலே இருந்தது. இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதைப்போல, அந்தக் கட்சி ஆட்சிக் கட்டிலிலே இருக்கிற போது, அந்தக் கட்சியினர் எதையெதைச் சொல்கிறார்களோ அதைத்தான் காவல்துறை செய்ய வேண்டுமென்று அன்றைய தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்தவர் அன்றைக்குச் சொன்னார். அதன் காரணமாக சீருடைப் படைகளின் சார்பாக ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது அன்றைய

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





ஆட்சிக் கட்டிலில் இருந்தவர்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னார்களோ அப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்படிப்பட்ட முறைகேடு இனியும் நடக்கக்கூடாது. தகுதி வாய்ந்தவர்கள் சீருடைப் படையில் சேர வேண்டுமென்று சொல்லி, என்னுடைய சத்தியத் தாய், என்னுடைய தங்கத் தாய், புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அந்தப் படைகளுக்காக தனி வாரியத்தை அமைத்திருக்கி றார்கள். தனி வாரியத்தை அமைத்ததோடு மட்டுமல்லாமல் காவல் துறை அதிகாரி ஒருவரை இன்றையதினம் இயக்குநர் பதவிக்கு நியமித்திருக்கிறார்கள். அதற்காக இங்கே நான் என்னுடைய நன்றியை புரட்சித் தலைவி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 1981 ஆம் ஆண்டு காவல் துறையிலே இருக்கிற வர்களுக்கு குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று, வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று சொல்லி, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு ஒரு குடியிருப்பு வாரியத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் 1988 ஆம் ஆண்டு அந்த வாரியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள், இப்படிப்பட்ட கடுமையான நிதி நிலையிலும், தமிழகத்திலே அமைதி தவழ்கிற வகையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிற காவல் துறையைக் கட்டிக் காக்க வேண்டுமென்ற ஒரு உயரிய நோக்கத்தின் அடிப்படையில் ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டியே தீருவோம் என்று சொல்லி இந்த வாரியத்தை அமைத்திருக்கி றார்கள். இதுவரையில் கட்டி இருக்கின்ற மொத்த குடியிருப்பு கள் 600 சில்லறைதான். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் ஓராண்டுக் காலத்தில் ஏறத்தாழ ஆயிரம் குடியிருப்புகளை கட்டியே தீருவேன் என்று சூளுரை ஏற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவி ஏற்படுத்தி இருக்கிற இந்தத் திட்டத்தை என்னுடைய தொகுதி சார்பாக நான் மனமார வரவேற் கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மேலும் என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியிலே காவல் துறையிலே இன்றைக்கு இருக்கும் பிரச்சினைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியாகும். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் இன்றைக்கு காவல் துறைக்கு சம்பந்தமில்லாத இடத்திலே, மலை ஓரத்திலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியிலே விதையூரிலே ஒரு காவல் நிலையமும், வானாபுரத்திலே ஒரு காவல் நிலைய மும், தண்டராம்பட்டிலே ஒரு காவல் நிலையமும், தானப் பாடியிலே ஒரு காவல் நிலையமும் இயங்கிக் கொண்டிருக் கின்றன. என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட காவல்

249—

தரைப்பாலம் கட்டுதல்.

*2327—திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதியில் மணிமுத்தா ஆற்றின் குறுக்கே எருமனூர் கிராமத்தை இணைத்து. அதைச்சார்ந்த சுமார் 30 கிராமங்கள் பயனடையும் வகையில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட தரைப்பாலம் கட்டுவதின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை பணியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, இது மத்திய சாலை நிதி திட்டத்தின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மைய அரசுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசினுடைய ஒப்புதல் கிடைத்த உடனேயே அந்த வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாக இங்கே அறிவித்தார்கள், இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் கிராமங்கள் எல்லாம் நகரத்திற்கு சமமாக முன்னேற வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் செயல்படுகிற இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியான விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியின் குறுக்கே தரைப்பாலம் கட்டித்தந்தால், சுமார் 30 கிராம மக்கள் தங்களின் விவசாய விளை பொருள்களை நகரத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும். இதை வலியுறுத்தி பல ஆண்டுக்காலமாக அந்த 30 கிராம மக்களும் போராட்டங்களும். உண்ணாவிரதங்களும் நடத்தினார்கள், எனவே அந்த கிராம மக்களின் வயிற்றில் பாலை வார்க்கின்ற வகையில் விரைவில் எருமனூர் தரைப்பாலத்தைக் கட்டித் தந்து தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு அந்த கிராம மக்களுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துதலைப் பெறுகின்ற வகையில் இந் ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தப் பாலம் மணிமுத்தா ஆற்றின் குறுக்கே



கட்டப்பட வேண்டியது. அந்த ஆற்று நீர்வழி பாதையினுடைய அகலம் ஏறத்தாழ 300 மீட்டர் ஆகும். இதற்காக மதிப்பீடு சுமார் 1 கோடி ரூபாய் அளவிலே தயாரிக்கப்பட்டு, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே முயற்சிகளை மேற் கொண்டு அந்தப் பகுதியினுடைய மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று சென்ட்ரல் ரோடு ஃபண்டு ஸ்கீம் என்ற அந்த அளவிலே, அந்தத் திட்டத்திலே சேர்த்து அனுப்பியிருக்கிறோம். ஆகவே விரைவில் ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். வந்த உடனேயே அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு அந்த மக்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 250. திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

250—

புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்.

*4010—திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் ''புனர்ஜென்ம மூலை'' என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் காங்குப்பம் கிராமத்தில் மகாதேவ மலையின் அருகே புனர்ஜென்மம் ஓடையின் குறுக்கே குட்டை மட்டும் அமைக்கின்ற திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையும் தேவைப்படுகிறது. எனவே, இது சம்பந்தமாக பொதுப் பணித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலையங்கள் எல்லாம் செங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்ட தாலுகா ஸ்டேஷன் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே இருக்கிற மக்கள் மலைவாழ் மக்களாக இருக்கிற காரணத்தாலே, அவர்களுக்கு செங்கத்திலே உள்ள தாலுகா ஸ்டேஷனுக்குச் செல்வதற்கான போதிய வாய்ப்பு வசதிகள் இல்லை. எனவே மக்கள் தொகை அதிகமாக உள்ள தண்டராம்பட்டையே, செங்கம் தாலுகா ஸ்டேஷனைப் பிரித்து, தண்டராம்பட்டையே தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகா ஸ்டேஷன் அமைத்துத் தர வேண்டுமென்று சொல்லி, இந்தச் சபையிலே எந்தக் காலத்திலும் எங்கள் இதயங்களிலே வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற வகையிலே அமர்ந்திருக்க வேண்டுமென்ற என்னுடைய அவாவைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

பிற்பகல் 12-35

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மாநில ஆயத்தீர்வை, காவல்துறை, தீயணைப்பு ஆகிய கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு இதயங் கனிந்த நன்றியைக் கூறிக்கொண்டு இந்த காவல் துறை மீது சில கருத்துக்களை எடுத்துரைக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கிட்டத்தட்ட ரூ. 272 கோடிக்கு காவல் துறையின் செலவு விபரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் காவல்துறையைப் பொறுத்த வரைக்கும், நிறைகள் இருப்பதைவிட, குறைகள் அதிகம் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. இங்கே எங்களுக்கு தரப்பட்டிருக்கிற சாதனைகளையும், வருங்காலத் திட்டங்களையும் குறித்து இருக்கிற புத்தகத்தில், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறபோது சில புள்ளி விவரங்களை எடுத்துரைத்தார்கள். அதிலே மிக முக்கியமானவற்றைக் கோடிட்டுக் காட்ட விருப்பமில்லாமல் விட்டுவிட்டார்கள் என்றே கருதுகிறேன். 1990-ல் நடைபெற்ற குற்றங்களைச் சொல்லி, அவைகளில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விகிதாச்சாரம் 65.1. ஆனால் 1991-ல் கண்டு பிடிக்கப்பட்ட விகிதாச்சாரம் 64.0 ஆக இதிலிருந்து காவல்துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தன்னுடைய சக்தியை, செல்வாக்கை, ஆக்கத்திறனை இழந்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.



காவல்துறையைப் பொறுத்தவரைக்கும் இன்றையதினம் இங்கே தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்த்தால், அந்த விகிதாச்சாரமும், வீட்டை உடைத்து திருட்டு, சிறு சிறு திருட்டுகள், கால்நடை திருட்டுக்கள் போன்றவைகளுடைய விகித்தாச்சாரமும் தான் அதிகமாக இருக்கிறது. ஆனால் கொலை, கொள்ளைகள், வழிப்பறிகளுடைய விகிதாச்சாரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதற்கான ஆக்க பூர்வமான பணிகளைக் காவல்துறை மேற்கொள்ளவில்லையா, அல்லது மேற்கொள்ளாமல் விட்டுவிட்டார்களா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள் இவைகளைக் கண்டுபிடிக்கிற பட்சத்தில் தான் மக்களுக்கு உண்மையிலேயே காவல்துறை மீது ஒரு நம்பிக்கை ஏற்பட முடியும். ஆனால் அந்த வாய்ப்பை அவர்கள் நழுவ விட்டுக் கொண்டிருப்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக மதுரை மாவட்டத்தில் கடந்த 2—3 வாரம் முன்பு ** என்ற டி. எஸ். பி. மீது ஒரு பெரிய புகார் கூறப்பட்டது. ** அது சம்பந்தமாக வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது வரைக்கும் அந்த அதிகாரி மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ** எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத பட்சத்தில், மக்கள் அந்த காவல் துறையை எப்படி நம்புவார்கள் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, காவல்துறையில் இன்றைக்கு ''லாக்கப்'' மரணங்கள்—மற்ற மாவட்டங்களின் நிலவரம் எனக்குத் தெரியாது—கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 3 லாக்கப் மரணங்கள் நடந்துள்ளன. அதிலே குறிப்பாக, என்னுடைய....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே இடம் பெறாத ஒரு காவல்துறை அதிகாரியைப் பற்றி குற்றம் சாட்டுகிறார். குற்றம் சாட்டுவதற்கு முன்னால் அவர் அந்த ஆதாரத்தை கையில் வைத்துக் கொண்டிருக்கிறாரா அல்லது அவர் அந்த ஆதாரத்தை தங்களிடத்திலே காட்டியிருக்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் மலையடிவாரத்தில் அமைந்துள்ள பகுதியாகும். மழைக் காலங்களில் மழை நீர் பெரும் அளவில் வெள்ளமாக வந்து காட்டாற்றில் ஓடி வீணாகிறது. இந்த மழை நீர் வீணாகிவிடாமல் இந்த நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்தால் சுமார் சுற்றிலும் உள்ள 30 கிராம விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாய மேம்பாட்டுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, இதை அமைத்துத்தர இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கின்ற நீர் வரத்தைப் பொறுத்து அந்தப் பகுதியிலே அணைக்கட்டு கட்டுகின்ற திட்டம் தற்போது பொதுப் பணித்துறையினுடைய பரிசீலனையிலே இல்லை. அணைக்கட்டு கட்டுகின்ற நேரத்திலே அதற்கான நீர்வரத்து, அதற்கான அந்த விகிதாச்சார அடிப்படை இருக்க வேண்டும். ஆனால் இந்தப் பகுதியிலே வருகின்ற நீர் வரத்தைப் பொறுத்து ஒரு குட்டை அமைக்கின்ற திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். ஏறத்தாழ 3,60,000 ரூபாய் செலவிலே குட்டையமைக்கின்ற திட்டம் நம்முடைய பரிசிலனையிலே இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு வந்த உடனேயே அந்தக் குட்டை அமைக்கின்ற பணி பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப் படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 251. டாக்டர் (திருமதி) மு. சின்னியம்மாள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

## அன்னூரில் பேருந்து நிலையம்.

*251—1103—டாக்டர் (திருமதி) மு. சின்னியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேரூராட்சியின் பராமரிப்பில் பேருந்து நிலையம் ஏற்கனவே இயங்கி வருகிறது. எனவே, அரசிடம் செயற்குறிப்பு எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) மு. சின்னியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அவினாசி தொகுதி அன்னூரில் மொத்தம் 21 பஞ்சாயத்துக்கள் உள்ளன. சுமார் 1½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கு சந்திக்கிறார்கள். திருப்பூரிலிருந்து ஊட்டி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் போன்ற வண்டிகள் சந்திக்கும் பொது இடமாக இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு சிறு இடத்தில் வாகனங்களை நிறுத்துவதில் பல்வேறு தொழில்களைச் செய்வதற்கு பொதுமக்களுக்கு சிரமமும் வண்டிகளை பிரதான சாலைகளில் நிறுத்துவதால் விவசாய பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். எனவே மனம் குளிர நல்லாட்சி புரிகின்ற நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் எங்களது அன்னூர் தொகுதிக்கு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் — சமுதாயக் கூடம் பேருந்து நிலையம் உள்ளடக்கிய ஒரு பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்தாலோசித்து இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

252---

## நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் வாங்கல்.

*1887—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை எடுத்துச்செல்ல லாரி, டிராக்டர் போன்ற வாகனங்கள் [illegible] செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர்
தே. குமாரதாஸ் அவர்கள் பேசும்போது, குற்றச்சாட்டாகக்
கூறப்பட்ட அந்தக் காவல்துறை அதிகாரியினுடைய பெயர்
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, எனக்கு யாரையும் பழி வாங்க வேண்டுமென்ற
எண்ணம் இல்லை. அல்லது யாரையும் குறை சொல்ல வேண்டு
மென்றும் இல்லை. அந்தப் பெயரை நீக்குவதில் எனக்கு
ஆட்சேபணை இல்லை. ஆனால் அரசினுடைய கவனத்திற்கு
நான் இதைக் கொண்டு வருவதற்கு . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஒன்றை
உணர்ந்துகொள்ள வேண்டும். ஒரு குற்றச்சாட்டுச் சொல்கிற
போது, இங்கே முன் அனுமதி பெற்றுச் சொல்ல வேண்டும்.
இல்லையெனில் பெயரைக் குறிப்பிடுவது இங்கே அனுமதிக்கப்
படுவதில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அனுமதி பெற்றுத்தான் குற்றச்சாட்டுக்களைச்
சொல்ல வேண்டுமென்று விதி இருந்தாலும், தாங்கள் அதைக்
கொடுக்காவிட்டால் ஒன்றையுமே இங்கே சபையில் பேச முடி
யாது. ஏனென்றால், ஆதாரங்கள் நிறைய உள்ளன என்றாலும்,
பத்திரிகைகளிலும் குறிப்புகள் வருகின்றன. எங்களிடமும் தனி
யாக நேரில் வந்து, பாதிக்கப்பட்டிருக்கிறோம், எங்கள் பெயரைச்
சொல்ல வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்களும் உண்டு.
இவைகளை எல்லாம் நம்பித்தான் நாங்களும் சட்டமன்றத்தில்
பேசுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தான் சொல்கிறேன்.
மற்றபடி. . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருந்தாலும்
உறுப்பினர் அவர்கள் அவையின் மரபுகளை மீறக் கூடாது
என்பதற்காகச் சொல்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, பொறுப்பு
களை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டு பேசலாம். அந்த
அதிகாரியைப் பற்றி நேரடியாகத் தெரிந்து, இதற்கு பொறுப்
பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால் அவர்கள் சொல்
லாம். ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது என்பது தான்
நிலைமை.



பிற்பகல் 12-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கேளுங்கள். அவர்
ஒரு டி.எஸ்.பி.யைப் பற்றி சொல்லியிருக்கிறார். அந்த டி.எஸ்.
பி.யின் மீது ஒரு புகாரைச் சொல்லியிருக்கிறார். அவர் மீது
ஒரு புகார் இருக்கிறது. என்ன புகார் என்று சொன்னால்
அவர்கள் ஏதோ சொத்து வாங்கியதில் ஒருவருக்கொருவர்—
இரண்டு மூன்று பேர்கள் பங்காக வாங்கியிருக்கிறார்கள்—அதிலே
பிரச்சினை. அது எப்படி ஒரு துறையின் மீது இருக்கிற பிரச்சி
னையாக ஆகும்? எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்
படுகிறது. மற்ற விஷயத்திற்குப் போங்கள். நீங்கள் எப்
போதுமே விவரத்தைக் கையில் வைத்துக் கொள்ளாமல்,
பேரவைத் தலைவருடைய அனுமதியையும் பெறாமல் பேசுவ
தால் தான் இப்படிப்பட்ட தவறுகள் வருகின்றன. அது என்ன
பிரச்சினை என்றே தெரியாமல் துறையின் மீது புகார் செய்து
கொண்டிருக்கிறீர்கள். அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்
களே, அவர் ஒரு காவல் துறை அதிகாரியாக இல்லாமல் இருந்
திருந்தால் அவரைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை.
அவர் ஒரு காவல் துறை அதிகாரி. அவர் மீது வந்துள்ள
குற்றச்சாட்டுக்கான விளக்கத்தை . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, எந்தத் துறை அதிகாரியாக இருந்
தாலும் குற்றச்சாட்டைச் சொல்லுகிற போது, கொடுக்கின்ற
குற்றச்சாட்டுக்கள் எல்லாம் உண்மையாக்கப்படுவதில்லை.
பல்வேறு பிரச்சினைகளில் குடும்ப சூழ்நிலையின் காரணமாக
பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம், பல்வேறு வழக்குகள்
இருக்கலாம். அவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்களாக
இருக்கலாம், அல்லது பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்
களாக இருக்கலாம். பல்வேறு அதிகாரிகளுக்கும் குடும்பங்கள்
இருக்கின்றன; பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன ஆகவே
அப்படி ஒருவருக்கொருவர் ஒரு குற்றச்சாட்டைக் கூறுகிற
போது, அது காவல் துறை அதிகாரியாக இருந்தாலும் சரி,
எந்தத் துறை அதிகாரியாக இருந்தாலும் சரி, விசாரிக்கத்தான்
செய்கிறார்கள். ஆகவே கொடுக்கிற குற்றச்சாட்டுக்கள் எல்
லாம் உண்மையா என்பதை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவரைப் பிடிக்கா
மல் கூட குற்றச்சாட்டுக்களைச் சொல்லலாம். ஆகவே அதை
விசாரிக்கின்ற பொறுப்பு, அதை புலனாய்வு செய்யும் பொறுப்பு
காவல் துறைக்கு இருக்கிறது. ஆகவே குற்றச்சாட்டுக்களைக்
கொடுக்கிற நேரத்திலே நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.
அந்தக் குற்றச்சாட்டு உண்மைதானா என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்போது கையிலே இருக்கின்ற லாரிகளைத் தவிர வேறு லாரி, டிராக்டர்கள் வாங்குகின்ற திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்படும் நெல் போன்ற பொருள்களை உடனுக்குடன் குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துச் செல்ல முடியாத காரணங்களினால் அந்த நெல் பழுப்பு அடைந்து, அரிசிகூட ரேஷன் கடைக்கு வரும் போது பழுப்பு நிறமாக மாறி மக்கள் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே வாணிபக் கழகத்திற்கு என்று வெளியிலேயிருந்து லாரிகள் வாடகைக்கு எடுப்பதிலேகூட நம்முடைய அரசாங்கத்தில் குறிப்பிட்ட வாடகையைத்தான் தருவார்கள் என்று கருதி அவர்கள் வர மறுக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோடு கலந்து குறிப்பிட்ட வண்டிகளையாவது எந்த எந்த பகுதிகளுக்கு தேவை என்பதை அறிந்து அதையாவது வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்தில் சுமார் 8, 9 மாதங்கள்தான் நமக்கு இந்த லாரிகள், ரயில்கள் தேவைப்படுகிறன. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 1,500 முதல் 2,000 லாரிகளை நாம் பயன்படுத்துகிறோம். இதில் 15 லாரிகளைதான் நாம் சொந்தமாக வைத்து இருக்கிறோம். மீதம் இருப்பதை தனியார் ஒப்பந்தக்காரர்கள், அரசின் பஞ்சாயத்துத் துறைகளில் இருக்கின்ற டிராக்டர்கள் இவைகளைப் பயன்படுத்துகின்றோம். இவை அத்தனையையும் நம்மால், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் வாங்க முடியாது, ஏற்கனவே இருந்த லாரிகளைக்கூட 1975 ஆம் ஆண்டு அவைகள் எல்லாம் லாபகரமாக இல்லை என்ற காரணத்தால் பொருள் போக்குவரத்துக் கழகத்திற்கு அவைகள் ஒப்படைக்கப்பட்டு விட்டன. எனவே, நாம் இப்போது கடைப்பிடிக்கின்ற முறையே சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்றி செல்கின்ற தனியார் லாரிகளில் கூட இதுபோல் அந்த உரிய கடைகளில் இறக்காமல் குறிப்பிட்ட சர்க்கரை, அரிசியைக்கூட பல ஆண்டு





களாக அவர்கள் திருடி வருவதாககூட பலமுறை இந்த சட்ட மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட அளவில் இருக்கின்ற கூட்டுறவு விற்பனை சங்கங்களிலிருந்துதான் அந்த நியாய விலைக் கடைகளுக்கு அதிகமான அளவில் பொருட்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் ரைளவுக்கு நிதி ஆதாரம்கூட இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு சொந்த வாகனங்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆனாலும் நீங்கள் அனுமதி அளித்தால் நான் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமே லாரி, டிராக்டர் வாங்குவது. ஆனால் நீங்கள் தனியார் லாரிகளில் செய்கின்ற மோசடிகளைப் பற்றிச் சொல்கிறீர்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி தந்தால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதாக சொல்கிறார். தயவு செய்து ....

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளை வாங்குவதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நுகர்பொருள் வாணிபக் கழகம் வங்கிகளிலிருந்து வாங்கிய கடனை வைத்துதான் மிகவும் சிரமப்பட்டு நாம் பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ இதுவரையில நமக்கு கடனே 430 கோடி ரூபாயிலிருந்து 450 கோடி ரூபாய வரை இருக்கிறது. இதில் தமிழக அரசு கொடுக்க வேண்டியது 220 கோடி ரூபாய் வேறு இருக்கிறது. இவைகளை வைத்துக் கொண்டு இன்னும் லாரிகளை ஆயிரக்கணக்கில் வாங்கி அந்த லாரிகளுக்கு பணியாளர்களை அமர்த்தி அவர்களை எல்லாம் மெயின்டெனன்ஸ் செய்வது என்பது சாமியார் பூனை வளர்த்த கதையாக் ஆகிவிடும். (சிரிப்பு) எனவே, இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இருப்பதை வைத்துக்கொண்டு இதை நடத்தலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 253, திரு. ப. ரங்கநாதன், திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரி ''ஆண்டிசிபேட்டரி பெயில்'' வாங்கி வெளியே வந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இன்னும் உள்ளே போவது சரியல்ல. அப்படியானால் இந்தப் பேரவையை ஒரு சொத்துத் தகராறில், இரண்டு குடும்பங்களுக்கு இடையிலே இருக்கின்ற பிரச்சினையில், ஒரு குடும்பத்திற்கு ஆதரவாகப் பேசுகின்ற அவையாக இந்த அவையை எடுத்துக்கொள்ள முடியுமா? (குறுக்கீடு) அதற்குள்ளே ஏதோ பிரச்சினை இருக்கிறது. அவர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார் காவல் துறையினுடைய ஆய்விலே இருக்கிறது. அதிலே நீங்கள் உள்ளே புகுந்து, அந்தத் துறையினுடைய ஒரு அதிகாரியாக இருக்கிறவர் மீது இன்னுமொருவர் புகார் கொடுத்து விட்டதாலேயே அந்தத் துறையே கண்டனத்திற்குரியது என்ற வகையில் நீங்கள் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. அடிப்படை விவரமே தெரியாமல் ஒரு காவல் துறை அதிகாரியின் மீது புகார் என்று பேசுவதால் வருகின்ற பிரச்சினை இது. வேறு பிரச்சினைக்குப் போங்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் 'ஆண்டிசிபேட்டரி பெயிலில்' வந்திருக்கிறார் என்றால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே கொடுக்கப்பட்ட புகார்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தாலேதான் அவர் வெளியே வந்திருக்கிறார். புகார் கொடுக்கிற நேரத்தில், யாராக இருந்தாலும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பது இந்த அரசிலேதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைக் கேளுங்கள், விதி 93,

"No personal allegation of a defamatory or incriminatory nature shall be made by a Member against any Member or any official unless the Member have given previous intimation, in writing, to the Speaker". நீங்கள் வேறு விஷயத்திற்குப் போங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தனி நபர் பிரச்சினையாக இருந்தால் அந்தப் பிரச்சினைக்கே வந்திருக்கமாட்டோம், ஒரு காவல் துறை அதிகாரி என்று வைத்துக்கொள்ளுங்கள். குறிப்பிட்ட நபர் என்று நான் சொல்லவில்லை. ஒரு காவல் துறை அதிகாரி.....





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்தப் பிரச்சினைக்குள்ளே போகும்போது நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் முதலிலே பேசியபோதே, நான் வந்துதான், அது என்ன வழக்கு என்று சொல்ல வேண்டியிருந்தது. உங்களுக்கு என்ன வழக்கு என்பதே தெரியாமல் முதலிலே ஆரம்பித்தீர்கள். அதனைத்தான் நான் சொன்னேன். அதாவது உங்களுக்கு பெர்சனல் நாலெட்ஜ் இல்லாமலே பேசுகிறீர்கள். உங்களுடைய நேரம் வேறு முடிந்து கொண்டிருக்கிறது. மற்றபடி விவாதத்திற்குச் செல்லுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை செய்கின்ற முறைகேட்டிற்கும், தனிப்பட்டவர்கள் செய்கின்ற முறைகேட்டிற்கும் வேறுபாடு உண்டு. ஆகவே காவல் துறையைப் பற்றி முறைகேடோ, ஒழுங்கற்ற முறைகளோ இருக்கலாம். அதைச் சுட்டிக் காண்பிக்கலாம். தனிப்பட்ட முறையில் செய்கின்ற ஒரு முறைகேட்டிற்கு தனிப்பட்ட முறையிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர, அதற்குக் காவல் துறை எப்படி பொறுப்பாகும்? தனிப்பட்ட முறையிலே ஏற்படுகிற ஒரு முறைகேடான செயலைப் பற்றி இங்கே காவல் துறையோடு இணைத்துச் சொல்லுவது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தனிப்பட்ட முறையில் குடும்ப விவகாரம் என்ற பிரச்சினைக்கு நான் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே வந்து விளக்கம் சொல்லி, நீங்கள் முழு விவரம் தெரியாமல் பேசுகிறீர்கள் என்று சொன்னதற்குப் பிறகும் அதற்குள்ளே போய் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. உங்களுக்கு முழு விவரம் தெரியாமல் ஆரம்பித்தீர்கள். அதுவே தவறு என்று சொன்னதற்குப் பிறகு திரும்பத் திரும்ப அதற்குள்ளே போவது சரியல்ல. 12.32 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது 12.44. 12-46-க்கு உங்களுடைய நேரம் முடிவடையும்.

பிற்பகல் 12-45.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளைச் சொல்லியிருக்கிறீர்கள். நான்விளக்கத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் வேண்டாமென்றால் விட்டுவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அதேபோல, காவல் துறையில் லாக்-அப் டெத் அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்

[1992 மார்ச் 17

253—

**வேலைவாய்ப்பில்லாத பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம்.**

*5065 திரு. ப. ரங்கநாதன் :

திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) படித்த வேலைவாய்ப்பில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு அளிக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிக்க மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக அவர்கள் சுய தொழில் துவங்குவதற்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை கோரி பதிந்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, குறிப்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே 30—6—1991 வரை 3 லட்சத்து 71 ஆயிரத்து 962 படித்த பட்டதாரி இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிப்பதற்கு தனியாக அரசிடம் எந்த சிறப்புத் திட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2 பேர் கேள்வி கேட்டிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக் கேள்விதான்.



1992 மார்ச் 17]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது தொழில் மையத்தால் கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால் அந்த தொகை 35 ஆயிரம் ரூபாய் வரை வழங்கலாம் என்று விதி இருந்தும், நேர்முகத் தேர்வுக்கு வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு ஆர்டர் வழங்குவதாகச் சொல்லி 3 ஆயிரம், 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று உத்தரவு அனுப்பி அவர்கள் அதையும் பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற சூழ்நிலை கடந்த காலத்தில்தான் இருந்தது ; இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லாமல் முழுமையாக உருப்படியாக அந்தத் தொழில் செய்வதற்கு முழுமையான தொகையை வழங்கி அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் பெறுவதற்கு நீங்கள் முயற்சிப்பீர்களா? அப்படி படித்தவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வரையில் வழங்கப்படுகின்ற உதவித் தொகையை நீட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக கடன் வழங்குகின்ற பட்டியலிலே ஒவ்வொரு தொழிலுக்கும் எவ்வளவு என்று அங்கே நிபுணர்கள் குழு முடிவு செய்து அந்த அடிப்படையிலே தொழில்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. தொகையை அதிகரிக்கச் செய்வதற்கு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழில் மையங்கள் மூலமாக, அதாவது பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளில் கடன் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரை பல்வேறு [illegible]களுக்கு நான் பரிந்துரை செய்தும் இதுவரை எந்தக் கடனும் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, இதை [illegible] சர்க்குலராக அனுப்பி தாங்கள் அந்தத் தொழில் மையங்களுக்கும் வங்கிகளுக்கும் உத்தரவிட வாய்ப்பு உள்ளதா [illegible] அறிய விரும்புகிறேன்.

னுடைய தொகுதியில்கூட ஜோசப் என்கிற நபர் காவல் கைதி யாக இருக்கின்ற நேரத்திலே அங்கே கொலை செய்யப்பட்டு இருக்கின்றார். அது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று, அதற்கு காவல் துறையினர் காரணமாக இருக்கிறார்கள் என்ற தத்தில் ரிப்போர்ட்டில் வந்து இருக்கிறது. அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பது தெரியாது. காவல் துறையால் கைது செய்யப் படுகின்றவர்கள் காவல் நிலையத்திலேயே காலமாகிவிடுகின்ற ஒரு சூழ்நிலையைத் தவிர்த்திடவேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் 19 துப்பாக்கிச் சூடுகள் நடை பெற்று இருக்கின்றன. இதில் பெரும் பகுதியைப் பார்ப்பீர்கள் என்று சொன்னால், காவல் நிலையத்திற்கு போகிறவன் மரணம் அடைந்துவிட்டான்; நியாயத்தைக் கேட்க சென்ற மக்கள் மீது துப்பாக்கிச் சூடு; இப்படித்தான் பத்திரிகைகளிலே செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. நான் உங்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம் கைது செய்யப்படுகிறவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடக்கிற நேரத்தில் ஒரு மோச மான சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக, காவல் நிலையங்களில் பணியாற்றுகின்ற காவலர்களைப் பார்க்கின்றபோது, 50 வயதுக்கு மேலானவர் களை 'அக்கியூஸ்ட்களை' பிடிக்கப் போவதற்காகவும், இளம் வயது உள்ளவர்களை அங்கு ரைட்டர் ஆக, ஹெட் கான்ஸ்டபி ளாக வைத்து இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இப்படி மாறி இருக்கின்ற சூழ்நிலையில், அவர்கள் வேகமாகச் சென்று குற்றவாளிகளைப் பிடிக்கின்ற ஒரு சூழ்நிலை வராது. எனவே, பொதுவாக ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இந்தத் துறை யிலே காவலர்களாக நியமிக்கப்பட வேண்டும். இங்கேகூட நீங்கள் தந்து இருக்கிற புள்ளி விவரத்திலே, கிட்டத்தட்ட 68,987 காவலர்கள் இருக்கிறார்கள் .... (மணி அடிக்கப் பெற்றது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 15 நிமிடம் ஆகிவிட்டது.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> நான் பேசியது 5 நிமிடம்தான்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது எனக்குத் தெரியும். நான் உங்களிடம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நான் இதை உங்களிடம் எச்சரிக்கையாக முன்னரே சொல்லி இருக்கிறேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 68,987 காவலர்கள் என்பது டி.ஜி.பி. உட்பட அனைத்து காவல் துறையினரையும் சேர்த்து. கிட்டத்தட்ட தமிழ்நாட்டு



னுடைய கணக்கைப் பார்த்தால் 6 கோடி பேர் இருக்கிறார்கள். அந்தக் கணக்கோடு பார்க்கும்போது கிட்டத்தட்ட 1 இலட்சம் பேருக்கு ஒரு போலீஸ்— இது போதுமா? (குறுக்கீடு) தப்பாக இருந்தால் திருத்திக் கொள்கிறேன். 10 ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ் என்கிற விகிதாச்சாரத்தில் வருகிறது. எனவே அதை நீங்கள் கவனத்திலே கொண்டு காவல் துறையிலே அதிகமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல நம்முடைய கோவை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இரண்டு பெண் ஊழியர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதுபற்றி இது வரைக்கும் எந்த தகவலும் இல்லை. அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்ற பெண்களுக்குக்கூட. பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி, அந்தக் கொலையாளிகளை உடனடியாகக் கண்டுபிடித்து அவர்களை நாட்டிற்கு அடை யாளம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இன்றையதினம் உங்கள் முன்னாலே உங்களுடைய அரசுக்கு ஒரு பெரிய களங்கம், இந்தக் காவல் துறையாலே இருக்கிறது என் பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முடியுங்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் பேசுகிறபோது— அந்த இரு பெண்களையும் கொலை செய்தவர்களை எல்லாம் கைது செய்து இருக்கிறார் கள்; நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது— பல்வேறு விஷயங்களைப் பற்றி தகுந்த ஆதாரங்களை அரசிடத்திலே இருந்து பதிலைப் பெறாமலேயே இங்கே பல்வேறு குற்றச் சாட்டுகளை வைக்கிறார்கள். இதுபோன்ற குற்றச்சாட்டு களை மாண்புமிகு உறுப்பினர் தவிர்ப்பது நல்லது என்று கருது கிறேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, எங்களுக்குக் கிடைத்த தகவலை நாங்கள் சொல்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை. இல்லை. நீங்கள் உங்களுக்குக் கிடைத்த தகவல் மட்டும், இரண்டு பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பது தகவல். அதற்குப் பிறகு நீங்கள் என்ன சொல்லி இருக்கிறீர்கள் என்றால், அதன் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்கிறீர்கள். இரண்டு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி விந்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 254. திரு. வெ. பழனிசாமி, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

254—

விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைத்தல்.

*3317 திரு. வெ. பழனிசாமி :

திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய உயர் மட்டக் குழு என்பது, 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியிலே, விவசாயிகளுக்காக அளிக்கப் பட்டது. 1981-ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலே ஆட்சி பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கும் அரசிற்கும் ஒரு இணைப்பு பாலமாக இருக்கிற விவசாய உயர் மட்டக் குழுவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைத்தார்கள். பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தி



னுடைய ஆட்சியில் அந்த விவசாய உயர்மட்டக் குழு கலைக்கப் பட்டு விட்டது. ஆகவே, விவசாயிகளையும் அரசையும் இணைக்கிற பாலமாக திகழ்கிற விவசாய உயர்மட்டக் குழுவை அமைத்து விவசாயிகளுடைய இன்னல்களையும் இடர்பாடு களையும் அரசுக்குத் தெரிவிக்கவும் அரசினுடைய சிரமங்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்கவும் ஒரு இணைப்பு பாலமாக விளங்கிட, விவசாயிகள் உயர்மட்டக் குழுவை மீண்டும் மறு பரிசீலனை செய்து அரசு அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய 1980ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியிலே அன்றைக்கு விவசாயிகள் சங்கத்தினுடைய தலைவராக இருந்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுடைய ஆதரவைக் கேட்ட நேரத்திலே, தான் ஆட்சிக்கு வந்தால் அந்த விவசாயிகள் உயர்மட்டக் குழுவை அமைத்துத் தருவதாகச் சொன்னார்கள். விவசாய சங்கத் தலைவரான திரு. நாராயணசாமி நாயுடு அவர்களையே கூட அதிலே தலைமையேற்கச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் தலைமை ஏற்க மறுத்ததால் திரு. முனுஆதி அவர்கள் தலைமை தாங்கிக் கொண்ட அந்த விவசாய உயர்மட்டக் குழு விவசாயிகளினுடைய பிரச்சினைகளை அரசுக்கு பல பரிந்துரைகளின் மூலமாகச் சொல்லி, பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தது. இன்றுகூட விவசாயிகளுக்கு இருக்கிற ஜப்தி பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அதை நிறுத்த வேண்டுமென்று வேண்டுகோளாகச் சொன்ன நேரத்திலே, ஜப்தியை நிறுத்துவதாக உத்தரவிட்டு, இன்று விவசாயிகளுக்கு ஒரு நல்ல முடிவைச் சொல்லி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இப்படிப்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் விவசாயிகளின் சார்பிலே நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த விவசாயிகளின் உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தி, தமிழக முதல்வர் அவர்களுக்கு விவசாயிகளுடைய பிரச்சினைகளைச் சொல்வதற்காகவும், அதை கேட்பதற்காகவும் ஒரு வாய்ப்பை அளிக்கின்ற முறையிலே இந்த உயர் மட்டக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளைச் சொல்லி, அதை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக்

தெரியாமலே பேசக்கூடாது. (குறுக்கீடு) தெரியாமலே பேசக் கூடாது என்பதுதான் விதி. தெரிந்து பேச வேண்டும். பல விஷயங்களை நீங்கள் தெரியாமல் பேசுகிற காரணத்தால் தான் இவ்வளவு பிரச்சினையே வருகிறது. பல விஷயங்களை நீங்கள் தெரியாமலேயே பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடு). சரி. உங்களுடைய நேரம் முடிந்தது. அடுத்து, திரு. செ. கு. தமிழரசன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 19 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதற்கு என்ன செய்ய முடியும்? நீங்கள் குறிப்பில் ஏறாத, ஏறக்கூடாத விஷயங்களாகப் பேசி முடித்துவிட்டு, பேசவில்லை என்றால் என்ன செய்வது? (குறுக்கீடு) அடுத்த உறுப்பினர் இப்போது பேசுவார். உட்காருங்கள்.

பிற்பகல் 12-50

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மாநில ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகள் பற்றிய கோரிக்கைகள் மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் உட்காருங்கள். அடுத்த உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள்.

(டாக்டர் தே. குமாரதாஸ் அவையிலிருந்து வெளியேறினார்)

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய கோரிக்கைகள் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக் களை வழங்க வாய்ப்பு தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தினுடைய முகமுக்கு உரைகல்லாக இருப்பது அந்த மாநிலத்தின் காவல்துறையாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால், அரசு இயந்திரத்தின் அனைத்து அதிகாரங்களுக்





கும் முகவர்களாக இருந்து கொண்டிருக்கிற துறை இந்தத்
துறை தான். ஒரு கிராமத்திற்கு தலைமைச் செயலாளரே
போனாலும் சரி, உயர்நீதிமன்ற நீதிபதியே போனாலும் சரி,
அந்த கிராமத்துக்காரர்களால் உடனடியாக மரியாதை செலுத்
தப்படுகிறவர் யாராக இருப்பார் என்றால் அந்த ஊர் காவல்
அதிகாரியாகத் தான் இருப்பார். எனவே, கிராமங்களில்
இந்தியாவின் ஜீவன் வாழ்ந்துகொண்டிருக்கிறது என்று அண்
ணல் காந்தியடிகள் சொன்னாரே, அதேபோல இன்றைக்கு
கிராமங்களிலே இந்த அரசின் நேரடி முகவர்களாக தென்
பட்டுக்கொண்டிருப்பவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்
கள்தான். இப்படிப்பட்ட காவல் துறை இன்றைக்கு நம்முடைய
தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய
சீரிய தலைமையில் மிகச் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்
கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டம்—
ஒழுங்கு முந்தைய நிலைமையை விட இப்போது மிகச் சீராக
இருந்து கொண்டிருக்கிறது. வன்முறை முழுக்க முழுக்க ஒழிக்கப்
பட்டிருக்கிறது. கள்ளச்சாராயம் பெருமளவுக்கு அழிக்கப்
பட்டிருக்கிறது. காவல் நிலையங்கள் கட்சி அலுவலகங்களாக
இருந்த நிலைமை போய் இன்றைக்கு பொதுமக்களை நெருங்
கிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்
கெல்லாம் காரணம், எதற்கும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளா
மல், நேர்மையோடு, எடுத்த முடிவை துணிச்சலாக நிறை
வேற்றுகிற ஒரு வளமான தலைமை இன்றைக்கு தமிழகத்திற்கு
கிடைத்திருப்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, இந்தத் துறையின் சிறப்பை நான் மனதார வர
வேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகத்தில் காவல்
துறைக்கு இருக்கிற பொறுப்புகளைக் குறித்து நம்முடைய
கொள்கைக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். அது
குறித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
நிறைய உயர் பதவிகளை காவல் துறையில் நாம் அவ்வப்போது
அதிகமாக்கிக் கொண்டே இருக்கிறோம். இதுதான் காவல்துறை
யில் கோஷ்டிகள் வளர்வதற்கு இடம் தந்து விடுகிறது. எனவே,
இத்தகைய நிலைமையை நாம் தொடரக் கூடாது என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இன்னொன்றையும் சொல்ல
விரும்புகிறேன். ஒரு காலத்தில் காக்கிச் சட்டை என்றால் அது
போலீஸ்காரர்களுடைய அடையாளச் சின்னமாக இருந்தது.
இன்றைக்கு எங்கே பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும்
காக்கிச் சட்டை அணிந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கி
றோம். சாதாரணமாக ஒரு அலுவலகத்தில் இருக்கிற வாட்ச்
மேனிலிருந்து, ஒரு ஓட்டலில் இருக்கிற வாட்ச் மேனிலிருந்து
அனைவரும் காக்கிச் சட்டையை நம்முடைய காவல் துறைக்கு
இருப்பதை விட அதிகமான பதக்கங்களோடு அவர்கள் அணிந்து
கொண்டு நடமாடுவதைப் பார்க்கிறோம். எனவே, காக்கிச்
சட்டையை காவல் துறையினர் மட்டுமே அணியவேண்டும் என்ற
நிலைமையைக் கொண்டு வந்தால், நம்முடைய காவல் துறையை
அடையாளம் தெரிந்து கொள்வதற்கு அது ஒரு வழியாக இருக்கும்
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குழுவை அமைத்தார்கள். இன்றையதினம் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழக ஆளுகைக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்களை நியமித்து இருக்கிறார்கள். எனவே, அவர் பதவிக்காலம் முடியும்வரை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதோடு மட்டுமல்லாது 8 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும் புரட் சித் தலைவி அவர்கள் நியமித்து இருக்கிறார்கள். மாநில விதை துணைக் குழுவில் 4 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும், மாநில ரக வெளியீட்டுக் குழுவில் 4 அலுவல் சார்பற்ற உறுப் பினர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நியமனம் செய்து விவசாயிகளுடைய நலன்களில் அக்கறை கொண்டு உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 255 திரு. மு. நடேசன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

255—

சேலம் இரண்டாவது தொகுதியில் வீட்டுவசதி குடியிருப்பு கட்டுதல்.

*4833 திரு. மு. நடேசன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் இரண்டாவது தொகுதியில் எத்தனை இடங்களில் வீட்டுவசதி குடியிருப்பு கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் இரண்டாவது தொகுதியில் 4 இடங்களில் வீட்டு வசதி குடியிருப்புகள் கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரிசீல னையில் உள்ளது.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் புதிய பஸ் நிலையம் எதிரிலும், ஐயம்பெருமாள்பட்டியிலும் வீட்டு வசதிக் குடி



165045
600 008

யிருப்புகளினுடைய ஆரம்பப் பணிகள் எப்பொழுது துவங்கப் படும், அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரண்டாவது தொகுதி யைப் பொறுத்த வரை, அழகாபுரத்தில் 4.3 ஏக்கர் நிலப் பரப் பிலே 108 அடுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டமும், ஐயம்பெரு மாள்பட்டியிலே 3.40 ஏக்கர் நிலப்பரப்பில் 72 வீடுகள் கட்டும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும், வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்காக 30 அடுக்கு மாடி வீடுகள் ரூபாய் 6 இலட்சத் தில் கட்டும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. 120 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 154 இலட் சத்தில் கட்டும் திட்டத்திற்கு அரசு ஆணை 1357, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 16—10—1991 தேதி யிட்ட முன்னுரிமைப் பட்டியலில் ஒப்புதல் அளித்து இருக்கின் றது. அதே போல, கந்தம்பட்டியிலே ரூபாய் 60 இலட்சத்தில் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளாக 78 காலி மனைகளும், நடுத்தர குடியிருப்புக்காக 38 வீடுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. நான்காவதாக அன்னதானப்பட்டியிலே உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 12 வீடுகளும், மத்திய வருவாய்ப் பிரிவினருக்கு 31 வீடுகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 208 வீடுகளும் சுமார் 2 கோடியே 33 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. கூடிய விரை வில் இவைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 256, திரு. அ. தேவராஜ். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

256—

இலவச காலணித் திட்டம் எடுத்துவிட்டதால் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுககு மீண்டும் வேலைவாய்ப்பு.

* 4697 திரு. அ. தேவராஜ் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு நகரில் இலவச காலணித் திட்டத்தை எடுத்து விட்டதால் வேலைவாய்ப்பு இல்லாமல் போனவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

D
V211,31/N92 NS 2.18.2

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 17

நம்முடைய நிர்வாகத்தில் வேறொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு அன்றைக்கு ஏராள மானவர்களை நியமித்தார்கள், ஒரே தகுதியின் அடிப்

பிற்பகல் 12-55

படையில்தான் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள், அவர்கள் ஏ, ஆர். போலீஸ் என்றும் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் என்றும் எல். அண்டு ஓ, போலீஸ் என்றும் வகைப்படுத்தப் பட்டார்களே ஒழிய ஒரே தகுதி அடிப்படையில்தான் நிய மிக்கப்பட்டார்கள். ஆனால் அதற்குள் ஒருவருக்கொருவர் மாறுதல் இல்லாமல் இன்றைக்கு எல். அண்டு ஓ. விலே இருக்கிறவர்கள் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏ. ஆர். போலீசிலே இருக்கிறவர்களும் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசிலே இருக்கிறவர்களும் அங்கே தொடர்ந்து இருக் கிறார்கள். அவர்களுக்குள்ளே கொஞ்சம் பிரச்சனையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே உள்ளே மாறுதல் செய்வதற்கும் வழி செய்ய வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல காவலர்களுக்கு வீட்டுப் பிரச்சினை இருக்கிறது, அது ஒரு பெரும் பிரச்சனை. எனவே, கட்டாயமாக நம்முடைய காவல்துறை வீட்டுவசதி வாரி யத்தின் மூலமாக அவர்களுக்கு விடு கட்டித்தர, குவார்ட் டர்ஸ் கட்டித்தர தேவையான நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய காவல் துறையிலே கடந்த காலங்களிலே சில துர்பாக்கியமான சந்தர்ப்பங்களிலே ஏற்பட்டுள்ள துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள் இங்கே தரப்பட் டிருக்கின்றன, அதிலே ஒரு வருத்தம் என்னவென்றால் துப்பாக்கிச் சூடு நடந்த பல பகுதிகளிலேயும் தாழ்த்தப் பட்ட மக்கள் தான் மிகப் பெரும் அளவிலே பாதிக்கப்பட் டிருக்கிறார்கள், பொதுவாகவே காவல் துறைக்கு கொஞ் சம் மேலாதிக்க உணர்வு உண்டு. அந்தத் துறைக்கே தன்னுடைய உயர் அதிகாரிகள் வந்து நேரிலே நிற்கிற போது தாழ்வு மனப்பான்மை உண்டு. அந்த மேலாதிக்க உணர்வும் தாழ்வு மனப்பான்மையும் ஒருசேர சேர்க்கப் பட்டவர்களால். இப்படிப்பட்ட நிலைமைகள் சில சமயங் களிலே உருவாகி விடுகின்றன, முதுகுளத்தூரிலே துப் பாக்கிச் சூடு ஆனாலும், புளியந்தோப்பிலே துப்பாக்கிச் சூடு ஆனாலும் திருச்செந்தூரிலே துப்பாக்கிச் சூடு ஆனா லும் அங்கெல்லாம் பல பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிற அளவுக்குத்தான் சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன.



1992 மார்ச் 17] [திரு: செ.கு. தமிழரசன்]

திருச்செந்தூரிலே யாரோ ஒரு வன்முறையாளர் இந்தச் சமுதாயத்தை திசை திருப்பத்தான் முயற்சித்தார். நான் அதை கடுமையாகக் கண்டிக்க விரும்புகிறேன். ஆனாலும் ஒரு வன்முறை யாளருக்காக திருச்செந்தூர் பகுதியிலே நாலுமுனைக்கிணறு என்ற கிராமத்தை சூழ்ந்து காவல் துறையினர் முழுக்க முழுக்க அங்கே இரவு நேரத்திலே புகுந்து குற்றவாளியைக் கண்டுபிடிப்ப தற்காக கடும் வேட்டையாடி, அதிலே சிறு குழந்தைகள் எல்லாம் கூட துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட துப்பாக்கிச் சூடு ஏற்படக்கூடாது. அதற்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்பதற்காக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

பொதுவாகவே வசதியான குற்றவாளியாக இருந்தால் அவன் தப்பித்துவிடுவான் ; வசதி இல்லாத குற்றவாளி என்றால் அவன் மாட்டிக்கொள்வான் என்ற மனப்பான்மை நம்முடைய சாதாரண மக்களுக்கு, படிப்பறிவு இல்லாத மக்களுக்கு வந்துவிடக் கூடாது. அதற்கு நம்முடைய காவல் துறை இடம் தந்துவிடக் கூடாது என்பதற்காக நான் இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாகவே குற்றவாளிகளை சூழ்நிலைதான் உருவாக்குகிறது அந்த சூழ்நிலைக்கு ஏற்பவே குற்றவாளிகள் தண்டனைக்கு உள்ளா கிறார்கள். பலர், இதிலே மாட்டிக்கொள்ளாதவர்கள், வெளியே இருக்கிறார்கள். அது வேறு விஷயம். எனவே, குற்றவாளிகளை கைது செய்கிறபோது கொஞ்சம் மனித நேயத்தோடு அவர்கள் நடத்தப்பட வேண்டும். பல காவல் நிலையங்களிலே சில எளிய குற்றங்களுக்காக குற்றவாளிகளை கைது செய்கிறபோது அவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். அப்படிச் செய் யாமல் கொஞ்சம் மனித நேயத்தோடு நடத்த வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெர்னாட்ஷா ஒரு முறை சொன்னார். ஒரு நல்ல நாடு எதுவாக இருக்குமென்றால் அந்த நாட்டிலே நீதிமன்றங்களோ காவல் நிலையங்களோ இல்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னார். நீதிமன்றங்களும் காவல் நிலையங்களும் எந்த நாட்டிலே இல்லையோ அந்த நாடுதான், அமைதியான செழிப்பான, மனிதப் பண்புக்கு சிகரமான நாடாக இருக்க முடியும் என்று அவர் கருதினார். நான் காவல் துறை மானியக் கோரிக்கையிலே இந்த யோசனைகளைச் சொல்வதற்குக் காரணம் அதற்கு முழு பொறுப்பாக இந்தக் காவல் துறை இருக்க முடியாது. ஒட்டு மொத்தமாக இந்தச் சமுதாய குற்றச் சாட்டுக்களுக்கு இயல்பாக இடம் தராமல் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை சொல்வதற்காகத்தான்.

கள்ளச்சாராயம் மிகக் கடுமையாக ஒழிக்கப்பட்டிருக்கிறது. எனவே பலரும் இங்கே வருத்தப்படுகிற அளவுக்கு சில திருட்டு கள் பெருகி இருக்கின்றன. வேறு வழியில்லாத அந்தச் சமூக

[1992 மார்ச் 17

(அ) அரசு ஆவன செய்கிறது.

(ஆ) தற்போதைய சூழ்நிலையில் செய்யாறில் உற்பத்திக் கூடம் மீண்டும் திறக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எடுத்து விட்டதால் பாதிக்கப்பட்டு நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்ய முடியுமா? எப்பொழுது செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் 69 பேர் வேலை செய்நார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பதவியேற்ற பின் இது வரை இதில் 32 பேர்களுக்கு காஞ்சீபுரம் டால்கோ கூடத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி உள்ளவர்களுக்கும் விரைவில் அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257 திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

257—

சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்தல்.

*6185—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர்—காங்கேயனூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் கிராமம், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் பகுதிகளில் சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருடைய புகழைப் பரப்பி, நிலை நிறுத்திக் கொண்டிருக்



1992 மார்ச் 17]

க்கூடிய நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 500 குடும்பங்களுக்கு மேற்கொண்டு, 120 குழந்தைகள் உள்ள போளூர் ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் என்ற கிராமத்திலேயும், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் என்ற கிராமத்திலேயும் புரட்சித் தலைவருடைய புகழை நிலை நிறுத்தும் வண்ணம் சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா ? அப்படிக் கூடிய விரைவில் அதனை அமைத்து, நல்ல முறையில் இந்த ஏழை எளிய குழந்தைகளுக்கு உணவு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடும் திண்டிவனம் ஊராட்சியில் அத்திமூர் கிராமத்தில் ஒரு மையம் 80 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. போளூர் வட்டாரத்தில், காங்கேயனூர் கிராமத்தில் ஒரு மையம் 55 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. ஒரு குழந்தைகள் நல மையம் துவங்குவது என்றால், குறைந்த பட்சம் 70 குழந்தைகள் இருக்க வேண்டும். இதற்குக் குறைந்தபட்சம் ரூபாய் 15,000 ஆண்டுக்கு செலவு ஆகிறது. உலக வங்கி உதவியுடன் ஊட்டச்சத்து திட்டம்—2 1993இல் அமல்படுத்தப்படும்பொழுது இந்த மாவட்டத்தில் புதிய மையங்கள் முழுவதும் அந்த மாவட்டத்தில் துவக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 258. திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

258 —

தமிழகத்திலுள்ள மசூதிகளைச் சீரமைக்க நன்கொடை வசூல்.

* 5727 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மசூதிகள், தர்காக்கள் மற்றும் மையத்து கொல்லைகள் ஆகியவைகளை சீரமைக்கும் பொருட்டு பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வசூல் செய்யப்படும் ?

(இ) மசூதிகள் எப்போது சீரமைக்கப்படும். ?

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 17

குற்றவாளிகள் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். எனவே கொஞ்சம் திருட்டுச் சம்பவங்கள் ஆங்காங்கே இன்று இயல்பாக நடைபெறுகின்றன. அது மட்டுமல்ல. நாம் கள்ளச்சாராயத்தை ஒழித்திருக்கிறோம். ஆனால் நம்முடைய வருவாய்த் துறையிலே பதநீர் விற்பதற்கு அனுமதி அளித்து விடுகிறார்கள். பல பகுதியில் பதநீர் என்ற பெயரிலே கள் விற்பனை நடக்கிறது. கேட்டால் அவர்கள் பதநீர் என்று சொல்கிறார்கள். எனவே காவல் துறையினர் உடனடியாக அவர்கள் மீது

பிற்பகல் 1-00

நடவடிக்கை எடுக்க முடியாமல் குழப்பம் ஏற்படுகிறது. எனவே அந்தப் பதநீருக்கு உரிமை தருவதை ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அளவிலே மதுவிலக்கு உயர்மட்டக் குழு இருக்கிறது. அந்தக் குழுவை மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், கிராம அளவிலும் ஓரளவிற்கு விரைந்து நியமித்தால் குற்றங்களைச் சொல்வதற்கு, குற்றங்கள் தவிர்க்கப்படுவதற்கு, இந்தக் குழுக்கள் ஆலோசனைகளை வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும். எனவே, அந்தக் குழுக்களை விரைவாக மாவட்ட, வட்ட மற்றும் கிராம அளவிலே நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் என்கிற ஒரு சட்டம் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், நாம் ஜனவரி 30 ஆம் தேதி குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் பெயராலேயே உறுதிமொழி எடுத்துக் கொள்கிறோம். இந்தத் துறையே ஒரு தனித் துறையாக நம்முடைய காவல் துறையிலே செயல்பட்டு வருகிறது. அதிலே பல்வேறு வழக்குகள் பதியப்படுகின்றன. கடந்த ஆண்டு கூட 582 வழக்குகள் பதியப்பட்டு இருக்கின்றன. இதற்கு முன்னாலே இப்படி ஆயிரக்கணக்கான வழக்குகள் பதியப்பட்டு இருக்கின்றன. ஆனால் முடிவுகள் என்ன ஆகி இருக்கிறது என்றால், அதிலே பெருமளவிலே, நூற்றுக்கு 20 விழுக்காடு கூட, தீர்ப்புகளோ, முடிவுகளோ வந்ததில்லை. காரணம் யார் தன் பேரிலே குற்றம் சொல்கிறார்களோ, அவர்களுக்குக் காலம் கொடுத்து, அழைத்து, பஞ்சாயத்து செய்தோ, மிரட்டியோ, அந்த வழக்கை வாபஸ் பெறுகிற அளவிற்கு கிராமங்களிலே செய்து விடுகிறார்கள். நான் இன்னொரு வேதனையான சம்பவத்தைச் சொல்லவேண்டும். சாதாரண மக்கள் பேரிலே இந்தக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சியிலே இருக்கிற முன்னாள் அமைச்சர் ஒருவர், அவர் பெயரையே சொல்ல விரும்புகிறேன். காளிமுத்து அவர்கள், ஒரு பொதுக் கூட்டத்திலே பேசுகிறபோது முதல்வர் அவர்களைப் பற்றிப் பேசுகிறபோது, வெட்டியான் வேலை செய்வதற்கு ஒரு முதல்வரா என்று பேசியிருக்கிறார்கள். நம்முடைய பெருமதிப்பிற்குரிய, தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிற, புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து, இவர் பேசுகிறார். வெட்டியான் வேலை செய்



1992 மார்ச் 17] [திரு. செ. கு. தமிழரசன்]

வதற்குத்தான் முதல்வரா என்று. அவர்களே, சாதியைப் பார்த்து, சாதியைச் சொல்லி, இழிவுபடுத்துகிற விதத்திலே பேசுகிறார் என்று சொன்னால், நம்முடைய குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய நிலைமையை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவர்களை எல்லாம் குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யவேண்டும். ஏன் என்றால், மனதாலோ, செயலாலோ, எந்த வகையிலோ சாதியை நினைத்துப் பேசினாலும், அது நம்முடைய குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தண்டனைக்கு உள்ளாகிறது. ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்துகிற வகையிலே பகிரங்கமாக மேடை போட்டு ஒருவர் பேசுகிறார் என்றால், அன்புகூர்ந்து, நம்முடைய துறையினர் குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் முன்னாள் அமைச்சர் காளிமுத்துவை கைது செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். 26-1-1992 தேதியிட்ட தினகரன் நாளிதழிலே, பெரிய அளவிலே இது வந்து இருக்கிறது. 'வெட்டியான் வேலை செய்வதற்கு முதல்வரா' என்று தலைப்பிட்டு வந்திருக்கிறது. எனவே, இதன்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்க்கலாம். சங்கரன் கோவில் வட்டம் துரிஞ்சாபுரம் என்கிற கிராமத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் 4 பேர்கள் படுகொலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். என்ன காரணம் என்றால், அவர்கள் அந்தப் பகுதியிலே புறம்போக்கு நிலத்திலே, காந்தாரி அம்மன் கோயில் என்கிற ஒரு கோயிலை கடந்த காலங்களிலே எழுப்பி பூஜித்து வந்தார்கள். அந்தக் கோயிலிலிருந்த மண் சிலையை அகற்றிவிட்டு, செப்புச் சிலையை வைத்து, அதற்கு விழா எடுக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பியபோது, எப்படி இங்கே நீங்கள் விழா எடுக்கலாம் என்று சிலரால் அவர்கள் தடுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே, திருவேங்கடம் பகுதிக்கு திரைப்படம் பார்க்கப்போய் 6 இளைஞர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவர்களை ஒரு கும்பல் தடுத்து, மறித்து, 4 பேர்களை வெட்டிப் போட்டிருக்கிறார்கள். அந்த இடத்திலேயே செத்திருக்கிறார்கள். இந்த 4 பேர்களிலே ஒருவர் அந்த ஊருக்கே சொந்தமானவர் அல்ல, வெளியூரிலேயிருந்து. மூலாரிலேயிருந்து. அந்தக் கிராமத்திலுள்ள ஒரு வீட்டிற்கு விருந்தினராக வந்தவர், அந்த விருந்தினரை அழைத்துக் கொண்டுதான் அவர்கள் திரைப்படத்திற்குப் போனார்கள். இதற்குப் பின்னணி என்னவென்றால், 4 ஆண்டுகளுக்கு முன்பாக, அங்கேயிருக்கிற தாசில்தார், அந்தக் கோயில் அவர்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பின்னால், அங்கேயிருக்கிற செல்வாக்கு நிறைந்த, இன்றைக்கும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினருக்கு சொந்தக்காரர் என்ற வகையிலே, அதைத் தடுத்துக் கொண்டு இருந்தார்கள் (குறுக்கீடு) வை, கோபால்சாமி. (குறுக்கீடு).

[1992 மார்ச் 17

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக் கேள்விகளுக்கு இடமில்லை.

மூற்பகல் 10-40

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வக்ஃப் வாரியத்தில் இணைக்கப் பட்ட பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூடிய இடங்களான கபர்ஸ்தானங்கள் மொத்தத்தில் சுமார் 6,100 இருக்கின்றன. அரசு, இவை களைப் புதுப்பிப்பதற்கு வருடத்திற்கு ரூ. 3 லட்சம் அளிக் கிறது. இந்தத் தொகை போதாது. இதனை வருடத்திற்கு ரூ. 6 லட்சமாக உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான பார்வைக்கு வைக்கப்பட்டு, பரிசீலிக்கப் படும்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எவ்வளவோ பள்ளிவாசல்கள் தனியார்களால் நல்ல எண்ணத்தோடு கட்டப்பட்டு வரு கின்றன. இதனை, வக்ஃப் வாரியம், இன்றையதினம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, பள்ளிவாசல்களைக் கட்டும் நல்ல எண்ணம் கொண்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதற்கு உத்தர வினை வழங்கி, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, பள்ளி வாசல் கட்டும் எண்ணம் கொண்டவர்களின் மனதைப் புண் படுத்தி வருகிறது. அப்படி இல்லாமல், அந்த ஜனாஸ்தார்களை அழைத்து வக்ஃப் வாரியம் கேட்டிருக்கலாம்; அப்படி இல்லாமல் அவர்கள்மீது வேண்டுமென்றே வழக்குத் தொடர்கிறார்கள். இதனை இந்த அரசு அறியுமா? ஆம் எனில் இப்படி வேண்டுமென்றே வழக்குப் போடுவதற்குக் கொடுத்த உத்தரவினைத் திரும்பப் பெறுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள இதுபோன்ற பள்ளிவாசல்களைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், இதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



1992 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி டப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) பரமக்குடியில் மின் அழுத்தக் குறைவால் ஏற் பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக் கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை யின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

(1) பரமக்குடி நகரப் பகுதியில் உள்ள குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிகின்றன.

(2) ஆனால் பரமக்குடியின் ஊரகப்பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் மின் மாற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ள தால் மாலை வேளைகளில் இக் குழல் விளக்குகள் சரிவர எரிவதில்லை. இப் பகுதிகளில் மின் விநியோக நிலைமையைச் சீர் செய்ய கீழ்க்கண்ட பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டு விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன இருக்
கிறது ? சரி சொல்லுங்கள். அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்
கிறேன் என்கிறார்.

திரு. இளம்வழுதி : சபையிலே இல்லாத ஒருவரைப்பற்றிப்
பேசக்கூடாது என்று விதி இருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசக்கூடாது என்ற
மரபு இருக்கிறது, அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி
அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன், அதற்கு ஆதாரத்தை
யும் தருகிறேன் என்று என்னிடத்திலே அனுமதி கேட்கிற காரணத்
தினாலே, அவர்கள் கொடுத்திருக்கிற ஆதாரத்தை நம்பி, அது
ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது, (குறுக்கீடு). இதிலே ஒன்றும்
வராது, உட்காருங்கள், அவர்கள் ஆதாரம் கொடுக்கிறேன்
அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்கிறபோது,
அதற்கு மேற்கொண்டு பேச்சே இல்லை. தமிழரசன் பேசுங்கள்,
(குறுக்கீடு). அவர்கள் ஆதாரம் தருகிறேன் என்று சொல்லிவிட்டுப்
பேசியிருக்கிறார், (குறுக்கீடு). உட்காருங்கள்.

பிற்பகல் 1-05

திரு. செ. கு. தமிழரசன் : அந்த வழக்கிலே தொடர்பான
வர்கள் அவருடைய உறவினர்கள் இல்லை என்று யாராவது
சொல்லட்டும். நான் சொல்கிறேன். அவர்கள் அவருடைய
உறவினர்கள், இன்னமும் அவர்கள் கிடைக்கவில்லை. அவர்கள்
கைது செய்யப்படவில்லை. அவருடைய உறவினர்கள் என்பதை
நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடு). நான் அதற்கு
பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருக்கிறது
என்றும், அதற்கு அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டும் பேசுகின்ற
போது, அதிலே மேற்கொண்டு ஒழுங்குப் பிரச்சினை வராது,
உட்காருங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : இன்னமும்கூட அவர்கள் ஓடி
ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். காவல்துறை அவர்களை தேடிக்
கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு நாட்களாக அது நடந்து
கொண்டிருக்கிறது. அவர்கள் அந்த கிராமத்தை விட்டே போய்
விட்டார்கள். கடந்த நான்கு ஆண்டுக்காலம் ஆகியும், அந்த
ஆட்சியிலே தாசில்தார் உத்தரவிட்டும் கூட, அதைச் செயல்
படுத்த மறுத்துக் கொண்டிருந்ததால். இன்றைக்கு இந்த
விளைவு. எனவே நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.





திரு. செ. கு. தமிழரசன் : முடித்து விடுகிறேன். திருநெல்
வேலி மாவட்டத்தில், மதுரை மாவட்டத்தில், இராமநாதபுரம்
மாவட்டத்தில், வ.உ.சி. மாவட்டத்தில், தென் ஆற்காடு
மாவட்டத்தில், இப்படி ஒரு சில மாவட்டங்களில்தான்
தொடர்ந்து இப்படிப்பட்ட இனப் படுகொலைகளும், இனக்
கலவரங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, இதற்கு
முன்பு அந்தப் பகுதியிலே இனக் கலவரங்கள் ஒரே நாளில்
வெடித்தது அல்ல. அதற்குப் பின்னாலே ஒரு பின்னணி உண்டு.
நான்கு ஆண்டாவது, 5 ஆண்டாவது அல்லது 10 ஆண்டுகளாவது
அந்தப் பகுதியிலே ஒரு உட்பகை இருந்திருக்கும். அதைத்
தொடர்ந்து கவனிக்காமல் விட்டால் இப்படிப்பட்ட நிலைமைகள்
விளைந்துவிடும். எனவே என்னுடைய யோசனையாக நான்
ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட பகுதிகளிலே
அவற்றைத் தடுப்பதற்கு ஓய்வு பெற்ற ஒரு காவல்துறை அதிகாரி
யையோ அல்லது ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியையோ உள்ளடக்
கிய ஒரு ஆலோசனைக் கமிட்டியை, ஒரு அமைதிக் கமிட்டியை
நிரந்தரமாக வைத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரு
கின்றபோது அவர்களை அழைத்து ஒரு முடிவு காண்பதற்கு
அது வழியாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட கமிட்டிகளை
அந்த கலவரப் பகுதிகளிலாவது அமைப்பதற்கு அரசு முன்வர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : நம்முடைய காவல் துறை
உயிர்களுக்கும், உரிமைகள், உடமைகள் ஆகியவற்றுக்கும் பாது
காப்பு தருகிற மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கிறது. இன்
றைக்கு தமிழக முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கிற ஒரு
வீராங்கனையாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற தன்
னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் ஒரு நாளைக்கு 18
மணி நேரம் நாட்டு மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற
டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே உயிர்
களுக்கு, உடமைகளுக்கு, உரிமைகளுக்கு காவல் தருகிற
காவல் துறையாக இந்தத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது,
எனவே, இதனை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சிவசுப்பிர
மணியன்.

*திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டுக்கான இந்தக் காவல்
துறை மானியத்தின் மீதும், ஆயத் தீர்வைத் துறை மானியத்தின்
மீதும் இங்கே பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்கு
என்து நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(அ) மூன்று 100 கே.வி.ஏ./22 கி.வோ/433 வோல்ட் மின்மாற்றி முறையே 20–12–1990, 23–1–1991, 10–6–1991 அன்று நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றியின் கொள்திறன் —200 கே.வி.ஏ. ஆக 20-8-1991 அன்று உயர்த்தப்பட்டது.

(இ) சென்ற ஆறு மாதங்களில் 4 கி.மீ. நீளமுள்ள மும்முனை 4 கம்பி பாதைகளில் கனமான கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ஈ) மேலச்சத்திரத்தில் 100 கே.வி.ஏ/22 கி.வோ/433 வோல்ட் மின் மாற்றியும், மகளிர் குழந்தைகள் மருத்துவமனை அருகில் ஒரு 100 கே.வி.ஏ./22 கி.வோ/433 வோல்ட் மின் மாற்றியும் அமைக்கப்படவுள்ளது. மேலும் இப்பகுதிகளில் இருபது (20) புதிய மின்மாற்றிகள் அமைக்கப்படவுள்ளன.

(உ) பரமக்குடி துணை மின் நிலையத்தின் தற்போதுள்ள 3 எம்.வி.ஏ. மின் மாற்றிக்கு பதிலாக புதிய 10 எம்.வி.ஏ. உயர் மின் அழுத்த மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கான மதிப்பீடு அனுமதி வழங்கும் தருவாயில் உள்ளது. இம்மின்மாற்றி செயலிலிருக்கும்போதே விநியோக மின் அழுத்தத்தினை கூடுதலாக்கும் On load tap charging arrangement வசதி உள்ளதாக இருக்கும். இது தவிர பரமக்குடிக்கு வரும் 110 கே.வி. உயர் மின் அழுத்தப் பாதை சந்திப்பு முறையில் சிற்சில மாற்றங்கள் செய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மேம்பாட்டு பணிகள் மூலம் பரமக்குடி தொகுதியில் மின்னழுத்தம் முழுவதுமாக சீரடையும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் பரமக்குடி நகரப் பகுதியில் குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிவதாகவும், ஊரகப் பகுதிகளில் மாலை வேளைகளில் குழல் விளக்குகள் சரியாக எரியவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, பல்வேறு நலத் திட்டங்கள் மின்சார வாரியத்தின் மூலம் நடத்துவதற்காகவும் விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எதையுமே உடனுக்குடன் செய்து முடிக்கிற ஆற்றல் மிக்க பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 20 புதிய மின் மாற்றிகளையும், 3 எம்.வி.ஏ. மின்மாற்றிக்குப் பதிலாக 10 எம்.வி.ஏ. உயர் அழுத்த மின்மாற்றியையும் உடனடியாக அமைத்துத் தந்து, பரமக்குடி தொகுதியில் மின்சார வாரியம் சரியாக இயங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, மின்சார வாரியம் எப்படி செயல்படுகிறது என்பதை நல்ல உள்ளம் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான், இராமநாதபுரம் மாவட்டத்தில் 30 ஆண்டுகளாக சீர்கெட்டுப் போயிருந்த மின் நிலைமைகளை 30 நாட்களிலேயே சீரமைத்து, இராமேஸ்வரம் பகுதியிலே அதற்காக 300 கிராமங்களுக்கு முறையாக மின் விநியோகம் தரப்பட்டது. அதேபோல், பரமக்குடி நகரில் புகார் வந்த நேரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற 6 நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்பட்டன. நம்முடைய ஆட்சிக் காலத்திலே தான், 100 கே.வி.ஏ. மின்மாற்றியின் கொள்திறனை பரமக்குடியில், 200 கே.வி.ஏ.-ஆக மாற்றி, 20–8–1991-இல் உத்தரவிடப்பட்டது. ஆகவே, பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் எந்தப் பிரச்சினை வந்தாலும் உடனடியாக இந்த அரசின் கவனத்திற்கு வருகிற நேரத்திலே, மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில், இப்போது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விவசாய மண் பரிசோதனை நிலையம் வேலூரிலிருந்து சேலம்—ஆத்தூருக்கு மாற்றப்பட வேண்டுமென்ற உத்தரவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக இயங்கி வரும் விவசாய மண் பரிசோதனை நிலையத்தை, சேலம்—ஆத்தூருக்கு மாற்ற வேண்டுமென விவசாயத் துறை இயக்குநர் 10–2–1992-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவினால், பாதிக்கப்பட்ட வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட விவசாயிகளினுடைய பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1992 மார்ச் 17

முற்பகல் 10-45

*மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

மண் வகையீடு மற்றும் நிலபயன்பாடு நிறுவனம் ( Soil survey land and use organisation ) கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின் 1970-ல் தஞ்சாவூரிலும் 1976-ல் வேலூரிலும், திருநெல்வேலியிலும் விரிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. நில புலன்களை ஆய்வு செய்து அவற்றில் உள்ள மண் கண்டங்களின் தன்மைக்கு ஏற்ப வகையீடு செய்து அந்த வகையீட்டின்படி எந்தெந்த பயிர்கள்வரை பயன்படுத்தலாம் என்பது பற்றி ஆய்வு அறிக்கைகளும் வரைபடங்களும் ( Soil Map ) தயார் செய்யப்படுகின்றன. இந்த வரைபடங்களை வைத்து எந்தெந்த வகை மண்ணிற்கு எந்த பயிர் பயிரிடலாம், எவ்வாறு நீர்ப்பாசன மேலாண்மை செய்யலாம், எத்தகைய உர மேலாண்மை செய்ய வேண்டும், மேலும் எந்த மண் வகையில் பொறியியல் பணிகளை மேற்கொள்ளலாம் போன்ற பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

வேலூரில் உள்ள பிரிவு, தென்னாற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார். திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் இருக்கும் மண் வகைகளை முறைப்படுத்தி வரைபடத் திட்ட பணிகள் கடந்த 15 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றது. இந்த பணியின் முதல் கட்டம் முடிவடைந்துள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படும் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உள்ள நீர் பிடிப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக ஆத்தூரை தலைமை இடமாகக் கொண்டு சேலம் மாவட்டம் வெள்ளாறு நீர்ப்பிடிப்பு பகுதியிலும், வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள பாலாறு நீர் பிடிப்பு பகுதியிலும் விரிவான மண் வகையீடு செய்வதற்காக ஒரு சிறப்பு திட்டம் ஆரம்பிக்க உள்ளது. இதற்கான மண் வகையீடு நில பயன்பாட்டு ஆய்வு பிரிவு ஒன்று சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஆரம்பிக்க இருக்கிறது.

உலக வங்கி நிதி வசதியுடன் ஆத்தூரில் அமைக்க இருக்கும் நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தில் புதிய பணியாளர்களை அமைக்க உத்தரவு இல்லை. மற்ற. பணியிடங்கள்



1992 மார்ச் 17] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

விருந்து மாற்றம் செய்து கொள்ள (Deployment) உத்தரவு இடப்பட்டதால், கீழ்க்காணும் விவரப்படி ஒருசில பணியாளர்களை மட்டும் வேலூர் அலுவலகத்திலிருந்து ஆத்தூருக்கு (Deployment) அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற பணியாளர்கள் வேலூர் அலுவலகத்திலேயே தொடர்ந்து பணியாற்றுவார்கள். அந்த அலுவலகம் அங்கு தொடர்ந்து செயல்படும்.

| வரிசை எண்ணும் பதவியும். | வேலூர் அலுவலகத்தில் தற்போதுள்ள பணியிடங்கள். | உலக வங்கி திட்டத்தில் ஆத்தூரில் ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. உதவி வேளாண்மை வேதியியலர் | 1 | 1 |
| 2. வேளாண்மை அலுவலர்கள் .. | 5 | 3 |
| 3. ஆய்வக உதவியாளர் .. | 1 | .. |
| 4. உதவியாளர் .. | 1 | .. |
| 5. தட்டச்சர் .. | 1 | 1 |
| 6. அலுவலக உதவியாளர் .. | 1 | 2 |
| 7. வாகன ஓட்டுநர்கள் .. | 4 | 2 |
| 8. இளநிலை வரைபட அலுவலர் .. | 1 | [illegible] |
| 9. உதவி வரைவாளர் .. | 1 | .. |
| 10. இளநிலை உதவியாளர் .. | .. | 1 |
| 11. முதுநிலை வரைபட அலுவலர் .. | .. | 1 |

வேலூரில் உள்ள விவசாய மண் பரிசோதனை நிலையத்தை வேறு ஊருக்கு மாற்றம் செய்ய எந்த உத்தேசமும் இவ்வரசுக்கு இல்லை.

[திரு. கு. சிவசுப்பிரமணியன்] [1992 மார்ச் 17

நம்முடைய தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு இன்றைக்கு தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது என்பதை எல்லாம் எனக்கு முன்னால் பேசிய இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களும், எங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே அங்கம் வகிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சியிலே பொறுப்பு வகிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் காவல்துறையைப் பற்றிச் சொல்லுகின்றபோது காவல்துறையிலே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் எந்த அளவிற்கு இன்றைக்கு அவர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றுகிறார்கள் என்பதைச் சொல்லி, அவர்கள் கடமையாற்றுகின்ற நேரத்தில், அவர்கள் எந்த அளவிற்கு கட்சிக்காரர்கள் ஒரு சில பேர்களுக்கு தாங்கள் துணை போகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தமிழகத்திலே குறிப்பாக நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லியதைப் போன்று விடுதலைப் புலி இயக்கத்திற்கு தடை செய்யவேண்டுமென்று இங்கே சொன்னார்கள், விடுதலைப் புலி இயக்கத்தை. அந்த விடுதலைப் புலிகளை தமிழகத்தை விட்டு விரட்டிய ஒரு மாபெரும் சக்தி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தான் என்பதை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள், ஆனால் அதே நேரத்தில் சல்லி வேர்கள் இங்கே அகற்றப்படாமல் தமிழகத்திலே இருக்கிறது என்றும் சொன்னார்கள்,

நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நம்முடைய சட்டமன்றத்திலே பேசுகின்றபோதும், வெளியிலே மேடைகளிலே பேசுகின்றபோதும், இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருக்கிற முன்னால் அமைச்சர்களாக இருந்த பண்ருட்டி போன்றவர்கள் எல்லாம் வடலூரிலே என்னுடைய தொகுதியிலே பேசியிருக்கிறார்கள், நாங்கள் இந்த விடுதலை இயக்கத்திற்குத் துணை போவோம்தான், நீங்கள் என்னை என்ன செய்யமுடியும் என்றெல்லாம் அங்கே வெளியிலே நடந்த கூட்டங்களிலே எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே சட்டமன்றத்திலே வந்து பேசுகின்றபோதும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு போன்றவர்கள் எல்லாம் அதற்கு நாங்கள் துணையாக இருப்போம், தமிழ் ஈழத்திற்கு நாங்கள் துணைபோவோம் என்று சொல்லி பேசியிருக்கின்றார்கள். இப்படி இவர்கள் எல்லாம் பேசுவதன் மூலமாக பொது மக்களாக இருக்கின்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், இப்போது நம்முடைய தமிழகத்திலேயே கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிற விடுதலைப் புலி இயக்கத்திற்கு இவர்கள் எல்லாம் துணை போகின்றவர்களாக இருக்கின்றார்கள் என்று நினைக்



1992 மார்ச் 17] [திரு. கு. சிவசுப்பிரமணியன்]

பிற்பகல் 1.10

கிறார்கள். இதையெல்லாம் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கருத்திலே கொண்டு எதிர்காலத்திலே இங்கே பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்து வைத்ததைப் போல இதற்கெல்லாம் " தடா " சட்டம் மட்டும் போதாது. இன்னும் உரிய முறையிலே கடுமையான வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நான் குறிப்பிட விரும்புவது எல்லாம் ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலிலே எந்த அளவிற்குத் திசை திருப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற நிதிநிலை நெருக்கடியை வைத்தும் இந்த தமிழகத்தை ஏழை எளிய மக்களுக்காக வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்காக ஆதி திராவிட மக்களுக்காக பாடுபட வேண்டுமென்று ஒரு நல்ல எண்ணத்தோடு புரட்சித் தலைவருடைய வாரிசாக நம்முடைய இதய தெய்வம் அவர்கள் நாளும் சிந்தித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் சொல்லியதுபோல 18 மணி நேரம் அல்லது 24 மணி நேரமும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஒரே தலைவி ஒப்பற்ற தலைவி எங்கள் புரட்சி தலைவி ஆவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே அப்படிப்பட்ட தலைவிக்கு நீங்கள் எல்லாம் இடையூறாக இருக்காமல் இந்த ஆட்சி செவ்வனே நடைபெறுவதற்கு உறுதுணையாக பக்க பலமாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த காவல் துறை மானியத்தில் நான் பேசுகிறபொழுது இன்றைக்கு காவல் துறையில் செயல்படுகின்றவர்கள் எல்லாம் ஏதோ வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள் போல இங்கே இருக்கின்றவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் நம்மோடு இருக்கின்றவர்கள்தான். அண்ணன் தம்பிகள் தான். மாமன் மைத்துனர்கள் தான். சொந்தக்காரர்கள் தான். ஆகவே அவர்களிடம் நாம் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலேயும் மற்ற மற்ற சொந்தக்காரர்கள் என்ற முறையிலேயும் சில பிரச்சினைகளை எழுப்புகிறபோது அவர்கள் அதற்கு செவி சாய்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். அதே போலத்தான் ஒரு வழக்கிற்கு ஒரு வக்கீலை வைத்துக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதையே இன்னொரு வக்கீல் போய் அதை நிறுத்தி வையுங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கேட்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு தொய்வு ஏற்படுகிறது. இதைவிட இன்னும் நான் கேட்கிறேன். உள்ள சுத்தியோடு நான் கேட்கிறேன். நீங்கள் எல்லாம் வள்ளலார் சொல்லியதைப் போல உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதவர்களாக இருந்தால், காவல் துறை எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு அல்லது வழக்கு பதிவு செய்கின்ற நிலையில் எப்.ஐ.ஆர். போட்டு தன்னிச்சை

யாக அவர்கள் ' இன்வெஸ்டிகேஷன் ' செய்வதற்கு குறுக்கிடாமல் ஒத்துழைக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அப்படி நாம் எல்லாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவேண்டும்.

அப்படித்தான் சாராயக் கடைகள் பற்றி இங்கே பேசுகிறார்கள் சாராயம் விற்கப்படுகிறது என்கிறார்கள். காய்ச்சுகிறார்கள் என்கிறார்கள். குடிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாமெல்லாம் நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களோடும், பொது மக்களோடும் சேர்ந்து உண்மையிலே உன்னிப்பாக உஷாராக இருந்து தொகுதியிலே சுற்றி சுற்றி இன்னின்ன இடத்தில் சாராயம் இருக்கிறது என்பதை காவல் துறைக்கு சொல்லக்கூடிய ஒரு கடமையை செய்வோமேயானால் நிச்சயமாக தமிழகத்திலே சாராயம் இருக்காது என்பது எங்களுடைய யோசனை. இதை நான் என்னுடைய தொகுதியில் பரிட்சார்த்தமாக செய்து கொண்டிருக்கிறேன். ஆகவேதான் இன்றைக்கு சாராயம் விற்பதும் காய்ச்சுவதும் குடிப்பதுமாக இருப்பவர்களை தடை செய்ய வேண்டுமென்றால் நாம் தான் அவர்களை வழி நடத்திச் சென்று அதை முறையாக செயல்படுத்த வேண்டும். அதைக் காவல் துறையில் இருப்பவர்கள் மட்டும் கண்காணித்தால் போதாது. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் உள்ள இன்ஸ்பெக்டரோ, சப் இன்ஸ்பெக்டரோ, ஏடோ, ரைட்டரோ அல்லது பத்து கான்ஸ்டபிள்களை வைத்துக் கொண்டு தொகுதியிலே இருக்கிற இடங்களையும் சுற்றி வந்து அதை நிறுத்தி விட முடியாது. ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, திருட்டு குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு ஆகிய அனைத்து பொறுப்புகளும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்கள் மட்டும் இதை செய்து விட முடியாது. அவர்களோடு பொது மக்களும் நம்மைப்போல் பொறுப்பு உள்ளவர்களும் தான் அதை செய்யவேண்டும்.

அதேநேரத்தில் இன்றைக்கு பல களவுகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தென்னற்காடு மாவட்டத்தில் மட்டும் 52 லட்சத்திற்குரிய பொருள்கள் மீட்கப்பட்டு திருடியவர்களிடமிருந்து மீட்கப்பட்டு பொது மக்களுக்கு அதாவது சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே போல கொலைக் குற்றங்கள் நடைபெற்று வருவதாக சிலர் சொல்லுகிறார்கள். கொலைக் குற்றங்கள் என்பது முந்தைய ஆட்சியில் எவ்வளவு நடைபெற்றன என்பதைப் பற்றியும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் பார்த்தால் உங்களுக்கே நன்றாகத்தெரியும். அவர்கள் எல்லாம் காட்டாட்சி தர்பார் நடத்தினார்கள். லாக்கப்பிலே இருப்பவர்களை பார்க்க அவர்களுடைய ஆட்களுடன் சென்று நீங்கள் வெளியே போங்கள் என்று காவல் துறையினரை வெளியேற்றிவிட்டு அவர்களை வெளியிலே கொண்டு வந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன கடந்த காலத்திலே. அப்படி இருக்கும்போது இன்றைக்கு நம்





முடைய தங்கத்தலைவி புரட்சித்தலைவி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நீதிமன்றங்களிலேதான் நாம் வழக்குகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோமே தவிர இன்றைக்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் தலையிடாமல் காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன்.

அதே நேரத்தில் காவல் துறையிலே பணி புரிகின்றவர்களுக்கு கோர்ட்டுக்கு செல்லுகிற- நீதிமன்றத்திற்கு செல்லுகின்ற பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள், கான்ஸ்டபிளோ, ஏட்டோ, மற்றவர்களோ கட்டுகளை எடுத்துக் கொண்டு நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். அடுத்த 'Hear.nge வாய்தாவிற்கு' செல்லும் போது அவருக்கு ட்யூட்டி மாறிப் போகிறது. வேறொருவரை அனுப்புகிறார்கள். அவருக்கு அந்த வழக்கினுடைய நிலைமை தெரிவதில்லை. ஆகவே குறிப்பிட்ட ஒரு சிலரை அதற்காக ஒதுக்கி, அந்த காவல்துறையிலே பணிபுரிகின்றவர்களை நீதிமன்றத்திற்கு அனுப்பினால் வழக்குகள் தேங்காமல் அவ்வப்போது முடித்து தரப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றி நான் பேசமுடியாத ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களை ஒரு சிலவற்றை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடலூரிலே சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் இரண்டு ஆண்டுக்காலமாக மூடப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் தலையிட்டு 400 ரூபாயைத் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து தீபாவளியின்போது கொடுத்தார்கள். இன்னமும் அது திறக்கப்படாமல் இருக்கிறது. சம்பந்தப்பட்ட தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 2,000 குடும்பங்கள் பட்டினி கிடக்கிறார்கள். குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடம் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த காவல்துறை, ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மானிய கோரிக்கையில் பேசுவதற்கு முன்னதாக ஒரு நன்றி அறிவிப்புக்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தங்கத் தலைவன் இராஜீவ் காந்தி மறைந்த இடமான ஸ்ரீபெரும்புதூரில் எங்கள் இதய தெய்வத்திற்குப் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையான என் கோரிக்கையை உடனே ஏற்று, ரெட்டேபிசத்திற்கு இந்த நல்லாட்சியில் இடம் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையான், எல்லாப் பேருந்துகளையும் நிற்க உத்தரவிட்டு, அந்த உத்தரவை மின்னல் வேகத்தில் செயல் படுத்தி சாதனை படைத்த.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தொடர்புடையதாக இருக்கட்டும். போக்குவரத்துத் துறை கோரிக்கையில் இது பற்றிப் பேசுங்கள். அன்றே சொல்லி, நன்றியும் சொல்லி ஆகிவிட்டது,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியையும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்து, உடனே அந்த இடத்தில் நிழற் குடையை நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இப்பொழுது இந்த மண் பிரச்சினைக்கு வருகிறேன். என்னுடைய வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக இயங்கி வந்த மண் பரிசோதனை நிலையத்தை இப்போது சேலம் ஆத்தூருக்கு மாற்றுவதற்காக ஏற்கனவே 10-2-1992 ஆம் தேதி வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் ஒரு உத்தரவைப் போட்டு இருக்கிறார்கள். அதன்படி இன்று வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் டேனரி கழிவு நீர் காரணமாக நிலத்தடி நீர் 200 அடிக்கு மாசுபட்டு மக்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இந்த நிலையில் இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லுகின்ற போது, அந்த அலுவலகம் சேலம் ஆத்தூருக்கு மாற்றப்படவில்லை. வேலூரிலேயே அந்த அலுவலகம் இயங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 13-3-1992 ஆம் தேதி, அங்கே இருக்கக் கூடிய அலுவலகத்தை 'டிஸ்பேண்டு' செய்து அதாவது மூடிவிட்டு இப்போது அந்த அலுவலகத்தை ஆத்தூருக்கு மாற்றுவதற்கான உத்தரவை ஏற்கனவே அதிகாரிகள் போட்டு இருக்கின்றார்கள். அந்த உத்தரவுகளை என் கைவசம் வைத்திருக்கிறேன், ஆகவே, அறிக்கையிலே சொல்லப்பட்டவாறு அமைச்சர் அவர்கள் வேலூரிலே அந்த அலுவலகம் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். காரணம், இந்த ஆட்சியிலே எதையும் திறந்துதான் பழக்கம். இருக்கக் கூடிய ஆலைகளை. அலுவலகங்களைத் திறந்து கொண்டிருக்கக் கூடிய இந்த நல்லாட்சியில் எங்களுடைய வேலூரில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த அலுவலகத்தினை மூட வேண்டாம் என்று பணிவான வேண்டுகோளை வைத்து, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்றும், வேலூரிலே அந்த அலுவலகம் இயங்கிட உத்தரவிடுவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.



*மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். வேலூரில் மண் பரிசோதனை நிலையம் இல்லை. வேலூரில் இருக்கின்ற நிலையத்தின் பெயர் 'மண் வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு நிறுவனம்'. தமிழகத்தில், கோவை, தஞ்சை, வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இவ்வாய்வகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு அந்தப் பகுதிகளில் உள்ள மண் கண்டங்களைப் பரிசோதித்து, அந்த மண் வகைக்கு ஏற்ற வகையில் என்ன பயிர்களைப் பயிரிடலாம் என்ற அறிவுரையைத் தான் இவைகள் செய்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்த நிறுவனம், நிலத்தடி நீரைப்பற்றி எந்த ஆய்வும் செய்யவில்லை. உலக வங்கியின் நிதி உதவியோடு சேலம் ஆத்தூர் பகுதியில் ஒரு புதிய ஆய்வகம் துவங்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகின்றது. காரணம் என்னவென்று சொன்னால், பாலாறு, வெள்ளாறு ஆகிய நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் உள்ள மண் கண்டங்களை ஆய்வு செய்து அந்த மண் கண்டங்களை வகைப்படுத்தி, அங்கே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்குவதற்காக அந்த ஆய்வகம் அங்கே துவக்கப்பட உள்ளது, இது இரண்டு ஆண்டுகள் மட்டுமே செயல்படக் கூடியதாக அமைக்கப்படவிருக்கிறது. அது மட்டுமல்ல, வேலூரில் இருக்கக் கூடிய அதிக பணியாளர்களை மட்டும் தான் ஆத்தூருக்கு அனுப்பி புதிய அலுவலகம் துவக்கப்பட இருக்கிறது. வேலூரிலே தொடர்ந்து இந்த ஆய்வகம் பணி செய்யும் என்பதனை இந்த அவைக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-3-1992 ஆம் தேதி 489/92-ன் கீழ் அங்கே வேளாண்மைத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு செயற் பொறியாளர் அங்கே இருக்கக் கூடிய அலுவலர்கள் அத்தனை பேரையும் அந்த அலுவலகம் 'டிஸ்பேண்டு' செய்யப்பட்டு ஏற்கனவே ஆத்தூருக்கு மாற்றுவதற்காக எல்லா அலுவலர்களையும் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களுக்கு ஒப்படைத்து விடுகிறேன் என்று அலுவலகத்தை மூடிவிட்டார்கள். அதை கான்ஸல் செய்து, உடனே அந்த அலுவலகத்தை அமைச்சர் அவர்கள் சொன்னபடி உடனே துவக்குவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இடத்திலே பொறியாளர்கள் யாரும் அந்தப் பணியிலே

ஈடுபடுத்தப்படவில்லை. 15 ஆண்டுகளாக வேலூரில் இந்த ஆய்வகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அது முதல் கட்டப் பணியை முடித்துவிட்டு இரண்டாவது கட்டப் பணியைத் துவங்கக்கூடிய நிலையில் இருக்கிறது. எனவே புதிய ஆய்வகம் ஆந்தூரில் துவக்கப்பட இருக்கிறது. இங்கேயுள்ள அதிகமான பணியிடங்களில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு அங்கே துவக்கப்பட இருக்கிறது. எனவே வேலூரில் இந்த ஆய்வகம் தொடர்ந்து செயல்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விக்கு மேல் நீங்கள் கேட்கக் கூடாது.

## 3. அறிவிப்பு.

### 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை அவையில் எடுத்துக்கொள்வது குறித்து. (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In Pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Bishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands for the financial year 1992–93."

## 4. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை.

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,08,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 2, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை வழி மொழிகிறேன். . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழி மொழிகிறீர்களா?

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,08,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 17, திரு. சி. ஞானசேகரன்.

THIRU C. GNANASEKARAN : Hon. Speaker Sir, "to discuss about the revenue loss in I.M.F.L. selling due to availability of illicit Arrack almost in all villages and towns in North Arcot–Ambedkar District".

I move—

"that the allotment of Rs. 5,08,90,000/ under Demand No. 2—State Excise-be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 18, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள வெளிநாட்டு மதுபானங்கள், பிராந்தி உள்பட முற்றும் தடை செய்வதன் அவசியத்தைக் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத்துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,08,90,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

[திரு. ஆர். சிங்காரம்] [1992 மார்ச் 17

கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வரின் அனுமதி பெற்று நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க எங்களுடைய பகுதி பட்டுக் கோட்டை பேராவூரணி கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் விட்டு அங்கேயிருக்கின்ற 10,000 ஏக்கர் வாடிய பயிர்களைக் காப் பாற்றி தென்னையும், வாழையும், கடலையும் பிழைத்து அந்த விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலிலே பொங்கியிருக்கின்ற இந்த நாளில் அவர்களின் சார்பாக, ' தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் ' என்பதைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் அனுமதியோடு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் அனுமதி கொடுத்ததற்காக என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறேன். இப்போது எங்களுடைய தொகுதி 'ஜே ஜே' என்று இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். இங்கே எனக்கு முன் பல நண்பர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சிலவற்றை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டை பொறுத்தவரையில் முன்னாள் முதல்வர், ' எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டைக் கெடுத்தான் ' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா ? எழுதி எழுதி ஏட்டையாவைக் கெடுத்தவர்கள் ஏட்டையா என்றால் காவல்துறை. எழுதி எழுதி ஏட்டையா வையே கெடுத்தவர்கள், பாடி பாடி பண்பாட்டையும், தமிழ் நாட்டையும், இந்த கோட்டையையும் கெடுத்தவர்கள். (மேசை யைத் தட்டும் ஒலி) அவர்கள் தான் எழுதி எழுதி ஏட்டைக் கெடுத்தவர்கள் என்று சொன்னார்கள். ஏட்டையாவைக் கெடுத் தார் என்று சொன்னால் ஒரு சின்ன உதாரணம். காவல் துறையைப் பற்றி இங்கே சொன்னார்கள். நான் கடந்த கால ஆட்சியில் நிரம்ப அடிபட்டவன், அனுபவப்பட்டவன் என்ற ரீதியிலே ஒரு ஏட்டையாவைப் பார்த்துக் கேட்டேன் கடந்த கால ஆட்சியில். நீங்கள் எங்கே உத்தியோகம் பார்க்கிறீர்கள் என்று கேட்டேன், அவர் சொன்னார் வேதனையோடு. ஒரு அமைச்சருடைய வீட்டிலே வேலை பார்த்தாலும் பரவாயில்லை, அவருடைய சின்ன வீட்டிற்கு என்னை காவல் போட்டிருக்கிறார் கள். அது தான் எனக்கு மிகப் பெரிய வேதனை என்று சொன்னார். அதுபோல தமிழகத்திலே கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த போலீஸ் துறையையே கசக்கிப் பிழிந்து தன்னுடைய குடும்ப நலனுக்காக வைத்துக் கொண்டவர்கள் தான் கடந்த ஆட்சியிலே நிர்வாகம் செய்தவர்கள். சிறந்த நிர்வாகத்தை செய்யும் நல்ல போலீஸ் அதிகாரிகளை, உயர்



1992 மார்ச் 17] [திரு. ஆர். சிங்காரம்]

போலீஸ் அதிகாரிகளை எல்லாம் பழி வாங்கினார்கள். ஒரு சிறந்த, நாணயமான போலீஸ் அதிகாரி, அவர் நேர்மையாகச் செயல்பட்டார் என்ற ஒரே காரணத்திற்காக, அவர் இங் கிருந்து வேறு இடத்திற்கு, வெளியூருக்கு மாற்றப்பட்டு, அவர் விடுப்பு எடுத்தும் கூட, அவர் வீட்டையும் காலி செய்யச் சொல்லி, அவர் உட்லண்ட்ஸ் ஹோட்டலிலே சில மாதங் களாக தங்கியிருந்த காட்சியினை நான் பார்த்தேன்.

பிற்பகல் 1-20

நேர்மைக்குக் கிடைத்த தண்டனை. அதேபோல் தமிழகத்தில் இங்கே இருக்கின்ற, தமிழக தலைமையிடத்தில் இருக்கின்ற உயர் போலீஸ் அதிகாரிகள் ஹோம் செகரட்டரியாக இருந்தவர், அந்த அரசுக்கு உடந்தையாக இருந்து கொண்டு வந்த பல நிகழ்ச்சிகள் எல்லாம் இன்று விசாரணையில் வருகிறது. இப்படி உயர் போலீஸ் அதிகாரிகள் எல்லாம் தன்னுடைய பணிகளை நேர்மையான முறையில் செய்ய விடாமல் தடுத்து சொந்த குடும்ப நலனுக்காக, சொந்த கட்சி நலனுக்காக, செய்யச் சொல்லி இந்த போலீஸ் துறையினுடைய மிஷினரியை கெடுத் தார் ; குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார் ; கடந்த ஆட்சிக்காலத்திலே.

அதே 'மிஷினரிதான் இன்றும் இருக்கிறது, அதிலே சில மாற்றங்கள். அதிலே கடந்த ஆட்சிக்காலத்திலே மிகவும் கஷ்டபபட்டவர்கள். வேதனைப்பட்ட நேர்மையான உயர் அதிகாரிகளை எல்லாம் இன்று நாம் டி. ஜி. பி. யாகவும்; ஹோம் செகரட்டரியாகவும். ஐ. ஜி.-யாகவும் பார்க்கிறோம், அப்படிப் பட்ட உயர்ந்த அதிகாரிகளை வைத்துத் தான் இன்று போலீஸ் நிர்வாகம் நடக்கிறது, ஆனால் கீழ் மட்டத்தில் இருக்கின்ற அத்தனை போலீஸ்காரர்களும் அதே பழுதுபட்ட இயந்திரம் தான் இன்னும் இருக்கிறது, அந்த இயந்திரங்களைச் சரியாக ஆக்குவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த போர்ட்போலியோவை தானே வைத்துக் கொண்டு சிறப்பான முறையில் செய்வதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை யாரும் தடுக்க முடியாது. அப்படி போலீஸ் துறையை மிக சிறப்பான முறையில் ஆக்குவதற்கு நீங்கள் மேலும் தைரிய மாக எடுத்துக் கொள்ளுங்கள், இங்கே பல நண்பர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் இன்னும் சொல்கிறேன். இந்த முதலமைச் சரைப் போல ஒரு முதலமைச்சரை நாம் இனிமேலும் பார்க்க முடியாது, ஏன் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தவறு செய்தால் அதைத்தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்று சொன்னார்,

எங்களுடைய ஊரில் சுமதி என்ற பெண் கடந்த ஆட்சிக் காலத்தில் கற்பழிக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவரால் கற்பழிக்கப்பட்டார். இந்த அவையின் குறிப்பில் இருக்கிறது. இந்த அவையிலே தி.மு.க. ஆட்சியில்

[திரு. ஆர். சிங்காரம்] [1992 மார்ச் 17

(குறுக்கீடு) சுமதி என்ற பெண் கற்பழிக்கப்பட்டார். அந்தப் பெண் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு எப். ஐ. ஆர். போடப் பட்டது. எப். ஐ. ஆர். போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஆனால் அது மறைக்கப்பட்டது. அதன் பிறகு இதே சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சரிடத்தில் நான் நீண்ட வாக்கு வாதம் செய்தேன். அவர் சொன்னார். அந்தப் பெண்ணினுடைய சம்மதத்தில் தான் கற்பழிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன் என்று சொன்னார். இந்த அவையின் குறிப்பிலே இருக்கிறது. நான் ஆதாரத்தோடு சொல்கிறேன், நான் வீணாகச் சொல்லவில்லை. ஆனால் இன்றைய முத லமைச்சரிடத்திலே அதே நிலையை எடுத்துச் சொல்லியிருந் தால் என்ன ஆகியிருக்கும்? சிந்தித்துப் பார்க்க வேண்டும் எதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை. நான் அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு நிகழ்ச்சியைச் சொன்னேன். அடுத்த நாளே நடவடிக்கை முடிந்து விட்டது. ஆக எந்த ஒரு விஷயத்தையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு சென்றால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே நேரத்தில் ஒரு தவறு செய்தால் என்று சொன்னேனே சட்டமன்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சொந்த ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி பரவாயில்லை தவறு செய்ததாக தகவல் வந்தது. நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு தேவன் என்றாலும் விட மாட்டேன் என்று சொன்னார் நடவடிக்கை எடுத்தாரா? இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சி யாக இருந்தாலும் அது யாராக இருந்தாலும் அவருக்குத் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதிலே சிறந்த முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக் கிறார்கள். அவரிடத்திலே நாம் இன்ன இன்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று பொதுவாக அவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையிலே நாம் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்.

இந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அவர் என்ன என்ன நடவடிக்கை எடுக்கிறார் என்பதை எல்லாம் நான் பின்னாலே சொல்ல வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு சற்று அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். நேரம் இல்லை.



1992 மார்ச் 17]

திரு. ஆர். சிங்காரம் : இல்லை. இல்லை. முக்கியமான விஷயங்களைச் சொல்லுவதற்கு தயவு செய்து அனுமதி தர வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் நான் பலமுறை சட்டமன்றத்திலே இந்த ஆட்சி வந்த பிறகு பேசி யிருக்கிறேன். அந்த ஆட்சிக் காலத்திலே நானும் இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற திரு எஸ். ஆர், பி. அவர்களும், மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்களும், ஏனைய உறுப்பினர்கள் எல்லாம் அன்றைய ஆட்சியோடு மிகப் பெரிய அளவிலே விவாதங்களைச் செய்தோம். அன்றைக்கு இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இங்கே இருக்கின்ற மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. செங்கோட்டை யன் அவர்கள், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மிகப்பெரிய அளவிலே அன்று வாக்கு வாதம் செய்தோம். சுட்டிக் காட்டினோம். எங்களுடைய அருமைத் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் தினந்தோறும் சுட்டிக்காட்டினார்கள். அன்றைய எதிர்க்கட்சித் தலைவ ராக இருந்த நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நடவடிக்கை எடுத்தார்களா? எடுக்கவில்லை. உடந்தையாக இருந்தார்கள். அதற்கு என்ன எவிடென்ஸ். நான் சொல்கிறேன்.

சென்னை நகரத்திலே 15 நபர்களைச் சுட்டுக் கொன் றார்கள். பத்மநாபா போன்ற 15 நபர்களைச் சுட்டுக் கொன் றார்கள். சுட்டுக்கொன்ற விடுதலைப் புலிகள் எங்கே சென் றார்கள். என்னுடைய தொகுதிக்குத்தான் வந்தார்கள் (சிரிப்பு) என்னுடைய தொகுதியிலுள்ள பிள்ளையார் தெரு வில் வந்து கோழி அடித்துச் சாப்பிட்டு விட்டு அதன் பிறகு ஸ்டீமரில் சென்றார்கள்.

பிற்பகல் 1-25

ஒரு பகுதியினர் அங்கே வந்தார்கள். ஒரு பகுதியினர் எங்கே சென்றார்கள்? ஜெயிலிலே இருக்கின்றார்கள் அவர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிற இடத்திற்குச் சென்றார்கள். ஆனால் இந்தப் போலீஸ் துறை செயல் பட்டதா? செயல்படவில்லை. ஏன்? அவர்கள் கைகள் கட் டப்பட்டு இருந்தன. கைகள் கட்டப்பட்ட காரணத்தினாலே தான் போலீசால் செயல்பட முடியவில்லை. இங்கே இருக் கிற ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் டி.ஜி.பி. அலுவல கத்தில் இருக்கிற ஒயர்லஸ் எதற்காக இருக்கிறது? அந்த ஒயர்லெஸ்ஸிலே கூப்பிட்டுச் சொன்னால் அவர்களைப் பிடித்து இருக்க முடியும். தமிழகத்திலே எல்லா மூலை முடுக்குகளிலும் அலறுகின்ற ஒயர்லெஸ் வைத்திருக்கிறோம். பவர் ஒயர்லெஸ் வைத்திருக்கிறோம். பத்மநாபாவை கொ

[1992 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 15, காவல் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''காவல்துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,72,38,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 95, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நாகை காயிதேமில்லத் மாவட்டம்—திருத்துறைப் பூண்டி காவல் துறை துணை கண்காணிப்பாளர், கண்காணிப் பாளர் அலுவலகம் அடிக்கடி இடம் மாற்றம் செய்யப்படுவதைத் தவிர்த்து நிரந்தரமாகக் கட்டிடம் கட்டவேண்டியதன் அவசியத் தைக் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன்:

''காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,72,38,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 112, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காவலர் குடியிருப்பில் குடியிருக்கும் காவலர் களுக்கு இலவச மின்சாரம் 20 யூனிட்டுக்கு மேல் ஆகும் யூனிட்டு களுக்கு மாதா மாதம் சம்பளத்தில் பிடிக்கும்படி செய்வது பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

''காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,72,38,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாநில அளவில் புலன் விசாரணைக்காக ஒரு இயக்குநர் பதவியை ஏற்படுத்துவது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1992 மார்ச் 17] [திரு. எச். எம். ராஜு[

''காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,72,38,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 22,30,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 139, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி''விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,30,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 166, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நாகை-காயிதே மில்லத் மாவட்டம்—திருத்துறைப் பூண்டி தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால், அதற்கான இடம் வாங்கப்பட்டு இருக்கு மிடத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,30,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 157, திரு. மா. சுந்தரதாஸ்.

Thiru M. SUNDARADOSS : Hon, Speaker Sir, to discuss the need to locate a fire station at Kollangode in Vilavancode area in Kanyakumari district, I move—

that 'he allotment of Rs. 22,30,65,000 under Demand No, 16-ire Serv'ces Department be reduced by Rs. 100.

செய்து விட்டு வருகின்றார்கள், விடுதலைப் புலிகள். அவர்களை சோதனை செய்திருந்தால், எல்லா இடங்களிலும் சோதனை செய்து அவர்களைப் பிடித்து இருக்கலாம். பிடிக்கவில்லை. ஏன்? சென்னையிலேயிருந்து பேராவூரணி என்பது சுமார் 400 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. 10 மணி நேரம் பயணம் செல்லக்கூடிய தொலைவு இருக்கிறது. அந்த 10 மணி நேரத்தில் எந்தவொரு இடத்திலும் யாரும் அந்த விடுதலைப் புலிகளைச் சோதனையிடவில்லை. அந்த நேரத்தில் வந்த மாருதி காரை மறித்து, அந்த மாருதி காரை எடுத்துக்கொண்டு, ரோட்டிலே விளையாடிக்கொண்டு வந்திருக்கிறார்கள், கடந்த ஆட்சிக் காலத்திலே. அந்த ஆட்சிக் காலத்திலே விடுதலைப் புலிகளுக்கு மிகப்பெரிய ஆதரவு கொடுக்கப்பட்டது என்பதுதான் உண்மை. அதன் காரணத்தினாலேதான் எங்களுடைய அருமைத் தலைவன், தானைத் தலைவன், தங்கத் தலைவன், அருமைத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி போற்றுகின்ற நம்முடைய ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார். மிகப் பெரிய கோரச் சம்பவம் நடந்தது. அதையெல்லாம் செய்துவிட்டு, போலீஸ் துறையினுடைய காவலர்களைக் கொன்று குவித்த விடுதலைப் புலிகளை இன்னும் வைத்துக்கொண்டிருக்கலாமா?

இன்று ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. செய்தியிலே பார்த்தேன். எங்களுடைய காங்கிரஸ் அலுவலகம் சத்தியமூர்த்தி பவன், தேனாம்பேட்டையிலிருக்கிற காங்கிரஸ் அலுவலகம் 31 ஆம் தேதிக்குள் தகர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதாக ஸ்பெஷல் ரிப்போர்ட், சி.ஐ.டி. ரிப்போர்ட் பேப்பரிலே வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் நேற்று சத்தியமூர்த்தி பவன் போனேன். போய் பார்த்துவிட்டு சிக்கிரம் வந்துவிடுவோம்; குண்டு போட்டு ஏதாவது ஆகிவிட்டால் நாமும் போய்விடுவோம்; நாங்கள் ஒரு 10 எம்.எல். ஏக்கள் போனால் ரொம்ப பேருக்கு சந்தோஷமாக இருக்கும், 10 பேர் காங்கிரஸ்காரன் தொலைந்துவிட்டான் என்று அப்படிப்பட்ட சூழ்நிலை நடக்குமோ என்று பயந்து அங்கே போனால். இரண்டே இரண்டு போலீஸ்தான் இருந்தார்கள் அங்கே. ஆகவே, தயவு செய்து சத்தியமூர்த்தி பவனுக்கும், தேனாம்பேட்டை காங்கிரஸ் அலுவலகத்துக்கும் போலீஸ் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட விடுதலைப் புலிகளினுடைய ஹிட் லிஸ்ட்டிலே இருக்கிற நம்முடைய தலைவர்கள், அருமைத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி, நம்முடைய அருமைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள், இவர்களெல்லாம் ஹிட் லிஸ்ட்டிலே இருக்கின்றார்கள். எந்த நிமிஷத்தில் என்ன நடக்கும் என்று யாரும் சொல்ல முடியாது. இன்னும் ஒயர்லெஸ் கருவி வேலை செய்து கொண்





ருக்கிறது. நம்முடைய ஒயர்லெஸ்ஸோடு கிராஸ் ஆகிறது.
ண்டுபிடித்து இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை
ல் இன்னும் இங்கே இருக்கின்ற சில விஷமிகள், தேசத்
துரோகிகள் அவர்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்
றார்கள். யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்டவர்
களை உடனடியாக அடையாளம் கண்டு, எங்களுடைய
தலைவர் வாழப்பாடியார் சொன்னதுபோல்—அடிக்கடி
சொல்லிக் கொண்டு இருப்பதுபோல் அவர்களைக் கைது செய்ய
வேண்டும்—மிஞ்சினால் கெஞ்சுவார்கள்; கெஞ்சினால் மிஞ்சுவார்
கள். ஆரம்பத்தில் கெஞ்சினார்கள். இன்று மிஞ்சிக் கொண்டு
இருக்கிறார்கள். மிஞ்சிக்கொண்டிருக்கிற அந்த விஷமிகளை உட
னடியாக நீங்கள், எனக்கு முன்பு அருமை நண்பர் தமிழரசன்
அவர்கள் சொன்னதுபோல், அவர்களையெல்லாம் கைது செய்ய
வேண்டும். அவர்களை அடையாளம் காட்டுகின்ற அளவிற்கு
வழக்குகளிலே வர இருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள் போகப் போக, கொஞ்சம் கொஞ்சமாகச்
செய்யலாம் என்று இருக்கின்றார்கள். அதற்குள் அவர்கள்
மிஞ்சிக் கொண்டிருக்கிறார்கள்.

பேராவூரணியிலே ஒருவர் பேசுகிறார், ** என்று நினைக்கிறேன், அவர் பேசுகிறார், .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயர் வேண்டாம்,

திரு. ஆர். சிங்காரம்: பெயர் சொன்னால்தானே அம்மாவுக்குத் தெரியும். அவர் பேசுகிறார், நம்முடைய முதலமைச்சரை தரம் தாழ்த்தி, கேவலமான, அநாகரீகமான வார்த்தையைச் சொல்லி, எந்த அளவிற்கு மோசமாகப் பேச வேண்டுமோ அந்த அளவிற்கு மோசமாகப் பேசுகிறார், நாட்டிலே விலைவாசி ஏறிவிட்டது என்று சில தாய்மார்களின் மனதிலே லேசான முணுமுணுப்பு இருந்தாலும்கூட, அவர்கள் பேசுகின்ற பேச்சைக் கேட்டாலே ஆட்டோமேட்டிக்கா அடுத்த தடவை டபுள் த வோட் போடுவார்கள் நமக்கு. அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் நம்முடைய கடமையை நாம் செய்ய வேண்டும். ஆகவே, விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மிகத் தீவிரமாக இன்னும் நடவடிக்கை எடுத்து அவர்களை ஒடுக்க வேண்டும். அதற்கடுத்து, அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்றவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் ஒழிப்பு பொறுத்தவரையில், நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். 90 சதவீதம் ஒழிந்து இருக்கிறது என்று மீண்டும் சொல்கிறேன், கள்ளச் சாராயத்தைப் பொறுத்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. ஆர். சிங்காரம்] 1992 மார்ச் 17

வரையில் 90 சதவீதம் ஒழிந்து இருக்கிறது. இதற்கு யார்
காரணம்? மதுவை ஒழிக்க வேண்டுமென்பதிலே கண்ணுங் கருத்
துமாக இருப்பவர் நம்முடைய முதல்வர் அவர்கள். யாரும்
மறுக்க முடியாது, ஆனால் பலர் நினைத்துக் கொண்டு இருக்
கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பத்திலே இப்படித்
தான் செய்தார்கள். பிறகு திறந்து விட்டு விட்டார்கள்.
ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருமோ என்று சிலர்
நினைத்துக் கொண்டு. சில காரியங்களைப் பதுங்கி பதுங்கி
செய்துகொண்டு இருக்கிறார்கள், அந்தச் சந்தேகம் காவல்
துறைக்கும் உண்டு. அந்தச் சந்தேகம் சில அரசியல் கட்சி
நண்பர்களுக்கும் உண்டு. அந்தச் சந்தேகம் கள்ளச் சாராயம்
காய்ச்சுபவர்களுக்கும் உண்டு. ஆனால், அன்றே நான் பல
முறை மேடைகளிலே சொல்லியிருக்கிறேன். நம்முடைய தமி
ழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் முன்
வைத்த காலை பின் வைக்க மாட்டார் என்று நான் பலமுறை
சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—30

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் முன் அனு
மதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.
விரைந்து முடித்துக் கொள்ளுங்கள். ஒன்றிரண்டு நிமிடங்களில்
முடியுங்கள்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நான் இன்னும் சொல்கிறேன். கள்ளச் சாராயத்தை
ஒழிப்பது கஷ்டமே இல்லை, பலபேர் ஒன்றைச் சொல்கிறார்
கள். ஆனால் கஷ்டம் இல்லை. அதே நேரத்தில் தமிழ்நாட்
டில் இருக்கின்ற சிறந்த நல்ல நேர்மையான போலீஸ் அதிகாரி
களை அடையாளம் கண்டு, அவர்களை இந்தப் பணியிலே நீங்கள்
அமர்த்த வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி
கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரையில் அன்று 90
பர்சென்ட் ஒழிந்து இருந்தது. இன்று 50, 60 சதவீதம்
ஒழிந்து இருக்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்திருக்
கிறது. ஆனால் அதில் தீவிர நடவடிக்கை எடுத்துச் செய்ய
வேண்டும். இதற்கு நான் வெட்டுத் தீர்மானங்கள் மூலம் பல
கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம்
நீங்கள் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கொள்
கிறேன்.

மது விலக்குக் கமிட்டியைப் பொறுத்தவரையில் அதை
அமைக்க வேண்டும். இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க
வேண்டும் என்பதிலே முதலமைச்சர் மட்டும் பொறுப்பெடுத்
துக் கொண்டால் மட்டும் போதாது. இங்கே இருக்கின்ற—மன்
னிக்க வேண்டுகிறேன் — மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களும்



1992 மார்ச் 17] [திரு. ஆர். சிங்காரம்]

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் ஒன்றாகச் சேர்ந்து கிரா
மங்கள்தோறும் மது விலக்குக் கமிட்டியை அமைக்க வேண்டும்.
கிராமங்கள் தோறும் மது விலக்குக் கமிட்டி அமைப்பதற்கு
நீங்கள் அடிக்கடி டூர் செய்யப் போகின்றபொழுது மது விலக்குக்
கமிட்டி அமைத்தீர்களா என்று கேட்க வேண்டும். அதற்கு
என்ன என்ன காரியங்களைக் செய்ய வேண்டுமென்று சொல்ல
வேண்டும். இப்படி எல்லோரும் பொறுப்பு எடுத்துக் கொண்
டால்தான் முடியும். மாவட்ட ஆட்சித் தலைவர்
கள் சர்க்குலர் அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்
கள் தன்னுடைய வேலைகளைப் பரிசீலனை செய்வதைப் போல,
ரெவ்யூ செய்வதைப் போல, எத்தனை மது விலக்குக் கமிட்டி
கள் அமைத்தீர்கள் என்று கேட்க வேண்டும். அதைப்போல
அமைச்சர்கள் செல்கின்றபொழுது அந்தப் பணியைச் செய்ய
வேண்டும். அது போல நாங்களும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு
கிராமங்கள்தோறும் கமிட்டி அமைப்பதற்கு ஆவன செய்ய
வேண்டும். பொது மக்களையெல்லாம் ஒன்றாகத் திரட்ட
வேண்டும். இன்னும் சொல்லப் போனால் இளைஞர்களை
அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். இன்னும் சொல்லப்
போனால் என்னுடைய தொகுதியிலே நான் 6, 7, கமிட்டிகளை
அமைத்திருக்கிறேன். அந்த 6, 7 கமிட்டிகளிலும்—நிரம்ப —
நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பணி செய்கிறார்கள். அந்த
இளைஞர்களுக்கெல்லாம் சவால் விடுகின்ற வகையிலே (மணி
அடிக்கப் பெற்றது). உருப்படியான யோசனையைச் சொல்லிக்
கொண்டிருக்கிறேன்—கள்ளச் சாராயப் பேர்வழிகள் மிரட்டு
கிறார்கள். அதையும் அவர்கள் எதிர்த்து, சமாளித்து, இன்று
6, 7 கமிட்டிகள் பிரமாதமான முறையில் 100—க்கு 100 ஒரு
சாராயக் குற்றம்கூட இல்லாத அளவிற்குச் செயல்பட்டுக் கொண்
டிருக்கிறோம்— கமிட்டி— சென்ற முறையில் கூட ஒரத்தநாட்
டிலே அமைக்கப்பட்டு நான் தொகுதி அளவிலே அதற்குத் தலை
வராக இருந்து செயல்பட்டேன். போலீஸ் வேன் கொடுத்
தார்கள்; ரெய்ட் செய்வதற்கு ரிசர்வ் பார்ட்டி கொடுத்தார்கள்.
கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கையெடுத்து ஒழித்
தோம், கடந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், அது போல,
அந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு இளைஞர்களைப் பயன்
படுத்திக் கொள்ள வேண்டும். வேலையில்லாத பட்டதாரி இளை
ஞர்கள் நிறையப் பேர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கு
வேலைவாய்ப்பு தரப்படும். ஏதாவது ஒரு வாய்ப்பு தரப்படும்
என்று ஒரு உறுதியைக் கொடுத்து, ஒரு உத்தரவாதத்தைக்
கொடுத்து, அவர்களை இதில் பயன்படுத்துவதற்குச் செய்தால்
நிச்சயமாகச் சிறப்பான முறையில் அந்த மது விலக்குக் கமிட்
டியை அமைக்க முடியும். அந்த மது விலக்குக் கமிட்டியை
அமைப்பதன் மூலம் கள்ளச் சாராயத்தை நாம் ஒழிக்க முடியும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில கோரிக்கைகள். பேராவூரணியில் ஒரு ஆய்வாளர்
அலுவலகம் இருந்தது. அது விடுதலைப் புலிகளுக்காக அமைக்கப்
பட்டது என்று சொன்னார்கள். தற்பொழுது எடுத்து விட்டார்

[1992 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான மாநில ஆயத் தீர்வை, காவல் மற்றும் தீ அணைப்புப் பணிகள் என்ற தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் * தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவற்றை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும், அரசு எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கோரிக்கை எண். 2, கோரிக்கை எண். 15, எண். 16 மாநில ஆயத்தீர்வை, காவல்துறை, தீ அணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நடக்கின்ற விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்து கொண்டு விவாதத்திலே பங்கு பெறுகின்ற வாய்ப்பினை எனக்குத் தந்த உங்களுக்கு நான் நன்றியை தெரிவித்து என்னுடைய விவாதத்தை தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

கடந்த ஆண்டு, இதே மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்றபோது சொன்ன வார்த்தைகள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. காவல் துறையின் செயல்பாட்டில் ஏற்படுகின்ற முன்னேற்றம் உங்கள் ஆட்சிக்குப் புகழ் சேர்க்கும் என்கின்ற வார்த்தைகளை நான் இன்றும் மீண்டும் நினைவூட்டிப் பார்த்து, அந்த விவாதத்திலே முடிவடைகின்றபோது சொன்னேன், "அடுத்த ஆண்டு இந்த விவாதத்திலே பங்குபெறுகின்றபோது, இப்போது நாங்கள் உங்களை பாராட்டுகின்ற உணர்வுகளை நாங்கள் எவ்வாறு பெற்று இருக்கிறோமோ அதே போல மீண்டும்

*365—485-ஆம் பக்கங்களில் 1 முதல் 3 வரை இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.





உணர்வினைப் பெற வேண்டும்" உங்களைப் பாராட்டுகின்ற அன்றையதினம் அந்த விவாதத்தை என்ற வாழ்த்துக்களோடு முடித்து வைத்தேன்.

இன்றையதினம் அந்த உறுதியில் மாற்றம் இல்லாது, அந்த உணர்விலே வேறுபாடு இல்லாது, இன்றும் அதே தோழமை யுடனும் அதே அணைப்புடனும் இந்த விவாதத்திலே பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன். விவாதத்தினுடைய விரிவான பகுதிக்கு போவதற்கு முன்னால், நான் இந்த அரசை நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயங்கரவாதத்தின் ஆணிவேரினை அறுத்தெறிவதிலே இந்த ஆட்சியினுடைய சுமையை தாங்குகின்றபோது உங்களுக்கு எவ்வளவு மன உறுதி இருந்ததோ, எவ்வளவு தைரியம் இருந்ததோ அதே மன உறுதியையும் தைரியத்தையும் இன்று வரையிலே காப்பாற்றி வருகிறீர்களே அதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வேகத்திலே, அந்த வீரத்திலே உங்களுக்கு மட்டுமல்ல' இந்த அவையிலே இன்றையதினம் முதலமைச்சராக வீற்றிருக் கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்ல, அமைச்சர் பெருமக்கள், ஏன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற அரசியல் கட்சியினுடைய கடைசித் தொண்டனுக்குக்கூட இருக்கின்ற வேகம் உள்ளபடியே என்னை புல்லரிக்கச் செய்கிறது. எங்கள் அருமைத் தலைவர், எங்கள் இலட்சிய கனவுகளினுடைய இனிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவுகளுக்கு நீங்கள் செய்கின்ற அஞ்சலியாகத் தான் அந்த உணர்வுகளை நாங்கள் பார்க்கின்றோம். ஆனால் பயங்கர வாதத்தின் ஆணி வேர்களை அறுத்தெறிவதற்கு ஒரு பெரிய தியாகத்தை ஒரு வேள்வியை நாம் எடுத்துக்கொண்டிருக் கும்போது, அந்த வாதத்தினுடைய சல்லிவேர்கள் இன்னும் அறுத்தெறியப்படவில்லை என்பதை, அந்த உண்மையினை நாம் உணர்ந்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக கடந்த ஒரு சில மாதங்களாக தமிழகத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகள், எந்த பயங்கரவாதத்திற்கு யார் ஆணிவேராக இருந்தார்களோ, யார் பயங்கரவாதத்தினுடைய மிகப்பெரிய கொலையினை நடத்திக் காட்டினார்களோ, அவ்வளவு பெரிய மாபாவிகளுக்கு, அந்த வஞ்சகர்களுக்கு தமிழகத்து மண்ணிலே இருக்கின்ற சில அரசியல் வாதிகள் வால் பிடிக்கின்றபோது, உண்மையிலேயே வேதனைப் படுகிறேன். மிக்க வருத்தப்படுகிறேன்.

அதிலே ஒரு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு என்ன முயற்சி என்று நீங்கள் சிந்தித்துப் பார்த்து, நீங்கள் முதன்முதலிலே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறீர்களே மத்திய அரசுக்கு, விடுதலைப் புலி இயக்கத்தை தடைசெய்ய வேண்டும் என்ற அந்த கோரிக்கை உங்களுடைய வீரத்தினுடைய மொத்த வெளிப்பாடு, உங்கள் உணர்வினுடைய மொத்த குறிக்கோள், அதை நான் உள்ளபடியே

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 மார்ச் 17

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆதரித்து அந்த
விடுதலைப் புலிகளினுடைய இயக்கத்தை தடைசெய்ய வேண்டும்
என்ற கோரிக்கைக்குப் பின்னாலே இந்த இயக்கம் முழு உணர்
வோடு உங்கள் பின்னாலே நிற்கிறது என்று உண்மையிலேயே
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி சொல்கிறபோது
தமிழகத்திலே, உண்மையிலே அரசியல் நடத்தி வருகின்ற எந்த
அரசியல் கட்சிக்கும் இதிலே மாறான எண்ணம் இருக்கமுடியாது.
நாடாளுமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் திரு. ப. சிதம்பரம்
அவர்கள் இன்றையதினம் நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக்
கழக உறுப்பினராக இருக்கின்ற முரசொலி மாறனிடம், அவர்
களிடம் கேட்கின்றபோது ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.
விடுதலை புலிகளைத் தடை செய்வதை நீங்கள் எதிர்க்கிறீர்களா
என்று கேட்டபோது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்
முரசொலி மாறன் அதை நாங்கள் எதிர்க்கவில்லை என்று
சொல்லியிருக்கிறார். எனவே, தமிழகத்திலே எந்த அரசியல்
கட்சிக்கும் அதை தடை செய்யவேண்டும் என்ற கருத்திலே மாறு
பாடான கருத்து கிடையாது. அது நாடாளுமன்றத்திலே
பதிவாகியிருக்கிறது.

முற்பகல் 11-00

ஆனால் இங்கே இருக்கின்ற சில பேர்கள் புதிதாக விடுதலைப்
புலிகளுக்கு ஆதரவாக தாங்கள் வந்திருப்பதாக காண்பிப்பதிலே
அதிக வேகப்படக்கூடியவர்கள் இன்றையதினம் நம்மைப் பார்த்து
இதை எப்படி தடை செய்யலாம் என்று கேட்கிறார்கள். நமக்கு
அவர்களுடைய நிலை புரிகிறது. அவர்களுடைய உணர்வுகள்
நமக்குப் புரிகிறது. எங்கள் ஊரிலே ஒரு பழமொழி சொல்
வார்கள். 'ஆதாயம் இல்லாமல் செட்டியார் ஆற்றோடு போக
மாட்டார்' என்று சொல்லுவார்கள். விடுதலைப் புலிகளுடைய
இயக்கத்திலிருந்து வருகின்ற அந்தப் பொருளாதார நீர்ப் பாய்ச்
சல் அந்த அரசியல் வியாபாரிகளுக்கு இன்றையதினம் தேவைப்
படுகிறது. அவர்களுடைய பொருளாதார அரவணைப்பு
இன்றையதினம் அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது.

தமிழகத்தில் ஒரு நிரந்தரமான அரசியல் நிலைமையை மக்கள்
எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதை உணர்ந்துகொள்ள
வேண்டும். விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற எந்த அரசியல்
வாதியையும் தமிழ்நாட்டிலே ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக்
இல்லை என்பதைத்தான் கடந்த தேர்தல் காட்டியது. (மேசை
யைத் தட்டும் ஒலி) ஆனால் மக்கள் அவ்வளவு பெரிய தீர்ப்பை
தந்த பிறகும் கூட, இவர்கள் தமிழக அரசியலில் இருந்து அப்புறப்
படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதை நிலையாக சுட்டிக்
காட்டியிருந்தும் கூட, மக்கள் மத்தியிலே அங்கீகாரம் பெற
முற்படுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் ஒன்றைப்
புரிந்துகொள்ள வேண்டும். செல்வாக்கு இழந்த எல்லா அரசியல்
வாதிக்கும் அடுத்த நிலை எது என்று சொன்னால் ஜாதி, சமூக
இன இயக்கங்களைத் தூண்ட வேண்டிய பொறுப்புதான், மக்கள்



1992 மார்ச் 17] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மத்தியிலே அவர்கள் தியாகத்தைச் சொல்ல முடியாது. மக்கள்
மத்தியிலே அவர்கள் சேவையைச் சொல்ல முடியாது. மக்கள்
மத்தியிலே புதிய தத்துவங்களைச் சொல்ல முடியாதவர்கள்,
செல்வாக்கு இழந்துபோன அரசியல் வாதிகள் கடைசியில் என்ன
செய்கிறார்கள் என்றால் ஜாதியைத் தூண்டுகிறார்கள்.
இனத்தைத் தூண்டுகிறார்கள். மதத்தைத் தூண்டுகிறார்கள்.
அதுபோல அரசியலில் வேறு வழி இல்லாத அரசியல்வாதிகள்,
மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள்
இன்றையதினம் அதை கடைசி கொம்பாக பிடித்துக்கொண்டு
அதன் மூலமாவது மீண்டும் வந்து ஆட்சியினுடைய தாழ்வாரத்
தில் நிற்கலாமென்று பார்க்கிறார்கள். நான் மீண்டும் மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன். அதைப்போன்ற அரசியல்வாதிகளுக்கு தமிழகத்தில்
இடம் இல்லை என்பதை நீங்கள் தயவுசெய்து தெள்ளத் தெளி
வாக சொல்லவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்
போன்ற அரசியல்வாதிகள் மீதும் இந்த தடா சட்டம் பாய
வேண்டும். அந்த உணர்வுகளை இந்த சபையிலே நாங்கள்
சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். அதைச் செய்வதற்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்
என்பது எங்களுக்குத் தெரிகிறது. நாங்கள் செய்ய வேண்டியது
எல்லாம் உங்களை ஊக்கப்படுத்த வேண்டிய பணிதான். அந்தப்
பணியிலே இந்தியத் தேசிய காங்கிரஸும் அதனுடைய லட்
சோப லட்சம் தொண்டர்களும் அதனுடைய தலைமையும்,
அத்தனைபேரும் ஒரே குரலாக, ஒட்டுமொத்தமாக உங்கள்
பின்னால் நிற்கிறோம் என்பதை நான் இன்றையதினம் ஆணித்
தரமாக சொல்கிறேன். ஏனென்று சொன்னால், நான் கடந்த
3, 4 நாட்களாக பார்த்துவருகிறேன். பத்திரிகையிலே திட்ட
மிட்டு ஒரு செய்தி வருகிறது. விடுதலைப் புலிகளுடைய அமைப்பு
இன்னும் தமிழகத்திலே இருக்கிறது என்கிறது போன்ற செய்தி
களைப் பரப்பி வருகிறார்கள்.

சேலத்திலே ஒரு இடத்திலே ஒரு சக்தி வாய்ந்த V.H.F.
அல்லது Wireless கண்டுபிடிக்கப்பட்டது என்று ஒரு
செய்தி
கிறது. 10 நாட்களுக்கு முன்பு கூட பத்திரிகையிலே ஒரு செய்தி
வந்திருக்கிறது. விடுதலைப் புலிகளுடைய தற்கொலைப்படை
என்று சொல்லி ஒரு 100 பேர் தமிழகத்தில் வந்திருக்கிறார்கள்
என்று சொல்கிறார்கள். நான் இதை ரொம்ப சந்தேகத்தோடு
பார்க்கிறேன். இதை யாரையோ பயம் காட்டுவதற்காக பரப்பி
இருக்கிறார்கள். தற்கொலைப்படைகளைப் பார்த்து தமிழகத்
தில் இருக்கிற அரசியல்வாதிகள் பயந்துவிடுவார்கள் என்று
எண்ணுகிறார்களா அல்லது தங்களை முடக்கிக் கொள்வார்கள்
என்று எண்ணுகிறார்களா? இந்தக் கருத்து, இந்தத் தத்துவம்
யாரால் எதற்காக பரப்பப்பட்டது என்பதை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் ஆழ்ந்து ஆராய
வேண்டும். அப்படி ஏதாவது 'இந்தக் கூற்றிலே உண்மை இருக்கு
மென்று சொன்னால் அதன் ஆணிவேர்களை அறுத்து எறியவேண்டும்

[திரு. ஆர். சிங்காரம்] [1992 மார்ச் 17

கள். அதை மீண்டும் பேராவூரணியில் அமைக்க வேண்டும். என்
னுடைய தொகுதி அது. அந்தப் பேராவூரணியில் இன்ஸ்பெக்டர்
ஆபீஸ் அவசியம் வேண்டும் என்று உங்களைப் பணிவன்புடன்
வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி காவல் நிலையக் கட்டிடமும், காவலர் குடி
யிருப்பும் ஒழுகிக் கொண்டிருக்கிறது. பழுதுபட்டுப் போய்
விட்டது. கடந்த ஆட்சியில் பழுதுபட்டது. ஆகவே, அந்தப்
பழுதுபட்ட அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்த்துத் தர வேண்டு
மென்று உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை என்பது மிகப்பெரிய நகரம். அந்த
மிகப்பெரிய நகரத்தில்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் நடராஜன்
என்பவரை விடுதலைப் புலிகள் இரவோடு இரவாகக் கொள்ளை
யடித்து, அந்த நடராஜனைக் கொன்று விட்டுப் போய் விட்டார்
கள். அந்த வழக்கு, நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை.
கடந்த ஆட்சிக் காலத்தில் மூடி மறைக்கப்பட்டது. என்ன கார
ணமோ தெரியவில்லை. நீங்கள் அதில் நடவடிக்கை எடுக்க வேண்
டும். அந்தப் பகுதி— பட்டுக்கோட்டை என்பது சுமார் 80,000
ஜனத்தொகை உள்ள பெரிய டவுன். ஒரே இன்ஸ்பெக்டர்
போலீஸ் ஆபீஸ்தான் இருக்கிறது. ஆகவே, இன்னொரு காவல்
நிலையம்—சாமியார்மடத்திற்கு அருகில் அமைக்க வேண்டும்.

பட்டுக்கோட்டையில் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது.
அதிலே ஒரு என்ஜின் இருக்கிறது. 1956-ஆம் ஆண்டோ,
66-ஆம் ஆண்டோ தெரியவில்லை. தள்ளு மாடல்; அந்தத்
தள்ளுமாடலை எடுத்துவிட்டுத் துள்ளு மாடலாக இந்த ஆட்சி
யிலே நீங்கள் அமைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு
வேண்டிவிரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அது போல என்னுடைய பேராவூரணியிலே ஒரு தீயணைப்பு
என்ஜின் வேண்டுமென்று ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்
திருந்தேன். நம்முடைய முதல்வரவர்கள் அந்த வெட்டுத்
தீர்மானத்தைப் படிப்பதற்குள்ளாகவே அந்த என்ஜின் அங்கே
போய்விட்டது. அந்த அளவிற்கு சுறுசுறுப்பாகச் செயல்பட்டு
சாதனை படைத்திருக்கிறீர்கள். அதுபோல நீங்கள் செயல்பட
வேண்டுமென்று உங்களை பணிவன்போடு வேண்டி விரும்பிக்
கேட்டுக் கொள்கிறேன்

இப்பொழுது போலீஸ் மானியக் கோரிக்கையிலே பேசு
வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லுகின்ற அதே
வேளையில் இந்தப் போலீஸ் துறையை—காவலர்களைப் பற்றி
யும், போலீஸ் இன்ஸ்பெக்டர், ஏனையவர்களுடைய கோரிக்கை
களைப் பற்றி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.



1992 மார்ச் 17] [திரு. ஆர். சிங்காரம்]

அதை ஒவ்வொன்றாகச் சொன்னால் நேரம் ஆகிவிடும். ஆகவே,
வெட்டுத் தீர்மானங்களைப் பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்ச
ரவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
உரையை முடிக்கிறேன். ஜெய்ஹிந்த்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா.
பழனிசாமி,

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத்
துறை ஆகியவற்றிற்காக 300 கோடி ரூபாய் அளவிற்கு மானியக்
கோரிக்கை கேட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் தலைமையேற்றிருக்கிற இந்தத்
துறைகள் மீது ஒரு சில கருத்துக்களை சொல்வதற்கு உழவர்
உழைப்பாளர் கட்சியின் சார்பில் சொல்வதற்கு வாய்ப்பளித்த
பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி ஒருசில கருத்துக்களை
முன் வைக்க விரும்புகிறேன்

For want of nail the shoe was lost;
For want of shoe the horse was lost;
For want of horse the soldier was lost;
For want of soldier the battle was lost;

இப்படி ஒரு நர்சரி ரைம் இருக்கிறது, குதிரையின் லாடத்து
ஆணி விழுந்து விட்டால், லாடம் விழுந்துவிடும்: லாடம்
விழுந்து விட்டால் குதிரை விழுந்து விடும்; குதிரை விழுந்து
விட்டால் போர்வீரன் விழுந்து விடுவான்; போர்வீரன் விழுந்து
விட்டால் அங்கே போர்க்களத்தில் தோல்வியைச் சந்திக்க
வேண்டிவரும் என்று பள்ளிக் குழந்தைகளுக்கு சொல்லித்
தருகிற அந்த ரைமிலே இருக்கிற கருத்து. இங்கே தமிழக
முதலமைச்சர் தலைமை தாங்கி இருக்கிற காவல் துறையிலே
அவர்கள் எவ்வளவு கண்ணும் கருத்துமாக ஒரு லாடத்து ஆணி
கூட விழுந்துவிடக்கூடாது என்பதிலே, தமிழகத்தைக் காவல்
காக்கின்ற அந்தத் துறை தோல்வி அடையக் கூடாது என்பதிலே
கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதற்கு நான் ஒரு சில
உதாரணங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றபிறகுதான்,
ஏற்கெனவே இருந்த காவல் துறை—அவர்கள் பதவியேற்ற
பிறகு, புதிதாக ஆயிரக்கணக்காக யாரும் நியமிக்கப்படவில்லை;
அந்த 70 ஆயிரத்திற்கும் குறைவான அந்தக் காவல் துறை
தான்—இந்த 5 கோடி தமிழ் மக்களைக் காத்துக் கொண்டிருக்
கிறது. அந்தக் காவல் துறை, தமிழகத்தில் விடுதலைப் புலிகளை,
அடக்கியதில், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டியதில், இலங்கைக்கு

[திரு. நா. சா. பழனிசாமி] [1992 மார்ச் 17

சென்று நம்முடைய இராணுவமே சாதிக்காததை,
தமிழகத்திலே சாதிக்க முடிந்திருக்கிறது என்றால் இங்கே
தலைமையேற்றிருக்கிற—இந்தக் காவல் துறைக்கு அதற்கு
யேற்றிருக்கிற—தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் தலைமை
என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட காரணம்
'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்று சொல்வார் விரும்புகிறேன்.
கள் ஒரு காவல் துறைக்கும் இராணுவத்திற்கும் தலைமை
யேற்றிருக்கிற தலைமையினுடைய தகுதிதான் அவர்களுடைய
சேவையை, அவர்களுடைய திறமையை இங்கே அதிகரித்துக்
காட்டுகிறது.

அதேபோல். காவிரி நீர்ப் பிரச்சினை என்பது தமிழகத்திலே
ஓர் உயிர் நாடியான பிரச்சினை, தமிழ் மக்களுடைய உணர்வு
களை பாதித்திருந்த பிரச்சினை, அந்தப் பிரச்சினை,
இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினை, இரண்டு
மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில். ஒரு மாநிலத்தில்
42, 44 ஆண்டுகள் ஒரு தேசியக் கட்சியினுடைய ஆட்சியிலே
அந்த மாநிலம் இருக்கிறது. இங்கே தமிழகத்தில் கிட்டத்தட்ட
25 ஆண்டு காலம். மாநில உணர்வுகளைக் கொண்ட மாநிலக்
கட்சி ஆட்சியில் இருக்கிறது, மாநிலக் கட்சி. ஆட்சியிலே
இருக்கிற இந்த மாநிலத்திலே தேசிய உணர்வுகள் வளர்க்கப்
பட்டு இங்கே கன்னடியர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது.
ஆனால், அங்கே கர்நாடக மாநிலத்தில், பிராந்திய உணர்வு
தேசியக் கட்சியாக இருந்த மாநிலத்திலே பிராந்திய உணர்வு—
வளர்க்கப்பட்டு தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். அந்தச்
சம்பவத்தில் தமிழகக் காவல் துறை எப்படி நடந்து கொண்டது?
அங்கே கர்நாடகக் காவல் துறை எப்படி நடந்து கொண்டது
என்பதற்கு அந்த ஒரு உதாரணமே, தமிழகத்திலே சட்டம்,
ஒழுங்கை நிலைநாட்டுவதில், உயிர்நாடியான இந்தப் பிரச்சினை
யிலே தமிழக முதலமைச்சர் எப்படி நடந்து கொண்டார்கள்;
தமிழகக் காவல் துறை எப்படி திறமையோடு செயல்பட்டிருக்
கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உதாரணமாகச்
சொல்ல முடியும். அப்படி, காவல் துறையானது, இந்த ஆட்சி
யிலே திறமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த
வகையில் கள்ளச் சாராயத்தை காவல்துறை பெருவாரியாகக்
குறைத்திருக்கிறது, அதற்கு உதாரணமாக பொருளாதார
ரீதியிலே சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு நாட்டுச்
சர்க்கரையினுடைய விலையும். வேலம் பட்டையின் விலையும்
குறைந்திருக்கிறது என்றால்— நாட்டுச் சர்க்கரை சாராயத்
திற்குப் பயன்படுகிற காரணத்தினால், அதிக விலைக்கு விற்றுக்
கொண்டிருந்தது.

பிற்பகல் 1-40

இன்று வெல்லம் விலை வீழ்ச்சியடைந்திருப்பதற்குக் கார
ணமே கள்ளச் சாராயம் உற்பத்தி குறைந்திருப்பதுதான்
என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1992 மார்ச் 17] [திரு. நா. சா. பழனிசாமி]

ஏனென்றால். ஒரு விவசாயி என்கிற முறையிலே சொல்கிறேன்
இன்று நாட்டுச் சர்க்கரைக்கு விலையில்லாமல் போயிருக்கிறது,
ஆனால் அதைத் தவறாகப் பயன்படுத்த முடியாது என்பதிலே
ாறுபட்ட கருத்து கிடையாது, அது ஒன்றின் மூலம் கள்ளச்
ாராயம் காய்ச்சுவது குறைந்து இருக்கிறது என்பதை ஆதார
ூர்வமாக நிரூபிக்க முடியும். ஆனால், ஆந்திர மாநில எல்லையை
ட்டிய பகுதிகளில் ஆந்திராவிலிருந்து சாராய பாக்கெட்டுகள்
ருவதாகச் சில செய்திகள் வந்திருக்கின்றன. செங்கை-
ம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவரேகூட அந்த மாவட்டத்
லே கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் ஆந்திராவிலிருந்து
ருகின்ற சாராயப் பாக்கெட்டுகளைத் தடை செய்வதில்
ாவல் துறை சரியாக ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பதை
திப்பீட்டுக் குழுவின் சார்பிலே நாங்கள் அங்கே சென்றபோது
ரு குறையாக எடுத்துச் சொன்னார்கள், அப்படி
ல்லைப் பகுதிகளிலே தீவிர கவனம் செலுத்தினால் வெளி
டங்களிலிருந்து வருகின்ற மதுபானத்தைக் குறைக்க முடியும்,

இன்று காவல் துறைக்கு நவீன ஆயுதங்கள் வாங்க அந்தத்
ுறையை நவீனப் படுத்த, பல்வேறு முயற்சிகள் எடுத்து இருக்
றார்கள், அந்த வகையிலே காவல் துறை ஆய்வாளர்கள்
வ்வொருவருக்கும் ஒரு ஜீப்பு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
ார்நிலை காவல் ஆய்வாளர்களுக்கு கட்டாயமாக மோட்டார்
சக்கிள் கொடுக்கப்படவேண்டும், தலைமைக் காவலருக்கு
மோபெட் வாகனம்' கொடுக்கப்பட வேண்டும், எல்லாக்
ாவலர்களுக்கும் காவல் நிலையத்திற்கு அருகிலேயே வீடுகள்
ிருக்க வேண்டும். அப்படிச் செய்கின்றபோதுதான் பல்வேறு
ாதுகாப்புப் பிரச்சினைகள் வருகின்றன. ஜனநாயக
ுமைப்பில், பல்வேறு போராட்டங்களை, ஊர்வலங்களை,
ூர்பாட்டங்களை, உண்ணாவிரதங்களை நடத்துகிறார்கள்.
ல சந்தர்ப்பங்களில் சிலர் சாலைகளை மறிக்கிறார்கள்.
ஸ்களை எரிக்கின்ற போராட்டத்தையும், பாலங்களைத்
கர்க்கின்ற போரட்டத்தையும் ஜனநாயக அமைப்பில் செய்
றோம் என்று சொல்லி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த
நரத்திலே பொதுச் சொத்து பாதுகாக்கப்பட வேண்டிய
டமையை காவல் துறை செய்கிறது. அப்படி காவல் துறை
ம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் திறமையாகச்
செயல்பட்டு, ராணுவம் போன்றவை இங்கே வரவழைக்கப்
படாத சூழ்நிலையில் தமிழகத்திலே அமைதி நிலவிக் கொண்
டிருக்கிறது. தமிழக மக்களைப் பொறுத்தவரையில் சட்டம்,
ஒழுங்கு முறைக்கு கட்டுப்பட்டவர்களாக, காவல் துறைக்குக்
ீழ்படிபவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச்
சந்தர்ப்பத்திலே காவல் துறையைச் சேர்ந்த ஒருசிலர் ஏழை
மக்களுக்குச் சரியான உதவிகளைச் செய்ய முடியாத நிலையும்
ஏற்படுகிறது. காவல் நிலையத்திற்குச் சென்று புகார்கள்
கொடுக்கும் வேளையில், புகார் சொல்பவர்களிடமே, 'நீங்கள்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 மார்ச் 17

நமக்கு எந்தவிதமான சுணக்கமும், எந்தவிதமான தயக்கமும்
இருக்கக்கூடாது என்பதை நான் மிகப் பணிவோடு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள ஆசைப்படு
கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்
துறையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளை அவையிலே
தந்து, அவைகளைதான் படித்ததாக எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு புள்ளிவிவரத்தை
தந்திருக்கிறார்கள். அதிலே கடந்த ஆண்டு தமிழகத்திலே
நடந்த குற்றங்கள் என்னென்ன, அதில் எவ்வளவு கண்டுபிடிக்கப்
பட்டன என்கிற தகவல்களை எல்லாம் தந்திருக்கிறார்கள்.
அதிலே ஆதாயத்திற்காக செய்யப்பட்ட கொலைகள் 1991-லே
112 என்றும், கொள்ளைகள் 116 என்றும், வழிப்பறி கொள்ளை
கள் 515 என்றும், வீட்டை உடைத்து திருடுதல் 8,510 என்றும்,
இந்த சிறு திருட்டு, பெரும் திருட்டு என்று சொல்லி, மொத்த
புள்ளிவிவரங்களைக் கொடுத்து, மொத்தமாக 1991-ல் நடந்த
குற்றங்கள், 'அபன்ஸ்' 37,283 என்றும், அதிலே கண்டுபிடிக்கப்
பட்டவை 23, 854 என்றும் குறிப்பிட்டு, மொத்தத்திலே
கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விழுக்காடு 64 என்றும்
புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் மிகப் பணி
வோடு சொல்லிக்கொள்வேன். தங்களுக்கு தரப்பட்டிருக்கிற
அந்த தகவல்கள் சரியான தகவல்கள் அல்ல. இந்த விழுக்காடு
சரியான முறையில் தயார் செய்யப்படவில்லை. ஆதாயத்திற்காக
செய்யப்பட்ட கொலைகளிலே, 112 கொலைகளிலே 48 கொலை
கள் தான் கண்டுபிடிக்கப்பட்டன என்றால் அது 42.85 விழுக்
காடுதான் வருகிறது. அதாவது இரண்டுபேர் கொலையாளிகள்
என்றால் ஒருவன் தப்பித்திருக்கிறான், கொள்ளைகளைப்
பொறுத்தவரையில் 116 கொள்ளைகள் நடந்ததிலே 40 தான்
கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி என்றால் அது 34·48
விழுக்காடுதான். கொள்ளை செய்தவர்கள் 3 பேர் என்றால்
2 பேர் தப்பித்து சென்றிருக்கிறார்கள். ஒருவன்தான் அகப்
பட்டிருக்கிறான்.

முற்பகல் 11-05

அந்தப்போல வழிப்பறிக் கொள்ளையிலே 46.69 விழுககாடு
தான், கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டு பேர்
கள் வழிப்பறிக் கொள்ளை நடத்தி இருந்தால் அதிலே ஒருவர்
தப்பித்து—ப்ரீ மூவ்மெண்ட்—இன்னும் சட்டத்தின் பிடியில்
சிக்காமல் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே
இருக்கின்ற காவல் துறைக்குப் பெரிய சரித்திரம் இருக்கிறது.
ஸ்காட்லாண்ட் யார்ட் ஒத்த போலீஸ் என்று நாம் பெருமைப்
பட்டுக்கொள்கிறோம். அப்படி கொலை செய்தவர்களில் பாதி



1992 மார்ச் 17] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பேரை வெளியே விட்டுவிட்டு, கொள்ளை அடித்தவர்களிலே
மூன்றில் இரண்டு பேரை வெளியே விட்டுவிட்டு, வழிப்பறிக்
கொள்ளை அடித்தவர்களில் இரண்டுக்கு ஒருவரை வெளியிலே
விட்டுவிட்டு, போலீசார் மார்தட்டிக் கொண்டிருந்தால் அதை
நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க
வேண்டும். பெட்டி தெப்ட், கால்நடைக் களவுகள் இவைகளை
எல்லாம் கூட்டித்தான் 64 விழுக்காடு தந்திருக்கிறார்கள்.
உண்மையிலேயே குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்ட அளவு 50
விழுக்காட்டிற்கும் குறைவு என்பதை நான் தங்களின் கவனத்
திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஏன் இப்படி ஒரு
பெரிய பின்னடைவு வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக்
காரணம் தமிழகத்திலே ஏற்பட்டுள்ள குற்றங்களினுடைய
எண்ணிக்கை கூடுதல்தான். இதற்கு என்ன காரணம் என்பதைக்
கண்டறிய ஒரு சிறிய ஆராய்ச்சி செய்கின்றபோது, I want
to quote Indian an Express அதிலே என்ன
சொல்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன்.

The spurt in crime is largely a legacy of Sri Lankan Tamil
Militunts who proved time and again that small criminals would
left away be it, and the inability or unwillingneso of the
Police to catch the culprit has emboldened the local criminal
to venture into more during crimes as evident in the pattern
of crimes in the past one year,

இலங்கைத் தீவிரவாதிகள் தமிழ்நாட்டு அரசியலுக்கு
வந்த பிறகுதான் இந்தக் குற்றங்கள் மலிய ஆரம்பித்து இருக்
கின்றன. குற்றங்களின் எண்ணிக்கை கூட ஆரம்பித்திருக்கின்
றன, இலங்கைத் தீவிரவாதிகள் தங்களுக்குள் சண்டை போட்டு
ஒருவருக்கொருவர் கொள்ளை அடித்துக் கொண்டிருந்ததைப்
பற்றி இங்கே இருந்த அரசாங்கம் கவலைப்படாத காரணத்தால்
குற்றவாளிகள் மத்தியில் ஒரு தைரியத்தையும், நெஞ்சுறுதி
யையும் வளர்த்துக்கொண்டு என்ன செய்தாலும் தமிழ்நாட்
டிலே தப்பித்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மையை
தமிழ்நாட்டிலே வளர்க்கச் செய்தது இலங்கைப் போராளிகள்
தமிழகத்தின் அரசியலுக்கு வந்த பின்னால்தான் ஆனால்,
அவை இன்று இலங்கைத் தீவிரவாதிகளோடு நிற்காமல்,
தமிழகத்திலே உள்ள சில குற்றவாளிகளுக்குககூட. அதுபோல
உணர்வுகளைத் தந்து இன்று அவர்களும் சுதந்திரமாக் நட
மாட முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது, இதை நீங்கள்
ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சமீப காலமாக தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற 3, 4
பெரிய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது. நம்முடைய போலீஸ்
செயல்படத் தவறிவிட்டதோ என்ற உணர்வை எனக்குத் தந்
திருக்கிறது, இந்த முடிவிற்கு நாம் ஏன் வருகிறோமென்று
சொன்னால். சில செய்திகளைப் பார்க்கிறோம், சென்னையிலே

ஒரு ஆர்.பி.எஃப். போலீஸ் கான்ஸ்டபிள் ரயிலிலே ஒரு
இலங்கைப் போராளியிடம் டிக்கட் எங்கே என்று கேட்கிறார்.
டிக்கட் எங்கே என்று கேட்டதற்கு அந்தப் போராளி, அந்தப்
போலீஸ்காரரை சுட்டுவிடுகிறான், இத்தனை நாட்கள்
ஆகிவிட்டது, அந்தப் போராளி யார் அதற்குப் பின்னர்
உள்ள சங்கதி என்ன? ஒரு போலீஸ்காரர் சுடப்பட்டிருக்கிறார்
அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து அல்லது ஆலோசனை செய்து
அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சாதாரணப்
போலீஸ்காரருக்கு எப்படி தெம்பு இருக்கும்? எப்படி தெம்பு
இருக்க முடியும்? ஒரு போலீஸ்காரர் கடமையில் இருக்கும்
போது அவரைச் சுட்டுவிட்டு ஒருவன் தப்பிக்க முடியும் என்கிற
சம்பவம் தமிழகத்தில் நடந்து இவ்வளவு நாட்கள் ஆகியும்
அதைப் பற்றி பெரிய காவல் துறை தொடர முடியவில்லை
என்றால், அங்கே இருக்கிற சாதாரண போலீஸ்காரர், ஹெட்க
கான்ஸ்டபுள், எஸ்.ஐ. இவர்களுக்கு எப்படி நெஞ்சுத் தைரியம்
இருக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைவிட ஒரு படி அதிகம், 2 பெண்களைக் கொன்றதாக
நீதிமன்றத்திலே வந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறார்
கள், போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் தாக்கல் செய்கிறார்
கள், சாட்சிகளை அழைத்து விசாரணை செய்கிறார்கள்
From PWI, all the prosecution witnesses. கடைசியில்
பார்த்தால் கொலை செய்யப்பட்ட 2 பெண்களும்
நீதிமன்றத்தின் முன்னாலே உயிரோடு வந்து நிற்கிறார்கள்.
இது என்ன போலீஸ் விசாரணை? இந்தப் போலீசுக்கு எப்படி
மரியாதை இருக்க முடியும்? எப்படி மக்கள் மத்தியிலே மதிப்பு
இருக்க முடியும்? அதையெல்லாம் தயவு செய்து நீங்கள் சிந்
திக்க வேண்டும்.

65 லட்சம் ரூபாய் எடுத்துக்கொண்டு ஒரு பேங்க் வேன்
வருகிறது, Highway Robbery, the highest amount
in the Indian History தமிழகத்தின் சரித்திரத்
தில் இவ்வளவு பெரிய தொகை இதுவரை வழிப்பறிக் கொள்ளை
நடக்கவில்லை என்று சொல்கிற அளவுக்கு 65 இலட்சம்
ரூபாய் எடுத்து வரும் வேனை மறித்து 2 பேர்கள் கொண்டு
சென்றுவிடுகிறார்கள். அந்தக் கொள்ளை அடித்தவர்கள் யார்
என்று இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் என்ன
அர்த்தம்?

வேதாரண்யத்தில் பட்டப் பகலில் வாசலிலே கொலை
செய்கிறார்கள், கொலை செய்தவர்கள் யார் என்று இதுவரை
கண்டுபிடிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஒன்றல்ல.
இரண்டல்ல, ஓராயிரம் சம்பவங்கள்.

தர்மபுரியிலே. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நெருக்க
மான மாவட்டம்—அந்த மாவட்டத்திலே ஒரு போலீஸ் ஜீப்
டிரைவர் மர்டர்ட் இன் தி டே லைட், போலீஸ்துறையைச்





முற்பகல் 11-10

சேர்ந்த டிரைவர். இதுவரை குற்றவாளி யார் என்று கண்டு
பிடிக்க முடியவில்லை, இதற்கு என்ன காரணம் என்பதை
தயவு செய்து ஆராய்ந்து பார்க்க வேண்டும், நான் சில காவல்
துறை அதிகாரிகளிடம் பேசினேன், ஏன் இப்படி ஆகிவிட்டீர்
கள், என்ன ஆனது உங்கள் காவல்துறைக்கு என்று கேட்டால்
அவர்கள் சொல்கிறார்கள். 'Sir, we are uncertain about ourselves'
என்று, எங்களுக்கே நாங்கள் எங்கே நிற்கிறோம் என்றே தெரிய
வில்லை, ஒரு நிரந்தரம் இல்லாத தன்மை இருக்கிறது.
எங்களுக்கு வசதிகள் இல்லை, எங்களுக்கு. there's frustration among
the cadre, among the staff among the constabulary, அதற்கு என்ன
காரணம் என்று ஆராய்ந்து பார்க்கிறபோது இரண்டு சம்பவங்
கள். இந்த சுதந்திர நாட்டின் வரலாற்றில். தமிழ்நாட்டில்
நடக்காதது. ஒரு உள்துறை செயலாளரே ஒரு குற்றவாளி ஆன
சூழ்நிலை ஏற்பட்டது, ஒரு காவல்துறை தலைவராக பணி
யாற்றியவரே இறந்து போகிற சூழ்நிலை இருந்தது, இதை
யெல்லாம் பார்க்கிறபோது. the highest man, top man in the
Police Department அவர்களே குற்றவாளிகளாக இருக்க
முடியும் என்ற சூழ்நிலையை எந்த அரசாங்கம் கொண்டு
வந்ததோ, எந்த ஆட்சி கொண்டு வந்ததோ அந்த ஆட்சியும்
அரசாங்கமும் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற செட் பேக்
குக்கு பொறுப்பேற்க வேண்டும், அதை திருத்தி சரிசெய்கிற
பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது, வேலை பார்க்கிற போலீஸ்
காரர்கள். அது சாதாரண கான்ஸ்டபிளாக இருந்தாலும் சரி.
ஹெட் கான்ஸ்டபிளாக இருந்தாலும் சரி. டி.எஸ்.பி.யாக
இருந்தாலும் சரி. அவர்களுக்கு ஒரு தைரியம் வேண்டும், தான்
நல்ல போலீஸ்காரனாக வேலை பார்த்தால், வாழ்க்கை முழு
வதும் உற்சாகமாக உழைக்க முடியும், அதற்குத் தகுந்த வெகு
மதிகளை அரசாங்கத்திடமிருந்து பெறமுடியும் என்கிற
நிலைமை வரவேண்டும்,

நான் சொல்கிறேன். கடந்த ஆட்சியிலே எவ்வாறு இந்த
போலீஸ்காரர்கள் how they were frustrated என்பதற்கு ஒரு
உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன், There are
40 vacancies for D.S.Ps. and anticipating future vacancies,
a list of 91 persons was prepared 91 Inspectors, 40 காலி
யிடங்கள் வரும் என்று எதிர்பார்த்து. 91 இடங்களுக்கு காவல்
துறை ஆய்வாளர்களை டி.எஸ்.பி.க்களாக பதவி உயர்வு
கொடுப்பதற்கு அரசாங்கம் ஒரு லிஸ்ட் தயார் செய்கிறது.
அந்த லிஸ்ட் 1983-வது ஆண்டு அரசாங்கத்தால் ஒப்புதல் பெறப்
பட்டது. 1985-வது ஆண்டு 12 பேர் were selected as Dy.
Superintendents of Police as direct recruitment கடந்த அர
சாங்கம் என்ன செய்கிறது என்றால். அந்த 91 பேரில் இந்த
12 பேரை பாதியில் கொண்டுபோய் உள்ளே செருகுகிறது,

கார் எடுத்துவாருங்கள் அப்பொழுதுதான் உங்கள் ஊருக்கு வரமுடியும்' என்று சொல்கிற நிலைமை உள்ளது. அதற்குக் காரணமே காவல் நிலையத்தில் அவர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் இல்லாத நிலை, இரண்டாவது அவர்கள் அப்படி ஒரு இடத்திற்கு அவர்கள் சொந்தச் செலவில் செல்ல மறுப்பதும் ஒரு காரணம். எனவே, ஏழை எளிய மக்களுக்கு காவல் துறையிலிருந்து பாதுகாப்பு கிடைப்பதற்காக கட்டாயமாக காவல்துறைக்கு அதிக வாகனங்கள் வழங்கி உதவ வேண்டும்.

காவல் துறை இப்பொழுது சட்டம்—ஒழுங்கு, குற்றவியல், மதுவிலக்கு அமல்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது. இம்மூன்றும் ஒன்றாக இருந்து செயல்பட்ட காலத்தில் இருந்த வேகம், மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதிலே இல்லை. அதற்கு உதாரணமாக, 15—10—1991-க்குப் பிறகு, அதாவது மதுவிலக்கு அமல்பிரிவு என்று தொடங்கப்பட்ட பிறகு மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.* பொதுவாக மதுவிலக்கு, சட்டம் ஒழுங்கு துறையிலே இருக்கின்ற காவல் துறையைத் தான் மக்கள் மதிக்கிறார்கள். இப்படி மதுவிலக்கு அமல்பிரிவு, கிரைம் போன்ற பிரிவுகளை ஏற்படுத்துகின்ற போது, அந்தப் பிரிவுகளிலே அமர்த்தப்படுகின்ற காவல் துறையினர் தங்களுக்குள் ஒரு 'இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்' உடன், அதாவது, சட்டம் ஒழுங்கு காவல் துறையிடமிருந்து கொஞ்சம் கீழ்நிலையிலே அவர்கள் இருப்பது போன்று ஒரு எண்ணத்தில் அந்தத் துறையிலே அவர்களைப் போட்டிருப்பது ஏதோ தண்டனை கொடுத்திருப்பதைப் போல எண்ணிச் செயல்படுவதால், அவர்கள் செயல்பாட்டிலே வேகம் குறைகிறது. எனவேதான், இந்த மதுவிலக்கு தனிப்பிரிவு ஏற்பட்ட பிறகு மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, இந்த காவல்துறை மூன்று பிரிவுகளாக இல்லாமல், ஒரேபிரிவு என்றவகையில் செயல்படுத்தினால் இன்னும் திறமையான செயல்பாடு இருக்கும் என்ற கருத்தை இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகின்றேன்.

பிற்பகல் 1—45

பொதுவாக கிராமப் பகுதிகளில் ஒன்று சொல்வார்கள். சம்பளம் எவ்வளவு என்று வேலை செய்கிறவர்களைப் பார்த்துக் கேட்பார்கள். அப்போது சம்பளத் தொகையைச் சொன்னால் மேல் வரும்படி என்ன வரும் என்று கேட்பார்கள். இப்படி மேல் வரும்படி அதிலே எவ்வளவு வருகிறது என்பதில் தான பலர் குறியாக இருக்கின்ற காரணத்தால் இந்த சட்டம் ஒழுங்கு துறைக்குச் செல்வதையே காவல் துறையில் இருக்கின்ற எல்லோரும் விரும்புகிற நிலை இருக்கிறது. அப்படி சட்டம், ஒழுங்குத் துறையில் வாய்ப்பு இல்லாமல் போகும்போது இந்த மதுவிலக்கு அமல் பிரிவுக்குச் செல்லும்போது அதிலேயும் அவர்கள் கையூட்டு வாங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிற காரணத்தால் இப்படி மதுவிலக்குக் குற்றங்களைத் தடுக்கின்ற



வகையில் மதுவிலக்கை அமல் படுத்துகின்ற பிரிவுக்குச் செல்லும் போது அங்கே சரியாக அமல் படுத்தவில்லை என்ற சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எல்லா பிரிவையும் ஒரு பிரிவின்கீழ் கொண்டு வந்து அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் லஞ்ச ஒழிப்புத் துறை என்று ஒரு துறை இருக்கிறது. அந்த லஞ்ச ஒழிப்புத் துறையில் இருக்கிற அதிகாரிகளும், பல்வேறு காவல் துறையிலிருந்து மாறுதல் செய்யப்பட்டுத்தான் அங்கே வருகிறார்கள். அங்கே லஞ்சம் வாங்கிக் கொண்டிருப்பவர்களாக இருந்தவர்கள்தான் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு வருகிறார்கள். எனவே அந்த லஞ்ச ஒழிப்பு பிரிவுக்கு என்று தனியாக நேரடித் தேர்வுமுறை ஏற்படுத்தி ஒழுக்கமான அதிகாரிகளைக் கொண்டு வந்தால் லஞ்ச ஒழிப்புக் குற்றங்கள் குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்போது எங்களது கோவை, பெரியார் மாவட்ட பகுதிகளில் ராயர்பாளையம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒன்று சாராயம் காய்ச்சுவார்கள்; சாராயம் காய்ச்சுவதைத் தடுத்தால் திருடுவார்கள். இப்படி ஏதாவது ஒன்றைத் தடுத்தால் ஒன்றைச் செய்கிற நிலை இருக்கிறது. அந்த இடத்திலே கூட இப்போது நம்முடைய காவல் துறை அதிகாரிகளும், அந்த பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சென்று அவர்களுக்காக பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் குற்றங்கள் குறைவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடி, நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்களும் பாடினார்கள். திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது; அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று சொல்கிறார். எனவே அந்தமுறையில் திருடரின் உணர்வுகளை மாற்றி அவர்களை நல்வழிப்படுத்துகிற முறையில் இந்த காவல் துறை திறமையாகச் செயல்பட்டால் அப்படிப்பட்ட செயல்களைத் தடுக்க முடியும்.

சிவில் வழக்குகளைப் பொறுத்தவரையில் பல சிவில் வழக்குகளில் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் காவல் துறை தலையிடக்கூடாது என்று இருந்தாலும் கூட, நீதிமன்றங்களில் தாவா சொத்துக்குச் சம்பந்தப்பட்ட வாதி, பிரதிவாதி இருவருமே சென்று தடையுத்தரவு வாங்கிக்கொண்டு வந்து காவல் நிலையத்தில் நிற்கிறார்கள். அப்படிப்பட்ட காலத்தில் காவல் துறையினர் கட்டாயமாக அந்த சிவில் வழக்குகளில் சென்று பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கோவை, பெரியார் போன்ற மாவட்டங்களில் நிலத்தின் மதிப்பு மிக அதிகமாக இருக்கின்றது. தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற மாவட்டங்களாக இருக்கின்ற காரணத்தால் அந்த சிவில் வழக்குகளில் காவல் துறை ஒரு பக்கமாகச் சாய்கிற நிலை, ஆதாயம் பெறுகிற

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 மார்ச் 17

இந்த 12 பேர் 1983-வது ஆண்டிலேயிருந்து They have not joined the Police department. அவர்களுக்கும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கும் சம்பந்தமேயில்லை, ஒரு இன்ஸ்பெக் டர் டி.எஸ்.பி. ஆகிறார் என்று சொன்னால் 20 ஆண்டுகளா கிறது தமிழகத்திலே 20 ஆண்டுகள் கழித்துதான் டி.எஸ். பி.யாக முடிகிறது, இப்படி இருபதாண்டுகள் கழித்து டி.எஸ். பி.யாக வந்த பிறகு. போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கே சம் பந்தமில்லாத 12 இளைஞர்களைக் கொண்டுவந்து இவர்களுக்கு பெரிய அதிகாரிகள் என்று மேலே வைத்தால் அங்கேயிருக்கிற போலீஸ் அதிகாரிகள் எப்படி வேலை செய்வார்கள் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். இன்னும் ஒரு படி அதிகமாகச் சென்று கேட்பேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 'the direct recruitment of D.S.Ps. என்பதை தயவு செய்து நிறுத்த முடியுமா என்பதைப் பாருங் கள். கேரளாவிலே இப்படி இல்லை. ஒரு காவலர், தலைமைக் காவலர், ஒரு சப் இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் நல்ல முறையில் வேலை செய்தால் கேரளாவில் அவர்கள் 10 ஆண்டுகளில் டி.எஸ்.பி. ஆகி விடுவார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே இருபது ஆண்டுகளானாலும் அவர்கள் டி.எஸ்.பி. ஆக முடியாது. ஒரு இன்ஸ்பெக்டர் வருத்தப்பட்டார் — 15 ஆண்டுகள் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்து வந்தபோது, அவருக்குக் கீழே ரைட்ட ராக இருந்தவர் இன்ஸ்பெக்டராகி, இன்றைக்கு அவர்கள் இரண்டு பேருமே ஒரு ஸ்டேஷனில் லா அண்டு ஆர்டர் இன்ஸ்பெக்ட ராகவும், இன்னொருவர் கிரைம் இன்ஸ்பெக்டராகவும் பணி யாற்றுகிறார்கள், எப்படி வருத்தப்படும் அந்த நெஞ்சம்? 24 மணி நேரமும் வேலை பார்க்க வேண்டியவர்கள் அவர்கள், என்ன நடந்தாலும் அதற்காக பதில் சொல்ல வேண்டியவர்கள். வாழ்க்கை யில் விடுமுறை என்பதே இல்லை என்கிற நிலையில் இருப்பவர்கள். அவர்களுக்கு இப்படி ஒரு சோர்வு வரும் என்று சொன்னால், அந்தச் சோர்வு, அந்தப் பணியில் எவ்வளவு மாறுபாடான கருத்தை உருவாக்கும் என்பதைத் தயவு செய்து சிந்தித்து பார்க்க வேண்டும், எனவே தான் கேட்கிறேன், கேரளாவைப் போல 'can you consider the stopping of direct recruitment of D.S.Ps.?' அதை முதல்வர் அவர்கள் தயவு செய்து பரிவுடன் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

அதைப்போல, கடந்த ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள் காவலர்களுக்கு பெரிய சலுகைகளை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள், அவர்களுக்கு சீருடைப்படி, உணவுப்படி என்று ரூ. 10, ரூ. 16, ரூ. 20, ரூ. 30 என்று இந்த அவையிலே அறிவித்தார். ஆனால் இன்றைய தேதி வரை அந்த சீருடைப்படி, உணவுப்படி போன்றவைகள் கொடுக்கப்படவில்லை, என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன், எனக்குத் தெரியும். முதலமைச்சர் அவர் கள் காவல்துறைக்கு எவ்வளவு செய்ய தயாராக இருந்தார்கள்



1992 மார்ச் 17] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

என்று, காவல்துறை அணிவகுப்பில் அவர்கள் கலந்துகொண்ட போது, எதிர்க்கட்சி வரிசையில் நானும் கலந்து கொண்டேன். அன்றைய தினம் அவர்களுக்கு இருந்த உணர்வுகள், அவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்த அறிவிப்புகள் இன்னும் ஏன் செயல் படுத்தப்படவில்லை? அதற்கு யார் காரணம் என்பதை தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், சென்னையிலே ஒரு காவலர் வீட்டுக்கு மின்சாரக் கட்டணம் இரண்டு வருடத் திற்கு ஒரு முறை ரூ. 4,000 வசூல் செய்கிறார்கள், அது எப்படி சரியாக இருக்க முடியும்? There is no separate metre for a Police Constable's house, 20 யூனிட் என்று கொடுத்து விடுகிறார்கள், ஆனால் அதற்கு கணக்கு இல்லை, இரண்டாண்டுக்கு ஒரு முறை மின்சாரக் கட்டணம் என்று சொல்லி 4,000 ரூபாய் வசூலிக்கிறார்கள்,

முற்பகல் 11-15

சாதாரண சம்பளத்திலே வேலை பார்க்கக்கூடிய காவலர் களால் அந்த நாலாயிரம் ரூபாயைக் கொடுக்க முடியுமா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், இன்றைய தினம் எல்லா அரசு ஊழியர்களுக்கும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் விடு முறை கொடுக்கிறார்கள், ஆனால் காவலர்களுக்கு விடுமுறையே கிடையாது, அவர்களுக்கு நல்ல நாளும் கிடையாது, கெட்ட நாளும் கிடையாது, அப்படிப்பட்ட காவலர்களுக்கு நாம்பென் சேட்டரி அலவன்சாக ரூ. 10 கொடுக்கிறார்கள். இந்தக் காலத்திலே பத்து ரூபாய்க்கு இரண்டு காபி கூட குடிக்க முடியாது, நேற்று நாவலரவர்கள் கூட இரண்டேகால் ரூபாய்க்கு வடை விற்கப்படுகிறது என்று சொல்லி இன்றுள்ள நிலைமைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே நான் என்ன கேட்கிறேன் என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு நாள் சம்பளத்தை இந்த விடுமுறைக்கு ஈடாகக் கொடுங்கள் என்று கேட்கிறேன்.

அதேபோல் கேஷுவல் லீவ். எல்லா அரசு ஊழியர்களையும் போல அவர்களுக்கு 12 நாள் கேசுவல் லீவ் கொடுத்திருக்கிறார் கள். மற்றவர்களுக்கெல்லாம் சனி, ஞாயிறு ஆகிய நாட்களுக்கு விடுமுறை இருக்கிறது. ஆனால் காவலர்களுக்கு லீவு இல்லை. எனவே அந்த லீவை 20 நாள் என்று ஆக்குங்கள். Causual Leave for 20 days என்று கொடுத்தால் அவர்களுக்கு ஓரளவிற்கு மன திருப்தி இருக்கும். அந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது). முடித்து விடுகிறேன்.

இன்றைய தினம் கொள்கை விளக்கக் குறிப்பிலே மத்திய அரசிடம் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் கேட்டிருந்த உதவிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள், ரூ. 80 கோடிக்கு

[திரு. நா. சா. பழனிசாமி] [1992 மார்ச் 17

நிலை இருக்கிறது. எனவே இந்த வழக்குகளை நீதிமன்றத்தில் விரைவாக முடிக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சிவில் வழக்குகளில் எல்லா காவல் துறையினரும் தவறு செய்ததாக நான் சொல்லவில்லை. உதாரணமாக பல்லடம் காவல் நிலையத்தில் சட்டம், ஒழுங்கு ஆய்வாளராக இருக்கிற ஒருவர் 50 ஆண்டுகாலம் பல வழக்குகளில் சுப்ரீம் கோர்ட் வரை சென்று தீர்க்க முடியாத பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்திருக்கிறார். ஒரு தாயாதிகளுக் குள்ளே ஏற்பட்ட 50 ஏக்கர் நிலப் பிரச்சினையை அவர் மிக சாதுரியமாகப் பேசி பைசல் செய்து முடித்துக் காட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட நல்ல காரியங் களையும் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில தவறுகள் நடக்கின்ற காரணத்தால் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த காவல் துறையைப் பொறுத்த மட்டில் திறமை யான செயல்பாட்டினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன்னுடைய நிர்வாகத் திறனின் மூலம் காட்டியிருக்கிறார்கள். எனவே அவருடைய மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசு வதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய—நான் பல முதல்வர்களைப் பார்த்து இருக்கிறேன். ஆனால் திங்கட்கிழமை தோறும் ஆயிரக்கணக்கான மக்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பை இவர்கள் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் எந்த முதல்வரும், யாராலும் செய்யமுடியாத ஒரு மிகப் பெரிய சாதனை என்றுதான் நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) 5,000, 6,000 பேர் என்று மனு கொடுக்க வந்தார்கள். நான் போன திங்கட்கிழமையும் பார்த்தேன். இந்த திங்கட் கிழமையும் பார்த்தேன்.

பிற்பகல் 1–50

எனவே அவர்களால் ஒரு 5 ஆயிரம், 6 ஆயிரம் பேர் பார்க்கப் பட்டிருக்கிறார்கள். நான் போன திங்கட்கிழமைகூட பார்த் தேன். இந்த திங்கட்கிழமையும் பார்த்தேன். மக்கள் அவர் களைப் பார்க்கும்போது, அவர்கள் முகத்திலே ஒரு மகிழ்ச்சி. அவர் கள் சொல்லிக் கொள்கிறார்கள். அம்மையார் அவர்களிடத்திலே சொன்னால் வேலை முடியும்' என்ற அளவில் உத்வேகத்தோடு ஒரு உற்சாகத்தோடு அவர்கள் காத்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். இப்படிப்பட்ட ஒரு முதல்வர் அவர்கள் இருக்கிறார்



1992 மார்ச் 17] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கள். நான் ஏற்கெனவே அவர்களைப்பற்றி பேசியிருக்கிறேன். அவர்களுடைய திறமை, அவர்களுடைய 'வில் பவர்' பற்றி சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு 1450 கோடி ரூபாய் என்று சொல்லியிருந்தது. அது அவருடைய திறமையின் காரணத்தி னாலே அதுவே 1751 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. மத்திய அரசினிடத்திலே அவர் கேட்டால் இல்லை என்று சொல்லமாட் டார்கள். ஏனென்றால் ஒரு திறமையான அரசு நல்லமுறை யிலே நிர்வாகம் செய்துகொண்டிருக்கும்போது, இப்போது இந்தக் காவல்துறை சிறப்பான முறையிலே இருப்பதற்கு அதை நவீனப்படுத்துவதற்காக 80.45 கோடி ரூபாய் நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். அதிலே 10, 13 கோடி ரூபாய் கொடுத்திருக் கிறார்கள். இந்த பாக்கி பணமும் நிச்சயமாகக் கிடைக்கும். நிச்சயமாக மத்திய அரசு கொடுக்கும். ஏனென்றால் ஒரு நல்ல தலைமை தமிழகத்திலே இன்று பொறுப்பேற்று இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். அது நிச்சயமாகக் கிடைக்கும்.

நம்முடைய முன்னாள் பாரதப் பிரதமர், ராஜீவ் காந்தி அவர்களை, அவர்களுடைய உயிரே இந்த விடுதலைப் புலிகளால் பறிக்கப்பட்டது. அந்த உயிர் பறிக்கப்பட்டவுடன் அதற்கு முன் பாகவே நான் ஏற்கனவே சட்டமன்றத்திலே கேட்டேன், அதற்கு முன்பாகவே ஒரு எம்.பி. அவர்கள் சொன்னார்கள். ஒரு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ராஜீவ் காந்தி தமிழகத் திற்கு வந்து மீண்டும் அவர் உயிரோடு திரும்பிப் போனால் தானே மறுபடியும் பிரதமராக வரமுடியும் என்று சொன்னது பத்திரிகையிலே வந்து நாம் அத்தனை பேர்களும் பார்த்திருக் கிறோம். அதைக் கூட கேள்வியாகக் கேட்கும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இல்லை அது நிச்சயமாக இந்த கமிஷனுக்கு, வர்மா கமிஷனுக்கு நிச்சயமாக வரும் என்று சொன்னார்கள். நானும் தினசரி பார்க்கிறேன். ஏனோ வர்மா கமிஷனுக்கு இதுவரைக்கும் வந்ததாக தெரியவில்லை. இத னுடைய உட்கூற்று என்ன? ராஜீவ் காந்தியினுடைய உயிரைக் குடிப்பதற்கு யார் மூல காரணம்? எந்தக் கட்சி மூல காரணம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை மனதிலே சிந்தித்து அது வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள் கிறேன். இன்றைக்கு உலகம் எல்லாம், நேருஜியினுடைய பேரனும், உலகத்திலே ஒரு சிறந்த ஜான்சி ராணியாக உலக மெல்லாம் போற்றி புகழ்ந்த உத்தம தலைவியாக இருந்த, அந்த தலைவியினுடைய தவப்புதல்வனை, அந்த திருமகனை, தமிழகத்திற்கு வந்தபோது, தமிழகத்தின்பேரில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த அவரை அவருடைய உயிர் பலி கொடுக்கப் படுகிறது என்றால் அதற்கு இந்த விடுதலைப் புலிகள்தான் மூல காரணம் என்பதை நாம் அத்தனை பேரும் அறிந்த காரணத் தினாலே தான் முதல்வர் அவர்கள் தன்னுடைய உயிரை துச்ச மாக மதித்தார்கள். பரவாயில்லை, நான் அதைச் செய்தே இருவேன், அதை ஒடுக்கியே தீருவேன், தமிழகத்தை விட்டு

ஒதுக்கீடு திட்டத்தைப் போட்டு அதற்கான பணம் ஒதுக்கீடு தர வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டிருந்த போது பத்து கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள் இப்போது 13 கோடி ரூபாயை தந்திருக்கிறார்கள், இன்னும் பணம் தருவதை பரிவுடன் பரிசீலிக்கிறோம் என்று மத்திய உள் துறை இணை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது தெரிவித்திருக்கிறார்கள், அதைப் பார்த்து நீங்கள் 129 டெம்போ ஜீப் வாங்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள், சக்தி வாய்ந்த தொலை தொடர்பு வாங்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள், உள்ளபடியே நீங்கள் கேட்கும் அந்த பணம் உங்களுக்குக் கிடைப்பதற்காக உங்களுக்கு எவ்வளவு உறுதுணையாக இருக்க முடியுமோ அப்படி இருப்போம், ஆனால் ஒன்றைமட்டும் சொல்லவேண்டும், A police with no morale ஒரு திறமையான ஒரு முடிவை எடுத்தாக வேண்டும் என்கிற நோக்கம் இல்லாத ஒரு காவல் துறைக்கு நீங்கள் எவ்வளவு ஆயுதங்களையும். வசதிகளையும் கொடுத்தாலும் ஒன்றும் நடக்காது. அது நீரிழிவுக்காரன் கையிலே கிடைத்த இனிப்பாகத் தான் இருக்கமுடியும், It will be a sweet at the hands of a diabetic, ஆகவே முதலிலே, அந்த போலீஸ்காரன் மனதைத் திருப்திபடுத்த வேண்டும், அவர்களுக்கு ஒரு பக்குவமான நலனை உண்டாக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,

ஆயத் தீர்வை பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை, ஒரே கருத்தை மட்டும் கடந்த மாதம் நான் சொன்னேன், முதலமைச்சர் அவர்கள் ஒரு காளை மாட்டின் கொம்பை பிடித்திருக்கிறார் என்று சொன்னேன், இப்போது நான் என்ன சொல்ல ஆசைப்படுகிறேன் என்று சொன்னால். மதுவிலக்கு மதுவிலக்கு என்று பேசுகிறோமே அதுவே தவறு, இந்த மதுவிலக்கு என்பதே ஒரு மிஸ்நோமர், நாம் இன்னும் மதுவிலக்கைக் கொண்டு வரவில்லை, நாம் செய்திருப்பதெல்லாம். நாட்டுச் சாராயத்திற்குத் தடை விதித்திருப்பதுதான், ஐ.எம்.ஃஎப்.எல். அதற்கு நீங்கள் அறிவித்துள்ள கொள்கைகள். நீங்கள் நாட்டுச் சாராயத்திற்கு விதித்துள்ள தடை ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதாக எனக்குத் தெரிகிறது. இப்போது அதிகமாக கூடுதலாக வரியை விதித்திருக்கிறீர்கள், ஐ.எம்.ஃஎப்.எல். வினுடைய விலை எப்பொழுதெல்லாம் கூடுமோ அப்பொழுதெல்லாம் கள்ளச் சாராயத் தேவை அதிகரிக்கும், நேற்று டாக்டர் நாவலர் அவர்கள் சொன்னார்களே Demand and Supply அதுதான்.

நான் ஒரு நண்பரின் ** ** **
ஊருக்குச் சென்றபோது அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன், ஒரு நட்பு நிமித்தமாக. பார்ப்பதற்கு சென்றிருந்தேன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





நான் அவர் வீட்டிலே இருக்கும்போது ஒரு பெண்மணி வந்து அவரிடம் அழுது கொண்டிருந்தார், ஐயா. முன்பாவது பத்து ரூபாய் கொண்டு வந்து கொடுப்பார், ஆனால் இப்போது இருக்கிற மூக்குத்தியையும் எடுத்து விற்றுவிட்டுப் போகிறார், நீங்கள் போய் அம்மாவிடம் சொல்லக் கூடாதா என்று அவர் கேட்டார்,
* * *

அதாவது எப்படியும் குடித்துதான் ஆக வேண்டுமென்று ஒரு வேகம் இருக்கிறது.

ஒரு ஆட்டோ டிரைவரை முந்தா நாள் பார்த்தேன், ஒரு நாளைக்கு முன்பு 50 ரூபாய் கிடைக்கும், நாங்கள் முன் சீட்டில் உட்கார்ந்திருக்கிறோம், நீங்கள் பின் சீட்டிலே உட்கார்ந்திருக்கிறீர்கள், உங்களுக்கு உடல் வலி இருக்காது, (மணி அடிக்கப் பெற்றது). முடித்து விட்டேன்.

* * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u>

<u>திரு.எஸ். பீட்டர் அல்போன்ஸ்:</u> நான் அப்படிச் சொல்லவில்லை.

* * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஆகவே அது அவைக் என்று வருவது சரியாக இருக்காது, குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> எங்களுக்கு ஒரு பிரிவிலஜ் இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். முதலமைச்சரிடம் ஒரு சலுகை இருக்கிறது என்று சொல்லுகிறேன். அதுதான். அந்த ஆட்டோ டிரைவர் சொன்னார், முன் சிட்டில் நாங்கள் உட்கார்ந்து போவதால் உடல் எல்லாம் வலிக்கும். ஆகவே நாங்கள் குடிக்காமல் தூங்க முடியாது; முன்பு வந்து 15 ரூபாயில் குடித்துவிட்டு மீதியை வீட்டுக்குக் கொடுத்தோம்; இப்போது 50 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது சார். இதை நீங்களாவது சட்டசபையிலே பேசக்கூடாதா என்று கேட்டார். நான் குடிப்பதை நியாயப்படுத்தவில்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொன்னால், நீங்கள் அறவே மதுவை ஒழிப்பீர்கள் என்று சொன்னால், நீங்கள் நினைக்கும் பயன் கிடைக்கும். ஆனால் ஒரு பக்கம் Indian made foreign Liquor என்று சொல்லக்கூடிய வெளிநாட்டுச் சாராயம் கடைகளில் விற்கும் போது நாட்டுச் சாராயத்தை மட்டும் அடைத்து விடுங்கள் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

விரட்டியே தீருவேன் என்று அவர்கள் மிகத் தெளிவோடு செய்திருக்கிறார்கள். யாரும் எந்த ஆண் மகனும் செய்யமுடி யாத காரியத்தை இன்றைக்கு அவர்கள் செய்து இருக்கிறார்கள். எந்த ஒரு பயமும் இல்லாமல் செய்திருக்கின்றார்கள் என்றால் இதை எப்படிப் பாராட்டுவது, எப்படிப் புகழ்வது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு தைரியம், அந்த சிந்தனை சக்தி, வில் பவர், தன்னம்பிக்கை பெற்றவராக இருக்கிறார். இவர்களை ஏன் அடக்கமுடியாது என்று சொல்லி அந்தத் தன்னம்பிக்கையின் காரணத்தினாலே அதைச் செய்திருக் கிறார்கள். அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

இன்றைக்கு இந்த காவல் துறையிலே, அதாவது இன்றைக்கு பெரிய தலைமை அதிகாரியாக இருக்கின்றவர் டி.ஜி.பி. அவர்கள். அவர்களிடத்திலே பல காரியங்கள் நடந்துகொண்டு வருகிறது. அவர்களிடத்திலேதான் மக்களுடைய பிரச்சினை வருகின்றது. மக்களுடைய பிரச்சினைகளை கவனிப்பது மக்களுக்கு பாது காப்பு அளிப்பது, குற்றங்களை எளிதாகக் கண்டுபிடிப்பது, கண்டுபிடித்த குற்றங்களைப் பற்றி துப்பு துலக்குவது, அப்படி துப்பு துலக்கும் போது யார் அந்த கைதி, யார், யார் அந்த குற்றத்தைச் செய்தவன் என்று அவனைக் கண்டு பிடித்து அவனை விசாரணை செய்து வருகிறார் கள். அந்த விசாரணை செய்யும்போதுகூட காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கு எத்தனையோ ஆபத்துக்கள் வருகின்றன. அந்த ஆபத்துக்களை எல்லாம் அவர்கள் சந்தித்து அவர்கள் இந்த பணிகளை ஆற்றுகிறார்கள். அப்படி ஆற்றிவரும்போது தான், நம் பொதுமக்களுடைய உயிரையும் உடமையையும் பாதுகாக்கக்கூடிய பொறுப்பும், மிகப் பெரிய தன்மைகளும் காவல்துறையிடத்திலே வந்து சேர்கிறது. அப்படிப்பட்ட பொறுப் பினை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு இங்கே சிங்காரம் அவர்கள் பேசுகிறபோது கேஸ் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஹரிஜன மக்களைப் பொறுத்த வரையிலே பல கேஸ்கள் இருக்கின்றன. அதற்கு 4 நீதிமன்றங் கள் இருக்கின்றன. இந்த நான்கு நீதிமன்றங்களிலேயும் கேஸ்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த கேஸ்கள் பழங்குடி மக்களுக்கும் இன்றைக்கு அதிகமாக இருக்கின்றன. 1990 லே 789 கேஸ்கள். 1991-ல் 861. அதே மாதிரி எஸ். சிஸ். எஸ்.டீஸ்கள் சேர்ந்த வர்கள் கேஸ்கள் 545, 552 என்று இருக்கின்றன. இவர்களால் காத்துக்கொண்டு இருக்க முடியாது. ஒரு நாள் வேலை கெட்டு விடுமேயானால் அவர்களுக்கு அந்த நாள் கூலி போய்விடும். ஆகவே இந்த கேஸ்களை எல்லாம் விரைவிலே முடிப்பதற்கு எல்லா ஜில்லாக்களிலும் இந்த நீதிமன்றங்களை வைப்பதற்கான முயற்சிகளை எடுப்பார்களேயானால் அது அந்த ஏழை மக்களுக்கு சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பிறகு போலீஸ், போலீஸ் பழைய நிலைமையிலேயே இருக் கிறார்கள், நமக்குப் போதிய அளவுக்கு போலீஸ் இல்லை. வி.ஐ.பி.க்கள் செல்லும்போது போலீஸை அவர்களுக்கு பந்தோபஸ்



திற்காக அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் அங்கு சென்று மழை யாக இருந்தாலும் சரி, வெய்யிலாக இருந்தாலும் சரி, அங் கேயே இருக்கவேண்டும். இடையிலே கஞ்சி தண்ணீர் எல்லாம் கிடைக்காது. கஞ்சி கிடைக்காது. தண்ணீர் கிடைக்காது. ரொட்டி கிடைக்காது. எதுவுமே கிடைக்காது. அங்கேயே நிலையாக நிற்பார்கள். அந்த நேரத்திலே டி. ஜி. பி. மற்றவர்கள் போ னால் எங்கே அந்த போலீஸ்காரர் என்று கேட்பார்கள். அந்த நேரத்திலே அவர்கள் கொஞ்சம் மரத்தடியிலே ஒதுங்கியிருப்பார் கள். கொஞ்சம் ஒதுங்கி உட்கார்ந்திருந்தால்கூட எங்கே காணோம் என்று அவர்கள் கேட்கின்ற நிலைமை வரும். ஆகவே போலீஸ் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சற்று அதிகப்படி யாகப் படி கொடுக்கவேண்டும். இப்போது ரூ. 8 கொடுப்பது போதாது. அதை 15 ரூபாயாக ஏற்றினால் நல்லது. ஏனென்றால் ஒரு பொங்கல் வாங்குகிறோம். ஹாஸ்டலிலே வாங்கு கிறோம் என்றால் கூட அங்கே பொங்கல் விலை 4 ரூபாய். வடை விலை 2 ரூபாய். காபி விலை 2 ரூபாய். மத்தியான சாப்பாடு 12 ரூபாய், 14 ரூபாய் ஆக இருக்கிறது. நாங்கள் ஒரு சாப்பாட்டை இரண்டுபேர் சாப்பிட்டுக் கொள்கின்றோம். ஆகையினாலே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய படியை சற்று உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்தால் பாராட் டத்தக்கதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1—55

அடுத்து, பெண் போலீஸ். அவர்களுக்குத் தனியாக சென்னை யிலே ஒரு போலீஸ் நிலையமே இருக்கின்றது. அதிலே முழுமை யும் அவர்களே பணியாற்றுகிறார்கள். ஏன் என்றால் அப்படிப் பார்த்தால்தான் அவர்களுடைய திறமை எப்படி இருக்கிறது, இந்தத் தலைவியினுடைய தலைமையிலே இயங்கக் கூடிய போலீஸ் இலாகா, அந்தப் பெண் போலீசார் எப்படி பணியாற்று கிறார்கள் என்பதை நாம் கண்காணிக்கக்கூட வாய்ப்பாக இருக் கும். அதோடு இதை இந்த 22 ஜில்லாக்களிலும், ஒவ்வொன்றி லும் ஏற்படுத்தினால் பெண்களுக்கு சாதகமாக இருக்கும்.

அடுத்து, நான் ஏற்கெனவே ஒருமுறை சொல்லியிருக்கிறேன். பெண் போலீசுக்கு சற்று உடையிலே மாற்றம் தேவை. ஆபரேசன் தியேட்டருக்குப் போகும்போது பெண் டாக்டர்கள் மேலே கவுன் அணிந்து போவார்களே, அதுபோல போட்டால் பார்ப் பதற்கும் அது லட்சணமாக இருக்கும். அதுபோல குழந்தைகள் ரவிக்கை மேலே போட்டிருப்பார்களே, தண்ணீர் வடிய. அதுமாதிரி ஒரு கவுன் போட்டால் நன்றாக இருக்கும். இப்போது உள்ள டிரஸ் லட்சணமாக இருந்தாலும் சில சமயங்களில் ஆபத்தாக முடியவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நான் குறிப்பிட்டவாறு உடை யிலே சற்று மாறுதலான நிலைமையை உருவாக்கிக் கொடுப்போ மானால் அது பிறர் பார்த்து ஏதாவது பேசக் கூடிய நிலைமை இல்லாத சூழ்நிலை உருவாகும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் ஒரு
பக்கத்திலே அரசாங்கத்தினுடைய கஜானாவிற்கு பெரிய
இழப்பு. மறுபக்கம் சட்டவிரோதமான காரியங்கள் எவ்வளவு
இருக்கிறதோ அத்தனை காரியங்களையும் தூண்டிவிடுகிற
முயற்சி. அதை நீங்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து எப்படி
செய்தால் அது சரியாக வரும் என்று சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

நீங்கள் ஒரு பீர் தொழிற்சாலையை விற்பனை செய்வதாகச்
சொல்லியிருக்கிறீர்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புகூட
பத்திரிக்கையில் தொடர்ந்து செய்தி வந்திருக்கிறது. நான்
ஒன்றை மட்டும் கேட்க ஆசைப்படுகிறேன். இந்த பீர் தொழிற்
சாலை நஷ்டத்திலே ஓடியிருந்ததா அல்லது இலாபத்திலே
ஓடியதா என்கிற கருத்தை—ஏனென்று சொன்னால் அதிலே
ஏதோ ஒரு பெரிய. . . .

முற்பகல் 11-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பீர் தொழிற்சாலை
விற்பனை பற்றிய முழு விவரங்களும் இந்தக் கொள்கை விளக்கக்
குறிப்பிலே தரப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த பீர் தொழிற்சாலை விற்கப்பட்டு
விட்டது என்ற கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். நான்
அதற்குள்ளே போக விரும்பவில்லை. நான் என்ன சொல்ல
வருகிறேன் என்று சொன்னால், இந்த பீர் தொழிற்சாலை ஏதோ
புனிதமான ஒன்று போலவும், விற்கக் கூடாத ஒன்று போலவும்;
அதை விற்றுவிட்டால் ஒரு பெரிய கலவரமே நடந்துவிட்டதைப்
போன்று செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. நான் என்ன
சொல்கிறேன் என்று சொன்னால், நஷ்டத்திலே ஓடுகின்ற
தொழிற்சாலைகளை Disinvestment of Public Sector undertaknigs
which are running on loss— அவைகளை வெளியே கொடுத்துவிட
வேண்டும் என்பதிலே நாம் எல்லோரும் ஒத்தவர்களாக இருக்
கிறோம். ஆனால், இந்தத் தொழிற்சாலையிலிருந்து அரசாங்கத்
திற்கு ஏதாவது லாபம் வந்து கொண்டு இருந்ததா அல்லது
அந்தத் தொழிற்சாலையை விற்றுவிட்டதால் என்ன ஆதாயம்
என்பதை நாம் விளக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்
என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.





அதைப்போல, இதுவரை இருந்த வடிசாலைகளை ஆவின்
நிறுவனத்திற்கு விற்கப் போவதாக சொல்லி இருக்கின்றார்
கள். அது எங்களுக்கு விளங்கவில்லை. ஆவின் நிறுவனம்
அந்த சாராய வடிசாலையை வாங்கி என்ன செய்வார்கள்?
அவர்கள் மீண்டும் நாட்டு சாராயத்தை வடிக்கப் போகிறார்களா
அல்லது வேறு ஏதாவது அதிலே தொழில் செய்ய அவர்கள் திட்ட
மிட்டு இருக்கிறார்களா என்பதை எல்லாம் இந்த கொள்கை
விளக்கக் குறிப்பிலே இடம் பெறாத காரணத்தினால், அந்த
சந்தேகத்தை உங்களிடம் கேட்கிறேன். மதுவிலக்கு, கள்ளச்
சாராயத்தை. .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு எல்லாம் நாளை விரிவாகப்
பதில் சொல்ல இருக்கிறேன். இருந்தாலும்கூட இப்படிச் சில
குற்றச்சாட்டுகளைச் சொல்லி அல்லது தவறான கருத்துக்களைக்
கூறும்போது, அதை அப்படியே விட்டுவிடுவது சரியல்ல என்றும்
நான் கருதுகிறேன். நிச்சயமாக ஆவின் நிறுவனத்தின் மூலம்
சாராயத்தை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு இந்த அரசு அப்படி
ஒரு மடத்தனமான காரியத்தை எண்ணாது, திட்டமிடாது
(மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மட்டும் இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் என்ன உத்தேசம் என்று தான்
கேட்டேன். அதை ஆவின் நிறுவனம் எடுத்து இருக்கலாம் என்கிற
கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஆவினுக்கு அதை விற்று, அவர்கள் மீண்டும் என்ன செய்யப்
போகிறார்கள் என்பதைத் தான் அறிய விரும்புகிறேனேயொழிய,
அதைத் தான் செய்ய திட்டமிட்டு இருக்கிறார்கள் என்று நான்
குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எனவே, அதையும் பரி
சீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்கூடிய கடமை எங்
களுக்கு இருக்கிறது. அந்தக் கடமைக்காக நான் அதைக் கேட்
டேன். ஐ.எம்.எஃப்.எல்.-ன்னுடைய விலை கூடுகின்றபோது
கள்ளச் சாராயத்தைத் தடை செய்வது கஷ்டமாக இருக்கிறது.
அதை உணர்ந்துகொள்ள வேண்டும். நீங்கள் இப்போது சொல்
கின்றபோது, ஒரு பக்கம் நீங்கள் மதுவிலக்கை அமல்படுத்தப்
போகிறோம் என்று சொல்கிறீர்கள். இன்னொரு பக்கம்
கொள்கை விளக்கத்திலே தமிழ்நாட்டிலே கிடைக்காத மது
வகைகளை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்
போகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அது எதற்காக
என்று எங்களுக்கு விளங்கவில்லை. மதுவிலக்கு என்பது பூரண
மதுவிலக்குதான் மதுவிலக்கேயொழிய, ஒரு பக்கம் நாட்டுச்
சாராயக் கடைகளை அடைத்துவிட்டு, மறுபக்கம். . . .

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [199மார்ச் 17

அடுத்தபடியாக, தமிழ்நாடு போலீசை எடுத்துக் கொண்டால் அவர்கள் திறமை வாய்ந்த தகவல் தொடர்பு அமைப்பைத் தன்னகத்தே கொண்டு தமிழகத்திலே மிகவும் திறமையாக, மற்ற வர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவிலே, 545 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு நிலைமை, ஒரு விஷயம் என்று சொன்னால்கூட அதை அறியக் கூடிய சக்தி வாய்ந்த ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக செயல்படுகிறது. அது மிகவும் பாராட்டத்தக்க ஒன்று.

அடுத்து, போலீஸ் ஸ்டேசன்களைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட வாடகைக் கட்டிடத்தில் போலீஸ் ஸ்டேசன்கள் இருக்கக் கூடாது. தனிப்பட்ட வாடகைக் கட்டிடத்தில் போலீஸ் ஸ்டேசனை திடீரென்று ஆரம்பித்து விடுகிறோம். போலீஸ் ஸ்டேசன் ஆரம்பிக்க கட்டிடம் கிடைக்கமாட்டேன் என்கிற நிலைமையில் ஆங்காங்கே தனிப்பட்டவர்களுடைய வீட்டை வாடகைக்கு எடுத்து ஆரம்பிக்கிறோம். அப்படி வாடகைக் கட்டிடங்களில் போலீஸ் ஸ்டேசன்களை அமைக்கிறபோது, சில பேர், யார் வாடகைக்கு போலீஸ் ஸ்டேசன் அமைக்க இடம் கொடுத்து இருக்கிறார்களோ அவர்களை அணுகுகிறார்கள். அவர் களை அணுகி எப்படியாவது நான் இன்ன கேசில் மாட்டிவிட்டேன். இதை நீங்கள் எப்படியாவது செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி சொல்லும்போது உங்கள் தலைமையிலே இயங்குகிற இந்தக் காலத்திலே அவர்கள் அதற்கு இணங்காவிட்டாலும்கூட— அந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிற நிலைமையிலே அவர்கள் சற்று மாறுதல் உண்டாக்கக்கூடிய நிலைமைகள் உரு வாகிவிடும். ஆகவே, எங்கெங்கு எல்லாம் போலீஸ் ஸ்டேசன்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்குகின்றனவோ அவற்றை எல் லாம் ஒரு 3 ஆண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். அந்த வகையில் போலீஸ் ஸ்டேசன்களுக்கு எல்லாம் தனியாக கட்டிடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அதுமாத்திரமல்ல, கிராமங்களில் போலீஸ் ஸ்டேசன்களை ஆரம்பித்துவிடுகிறோம். போலீஸ்காரர்கள் எங்கே தங்கு வார்கள்? அந்த சப்-இன்ஸ்பெக்டர் எங்கே தங்குவார்? அந்த சர்கிள் இன்ஸ்பெக்டர் எங்கே தங்குவார்? ஏட்டு எங்கே தங்கு வார்? ஆகவே, ஆங்காங்கே போலீஸ் ஸ்டேசன் கட்டும்போதே அவர்களுக்கு உண்டான அந்த வீடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டும். அந்த வீடுகளையும் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு மூன்று ஆண்டுத் திட்டம் என்ற திட்டத்தைப் போட்டு அதற் குள்ளாக இந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, எத்தனையோ அரசியல்வாதிகள் இன்றைக்கு,— அரசியல்வாதிகள் என்றால் —இரண்டு ஆண்டுகளில் கார் என்ன, பங்களா என்ன என்று வாங்கி விடுகிறார்கள். இங்கேயுள்ள



1992 மார்ச் 17]. [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

யாரையும் நான் சொல்லவில்லை. இருந்தாலும்கூட ஒரு போலீஸ் காரர்— ஏன் என்று சொன்னால் அவருக்கு வறுமை— 2 ரூபாய் வாங்கினால் அவருக்கு உடனே நாம் கொடுக்கும் தண்டனை என்ன என்று தெரியுமா? 'Dismissed from Service' என்று போடுகிறோம். அந்தச் சூழ்நிலை இல்லாமல் இருப்ப தற்கு அவர்களுக்குச் சம்பளம் கூடுதலாக கொடுத்திருந்தாலும் கூட இன்னும் அதைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், மளிகைச் சாமான்கள் எல்லாம் அவர் களுக்கு குறைந்த விலையில் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய் திருக்கிறார்கள். அது எல்லாம் பாராட்டத்தக்கது. அதுபோல அரிசியைக் குறைந்த விலையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், போலீசுடைய குழந்தைகள் படிப் பதற்குக்கூட இதுவரை எந்த அமைச்சருடைய உள்ளத்திலும் ஒரு எண்ணம் ஏற்படவில்லை. (குறுக்கீடு) நான் உங்கள் ஒருவரையும் சொல்லவில்லை ஐயா. பழைய மந்திரிகளைச் சொல்கிறேன். எந்த அமைச்சராலும் செய்யப்படாததை நம்முடைய முதல்வர் ஒரு பெண்ணாக இருக்கிற காரணத்தினால், பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிற காரணத்தினால், இந்தப் போலீசாருடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க இவர்கள் என்ன செய்வார்கள்? இவர்களுடைய பிள்ளை களை கல்லூரிகளிலே படிக்க வைக்க வேண்டுமென்றால் அதற்கு பணம் கட்ட வேண்டுமே, அதற்கு துணிமணி வாங்க வேண்டுமே, அதற்கு புத்தகம் வாங்க வேண்டுமே, அதற்கு இவர்கள் என்ன செய்வார்கள் என்கிற காரணத்தினால்தான் அதை இந்த இலாகாவே ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதை எவ்வளவு பெரிய தாராள மனதுடன் அவர்கள் செய்திருக் கிறார்கள். இதை நான் மிகவும் பாராட்டுகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி.)

போலீசாருக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்யும்போது கண் டிப்பாக தண்ணீர் வசதி, லைட் வசதி, லெட்ரின் வசதி போன்ற வைகளையும் செய்து கொடுக்க வேண்டும். அப்படி இல்லை யென்றால் அவர்கள் தண்ணீருக்கு மிகவும் சிரமப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

அதுமாத்திரமல்ல, நம்முடைய முன்னாள் முதல்வர் உண்மை யிலேயே இந்த சட்டமன்றத்திலே ஒன்றைச் செய்ய விரும்பி னார்கள். அது பல அமைச்சர்களுக்கும் தெரியும்.

பிற்பகல் 2—00

நம்முடைய எம். ஜி. ஆர். அவர்கள் என்னையும் அமைச்சராக்க விரும்பினார்கள். அவர்களோடு சேர்ந்து எனக்கு விருந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த உத்தமத் தலைவன், 1987ஆம் ஆண்டு பல ஆண்டுக் காலம் சர்வீஸ் போட்ட ஏட்டுகளுக்கு பதவி உயர்வு கொடுத்து, அவர்களை எஸ். ஐ. ஆக்கினார்கள்,

[1992 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து
ஐ.எம்.எஃப்.எல் -ஐ இறக்குமதி செய்யப் போகிறோம் என்று
சொல்லவில்லை. இதுவரை செய்யப்பட்டு வந்துள்ளது என்
பதைத் தான் சுட்டிக்காட்டி உள்ளோம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : என்னை முதலமைச்சர்
அவர்கள் அனுமதிப்பார்கள் என்று சொன்னால், பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த 17-வது பக்கத்தை மட்டும் உங்க
ளுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

'எப்.எல். 2, எப்.எல். 3, எப்.எல். 4 முதலான இதர
உரிமதாரர்கள் உள்ளிட்ட சில்லறை விற்பனை உரிமதாரர்
களின் தேவையினை பூர்த்தி செய்வதற்கென இம்மாநிலத்தில்
உற்பத்தி செய்யப்படாத சிலவகை இனங்களை இறக்குமதி
செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.' என்று போட்டு இருக்
கிறார்கள். அதுதான் எங்களுக்கு சந்தேகம் வந்தது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முதலமைச்சர்
சொன்னது தான். ஏற்கெனவே நடந்ததைச் சொல்லி
இருக்கிறார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதிலே வந்து அவ்வளவு
கிளியராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் சொன்
னது, ஏற்கெனவே நடந்ததைச் சொன்னார்கள், நீங்கள் முதலில்
பேசியது. 'இறக்குமதி செய்ய இருக்கிறார்கள்' என்று கேட்ட
தால்தான், (குறுக்கீடு) அது தற்போது உள்ளது ஏற்கெனவே
அனுமதி அளித்தது பற்றிய விவரம், அதில் ஒன்றும் மாற்றம்
இல்லை,

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதாவது, மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே
சொல்லி இருக்கின்ற வார்த்தைகள் தான், எங்களுக்கு என்ன
விளக்கம் தெரியும்? நான் சந்தேகத்தைத் தான் கேட்டேன், இது
வந்து. இப்படிச் சொல்லி இருக்கிறார்களே? அது கடந்த ஆண்டு
என்று இருந்தால் சரி தான்; எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை
இல்லை, ஏற்கெனவே இருந்தது என்று சொன்னால். அப்படி
...ச்சிறது என்பதை மட்டும் நான் முதலமைச்சருடைய கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன், அவ்வளவுதான், அதனால் ஒரு



1992 மார்ச் 17] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பக்கம் ஐ. எம். எப். எல். என்று சொல்லக்கூடிய இண்டியன்
மேட் பாரீன் லிக்கர் தாராளமாகக் கிடைக்கின்றபோது அதிலே
வகை வகையாக, தினுசு தினுசாக, எப்படிச் சாப்பிட வேண்டும்
என்று நினைக்கிறோமோ அப்படிச் சாப்பிடுவதற்கு கிடைக்கின்ற
போது, நாட்டுச் சாராயத்தை மட்டும் தடை செய்கிறோம்
என்று நினைத்துக் கொண்டு, மதுவிலக்கு என்று சொல்வது அது
ஒருநாளும் சாத்தியக்கூறு அல்ல என்பதைத்தான் நான் அரசாங்
கத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். it is impos-
sible. அதைச் சொல்லத் தான் எங்களுக்கு கடமையேயொழிய;
ஆகவே பூரண மதுவிலக்கு வேண்டும்; அந்த பூரண மதுவிலக்குக்கு
இந்த அரசு எடுக்கின்ற எல்லா முயற்சிகளையும் நாங்கள்
ஆதரிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின்
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பூரண மதுவிலக்கை
ஆதரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் மத்திய அரசிடத்திலிருந்து நிதியை, இதற்கு
ஏற்படுகின்ற நஷ்டத்தை வாங்கித் தருவார்களானால், எந்தத்
தேதியிலிருந்து அவர்கள் வாங்கித் தருகிறார்களோ அந்தத் தேதி
யிலிருந்து நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற
தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
அதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்
பேசுகிற நேரத்தில் இரண்டு வருடங்களுக்கு 4,000 ரூபாய் மின்
கட்டணம் கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அதிலே
அவருடைய பேச்சு குழப்பமாக இருக்கிறது. எந்த அடிப்படை
யில் தெரிவிக்கிறார் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாகச் சொல்வார்.
இப்போது முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர்
அவர்கள் மத்திய அரசிடமிருந்து நிதி வாங்கித் தருவீர்களா

அவர்கள் 4, 5, 6 ஆண்டுக்காலம் என்று பதவி வகித்த பிறகு,
இதற்கு முந்தி இருந்த அரசு அவர்களைப் பதவி இறக்கம் செய்து
மீண்டும் நீங்கள் ஏட்டாக இருக்க வேண்டும் என்று அனுப்பி
விட்டார்கள், 5, 6 வருடங்கள் எஸ்.ஐ.ஆக இருந்ததால்,
அவர்களுக்குக் கொஞ்சம் சம்பளம் அதிகமாகக் கிடைத்திருக்கும்,
அதற்குப் பிறகு மீண்டும் பழைய நிலைக்கே போங்கள் என்றால்
அது நியாயமில்லை. மாண்புமிகு முதல்வரவர்கள் இதிலே
கொஞ்சம் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு மீண்டும் பதவி
உயர்வு கொடுத்து, அவர்களை நல்ல நிலைமைக்கு கொண்டு வர
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒரு விஷயத்தைப் பெருமையோடு
கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன், மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1967-க்கு முன்பு தமிழ்
நாட்டுப் போலீஸ் என்றால் இந்தியா முழுமைக்கும் பெருமை
யாக இருந்தது. அப்போதைய பெருமை மீண்டும் வளர்வதற்கு
உரிய வகையிலே இன்றைக்கு அந்த நிலைமைகள் மீண்டும் உரு
வாகி வருகிறது உங்கள் காலத்திலே, இங்கே சென்னையிலே
38 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் காணாமல்
போய்விட்டன. திருடு போய் விட்டன. அவற்றை எல்லாப்
போலீஸ் துறை கண்டுபிடித்து, இன்றைக்கு யார் யார் உடமை
யாளர்களோ அவர்களிடம் திருப்பி ஒப்படைத்ததாகப் பத்திரி
கையில் செய்தியைப் பார்த்தவுடன் நான் மகிழ்ச்சியடைந்தேன்,
பெருமையடைந்தேன், சில பஸ் நிலையங்களிலே திருடு போ
கிறது. குறிப்பாக திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்டுகளிலே, திண்டி
வனம் போன்ற இடங்களில் திருடு போய்க் கொண்டிருக்கிறது,
அப்படி திருடு போகும் சாமான்களை எல்லாம் கண்டுபிடிக்க
போலீஸ் சற்று கவனம் செலுத்தினால் அது மிகவும் நன்மையாக
இருக்கும். அந்தப் பொருள்களை எப்படியும் கண்டுபிடிக்கும்
சூழ்நிலையை உருவாக்க வேண்டும், அதற்குரிய நடவடிக்கை
எடுத்து, அந்தப் பொருள்களைத் திரும்பப்பெற முயற்சிகளை
எடுத்துக்கொள்ள வேண்டும், திண்டிவனம் போலீசுக்கு உத்தரவு
போட்டால் நல்லது, அதிலே சற்று நானும் பாதிக்கப்பட்
டிருக்கிறேன், அதைச் சொல்லத் தயாராக இல்லை.

அடுத்து, கணவன் மனைவி பகல் ஆட்டம் சினிமா பார்த்து
விட்டு ஜாலியாக கடலையைக் கொறித்துக் கொண்டு போகி
றார்கள், போராளி ஒருவன் மோட்டார் பைக்கிலே வந்து
அவர்கள் போய்க்கொண்டிருக்கும்போதே "வெடுக்" என்று
செயினை அறுத்துக் கொண்டு போகிறான், இதையெல்லாம்
தடுக்க வேண்டும்.

அடுத்தது டவுரி. முதலிலே வந்து பெண்ணை பார்க்கிறார்
கள். பெண் பிடித்திருக்கிறதென்று சொல்கிறார்கள், இத்தனை
பவுன் போடுங்கள் என்று கேட்கிறார்கள், கல்யாணப்
பொறுப்பை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி





கல்யாணம் பண்ணுகிறார்கள், அதற்குப் பிறகு சீர் வரிசையில்
சற்று குறைந்தால் அந்தப் பெண்ணை கணவனும், மாமியாரும்
கொடுமைப்படுத்தி. அந்தப் பெண்ணையே எரித்து விடுகிறார்
கள், இப்படி பல கேஸ்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கி
றோம். அப்படிப்பட்ட கேஸ்களில் யார் யார் அந்தப் பெண்
ணைக் கொலை செய்ய உடந்தையாக இருந்தார்களோ. அது
கணவனாக இருந்தாலும், மாமியாராக இருந்தாலும் அவர்களுக்கு
கோர்ட்டின் மூலமாக தூக்கு தண்டனை போன்ற கடுமையான
தண்டனை வழங்கினால்தான் பெண்களுக்கு இழைக்கப்படும்
கொடுமைகளை நிறுத்த முடியுமென்று இந்த நேரத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்
காரம் அவர்கள் கள்ளச் சாராயம் பற்றிச் சொன்னார்கள்,
அது ஆந்திராவிலேயிருந்து வருகிறது, எப்படி வருகிறதென்
றால் லாரி லாரியாக வருகிறது. அந்த லாரியின் அடியில்
சாராயம். எனக்குச் சொன்னவரிடம் நான் கேட்டேன். லாரி
அடியில் சாராய பாக்கெட் போட்டு, மேலே தேங்காய், இளநீர்,
போடுகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே, அப்படிப் போட்
டால் பாக்கெட் உடையாதா என்று. இல்லை. இல்லை; அந்த
பிளாஸ்டிக் பாக்கெட் உடையாது. அது வெயிட்டை தாங்கும்
என்று சொன்னார்கள். ஆகவே, ஆந்திராவிலேயிருந்து இப்
போது அதிகமாகக் கடத்தப்பட்டு, லாரி லாரியாக வருகிறது,
பஸ் மூலமாக வருகிறது, கார் மூலமாக வருகிறது, ரயில் மூல
மாக வருகிறது. போதாக்குறைக்கு படகு மூலமாகவும் வரு
கிறது, பாவம்; மீனவர்கள் பெயரை வைத்து வருகிறது.
அவர்கள் செய்ய மாட்டார்கள், அவர்கள் பெயரை வைத்து
படகுகள் மூலமாக பல இடங்களுக்கு வந்து விற்பனையாகிறது.
குறைந்த விலைக்கு வாங்கி வந்து, ஒரு லிட்டரில் 5 லிட்டர்
தண்ணீர் கலந்து விற்கிறார்கள், (மணி அடிக்கப்பெற்றது)
இதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும்.

அடுத்து இன்றைக்கு விபச்சார விடுதிகள் பல இடங்களில்
நடந்து கொண்டிருக்கின்றன. அது வேதனைப்படக்கூடிய ஒன்று.
அதிலே பெண்களுக்கு மட்டும் தண்டனை, ஆண்களுக்கு இல்லை
என்றால் நியாயம் இல்லை அல்லவா? அந்தப் பொம்பளை ஏதோ
பண்ணிவிட்டாள், போகிறாள், ஆனால் அந்த ஆண்களுக்குத்
தண்டனை இல்லை என்றால் அது நியாயமாகப் படவில்லை.

பிற்பகல் 2—05

ஆகவே, விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் ஆண், பெண் இரு
வருக்கும் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்,
(மேசையைத் தட்டும் ஒலி) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்குக்
கூட 100 ரூபாய் அபராதம் போட்டு விடுகிறோம், 100 ரூபாய்
அபராதம் போட்டாலும், 500 ரூபாய் அபராதம் போட்டாலும்

என்று என்னை கேட்டிருக்கிறார்கள். அந்த உறுதி சொல்லக்
கூடிய நிலையில் நான் இல்லை. நீங்கள் எல்லோரும் சேர்ந்து
என்னை அந்த அவைக்கு அனுப்பி வைத்தால் நான் போய்
உங்கள் சார்பாக கேட்க தயாராக இருக்கிறேன். நான் இந்த
அவையில் தான் உறுப்பினர். நான் இங்கே தான் கருத்துக்களைச்
சொல்ல முடியும். நான் அதற்கு வேறுவிதமாகப் பதில் சொல்ல
ஆசைப்படவில்லை.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு
விளக்கம் கேட்டிருக்கிறார்கள். காவலர்கள் இரண்டு நாட்களுக்கு
முன்னால் என்னைச் சந்தித்து எனக்குத் தந்த தகவல்களைத்
தான் நான் உங்களிடம் சொல்கிறேனே தவிர, வேறு கருத்துக்கள்
கிடையாது. என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், காவலர்
கள் குடியிருப்பில் தனி மீட்டர் இல்லாமல் மின்சாரக் கட்டணம்
இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஒரு காவலருக்கு 4,000 ரூபாய்
வீதம் வசூலிக்கப்படுகிறது. ஒரு காவலருக்கு அரசாங்கத்திலே 20
யூனிட்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையில்
அது வழங்கப்படவில்லை என்று என்னிடம் குறிப்பு தந்திருக்கி
றார்கள். அந்தக் குறிப்பை தான் நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்பட்டேன்.
அந்தக் குறிப்பிலே இருக்கிற உண்மை, உண்மையல்லாதவற்றை
விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு அமைச்சர்
அவர்களுக்கு உண்டு. இங்கே நாங்கள் சொல்கிற கருத்துக்கள்
எல்லாம் நாங்கள் பார்க்கிற, கேட்கிற, உங்கள் கவனத்திற்குக்
கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்படுகின்ற கருத்துக்கள்.
இதிலே எந்தவிதமான உள்ளுணர்வும் இல்லையென்று சொல்லிக்
கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சில குறிப்பு
களைச் சொல்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
எந்தப் பகுதியில் அப்படி இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும்.
மேலும் மொத்தமாக குவார்ட்டர்ஸ் என்று இருக்கிற இடங்களில்
ஒரு இடத்தில் மீட்டர் வைத்திருக்கிறோம். அதிலே பல்வேறு
குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே பல்வேறு குடியிருப்புகளுக்கு சேர்த்து மீட்டர் வைத்திருக்
கிற இடத்தில் இருக்கிறது என்று மொத்தமாகச் சொல்கிறாரா,
அல்லது தனியாக ஒரு வீட்டுக்கு 4,000 ரூபாய் வருகிறது என்று
சொல்கிறாரா ? அது எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைத்
தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்,
உங்களுக்கு தரப்பட்ட சில குறிப்புகளை வைத்துக்கொண்டு
பேசுவதாக இருந்தால் அதனுடைய அத்தாட்சியை நீங்கள்





ஏற்றுக்கொண்டு, அதற்கு பொறுப்பேற்றுக் கொண்டு பேசுவது
தான் சரியாக இருக்கும். என்னிடம் கொடுத்திருக்கிறார்கள்.
அது உண்மையாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்க
லாம், சரியில்லாமலும் இருக்கலாம் என்று சொல்வது சரியல்ல.
அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்வது தான் சரி
யாக இருக்கும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர்
அவர்களே, குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போதுதான்
பொறுப்பேற்க வேண்டும். கோரிக்கைகளை வைக்கிறபோது
பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சொல்வது
ஒரு கருத்து (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தெரிவித்தது
ஒரு காவலர் 4,000 ரூபாய் செலுத்த வேண்டி வருகிறபோது
எப்படி அவரால் செலுத்த முடியும் என்று கேட்டிருக்கிறீர்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, என்னிடம்
கூட காவலர்கள் 4,000 ரூபாய் வாங்குகிறார்கள் என்று எழுதிக்
கொடுத்திருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அவர்
சொல்கிறார். எழுதிக் கொடுத்தது உண்மையா, உண்மைக்கு
அப்பாற்பட்டதா என்று தெரியாமல் (குறுக்கீடு) யாராவது
ஒருவர் எழுதிக்கொடுத்து விட்டுப் போகலாம். யாரோ ஒருவர்
எழுதிக் கொடுப்பது உண்மை என்று கருதிக்கொண்டு பேசுவது
எப்படி சரியாக இருக்கும் ? (குறுக்கீடு) அதன்மீது நீங்கள் மேற்
கொண்டு விசாரித்து, அது உண்மையா, உண்மைக்கு அப்பாற்
பட்டதா என்று தெரிந்து கொண்டு வந்து தான் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, புகார்கள் வருகிறபோது மாண்புமிகு
உறுப்பினர் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லலாம். ஆனால்,
அவர்கள் ஏற்கெனவே அப்படிச் செலுத்தி இருப்பார்களானால்
அதற்கான பில்கள் அவர்களிடம் இருக்கும். எந்தப் பகுதியில்
அந்தப் புகார் இருக்கிறது என்பதையும் அவர்கள் சொல்லியிருப்
பார்கள். ஆகவே, அந்தப் பகுதியையும் சொல்ல வேண்டும்.
ஏற்கெனவே செலுத்தியதற்கு பில்கள், ரசீதுகள் இருக்குமானால்
என்னிடத்தில் கொடுத்தால் உரிய முறையில் நடவடிக்கையெடுக்
கப்படும். எனவே, எந்தப் பகுதி என்பதை அவர் குறிப்பிட்டுச்
சொல்ல வேண்டும். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது
என்பதையும் அவர் தெரிவிக்க வேண்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே,
எனக்குத் தரப்பட்ட தகவல்கள்படி தமிழகத்தில் இருக்கிற
எல்லா போலீஸ் குவார்ட்டர்ஸ்களிலும் அதே நிலைதான் இருக்
கிறது. (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேன்.

உடனே பணத்தைக் கட்டி விட்டு மீண்டும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு, காய்ச்சுபவர்களுக்கு ஒரு ஆண்டு ஜெயில் தண்டனையும், குடிப்பவர்களுக்கு 2 ஆண்டு ஜெயில் தண்டனையும் கொடுத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) நம்மால் நிச்சயமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுத்து விட முடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்ததாக, போலீஸ்காரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப் பட வேண்டும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்த வுடனே எப்படி நீ அவர்களைப் பிடித்தாய் என்று கேட்டு அந்தப் பகுதியில் உள்ள ஜனங்களே வந்து, அந்த போலீஸ் ஸ்டேஷனையே சூறையாடி விடக்கூடிய நிலைமை இருப்பது கொடுமையானது. போலீஸ் மக்களுக்கு பாதுகாப்பு கொடுக் கிறது. ஆனால், அந்த போலீசுக்கு பாதுகாப்பு கிடைப்ப தில்லை, அவர்கள் திருட்டைக் கண்டுபிடித்தாலும் கள்ளச் சாராயத்தை காய்ச்சுவதைக் கண்டுபிடித்தாலும். அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் அளவில் மக்களின் எண்ணம் இருக்கிறது என்பதைப் பார்த்தால், இது எங்கே போய் முடியும் என்பதை தயவு செய்து சிந்தனை பண்ணி, அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, தண்டனை கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, காவலர்களுக்கு வீட்டு வசதி இல்லை, வீடுகள் கட்டிக் கொடுக்காமல் போலீஸ் ஸ்டேஷனைத் திறக்கவே கூடாது. என் தொகுதியில் வீருவீட்டிலும், விளாம்பட்டியிலும் ஸ்டேஷன் திறந்து விட்டு அவர்களுக்கு வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். டி.ஜி.பி. யிடமும், ஐ.ஜி. யிடமும் இது குறித்து சொல்லி, அவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வையுங்கள் என்று கூட கேட்டிருக்கிறேன், கிராமங்களில் வீடுகள் இல்லாமல் அவர்கள் இருக்க முடியாது. பல சோதனைகள் வருகின்றன. ஆகவே அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு திட்டம் தீட்ட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சொன்னார்கள். போலீஸ் ஆளும் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. மந்திரி கூப்பிட்டால் ஓடி வருவார்கள், அதை வைத்துக் கொண்டு ஆளும் கட்சிக்காரர்கள் சொல்கிறபடி, போலீஸ் கேட்கிறது என்று நாம் சொல்லிக்கொண்டே போவோ மானால், What is right, they have done it. எது நியாயமோ, எது சரியோ அதைச் செய்யக்கூடிய அளவில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய போலீஸ் துறை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அழுத்தம்





திருத்தமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அவர் கள் நாம் நினைச் நிருப்பக்கூடிய வகையில் பேசுவோமே யானால் அது நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் நல்லதாக இருக்காது என்பதை இப்படி பேசியவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்,

பிறகு கைதிகள் ஜெயிலில் இருந்து தப்பியோடிவிடுகிறார்கள். எப்படி ஓடுகிறார்கள், யார் அதற்கு உடந்தையாக இருக்கிறார் கள் என்று நமக்குத் தெரியாது. சிறைக்கு சுற்றுப்புறச் சுவர் இருக்கிறது, அந்த சுவற்றை யாராவது தொட்டால் சத்தம் உண்டாக்கக்கூடிய அளவுக்கு அமைத்து, ஜெயிலுக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய அதிகாரிக்கு தெரியக்கூடிய அளவில் ஒரு ஓசை கொடுக்கக்கூடிய அளவில் ஏதாவது செய்ய முடியுமா என்பதை யும் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு ஏற்பாடு செய்திருக் கிறோம். இதை நாளை என் பதிலுரையில் அறிவிப்பேன் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நல்லது. பிறகு காஞ்சி புரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், திருவொற்றியூர் ஆகிய பகுதிகளுக்குத்தான் ஆந்திராவிலிருந்து கள்ளச் சாராயம் வரு கிறது என்று சொல்லப்படுகிறது. அதைச் சற்றுக் கவனமாகப் பார்க்க வேண்டும். இவைகள் யார் தொகுதிகள் என்று நான் பார்க்கவில்லை. எனக்கு வந்த தகவலை முதல்வர் அவர்களிட மும், இந்த அவையிலும் சொல்ல வேண்டும், அது எப்படி வரு கிறது, எங்கேயிருந்து வருகிறது, யார் மூலமாக வருகிறது என்று சற்று கவனித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க லாம். அதற்கு தகுந்த தண்டனையும் கொடுத்து கள்ளச் சாராயம் ஆந்திராவிலிருந்து வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, போதை மருந்து. இது ரொம்ப கொடுமையான வேதனை தரக்கூடிய ஒன்று, கல்லூரிகள், பள்ளிகளில் விற்கப் படுகிறது. பையன்களுக்குத்தான் விற்கிறார்கள் என்றால், இப்போது பெண்களுக்குக்கூட இந்த போதை மருந்தை விற்பதால் அவர்களும் வாங்கி சாப்பிடுவதாகக் கேள்விப்படுகிறோம். மனம் ரொம்ப வேதனைப்படுகிறது. இந்த போதை மருந்தை விற்ப வர்கள் யாராக இருந்தாலும், பிரவுன் சுகர், கஞ்சா இந்த மாதிரி விற்பவர்கள் யாராக இருந்தாலும், தண்டனை கொடுக்க வேண்டும். இந்த மாதிரி வாங்கி சாப்பிட்டவுடனே தன்னை மறந்து விடுகிறார்கள், நினைவும் போய் விடுகிறது என்கிறார்கள். பெண் குழந்தைகள் கூட இதற்கு ஆளாக்கப்படுவதாக தெரி

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உட்காருங்கள். அதே
நிலைதான் என்று நீங்கள் சொல்கிறபோது அதற்கு பொறுப்
பேற்றுக் கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-30

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் நான்
அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு). சாதாரண
மாக அடுக்குமாடிக் கட்டிடங்களாக வீடு கட்டியிருக்கிற இடத்தி
லேகூட, 20, 30 குடும்பங்கள் ஒன்றாக இருக்கின்ற இடங்
களிலே ஒரே மீட்டரை வைத்து, ஒட்டு மொத்தமாக ஆகிற
அந்த மீட்டர் சார்ஜை பகிர்ந்துகொள்கிற முறை கூட
இருக்கிறது. எனவே, துறையினுடைய சார்பாக அந்தப்
பணம் வசூலிக்கப்படவில்லை. அது, எலக்ட்ரிசிட்டி போர்ட்
சார்பாக வசூலிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அங்கே என்ன
மீட்டர் சார்ஜ் ஆகி இருக்கிறதோ, மொத்தத்திலே, அதற்கு
மேலே அவர்கள் நிச்சயமாக வசூலித்து இருக்கவே முடியாது.
எனவே, துறையிலே போய், ஏதோ, மொத்தமாக நாலா
யிரம் ரூபாய் வாங்குகிறார்கள் என்று சொல்கிற குற்றச்சாட்டு
தவறானது. அங்கே குடியிருக்கின்ற குடியிருப்புகள், 100 பேர்
இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த 100 பேர்களுக்கும்
மொத்தமாக எவ்வளவு மீட்டர் சார்ஜ் ஆகிறதோ, அதிலே
வீட்டுக்கு இவ்வளவு என்றுதான் பிரித்துத்தான் வாங்கி இருக்க
முடியுமே தவிர, துறையின் சார்பாக 2 ஆண்டுக்காலத்திற்கு
ஏதோ மொத்தமாக நாலாயிரம் ரூபாய் வாங்கி இருக்க
முடியாது. நீங்களே இதை யோசித்து இருந்தால் கூட அது
புரிந்து இருக்க முடியும் என்று கருதுகிறேன். எனவே, இதைப்
பற்றி தனியாக, அவர்கள் பார்ப்பது தவறு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இதுபற்றிய குறிப்புகள்
உங்களிடத்திலே இருந்தால், அதை அமைச்சரிடத்திலே கொடுத்து
விடவும், நேரம் ஆகிவிட்டது, அடுத்த பிரச்சினைக்குப் போகவும்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : எனவே, நான்
சொன்ன குறைபாடுகள், அவைகளை நிவர்த்தி செய்ய
வேண்டிய முறைகள், இந்தச் சாதாரண காவல் நிலையங்
களிலே பாலை வார்க்கக் கூடிய, சாதாரண காவல் துறைக்
காரர்களுக்குக் கிடைக்க வேண்டிய உற்சாகம், பெரிய அதி
காரிகள் மத்தியிலே ஏற்பட வேண்டிய மனத் தெம்பு, அந்த
மனத்தெம்பின் விளைவாக தமிழ்நாட்டு காவல் துறைக்கு
கிடைக்கின்ற ஒரு புதிய பார்வை, இவை எல்லாவற்றிற்கும்
இந்த அரசு வழி செய்ய வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.



**1987 முதல் 1991 வரை கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள், உடைமைகள் மற்றும் உயிர்ச் சேதம், காப்பாற்றப்பட்ட உடைமைகள்/உயிர்களின் விவரம்.**

| ஆண்டு. | தீ விபத்துக்கள் எண்ணிக்கை. | சேதம். | | காப்பாற்றப்பட்டவை. | |
|---|---|---|---|---|---|
| | | உடைமை. | உயிர்கள். | உடைமை. | உயிர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | | ரூ. | |
| 1987 | 10,668 | 8,20,36,000 | 182 | 60,72,37,235 | 271 |
| 1988 | 10,200 | 3,98,75,900 | 126 | 35,01,03,900 | 148 |
| 1989 | 10,330 | 4,72,53,750 | 178 | 64,23,41,510 | 211 |
| 1990 | 10,341 | 7,36,94,873 | 140 | 64,32,81,907 | 274 |
| 1991 | 12,157 | 10,47,48,851 | 98 | 53,42,44,763 | 99 |

165045
600 008

கிறது. இதிலே முதலமைச்சரும், அமைச்சர்களும் சற்று கவனம் செலுத்தி இந்த நிலைமை வராமல் தடுப்பதற்கும், போதை மாத்திரை விற்பவர்களுக்கு கடுமையான தண்டனையும் கொடுப் போமானால் அது மிக சிறந்ததாக இருக்கும். பள்ளி மாணவர் களும், கல்லூரி மாணவர்களும் பாதுகாப்பாக இருப்பார்கள், எனவே போலீஸ் துறையில் அதிகம் பேர்களை செலக்ஷன் செய்து எடுக்க வேண்டும். போலீஸ் போதாது. பந்தோபஸ்துக்கு 4, 5 பேர் இருக்கிறார்கள். 6 போலீஸ் இருக்கிறார்கள், பத்து போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஓடுகிறார் கள், கடைசியில் ஸ்டேஷனில் ஆள் இருப்பதில்லை, அந்த நிலைமை இல்லாமல் இருக்க அதிகப்படியான ஆட்களை போலீஸ் பணிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முழுமையாக இந்த போலீஸ் துறை மானியத்தை ஆதரித்து. நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நன்றியையும். வணக்கத்தை யும் பேரவைத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் அம்மா அவர் களுக்கும் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

பிற்பகல் 2–10

## 6, அரசினர் தீர்மானம்.

### விதி 32ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

'' சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 18–3–1992 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசின் அலுவல்களுக்காக எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க,

மறுப்போரே இல்லை.

**தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.**



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-3-1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

ஏதுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93 (தமிழ், ஆங்கிலம்).

21. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு, 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

22. கோரிக்கை எண் 15—தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள் மற்றும் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

---

## இணைப்பு-1

270 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

*1992 மார்ச் 17]*

### கோரிக்கை எண் 2.
### 1992-93
### மாநில ஆயத் தீர்வை குறித்த கொள்கை விளக்கம்.

**I. மதுவிலக்கு கொள்கையின் வரலாற்றுப் பின்னணியும் வளர்ச்சியும்.**

போதையூட்டும் பானங்களையும் மருந்துகளையும்
பயன்படுத்துவது இந்தியாவில் நெடுநாட்களாக இருந்து
வரும் பழக்கமாகும். இது வேதகாலத்திற்கோ அதற்கும்
முன்னரோ ஏற்பட்டதாகும். வேறு வார்த்தைகளில்
சொல்லுவதானால் இவை தொன்றுதொட்டே பழக்கத்
தில் உள்ளனவாகும். ஆனாலும் காலந்தொட்டே
இவைகளைப் பயன்படுத்துவதை சமூகம் ஏற்றுக்
கொள்ளவில்லை ; வெறுத்தே வந்தது. இருப்பினும்
குடிப்பழக்கம் குறையவில்லை ; மாறாக அதிக அளவில்
வளர்ந்தது. சாராயம் கலந்த பானங்களை குடிப்பதும்
போதைப் பொருள்களின் வியாபாரமும் விரிவடைந்த
தோடு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்
புதிய வேகம் பெறலாயிற்று. இருப்பினும் மதுவிலக்கு
கொள்கைக்கான இயக்கம் மெதுவாக ஆனால்
வலுவாக தோன்றலாயிற்று. 1930ஆம் ஆண்டின் பிற்
பகுதியில் இந்தியாவின் பல மாநிலங்களில் மது விலக்கிற்
கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டன. காலப் போக்கில் மதுவிலக்குக் கொள்கையில்
மாற்றங்களும் திருத்தங்களும் உண்டாயின. இந்தியா
வில் மதுவிலக்கை முதன்முதலாக அமுல்படுத்தியதில்
தன்னிகரில்லாத பெருமையை தமிழ்நாடு பெற்றது.
முதன் முதலாக அக்டோபர் 1937-இல் சேலம்
மாவட்டத்தில் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டது.
பின்னர் தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களிலும்
அமுல்படுத்தப்பட்டது. இறுதியாக 1948ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளில் பூரண
மதுவிலக்கு தமிழ்நாட்டில் அமுல்படுத்தப்பட்டது.

1937-இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு
சட்டத்தின் செயல்பாடு முதன்முறையாக 1971
ஆகஸ்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

1973 ஆகஸ்டில் கள்ளுக்கடைகளையும் 1974 செப்டம்ப
ரில் சாராயக் கடைகளையும் ஒழித்து மீண்டும் மது
விலக்கு அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும் பிற
மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தியா
வில் உற்பத்தி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுவகை
களின் விற்பனை தொடர்ந்து நடந்து வந்தது. உரிமம்
பெற்றவர்களுக்கு விற்கப்பட்டன. அப்போது இம்
மாநிலத்தில் மது உற்பத்தி செய்வதற்கான உரிமம்
யாருக்கும் வழங்கப்படவில்லை.

மீண்டும் 1981 மே மாதத்தில் முந்தைய நிலையில்
மாற்றம் செய்யப்பட்டு மதுவிலக்கு சட்டத்தின் விதிகள்
தளர்த்தப்பட்டு கள் மற்றும் சாராய விற்பனை
அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் முதல்முறையாக
மது உற்பத்தி செய்வதற்கான உரிமம் தனியார் துறை
யில் நால்வருக்கும், கூட்டுத்துறையில் ஒன்றும் வழங்கப்
பட்டன. இது தவிர தனியார் துறையின் ஒரு பீர்
தொழிற்சாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கள்,
சாராயம் மற்றும் அயல்நாட்டு மது பானங்களை
குடிப்பதற்கு தன் அனுமதி (பர்மிட்) முறை கொண்டு
வரப்பட்டது. கள்ளுக்கடைகள் ஒப்பந்தப்புள்ளி மற்றும்
ஏல முறையில் அனுமதிக்கப்பட்டன.

முதலில் சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்
களுக்கு கொடுக்கப்பட்டது. தனிப்பட்டவர்களுக்கு
கொடுக்கப்பட்டுவந்த இந்தச் சாராய உற்பத்தி
நிறுவனங்களால், உற்பத்தி செய்யப்பட்ட சாராயத்தை
மொத்த வியாபாரம் செய்வதற்கு 15 தனி நபர்கள்
தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இந்த மொத்த வியாபாரி
கள் சாராயத்தைச் சில்லறை வியாபாரிகளுக்கு விநி
யோகித்து வந்தார்கள். இந்தச் சில்லறை கடைகள்
முதலில் ஏலம் மற்றும் ஒப்பந்த முறையில் விடப்பட்டன.
இந்த முறை 1985ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
15ஆம் நாள் வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

1983 ஜூலை மாதத்தில் தமிழ்நாடு வாணிபக்
கழகம் (டாஸ்மாக்) தோற்றுவிக்கப்பட்டு இந்தியாவில்
தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த
வியாபாரத்தை எடுத்துக்கொண்டது. மேலும் இதுவரை



15 தனிப்பட்ட நபர்களிடமிருந்து வந்த மொத்த
வியாபாரத்தை இக்கழகம் 1983 ஜூலை 25 ஆம் நாளி
லிருந்து எடுத்துக்கொண்டது. இருந்தபோதிலும்,
சாராய உற்பத்தி தொடர்ந்து தனிப்பட்டவர்களிடமே
இருந்து வந்தது. மொத்த வியாபாரத்தை எடுத்துக்
கொண்ட டாஸ்மாக் நிறுவனம், சில்லறை வியாபாரத்
தையும் நடத்த வேண்டுமென்று அரசு 1985-இல் முடிவு
செய்தது. இருப்பினும், சில்லறை வியாபாரத்தை டாஸ்
மாக் நிறுவனம் நேரடியாக நடத்தாமல், சில்லறை
வியாபாரம் செய்கின்ற உரிமையைத் தனிப்பட்ட நபர்
களுக்கு ஏஜென்சி முறையில் கொடுத்தது. இதில் பல
சட்டச் சிக்கல்கள் ஏற்படவே, மறுபடியும், சில்லறை
வியாபாரத்தை 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள்
16 ஆம் நாள் முதல் ஒப்பந்த மற்றும் ஏல முறைக்கு
அரசு கொண்டு வந்தது.

பின்னர் மதுவிலக்கு கொள்கை மறு ஆய்வு செய்யப்
பட்டு, மாற்றம் பெற்றது. 1987 சனவரி 1ஆம் நாள்
முதல், கள், சாராய உற்பத்தி விற்பனை, பயன்பாடு
ஆகியவை தமிழ்நாட்டில் முற்றிலுமாகத் தடை செய்
யப்பட்டது. எனினும், 2,037 மதுபான சில்லறை
விற்பனைக் கடைகளும், இந்தியாவில் தயாரிக்கப்படும்
அயல்நாட்டு மதுபான தொழிற்சாலைகள் ஐந்தும், பீர்
தொழிற்சாலை ஒன்றும் தொடர்ந்து இயங்கிவர அனு
மதி அளிக்கப்பட்டது. 1989 சனவரியில், அப்போதைய
அரசு, மதுவிலக்குச் சட்டத்திலும், விதிகளிலும் பல
திருத்தங்களை கொண்டு வந்தது. இந்தியாவில் தயாரிக்
கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைச் சில்லறை கடை
களின் வாயிலாக விற்பனை செய்வதற்காக, உரிமமும்
உரிமையும் வழங்கும் பொருட்டு, ஒப்பந்த ஏலமுறை
கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும்
அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள்
சிலவும், தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், நுகர்
பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள்
ஆகியவற்றிடம் நியமன அடிப்படையில் ஒதுக்கப்பட்டன.

தமிழ்நாடு சாராயக் கழகம் என்ற ஒரு பொதுத்
துறை நிறுவனம் ஏற்படுத்தி நாட்டு மது உற்பத்தி
செய்யும் ஏகபோக உரிமை அந்த கழகத்திற்கு வழங்கப்

பட்டது. அரசால் அனுமதிக்கப்பட்டபடி தமிழ்நாடு சாராவிக் கழகம் ஒரு பீர் வடிசாலையை வாங்கி பீர் உற்பத்தி செய்தது. நாட்டு மதுவின் மொத்த விற்பனை தமிழ்நாடு வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மாநிலத்தில் 3,636 கடைகளில் நாட்டு மது விற்பனை செய்யப்பட்டது.

இந்த அரசு பதவியேற்றவுடன் 1991 ஜூலை 16 ஆம் தேதி முதல் நாட்டு மது விற்பனையை நிறுத்தியது. இந்தக் கொள்கை முடிவு சமுதாய மற்றும் பொருளாதார நடவடிக்கையாக பொதுவாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களை குடியின் தீமையிலிருந்து மீட்கவும், குறிப்பாக, ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றத்தையும் மறுவாழ்வையும் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகும். இதன் காரணமாக 1991-92 இல் ஆயத்தீர்வை வருவாயில் ரூபாய் 322 கோடி இழப்பு ஏற்பட்டது. ஒரு முழு ஆண்டில் ரூபாய் 391 கோடி இழப்பு ஏற்படும். தனியார் நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு சாராவிக் கழகத்தால் வாங்கப்பட்ட பீர் வடிசாலை அரசின் முதலீட்டை திரும்பப் பெற உறுதி செய்து கொண்டு மீண்டும் அவர்களுக்கே 31—1—1992 இல் திருப்பித் தரப்பட்டது.

## II. தற்போதைய அரசின் மதுவிலக்குக் கொள்கை.

(1) பூரண மதுவிலக்கே இந்த அரசின் கொள்கையாகும். இந்த லட்சியத்தின் முதல்படியாக 1991 ஜூலை 16 ஆம் தேதியிலிருந்து நாட்டு மதுவிற்பனை நிறுத்தப்பட்டு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது உற்பத்தியும், கடைகளில் அவைகளின் விற்பனையும் தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

(2) கருப்பஞ் சாற்றுக் கசண்டின் மீது சில்லறை உபயோகத்திற்கான தடையை நீக்கவும் கூட்டுறவுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களோடு தனியார் துறையிலும் வடிசாலைகள் அமைக்க அனுமதி வழங்கவும், மூலப் பொருளாக கருப்பஞ்சாற்றுக் கசண்டை



பயன்படுத்தி வடிசாலைகள் அமைக்க சர்க்கரை ஆலை
களுக்கு முன்னுரிமை வழங்கவும், அவ்வாறு அனுமதிக்
கும்போது கூட்டுறவுத் துறைக்கும் பொதுத்துறைக்கும்
சலுகை தரவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(3) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது
பானவகைகளுக்கு உற்பத்தியாளர், மொத்த விற்பனை
யாளர் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கான
விலையை அரசே நிர்ணயம் செய்யவும் தற்போதைய
முறையை மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. மாறாக
முன்பிருந்ததைப் போல உற்பத்தியாளர்களுடன் பேச்சு
வார்த்தை மூலமாக தமிழ்நாடு வாணிபக் கழகம் உற்
பத்தியாளர்களுக்கான விலையை நிர்ணயிக்க அனுமதிக்
கப்பட்டுள்ளது. மொத்த மற்றும் சில்லறை விற்பனை
யாளர்களுக்குக் குறைந்த பட்சம் 10 விழுக்காடும்
மற்றும் உயர்ந்த பட்சம் 20 விழுக்காடும் லாப
விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(4) கள்ளச்சாராயம் வடித்தல், எடுத்துச் செல்லு
தல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், மற்ற
மாநிலங்களிலிருந்து கடத்தி வருதல் போன்ற செயல்
களை அறவே ஒழிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(5) மாநிலத்தில் மதுவிலக்குப் பிரச்சாரப்பணிகளை
பல்வேறு நடவடிக்கைகள் மூலமும், சாதனங்கள்
மூலமும் முனைப்புடன் செயல்படுத்த முடிவு செய்யப்
பட்டுள்ளது.

(6) மதுவிக்கு குற்றங்களுக்கான இணக்க தீர்ப்பு
முறைக்கான விதிகளை அமல்படுத்தி நெடுநாட்களாக
வழக்கு மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை
முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## III. மது தயாரித்து வழங்குவதற்கான மூலப்பொருள் வழங்கல்—ஆதாரங்கள் :—

கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் சாராவி :

(i) கருப்பஞ்சாற்றுக் கசண்டு :

இம்மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் உள்ளன.
சர்க்கரை தயாரிப்பின் உபப்பொருள் கருப்பஞ்சாற்றுக்
கசண்டாகும். இது சாராவித் தயாரிப்பதற்கான மூலப்
பொருள் ஆகும். சாராவியே மது மற்றும் மருந்துப்
பொருள் மற்றும் இரசாயனப் பொருள் தயாரிக்கப்
பயன்படுகிறது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டினை சேகரித்தல், விற்பனை மற்றும் போக்குவரத்து ஆகியவை 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டுகட்டுப்பாட்டு ஆணையினால் நிர்வகிக்கப்படுகிறது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் மாநிலத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டாளர் ஆவார்.

இவ்வரசு பதவி ஏற்ற பின் சர்க்கரை ஆலைகளில் தேங்கியுள்ள கருப்பஞ்சாற்று கசண்டு பற்றிய இடர்பாடு கருத்தில் கொள்ளப்பட்டது. நீண்ட கால மற்றும் குறுகியக் கால நடவடிக்கைகள் மூலம் இவ்விடர்பாடுகளைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் மைய அரசு முன்பு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு 40,000 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை ஏற்றுமதி செய்ய கேட்டுக்கொண்டதற்கு மேலும் கூடுதலாக 60,000 டன் ஏற்றுமதி செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை ஏற்றுமதி செய்ய மைய அரசு இசைவு வழங்கியுள்ளது. பிறிதொரு நடவடிக்கையாக கருப்பஞ்சாற்றினை மாட்டுத் தீவனகள் மற்றும் கருப்பஞ் சாற்றுக் கசண்டைப் பயன் படுத்தும் இதுபோன்ற இனங்களைச் சேர்ந்த தொழில் களுக்கும் வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையினை நீக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இனங்களுக்கான அதிகமான அளவு ஒதுக்கீடு செய்யவும், மதுவிலக்கு ஆணையருக்கு அறிவுரை வழங் கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளில் தேங்கியுள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்கும் பொருட்டு 1991-92 கருப்பஞ்சாற்று கசண்டு ஆண்டில் ஒரு இலட்சம் மெட் ரிக் டன் கசண்டினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மைய அரசினை அணுகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலிருந்து 1991-92-இல் கேரளா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கட்கு 21,500 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை தற்காலிகமாக மாநிலங்



களிடையிலான ஒதுக்கீட்டின் கீழ் மைய அரசு கீழ்கண்ட வாறு ஒதுக்கியுள்ளது :—

| | மெட்ரிக் டன். |
|---|---|
| கேரளா .. .. .. | 11,500 |
| மேற்கு வங்காளம் .. .. | 10,000 |

தற்போது இயங்கி வரும் வடிசாலைகளிடமிருந்து வந்துள்ள கூடுதல் ஒதுக்கீடு கோரிக்கைகளையும் அவைகளை தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. சில வடிசாலைகளிடமிருந்து இவ்வகையில் பெறப்பட்ட கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

கூடுதல் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை உபயோகிக்கும் விதத்தில் ஒரு முக்கிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் சொந்த உபயோகத்திற்கென கசண்டு கோரும் கோரிக்கையுடன் தனியார் நிறுவனங்கள் வடிசாலை அமைக்கக் கோரினால் கசண்டு ஒதுக்கீடு செய்யலாம் எனவும் அவ்விதம் கொடுக்கும்போது சர்க்கரை ஆலைகளுக்கும் அவற்றில் முன் உரிமையாக கூட்டுறவு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களுக்கு முன் உரிமைத்தரப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள கொள்கை முடிவின்படி நான்கு தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு புது வடி சாலைகள் அமைக்க கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | மெட்ரிக் டன். |
|---|---|
| 1. திருவாளர்கள் அருணா சுகர் எண்டர்பிரைசஸ், தென்ஆற்காடு. | 50,000 |
| 2. திருவாளர்கள் ஆரூரான் சர்க்கரை ஆலை, தஞ்சாவூர். | 50,000 |

| | மெட்ரிக் டன் |
|---|---|
| 3. திருவாளர்கள் கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம், திருச்சிராப்பள்ளி. | 40,000 |
| 4. திருவாளர்கள் ராஜஸ்ரீ சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம், மதுரை. | 40,000 |
| | 1,80,000 |

(ii) சாராவி வடிசாலைகள் :

இம்மாநிலத்தில் கீழ்க்காணும் 8 வடிசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன—

1. திருவாளர்கள் சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், தென் ஆற்காடு மாவட்டம்.

2. திருச்சி வடிசாலைகள் மற்றும் இரசாயன நிறுவனம், திருச்சிராப்பள்ளி.

3. ஈ.ஐ.டி. பாரி (இந்தியா நிறுவனம்), நெல்லிக் குப்பம், தென் ஆற்காடு.

4. கெம்பிளாஸ்ட், காடாம்புளியூர். தென் ஆற்காடு மாவட்டம்.

5. கோயம்புத்தூர் சாராவி மற்றும் இரசாயன நிறுவனம், கோயம்புத்தூர்.

6. ஓரியண்ட் இரசாயனங்கள், செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம்.

7. கெம்பிளாஸ்ட், மரிகம்பள்ளி, தர்மபுரி மாவட்டம்.

8. சக்தி சர்க்கரை நிறுவனம், சக்திநகர், பெரியார் மாவட்டம்.



இவைகளின் அனுமதிக்கப்பட்ட ஆண்டு உற்பத்தித் திறன் 948.80 இலட்சம் லிட்டர்கள் சாராவி ஆகும். 1990-91ஆம் ஆண்டில் (டிசம்பர் 1990 முதல் நவம்பர் 1991 வரை) இவ் வடிசாலைகள் 768 இலட்சம் பல்க் லிட்டர் சாராவியை உற்பத்தி செய்தன. 1990-இல் இரண்டு வடிசாலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவ ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை யாவன:—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஒவ்வொன்றுக்கும் 55,000 டன் கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள்:—

இம்மாநிலத்தில் கீழ்க்காணும் ஐந்து இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளன.

(1) திருவாளர்கள் பாலாஜி வடிசாலை நிறுவனம்.

(2) திருவாளர்கள் எம். பி. வடிசாலை நிறுவனம்.

(3) திருவாளர்கள் மோகன் வடிப்பு மற்றும் வடிசாலை நிறுவனம்.

(4) திருவாளர்கள் சிவா வடிசாலை நிறுவனம்.

(5) திருவாளர்கள் சதர்ன் அக்கிரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம்.

இவைகளின் ஆண்டு மொத்த உற்பத்தித் திறன் 369 இலட்ச பல்க் லிட்டர்கள் ஆகும். ஏப்ரல் 1991 முதல் டிசம்பர் 1991 வரை இவைகள் மொத்தம் 34.99 இலட்சம் பெட்டி மதுவகைகளை உற்பத்தி செய்துள்ளன. இது 314.94 இலட்ச பல்க் லிட்டர் சாராவிக்கு நிகரானதாகும்.

**(iv) பீர் வடிப்பாலைகள்:**

தற்பொழுது இம்மாநிலத்தில் இரண்டு தனியார் நிறுவன பீர் வடிப்பாலைகள் உள்ளன. அவை திருவாளர்கள் மோகன் பீர்வடிப்பு மற்றும் வடிப்பாலை நிறுவனம் மற்றும் எம். பி. வடிப்பாலை நிறுவனம் ஆகும். 1991 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 28.98 இலட்சம் பெட்டிகள் பீர் தயாரிக்கப்பட்டன. இது 226.02 இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு சமம் ஆகும்.

**(v) தமிழ்நாடு சாராவிக் கழகம்:**

**1. தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டமை:**

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது பானங்கள் மற்றும் பீர் ஆகியவைகளைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளுவதற்கென அரசுத் துறையில் தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டது. இக் கழகம் ரூ. 6 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாளன்று 1956ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முறையாக இணைக்கப்பட்டது.

**2. பீர் தயாரித்தல்:**

தமிழ்நாடு சாராவிக் கழகம், திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்திடமிருந்து பீர் வடிசாலையை ஈட்டுக்கடன் பொறுப்புக்கள் உள்ளிட்டு ரூ. 8.02 கோடிக்கு வாங்கி 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பீர் தயாரித்து புட்டிகளில் அடைக்கும் பணியைத் தொடங்கியது.

**3. நாட்டு மது தயாரித்தல்:**

பின்னர் 1990ஆம் ஆண்டில் முந்தைய அரசால் நாட்டு மது திட்டம் புகுத்தப்பட்டபோது, தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் வாயிலாக நாட்டு மது மொத்த விற்பனை செய்வதற்கென, நாட்டு மது தயாரிக்கும் பணி தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் வசம் விடப் பட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகம் தனது நாட்டு மது தயாரிக்கும் 11 பிரிவுகள் வாயிலாக 20-7-1990 முதற்கொண்டு நாட்டு மது தயாரிக்கத் தொடங்கியது.



**4. நாட்டு மது தயாரிக்கும் தொழிற்சாலைகளை மூடுதல்.**

இம்மாநிலத்தில் 16-7-1991இல் இருந்து நாட்டு மது விற்பனை நிறுத்தப்பட்டதன் விளைவாக, தமிழ் நாடு சாராவிக் கழகத்தை கலைத்துவிட்டு, அதன் பீர் வடிப்பாலையை தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்க தற்போதைய அரசு ஆணை பிறப்பித்தது. அதனால் தமிழ்நாடு சாராவிக் கழகம், அதன் நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளில் நாட்டு மது உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டது. நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டிருந்த பணியாளர்கள் அனைவரையும் பணி குறைப்பு செய்ய நேரிட்டது. எனினும், புதிதாகப் பணியாளர்கள் எடுக்கும்போது, வேலை வாய்ப்பகங்கள் வாயிலாக தேர்ந்தெடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள முறையைத் தளர்த்தி, தமிழ்நாடு சாராவிக் கழகத்திலிருந்து பணிக் குறைப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என எல்லா அரசுத்துறைத் தலைவர்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களின் தலைமைச் செயலாட்சி அலுவலர்களுக்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

**5. பீர் வடிப்பாலைப் பிரிவை விற்பனை செய்தமை.**

பீர் வடிப்பாலைப் பிரிவின் முந்தைய சொந்தக் காரர்களான திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினர் செய்து கொண்ட முறையீட்டின் பேரில், அரசு பீர் வடிப்பாலைப் பிரிவை தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்கச் செய்திருந்த முடிவை மறுபரிசீலனை செய்து, பீர் வடிப்பாலைப் பிரிவை திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத் தினருக்கு விற்றுவிட முடிவு செய்தது. அரசு (விற்பனை சம்பந்தப்பட்ட) மதிப்பீடு செய்தல் மற்றும் இதர வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்

குறித்து பரிந்துரைகள் செய்வதற்கென உள், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், பல முதுநிலை இந்திய ஆட்சிப்பணி (I.A.S.) அலுவலர்கள் மற்றும் நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், எம்பீ வடிப்பாலை நிறுவனம் தமிழ்நாடு சாராவிக் கழகத் திற்கு 30–9–1991 நாளன்றைய விலை அடிப் படையில் ரூ. 10.44 கோடி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கும் மற்றும் வேறு சில வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகிய வற்றிற்கும் உட்பட்டு திருவாளர்கள் எம்பீ வடிப் பாலை நிறுவத்தினருக்கு பீர் வடிப்பாலைப் பிரிவை விற்பதற்கு தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்கு அரசு இசைவளித்தது. 31–1–1992 அன்று பீர் வடிப்பாலையின் பொறுப்பு, திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினர் வசம் தமிழ்நாடு சாராவிக் கழகத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**6. நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளை விற்பனை செய்தல்.**

தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொண்டதன் பேரில் தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்குச் சொந்தமான நாட்டு மது தயாரிப்பு பிரிவுகளின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கென உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவரா கவும் மற்றும் எட்டு அலுவலர்களை உறுப்பினர் களாகவும் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. பெரும்பாலான நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளின் சொத்துக்களை பெரும் கூட்டுறவுத் துறை நிறுவனமான ஆவினுக்கு (தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்) விற்கலாம் என்ற கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**IV. மதுவகை வழங்கல் :**

**(i) மொத்த வணிகம் :**

மதுவகைகளைப் பல்வேறு சில்லறை உரிமைதாரர் களுக்கு வழங்கும் பணியைத் தமிழ்நாடு வாணிபக்



கழகம் மேற்கொள்கிறது ; இக்கழகத்திடம், மொத்த வணிகக் கிடங்கு உரிமமும், 30 கிளை வாணிபக் கிடங்கு உரிமங்களும் உள்ளன. தமிழ்நாடு வாணிபக் கழகம் வழங்கும் மதுவகைகள் தவிர, வேறெந்த வகை மதுவையும் சில்லறைக் கடைகளில் விற்பனை செய்ய இயலாது. வேறு வகையில் கூறின், தமிழ்நாடு வாணிபக் கழகம், இம்மாநிலத்தின் ஏகபோக விற்பனை நிறுவனமாக உள்ளது.

**(ii) தமிழ்நாடு வாணிபக் கழகம் ('டாஸ்மாக்') :**

'டாஸ்மாக்' தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்த மான ஒரு நிறுவனமாகும். இதுவொன்றே 1983ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இயங்கி வருகின்ற, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவி யையும், பீரையும் விற்பனை செய்ய உரிமம் பெற்றுள்ள மொத்த விற்பனை முகமை நிறுவனம் ஆகும். சில்லறை உரிமதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப் படும் வெளிநாட்டு சாராவியையும், பீரையும் வழங்கு வதற்காக இம்மாநிலத்தில், இக்கழகத்திற்கு 5 வட்டார அலுவலகங்களும், 30 மொத்த விற்பனை நிலையங் களும் உள்ளன.

தமிழ்நாடு வாணிபக் கழகம் 5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் பதிவு செய்யப் பட்டது. இம்மாநில அரசு, இதுவரை, ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள 34,000 மூலதனப் பங்குகளை வைத்துள்ளது ; ரூபாய் 3.4 கோடி ரூபாய் செலுத்தி யுள்ளது. இப்பங்குத் தொகையளிப்புத் தவிர, தேவைப்படும்போதெல்லாம் அரசு, வழிவகை முன் பணமும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைப் பொருட்கள், இம்மாநிலத்திலுள்ள தயாரிப்புாளர்களிடமிருந்தும், ஏனைய மாநிலங்களி லிருந்தும் கொள்முதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட மதுவகைப் பொருட்கள்,

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது
வகைகளின் மொத்தம் 30 கிடங்குகள் வாயிலாக
சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.
1991-92ஆம் ஆண்டில் (29-2-1992 வரை)
இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைப்
பொருட்கள் 56 இலட்சம் பெட்டிகளுக்கு மேலாகவும்
பீர் 47 இலட்சம் பெட்டிகளுக்கு மேலாகவும்,
விற்பனை செய்யப்பட்டன. தமிழ்நாடு வாணிபக்
கழகம் சில்லறை விற்பனையையும் மேற்கொண்
டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள முக்கிய மாநகர்
மற்றும் நகரங்களில் இக்கழகம் 57 சில்லறை
விற்பனைக் கடைகளையும் நடத்தி வருகின்றது.
இக்கழகம் 1991-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள்
15-ஆம் நாள் வரை நாட்டு மது விற்பனையில் மொத்த
விற்பனை நிறுவனமாகவும் செயல்பட்டு வந்தது.

(iii) **சில்லறை விற்பனைக் கடைகள் :**

மாநில அரசுக் கருவூலத்திற்கு அதிக வருவாய்
திரட்டும் நோக்கத்துடனும், வேண்டப்பட்டவர்
களுக்கு சில்லறை விற்பனை உரிமங்கள் அளிக்கப்
படுகின்றன என்ற புகார்களைத் தவிர்க்கும்
பொருட்டும், அனைவருக்கும் வாய்ப்பளிப்பதற்கும்,
சில்லறை விற்பனை கடைகளுக்கு எப்எல்.1 உரிமங்கள்
வழங்கப்படும் முறை 31-5-1989-லிருந்து கைவிடப்
பட்டது. அதற்குப் பதிலாக 1-6-1989-லிருந்து
பொது ஏலம்—ஒப்பந்தம் என்ற புதிய முறையும்,
அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள்
ஆகியவைகளுக்கு நியமன அடிப்படை ஒதுக்கீடு என்ற
முறையும் கொண்டு வரப்பட்டது. 1-6-1989-
லிருந்து ஏலம்—ஒப்பந்தம் முறையில் சில்லறை
விற்பனைக் கடை உரிமங்கள் அளிக்கப்பட்டுள்ளன.
நாளது தேதியில் இம்மாநிலத்தில் 3,049 சில்லறை
விற்பனைக் கடைகள் நடந்து வருகின்றன. (மேலே
கூறப்பட்ட) புதிய முறை புகுத்தப்படுமுன்னர்
இம்மாநிலத்தில் 2,037 உரிமம் பெற்ற மதுக்கடைகள்
(எப்எல். 1 உரிமம்) இருந்தன. உரிமதாரர்களிட
மிருந்து ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் ரூ. 4.20 கோடி



வசூலிக்கப்பட்டது. புதிய முறையில், [illegible]
களுக்கு ஒதுக்கப்பட்ட 3,465 கடைகளில் [illegible]
கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. அதன்
விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| பொது நபர்களுக்குத் தரப்பட்ட உரிமங்கள். | 2,228 |
| தமிழ்நாடு வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் | 150 |
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் | 334 |
| கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் | 457 |

1989-90ஆம் ஆண்டில், விண்ணப்பக் கட்டணம்,
உரிமக் கட்டணம் மற்றும் உரிமைக் கட்டணம் என்ற
வகையில் அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 35.58
கோடியாகும். 1990-91ஆம் ஆண்டில் 1,840 உரிம
தாரர்கள் தங்களது உரிமங்களை, விதிகளின்படி
புதுப்பித்துக் கொண்டனர். 1990ஆம் ஆண்டு மே
மற்றும் ஜூன் திங்களில் 357 கடைகளும், அவ்வாண்டு
டிசம்பர் திங்களில் 175 கடைகளும் ஏலத்தில்
விற்பனையாயின. விற்பனையான மொத்தக் கடை
களின் எண்ணிக்கை 2,372 ; உரிமத் தொகையாகக்
கிடைத்த வருமானம் ரூ. 21.57 கோடியாகும்:
1991-92-ஆம் ஆண்டில் தனியார் துறை, பொதுத்
துறை மற்றும் கூட்டுறவுத்துறைகளில் 2,099
உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன. பின்னர், 27
உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன ; அரசு ஆணை
யின்படி, எல்லா மாவட்டங்களிலும் ஏலம் போகாத
கடைகள் 1,339 மறு ஏலத்திற்குக் கொண்டு வரப்
பட்டன. அவைகளில், 1991ஆம் ஆண்டு நவம்பர்,
டிசம்பர் திங்களில் நடந்த ஏலத்தில் 923 கடைகள்
தனி நபர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
விற்பனை செய்யப்பட்டன ; விண்ணப்பக்கட்டணம்,
உரிமக் கட்டணம் மற்றும் உரிமைக் கட்டணம்
வகைகளில் ரூ. 9.84 கோடி வருமானம் கிடைத்தது.

1991-92ஆம் [illegible] இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு [illegible] சில்லறைக் கடைகள் விற்பனையின் [illegible] கட்டணம், உரிமக் கட்டணம் [illegible] என்று [illegible]களில் [illegible]ரும்.

V. [illegible]

முன்னர் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றுக்கான விலைகளை, 14–2–1989 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 217 (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை)-யின்படி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் நிர்ணயித்து வந்தார். இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவைகளின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம், 1990ஆம் ஆண்டில் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் மற்றும் பீர் ஆகியவைகளின் உற்பத்தியாளர் விலையை உற்பத்தியாளர்களுடன் தமிழ்நாடு வாணிபக் கழகம் பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலம் நிர்ணயம் செய்து கொள்ளுவதற்கான ஆணையை அரசு 1992-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் வெளியிட்டுள்ளது. மேலும் அரசு மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு தனித்தனியாக குறைந்தபட்ச இலாபமாக 10 சதவீதமும், அதிகபட்ச இலாபமாக 20 சதவீதமும் நிர்ணயித்துள்ளது.

## VI. ஆயத் தீர்வை :

1–5–1981 முதல் தெளிந்த சாராவியின் மீதான ஆயத்தீர்வை கட்டணம் புரூப் லிட்டருக்கு ரூ. 8 என இருந்தது. விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டருக்கு ரூ. 1 என அந்தக் காலக் கட்டத்தில் விதிக்கப்பட்டது. இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது தயாரிப்பு நிறுவனங்கள் அம்மது தயாரிப்பிற்கென பெறும் தெளிந்த சாராவிக்கான ஆயத்தீர்வைக் கட்டணம் மற்றும் **விற்பனை**



**கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இவ்விலக்களிப்பு 1989-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் திரும்பப் பெறப்பட்டு அந்நிறுவனங்கள் பெறும் தெளிந்த சாராவிமீது ஆயத்தீர்வைக் கட்டணம் மற்றும் விற்பனைக் கட்டணம் செலுத்த வேண்டுமென முடிவாயிற்று. உச்சநீதிமன்றம் 25–10–1989-ல் ஒரு வழக்கில் தெரிவித்த தீர்ப்பின் அடிப்படையில், அதாவது தெளிந்த சாராவியின்மீது மாநிலங்கள் ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்ற கருத்தினை ஏற்று இம்மாநிலத்தில் தெளிந்த சாராவிமீது விதிக்கப் பட்ட அனைத்துக் கட்டணங்களும் விலக்கிக் கொள்ளப்பட்டன. தற்போது, வடிப்பாலைகளில் உற்பத்தியாகும் ஒவ்வொரு லிட்டர் தெளிந்த சாராவிக்கும் நிர்வாகப் பணிக் கட்டணமாக ஐம்பது காசுகள் விதிக்கப்படுகின்றது. அருந்தத்தக்க மது தயாரிப்பிற்கென ஏற்றுமதி செய்யப்படும் தெளிந்த சாராவியின்மீது ரூ. 5 ஏற்றுமதி அனுமதிக் கட்டணம் விதிக்கப்படுகின்றது. 25—10—1989 முதல் இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அருந்தப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது வகைகள் மீதான ஆயத்தீர்வை ரூபாய் 55-லிருந்து ரூபாய் 60 எனவும் மற்றும் விற்பனைக் கட்டணம் ரூ. 2-லிருந்து ரூ. 5 எனவும் உயர்த்தி விதிக்கப்பட்டுள்ளது. 5–9–1991-லிருந்து ஒவ்வொரு புரூப் லிட்டருக்கும் உற்பத்தியாளருக்கான ஆயத்தீர்வைக் கட்டணம் மீண்டும் ரூ. 70 என உயர்த்தி விதிக்கப்பட்டுள்ளது.**

**எப்.எல். 2, எப்.எல். 3, எப்.எல். 4 முதலான இதர உரிமதாரர்கள் உள்ளிட்ட சில்லறை விற்பனை உரிமதாரர்களின் தேவையினை பூர்த்தி செய்வதற்கென இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படாத சிலவகை இனங்களை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்விதம் இறக்குமதி செய்யப்படும் மதுவகைகளுக்கு ஒரு 'புரூப்' லிட்டருக்கு ரூ. 5 என இறக்குமதி உரிமக் கட்டணம் விதிக்கப்படுகின்றது. 1990ஆம் ஆண்டில் அப்போது நிலவிய சாராவிப் பற்றாக்குறை காரணமாக இம்மாநிலத்திலிருந்து அயல் மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்**

படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்கான ஏற்றுமதி உரிமக் கட்டணம் 'புருப்' லிட்டருக்கு ரூ. 30 என உயர்த்தப்பட்டது.

இம்மாநிலத்தில் வடிக்கப்பட்டு அருந்தப்படும் பீர் பானத்தின் மீதான ஆயத்தீர்வைக் கட்டணம் 'பல்க்' லிட்டருக்கு தற்போது ரூ. 2.50-ம் விற்பனைக் கட்டணம் 50 காசுகள் ஆகும். ஏற்றுமதி செய்ய 'பல்க்' லிட்டருக்கு 40 காசுகள் என ஆயத்தீர்வை கட்டணம் விதிக்கப்படுகின்றது.

## VII. ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய் :

1991ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முடிய கிடைத்த வருவாய் ரூ. 434.86 கோடியாகும். இதற்கு முந்தைய ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 301.71 கோடியாகும். 1991-92ஆம் ஆண்டில், 1991ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவான காலத்தில் மாநில ஆயத்தீர்வை என்ற தலைப்பில் கிடைத்த வருவாய் ரூ. 358.30 கோடியாகும்.

16–7–1991 முதல் நாட்டு மது விற்பனையை ஒழித்ததின் விளைவாக ஆண்டொன்றுக்கு ரூ. 391 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மதுவிலக்கை அமல்படுத்தியது காரணமாகவும், நாட்டு மது விற்பனையை ஒழித்தது காரணமாகவும், ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுமாறு மைய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டது. ஆயினும், இவ்வரசுக்கு ஏற்பட்ட அவ்வருவாய் இழப்பை ஈடு கட்ட மைய அரசு மறுத்து விட்டது.

## VIII. ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுதல் :

ஆயத்தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும், உரிமம் பெற்ற கடைகளில் போலிச் சாராயம், கள்ளச் சாராயம் ஆகியவற்றை விற்பனை செய்வதைத் தடுக்கவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள்/பீர் தயாரிப்பு, ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு மாநில வாணிபக்



கழகத்தால் வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மது வகைகள் மற்றும் பீர் ஆகியவை அடங்கிய புட்டிகளின் மேல் ஒட்டுவதற்குரிய ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிட்டு வழங்க மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முன்பு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செய்து வந்த ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற பணியை 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் முதல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையாளருக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற அச்சு இயந்திரங்கள் எழிலகத்தின் வளாகத்திலேயே நிறுவப்பட்டுள்ளன. இந்த அச்சு இயந்திரங்கள் ஆயத்தீர்வைச் சீட்டுகளின் தேவையை நிறைவு செய்கின்றன.

## IX. மதுவிலக்கு செயலாக்கம்.

### (i) மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு :

கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சுவது மதுவிலக்கு அமுலிலிருந்த நாட்களில் மட்டுமின்றி அதற்கு முந்திய நாட்களிலும் இருந்து வந்தது என்பது அரசின் அனுபவமாகும். எனவே முழுமையாக அதனை நீக்குவதென்பது இயலாது. ஆனால் மதுவிலக்கு நடைமுறையிலிருக்கும் போது கள்ளச் சாராயம் காய்ச்சுவது பெருகி விடுகின்றது. "கள்ளத்தனமாக காய்ச்சுவது" அரசினுடைய மது விலக்குக் கொள்கைக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாகும்.

தற்போதைய அரசின் மதுவிலக்கு கொள்கையை செயல்படுத்துவது மற்றும் கள்ளச் சாராயத்தை தயாரிப்பது, வைத்திருப்பது எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளை ஒழிப்பது ஆகிய இரட்டைக் குறிக்கோளை அடையும் பொருட்டு தனியாக ஒரு மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு தேவை என உணரப்பட்டது. 1990 ஏப்ரல் 1-ற்கு முன்பு கள்ளத்தனமான மதுபான விற்பனையைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் ஒழிக்கவும் தனியாக மதுவிலக்கு செயலாக்கப்

பிரிவு ஒன்று இருந்தது. ஆனால் 1990 ஏப்ரலிலிருந்து இம்மதுவிலக்குப் பிரிவு கலைக்கப்பட்டு மதுவிலக்கு செயலாக்கத் தொடர்பான பணி காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டு மதுவிற்பனையை 16—7—1991-லிருந்து தமிழ்நாட்டில் நிறுத்திய பின் ஒரு காவல் துறைத் தலைவரின்கீழ் மதுவிலக்கு செயலாக்கம் முழு அளவில் மீண்டும் அமைக்க தற்போதைய அரசு முடிவெடுத்து இப்பிரிவு 1991 டிசம்பர் 1-லிருந்து இயங்கி வருகிறது.

இம்மாநிலத்தில் மதுவிலக்கு செயலாக்கட் பிரிவு 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 7 மண்டலங்களுக்கு 65 மதுவிலக்குப் பிரிவுகள் பிரித்து அளிக்கப்பட்டுள்ளன. இவைகளைத்தவிர மாநில எல்லைகளில் 24 மணி நேரம் இயங்க 5 சோதனைச்சாவடிகளும், 6 பறக்கும் படைகளும் மற்றும் மிகப் பெரிய அளவில் கள்ளத்தனமாக மது கடத்துதல் போன்ற முக்கியமான வழக்குகளைக் கவனிக்க ஒரு புலனாய்வுக் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன.

(ii) கள்ளத்தனமாக காய்சுவதை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(அ) திடீர் தேடுதல் வேட்டைகளும், கைப்பற்றுதல்களும் :

(i) கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சும் நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு வழக்கமாகக் காய்ச்சும் முக்கிய பகுதிகளையும் மற்றும் இத்தொழிலில் வழக்கமாக ஈடுபடும் நபர்களையும் முதலில் அடையாளம் காணப்பட்டது. மலைகள், ஆற்றுப் படுகைகள், வனங்கள் மற்றும் சமவெளிகளிலுள்ள சாராயம் காய்ச்சுப் பகுதிகளில் தொடர்ச்சியான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, காய்ச்சுவோர் கைது செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்ட பொருட்கள்



பறிமுதல் செய்யப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. சேலம், மதுரை, திண்டுக்கல்—அண்ணா மற்றும் காமராசர் மாவட்டங்களின் மலைப்பகுதிகளிலும், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களின் படுகைகளிலும், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டங்களின் கடற்கரை ஓரங்களிலும், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளிலும், சென்னை நகர் பகுதிகள் மற்றும் திருச்சிராப்பள்ளியின் முக்கிய இடங்களிலும் கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சுவதைக் கண்டறிந்து தடுக்கவும், மேலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் அத் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதை தடுக்கவும் காவல்துறையால் இடைவிடாது சோதனைகள் நடத்தப்பட்டன.

(ii) இதுபோன்ற வழக்கமான சோதனைகளுடன், சிறப்புச் சோதனைகளும் திருவிழாக்காலங்களில் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் பொங்கல் கொண்டாட்டங்களுக்குமுன் 1992 சனவரி 5-லிருந்து 1992 சனவரி 10 வரை சம்பந்தப்பட்ட அனைத்துக் காவல் நிலையங்களும் காவலர்களை அனுப்பி மதுவிலக்கு அமல்பிரிவினருடன் சேர்ந்து வழக்கமாக சாராயம் காய்ச்சும் பகுதிகளில் திடீர் சோதனை செய்து கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்கள், விற்பனையாளர்கள், எடுத்துச் செல்பவர்கள் மற்றும் கடத்துபவர்களைக் கைது செய்துள்ளனர்.

(iii) மகாமகம் திருவிழாவிற்குச் சில தினங்களுக்குமுன் அதாவது, 4—2—1992-லிருந்து 7—2—1992வரை பல்வேறு மாவட்டங்களிலுள்ள மதுவிலக்கு பிரிவிலிருந்தும் ஏறக்குறைய 400 மதுவிலக்கு காவலர்கள் வரவழைக்கப்பட்டு, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தின் காவல்துறையுடன் சேர்ந்து, இவ்விரு மாவட்டங்களிலும் வழக்கமாக சாராயம் காய்ச்சும் பகுதிகள் சோதனையிடப்பட்டு, மிகுதியான எண்ணிக்கையில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரும் மற்றும் கள்ளத்தனமாக எடுத்துச் செல்பவர்களும் கைது செய்யப்பட்டனர்.

**(iv) 1991–92-இல் பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச்சாராய கடத்தல் பொருட்களைப் பற்றிய விவரங்கள். (1991 ஏப்ரலிலிருந்து 1992 சனவரி வரையிலான விவரங்கள்).**

| | | |
|---|---|---|
| (i) பறிமுதல் செய்யப்பட்ட ஆந்திரப் பிரதேச பாக்கெட் சாராயத்தின் எண்ணிக்கை | | 8,41,708 |
| (ii) அதன் மதிப்பு | ரூ. | 16,83,400 |
| (iii) பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் : | | |
| மோட்டார் ... .. | | 593 |
| சைக்கிள்கள் .. .. | | 650 |
| பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | | 2,47,745 |
| அழிக்கப்பட்ட சாராய ஊரல்களின் அளவு ... .. .. .. | | 99,74,689 லிட்டர்கள். |
| பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச்சாராய அளவு ... .. .. .. | | 21,60,363 லிட்டர்கள். |
| கைது செய்யப்பட்ட மதுவிலக்கு குற்றவாளிகளின் எண்ணிக்கை .. | | 2,13,852 |
| பறிமுதல் செய்யப்பட்ட சாராய கடத்தல் பொருட்களின் மதிப்பு | ரூ. | 8,31,06,016 |
| காவலில் வைக்கப்பட்ட கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்களின் எண்ணிக்கை .. | | 209 நபர்கள் |

(1991 சனவரியிலிருந்து 1992 சனவரி வரையிலான காலம்).



**X. போதை மருந்துகளுக்கு அடிமையாவதைத் தடுத்தல் :**

1985–ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்க பொருட்கள் சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. போதை மருந்துகள் மற்றும் அது சம்பந்தமான தொடர்புடைய பொருட்கள் பற்றி நடந்துள்ள பன்னாட்டு கருத்தரங்கங்களில் எடுக்கப் பட்ட முடிவுக்கு ஏற்ப இச்சட்டத்தில் கள்ளத்தனமாக போதைப் பொருட்கள் எடுத்துச் செல்லுதல் போன்ற குற்றச் செயல்களின் மூலம் ஈட்டப்படும் அல்லது அச்செயல்களில் ஈடுபடுத்தப்படும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு கடுமையான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. தீச்செயல்களில் ஈடுபடுவோர் ஒன்று சேர்ந்து ஈடுபடும் நடவடிக்கைகளும் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களை இந்நாட்டிற்குள் திருட்டுத்தனமாக கொண்டு வருவது மற்றும் அவைகளை விற்பனை செய்வதில் ஈடுபடுதல் ஆகிய செயல்களால் பொதுமக்களின் கணிசமான பகுதியினரிடம் குறிப்பாக, இளைஞர்கள், மாணவர்களின் (ஆண்/பெண்) மத்தியில் போதை மருந்துகளுக்கு அடிமையாகும் பழக்கம் பரவியுள்ளது. எனவே இத்தீய பழக்கம் அண்மைக் காலத்தில் அபாயகரமான அச்சமூட்டும் நிலையை அடைந்துள்ளது. எனவே, இத்தீய பழக்கத்தை வலுவான முறையில் கட்டுப்படுத்துவதும், ஒழிப்பதும் சமுதாயத்தின் நலனுக்கு அத்தியாவசியமாகின்றது.

ஆழ்ந்தாராய்ந்தே, போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் விதிகள் மிகக்கடுமையாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் இழைக்கப்படும், குற்றங்களுக்கு குறைந்தபட்சம் 10 ஆண்டும், உயர்ந்தபட்சம் 20 ஆண்டும் கடுங் காவல் சிறைத் தண்டனையும், குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாயும், உயர்ந்த பட்சம் இரண்டு லட்ச ரூபாயும் அபராதமாக விதிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே தண்டிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அக்குற்றத்தைப் புரிந்ததாகவோ

அல்லது குற்றம் புரிய முனைந்ததாகவோ அல்லது குற்றத்தை மறைத்ததாகவோ அல்லது குற்றம் புரிவதற்கு சதி செய்ததாகவோ இச்சட்டத்தின்கீழ் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் அவர் மரண தண்டனைக்கு உள்ளாவர்ர்.

இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் எந்த தண்டனை யையும் ஒத்தி செய்வதோ அல்லது ரத்து செய்வதோ அல்லது குறைப்பதோ முடியாது. இச்சட்டத்தின்கீழ் இழைக்கப்பெறும் ஒவ்வொரு குற்றமும் பிடிஆணை வேண்டாத பிணையில் விடத்தகாத குற்றமாகும்.

3. 1988ஆம் ஆண்டு போதைப் பொருட்கள், மருந்துப்பொருட்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை தடுக்கும் சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, போதைப் பொருள் சம்பந்தமான செயல்களில் ஈடுபடுவோரை குறைந்த பட்சம் ஓராண்டு காலத்திற்கும், அதிகபட்சம் இரண்டு ஆண்டு காலத்திற்கும் தடுப்புக்காவலில் வைக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4. போதைப் பொருட்கள் கள்ளத்தனமாகக் கடத்துதலை எதிர்த்து நடவடிக்கை எடுத்தல் மற்றும் போதை மருந்துகள் பயன்படுத்துவதை தடுப்பதற்குமான பொறுப்பு மாவட்ட காவல் பிரிவு, மயக்க மருந்துகள் புலனாய்வுப் பிரிவு, குற்ற ஆய்வுத் துறை, சென்னை ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காவல்துறை கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் சென்னையில் அமைந்துள்ள மயக்க மருந்துகள் புலனாய்வுப் பிரிவு (N.I.B) சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கள்ளக் குறிச்சி, திண்டுக்கல், மற்றும் தேனி ஆகிய ஏழு இடங்களில் அலகுகள் கொண்டுள்ளது. மயக்க மருந்துகள் புலனாய்வுப் பிரிவு மற்றும் அதன் மாவட்ட பிரிவுகள் மாவட்ட காவல்துறையுடன் இணைந்து செயல்பட்டதன் விளைவாக கஞ்சா மற்றும் 'ஹெராயின்' என்னும் 'பிரவுன் சுகர்' போன்ற போதைப் பொருட்களைத் தன்வசம்



வைத்திருத்தல், விற்பனை செய்தல் ஆகிய குற்றங் களில் ஈடுபட்ட மூன்று பேர்கள் 1988ஆம் ஆண்டு போதை மருந்துகள், மருந்துப் பொருட்கள், கள்ளத் தன்மாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

## XI. தடுப்புக்காவல் :

கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதை மருந்து களைக் கள்ளத்தனமாகக் கடத்துவோர், வனத் திருட்டுகளில் ஈடுபடுவோர், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிவோர் என சமுதாயத்தில் அழைக்கப்படும் சமூக விரோத சக்திகளின் பயங்கரமான நடவடிக்கைகள் குறிப்பாக இம்மாநிலத்தில் நகர்ப்பகுதிகளில், பெருந் தீங்கினை விளைவிக்கின்றன. மேலும் இச்செயல்கள் பொது சுகாதாரத்திற்கும் அமைதிக்கும் கொடிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

2. இவ்வாறு அடையாளம் கண்ட சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகள், பொது ஒழுங்கைப் பராமரிக்கும் பணிக்குப் பாதகமான பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு உத்திரவாதம் செய்யும் வகையில், மேற்கூறப்பட்ட ஆறு வகை சமூக விரோத சக்திகளைக் காவலில் வைப்பதற்கென 1982ஆம் ஆண்டைய, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், போதை மருந்துகளைக் கள்ளத்தனமாகக் கடத்துவோர் குண்டர்கள், விபச்சாரக் குற்றங்களில் ஈடுபடுவோர் மற்றும் குடிசைப் பகுதிகளை ஆக்கிரமிப்போர் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டம் (1982ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் எண். 14) இயற்றப்பட்டது. இச்சட்டம் 5—1—1982 அன்று அமலுக்கு வந்தது. 5—1—1982

முதல் 29—2—1992 முடிவான காலத்தில் இச் சட்டத்தின்படி தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சமூக விரோத நபர்கள் குறித்த விவரங்கள் இணைப்பு IX–இல் உள்ள அறிக்கையில் தரப்பட்டுள்ளன. 1991ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1992ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில் வனக் குற்றங்களில் ஈடுபடுவோரை (இச்சட்டத்தின்படி) காவலில் வைத்ததனால், முந்தைய ஆண்டோடு ஒப்பிடும்போது இவ்வாண்டு சந்தன மர விற்பனையின் வாயிலாக வனத்துறை, இருமடங்கு வருவாய் ஈட்டியுள்ளது.

## XII. மாநில அளவிலான பிரச்சாரக் குழுவை அமைத்தல் :

பூரண மதுவிலக்கே தற்போதைய அரசின் கொள்கையாகும். மது நமது மாநிலத்தில் ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்வை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக்கடைகளை மூடுவதால் அரசுக்கு ஏற்படும் கணிசமான வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது, இவ்வரசு, 1991ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16ஆம் நாள் முதல் நாட்டு மதுக்கடைகளை மூடியது. நாட்டு மதுக்கடைகளை மூடிய அதே நேரத்தில், கள்ளச் சாராயம் தயாரிப்பதில் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கள்ளமது வருவதற்கான வழிகளை ஒருபுறத்தில் தடுக்கும் அதே வேளையில், குடிப் பழக்கத்தினால் மதுவிற்கு அடிமையானவர்களை விடுவித்து அவர்களை சீர்திருத்தி, மறுவாழ்வு அளிப்பதற்கும் மற்றும் மதுவின் தீமைகளை பரப்புதலுக்கும் நடவடிக்கைகள் எடுப்பதும் அதே அளவில் முக்கியம் வாய்ந்தது என உணரப்பட்டது. மதுவிலக்கின் நன்மைகளையும் குடிப் பழக்கத்தின் தீமைகளையும் பரப்பவும், அதற்கான தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும் முதலமைச்சர் அவர்களின் தலைமையில், பிரபலமான, ஆடவர் மற்றும் மகளிரைக் கொண்ட மாநில அளவிலான மதுவிலக்கு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு 22—10—1991 அன்று கூடியது. அக்கூட்டத்தில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) மதிய சத்துணவுக் கூடங்களை மாலை வேலைகளில் மதுவிலக்குப் பிரச்சாரப் பணிகளுக்காவும், ஏனைய நற்பணிகளுக்காகவும் பயன்படுத்தலாம்.

(2) மதுவிலக்குப் பிரச்சாரப் பணியில் ஈடுபட ஒரு இலட்சம் படித்த வேலையில்லாத இளைஞர்களைச் சேர்த்தல்.

(3) குடிக்கும் காட்சிகளைத் திரைப்படங்களில் அனுமதிக்கக் கூடாது என திரைப்பட சென்சார் போர்டை வலியுறுத்துமாறு மைய அரசினைக் கேட்டுக் கடிதம் எழுதுதல்.

(4) மாநில அளவிலான முதலமைச்சர் மருத்துவ முகாம்களில் மதுவினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் சிகிச்சை அளித்தல் ;

(5) குடிப்பழக்கம் கொண்டோரைச் சமுதாயப் புறக்கணிப்பு செய்தல் ;

(6) தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் விதிக்கப் பட்டுள்ள குற்றங்களுக்கான தண்டனைகள் போதுமானவையாக இல்லை என்பது குறித்துப் பரிசீலிக்க ஒரு நிபுணர் குழுவை அமைத்தல்;

(7) தொலைக் காட்சி, வானொலி, வீடியோ, திரைப்படம் மற்றும் செய்தித்துறை ஆகியவற்றின் வாயிலாக மதுவிலக்குப் பிரச்சாரத்தை முடுக்கி விடுதல் ; ஒரு பிரச்சாரப் படத்தையும் மற்றும் ஒரு மேடை நாடகத்தையும் அரசு தயாரித்தல்;

(8) மதுவிலக்குக் கொள்கை குறித்து சிறு கதைகள் மற்றும் நாடகங்கள் எழுத கல்லூரி மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களுக்குப்பரிசுகளை வழங்குதல்;

(9) ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரிய தொழில் அமைப்புகள் தத்து எடுத்துக்கொண்டு குடிப்பழக்க மீட்பு மையங்களை ஏற்படுத்துதல்;

(10) கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவர்களுக்குப் புனர் வாழ்வு தருவதற்காக ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்குதல் ;

(11) கல்லூரி மற்றும் பள்ளிப் பாடப் புத்தகங்களில் மதுவின் தீமைகள் குறித்த பகுதிகளைச் சேர்ப்பது ;

(12) கிராமம், நகராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக்களை அமைத்தல் ;

(13) மேடை நாடகங்கள், கதைகள் மற்றும் கட்டுரைகள் வாயிலாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தல்;

(14) அரசால் செய்தித் தாள்கள்ல் வெளியிடப்படும் விளம்பரங்களில் மதுவிலக்குப் பிரச்சாரத்தைச் சேர்த்தல் ;

(15) கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் மற்றும் குடிப்பது இல்லாத தொகுதிகளைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குப் பரிசு வழங்குதல்.

மதிய சத்துணவுக் கூடங்களை மதுவிலக்குப் பிரச்சாரப் பணி மற்றும் ஏனைய நற்பணிகளுக்காகவும் பயன்படுத்துவதற்கும், மதுப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் மருத்துவ முகாம்களில் சிகிச்சை அளிப்பதற்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மதுவின் தீமைகளையும், மதுவிலக்கின் நன்மைகளையும் விளக்கும் ஒரு பிரச்சாரப் படத்தையும் ஒருமேடை நாடகத்தையும் தயாரிக்கும் பணி பிரபலமான



தயாரிப்பாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத் தயாரிப்புப் பணியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இதர முடிவுகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**XIII. கிராம அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக்குழுக்கள் :**

அரசு ஆணையின்படி, மதுவிலக்கை அமல் படுத்துவதற்காக, ஒரத்தநாடு மதுவிலக்குக் குழு பாணியில் உள்ளூர் கிராம அளவிலான மதுவிலக்குக் குழுவை, ஒவ்வொரு குக்கிராமத்திலோ அல்லது கிராமத்திலோ அல்லது சவுகரியமான கிராமங்களின் தொகுப்பிலோ அல்லது குக்கிராமங்களின் தொகுப்பிலோ அமைத்தலை ஊக்குவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இக் குழுவின் பொதுவான பணிகள் பின்வருமாறு இருக்கும்:—

(i) கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கண்டு பிடித்தல் ;

(ii) சந்தேகிக்கப்பட்ட நபர்களைக் கண்காணித்தல் ;

(iii) கள்ளச்சாராயம் அடங்கிய பானைகள் மற்றும் பாட்டில்களைக் கண்டுபிடிப்பதற்கும் மற்றும் வெளிக் கொணர்வதற்கும் கிராமங்களைச் சுற்றிவருதல் ;

(iv) மதுவிலக்கு குறித்த அறிவிக்கைகளைக் கிராமத்தில் வைத்தல் ; அது தவிர, பறையறைந்தும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிராக எச்சரிக்கை செய்தல் ;

(v) மதுவிலக்கு வழக்கில் குற்றம் சாட்டப் பட்டுக் காவலில் இருப்போருக்கு, ஜாமீன் தர எந்த நபரும் முன்வராதவாறு பார்த்துக் கொள்ளுதல் ;

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கிராம அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு அமைப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர். மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி, மகளிருக்குக் கணிசமான பிரதிநிதித்துவம் தந்து, இக் குழுவைத் திருத்தியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கிராம அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு தவிர இம்மாநிலத்தில் மதுவிலக்கு பிரச்சாரத்தைப் வலுப்படுத்த நகராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவிலும் மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது.

**முடிவுரை :**

காவல்துறையில் தனியாக ஒரு மதுவிலக்கு அமல் பிரிவு ஏற்படுத்தியும் மற்றும் கிராம நிருவாக அலுவலர்கள், காவல்துறைக் காவல் நிலைய அலுவலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களை தங்கள் வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் நடக்கும் மதுவிலக்குக் குற்றங்களுக்குப் பொறுப்பாக்குதல் போன்ற பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை அரசு எடுத்ததன் காரணமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுதல், எடுத்துச் செல்லுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதை ஒரு பெரும் சாதனை எனக் கருதலாம். மேலும் இது கள்ள மதுவை முழுவதுமாக ஒழிக்க வேண்டும் என்ற இவ்வரசின் உன்னதமான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பாதையில் எடுக்கப்பட்ட ஒரு சரியான நடவடிக்கையும் ஆகும். மேற்கூறப்பட்ட அரசின் நடவடிக்கைகள் எல்லாத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்பட்டுள்ளன.



மது குடிப்பதன் தீமைகள் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல எடுக்கப்பட்ட முயற்சிகள் விரும்பத்தக்க பலன்களை ஏற்படுத்தியுள்ளன. மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு பரிந் துரைத்துள்ள எல்லா நடவடிக்கைகளும், முழுமையாக செயல் படுத்தப்பட்டால் அரசு ஏற்றுக் கொண்டுள்ள நோக்கத்தினை நிறைவேற்றிட இயலும் எனலாம்.

இணைப்பு 1.

1985–86 முதல் 1990–91 வரையில் ஆண்டு வாரியாக தயாரிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு.

| ஆண்டு. | தொடக்க இருப்பு. | உற்பத்தி. | மொத்த அளவு. | பயன் படுத்தப்பட்ட அளவு. | இறுதி இருப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (இலட்சம் மெட்ரிக் டன்களில்) | | | |
| 1985–86 | 0.07 | 3.66 | 3.73 | 3.68 | 0.05 |
| 1986–87 | 0.05 | 3.73 | 3.78 | 3.02 | 0.76 |
| 1987–88 | 0.76 | 3.64 | 4.40 | 3.26 | 1.14 |
| 1988–89 | 1.14 | 4.37 | 5.51 | 4.63 | 0.88 |
| 1989–90 | 0.88 | 3.85 | 4.73 | 3.70 | 1.03 |
| 1990–91 | 1.06* | 5.88 | 6.94 | 4.45 | 2.44 |

*1989–90-ம் ஆண்டில் பயனீட்டிற்கு தகுதியற்றது என தள்ளுபடி செய்யப்பட்ட 0.03 இலட்சம் மெட்ரிக் டன் உள்ளடங்கியது.



இணைப்பு 2.

1980–81 முதல் 1990–91 வரையில் தயாரிக்கப்பட்டதும், உபயோகிக்கப்பட்டதுமான சாராவியின் அளவு.

| ஆண்டு. | தொடக்க இருப்பு. | இந்த ஆண்டுகளில் தயாரிக்கப் பட்ட சாராவி. | அருந்தும் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. | தொழில் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. | முடிவான இருப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (இலட்சம் லிட்டர்களில்) | | | |
| 1980–81 | 26.96 | 3,77.21 | 1,23.16 | 1,94.91 | 61.47 |
| 1981–82 | 61.47 | 5,01.74 | 3,37.19 | 85.19 | 1,05.28 |
| 1982–83 | 1,05.28 | 5,78.51 | 5,00.18 | 64.67 | 74.80 |
| 1983–84 | 74.80 | 5,60.84 | 5,64.71 | 60.17 | 6.07 |
| 1984–85 | 6.07 | 5,79.14 | 4,66.78 | 93.98 | 21.16 |
| 1985–86 | 21.16 | 6,81.87 | 5,84.80 | 52.20 | 54.46 |
| 1986–87 | 54.46 | 6,32.08 | 1,97.91 | 2,97.75 | 70.28 |
| 1987–88 | 70.28 | 6,48.03 | 1,81.66 | 2,93.01 | 50.36 |
| 1988–89 | 50.36 | 7,11.10 | 1,65.31 | 3,76.11 | 1,06.10 |
| 1989–90 | 1,06.10 | 6,72.09 | 2,20.94 | 4,18.81 | 73.73 |
| 1990–91 | 73.73 | 7,68.03 | 3,68.00 | 3,98.82 | 51.26 |

## இணைப்பு 3.

ஆண்டுவாரியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகள்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள்.

(மொத்தம் லிட்டர்களில்)

| | |
|---|---|
| 1985-86 | 90,66,299 |
| 1986-87 | 1,77,38,623 |
| 1987-88 | 3,25,86,089 |
| 1988-89 | 4,01,06,485 |
| 1989-90 | 3,47,52,995 |
| 1990-91 | 2,89,46,786 |
| 1991-92 (1991 ஏப்ரல் முதல் 1991 டிசம்பர் வரை.) | 3,14,93,683 |

பீர் உற்பத்தி.

(மொத்தம் லிட்டர்களில்)

| | |
|---|---|
| 1985-86 | 9,71,09,937 |
| 1986-87 | 14,08,20,201 |
| 1987-88 | 14,18,38,663 |
| 1988-89 | 15,20,48,738 |
| 1989-90 | 18,19,37,597 |
| 1990-91 | 24,58,53,511 |
| 1991-92 (1991ஆம் ஆண்டு ஏப்ரல்_முதல் டிசம்பர் திங்கள் வரை.) | 2,26,02,270 |



## இணைப்பு 4.

இந்தியாவில் தயாரிக்கபபடும் வெளிநாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் ஆய தீர்வை.

| இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள். | உள்ளூர். | இறக்குமதி. | ஏற்றுமதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. ஆயத்தீர்வை | 1 புருப் லிட்டருக்கு ரூ. 70. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 70. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 30. |
| 2. விற்பனைக் கட்டணம் (உற்பத்தியாளர்). | 1 புருப் லிட்டருக்கு ரூ. 5. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 2. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 5. |
| 3. விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனையாளர்-டாஸ்மாக்). | 1 புருப் லிட்டருக்கு ரூ. 2. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 2. | .. |
| 4. கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்). | 1 புருப் லிட்டருக்கு ரூ. 6.69. | .. | .. |
| 5. இறக்குமதி அனுமதிக் கட்டணம். | .. | 1 புருப் லிட்டருக்கு ரூ. 5. | .. |
| 6. ஏற்றுமதி அனுமதிக் கட்டணம். | .. | .. | அனுமதி ஒன்றுக்கு ரூ. 10 |

இணைப்பு 4.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை—தொடர்ச்சி.

| இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள். | உள்ளூர். | இறக்குமதி. | ஏற்றுமதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பீர் : | | | |
| 1. ஆயத்தீர்வை | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.40. |
| 2. விற்பனைக் கட்டணம். | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.10. |
| 3. விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனையாளர்). | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | .. |
| 4. கூடுதல் விற்பனைக் கட்டணம். | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 4.30. | .. | .. |
| 5. இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம். | .. | மதிப்பில் 10 சதவீதம். | .. |
| 6. ஏற்றுமதி அனுமதிக் கட்டணம். | .. | .. | அனுமதி ஒன்றுக்கு ரூபாய் 10 |



இணைப்பு 5.

1981–82 முதல் 1991–92 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லரை விற்பனை உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை:—

| | |
|---|---|
| 1981–82 | 1,211 |
| 1982–83 | 1,225 |
| 1983–84 | 1,228 |
| 1984–85 | 1,229 |
| 1985–86 | 1,231 |
| 1986–87 | 2,254 |
| 1987–88 | 2,317 |
| 1988–89 | 2,349 |
| 1989–90 | 3,369 |
| 1990–91 | 2,372 |
| 1991–92 (1991 டிசம்பர் வரை வழங்கப்பட்டவை). | 3,049 |

## இணைப்பு 6.

1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரையிலும் (1992ஆம் ஆண்டு சனவரி வரை) துப்பறியப்பட்ட மதுவிலக்கு வழக்குகள், பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்கள் ஆகியவைபற்றிய விவரங்கள்.

| வரிசை எண் மற்றும் விவரம். | 1987. | 1988. | 1989. | 1990. | 1991-92 (1992 சனவரி வரை) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 2,29,014 | 4,08,326 | 5,94,929 | 3,78,298 | 3,12,165 |
| 2. பறிமுதல் செய்யப்பட்ட கள்ள சாராய அளவு லிட்டர்களில் .. .. .. | 27,30,120 | 35,47,099 | 57,79,871 | 38,43,245 | 28,48,52 _ |
| 3. அழிக்கப்பட்ட ஊறலின் அளவு லிட்டர்களில் | 2,49,36,679 | 4,24,80,579 | 4,08,24,780 | 1,47,39,457 | 1,31,05,828 |
| 4. பறிமுதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் அளவு பாட்டில்களில்) : | | | | | |
| (அ) முழு பாட்டில் .. .. .. | 12,631 | 1,346 | 7,685 | 1,343 | 7,468 |
| (ஆ) அரை பாட்டில் .. .. .. | 5,491 | 1,776 | 6,674 | 6,255 | 2,227 |
| (இ) கால் பாட்டில் .. .. .. | 47,722 | 32,701 | 1,13,801 | 38,640 | 79,397 |
| 5. பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் : | | | | | |
| (அ) கார் .. .. .. .. | 246 | 285 | 467 | 269 | 244 |
| (ஆ) ஜீப் .. .. .. .. | 11 | 6 | 11 | 11 | 6 |
| (இ) வேன் .. .. .. .. .. | 76 | 48 | 88 | 65 | 49 |
| (ஈ) ஆட்டோ ரிக்ஷா .. .. .. | 90 | 84 | 113 | 98 | 118 |
| (உ) லாரி .. .. .. .. | 43 | 35 | 57 | 36 | 53 |
| (ஊ) மோட்டார் சைக்கிள் .. .. | 221 | 360 | 658 | 205 | 212 |
| (எ) படகு .. .. .. .. | 1 | .. | 2 | .. | 4 |
| (ஏ) ஸ்கூட்டர் .. .. .. .. | 22 | 21 | 62 | 71 | 46 |
| (ஐ) பஸ் .. .. .. .. .. | 4 | 2 | 24 | 4 | 3 |
| (ஒ) பார வண்டி/பாரக் கட்டை வண்டி .. | 8 | 4 | 5 | .. | 1 |
| (ஓ) சைக்கிள் .. .. .. .. | .. | .. | .. | 1,887 | 743 |
| பறிமுதல் செய்யப்பட்ட மொத்த வாகனங்கள். | 722 | 845 | 1,487 | 2,646 | 1,473 |

## இணைப்பு 7.

போதை மருந்தை ஒழிப்பது சம்பந்தப்பட்ட குற்றங்களில் மாவட்ட காவல்துறை மற்றும் போதை மருந்து புலனாய்வு காவல் பிரிவு, சி.ஐ.டி. ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்ட விவர அட்டவணை.

| ஆண்டு. | வழக்குகளின் எண்ணிக்கை. | குற்றம் சாட்டப் பட்டவர்களின் எண்ணிக்கை. | மலைப் பிரதேச திடீர் சோதனை எண்ணிக்கை. | கஞ்சா பயிர் செய்யப் பட்ட நிலப் பரப்பு. | கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவு (கிலோ கிராமில்) கஞ்சா. | போதை மருந்து. | ஹெராயின். | மார்பின். | கஸகஸா விதை. | மதிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | | | | | (ரூபாயில்). |
| 1989 .. | 2,642 | 2,642 | 9 | 213 | 3,61,764.000 | 45.100 | 11.956 | 2 (ஆம்பியூல்ஸ்) | .. | 72,51,74,600 |
| 1990 .. | 2,357 | 2,453 | 19 | 225 | 1,15,691.429 | 35.084 | 4,237 | .. | 61,600 | 23,21,57,390 |
| 1991 .. | 5,207 | 5.549 | 28 | 113 | 60,696.340 | 7.174 | 2.293 | .. | .. | 12,16,94,940 |
| 1992 (சனவரி வரை). | 571 | 591 | 1 | 5 | 5,495.220 | 0.008 | 0.161 | .. | .. | 1,10,06,620 |

போதை மருந்து புலனாய்வு பிரிவால் மட்டும் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் விபரம்.

| ஆண்டு. | வழக்குகளின் எண்ணிக்கை. | குற்றம் சாட்டப் பட்டவர்களின் எண்ணிக்கை. | மலைப் பிரதேச திடீர் சோதனை. | கஞ்சா பயிர் செய்யப் பட்ட நிலப் பரப்பு. | கைப்பற்றப்பட்ட போதை பொருட்களின் அளவு (கிலோ கிராமில்). கஞ்சா. | போதை மருந்து. | ஹெராயின். | கஸகஸா விதை. | மதிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | | (ரூபாயில்) |
| 1989 .. | 164 | 174 | 4 | 91 | 61,049.431 | 0.130 | 11.552 | .. | 12,32,55,360 |
| 1990 .. | 401 | 474 | 8 | 90 | 70,952.587 | 30.040 | 1.392 | .. | 14,23,44,700 |
| 1991 .. | 707 | 987 | 14 | 60 ½ | 52,112.091 | 1.060 | 2.157 | 61.600 | 10,44,51,750 |
| 1992 (சனவரி வரை). | 60 | 68 | 1 | 5 | 5,346.725 | .. | 0.055 | .. | 1,06,98,950 |

இணைப்பு 10.

ஐந்தாண்டுகளில் பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ஈட்டிய ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருவாய்க் கணக்குத் தலைப்பு. | 1987-88. | 1988-89. | 1989-90. | 1990-91. | 1991-92 (1991 டிசம்பர் வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. நாட்டுச் சாராவி (சாராயம்) .. .. | 69.84 | 95.08 | 2,19,39 | 1,54,64.41 | 48,81.53 |
| 2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) .. | 48.08 | 3,55.41 | 1,67.02 | 12,45.75 | 12.29 |
| 3. மால்ட் வகை மது (பீர்) .. .. .. | 2,86.11 | 7,39.91 | 12,15.13 | 26,79.12 | 21,06.21 |
| 4. வெளிநாட்டு மது, சாராவி .. .. | 1,04,51.87 | 1,24,43.70 | 2,52,92.96 | 2,28,89.08 | 2,80,48.28 |
| 5. வணிக ரீதியிலான, இயல்பு மாற்றப்பட்ட சாராவி. | 4,73.67 | 6,96.74 | 25,53.81 | 96.74 | 7.72 |
| 6. மருந்துப்பொருட்கள், ஒப்பனைப்பொருட்கள் | 2,03.18 | 60.71 | 2,54.68 | 2,39.40 | 2,29.33 |
| 7. அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப்பொருள்கள் | 0.71 | 0.95 | 3.45 | 2.38 | 3.56 |
| 8. அபராதங்களும் பறிமுதல்களும் .. | 4.25 | 2.74 | 1,70.14 | 40.69 | 11.42 |
| 9. பணியும் பணிக்கட்டணங்களும் .. .. | 5.27 | 8.60 | 47.55 | 3,39.61 | 3,49.94 |
| 10. ஏனைய வரவினங்கள் .. .. .. | 4,73.02 | 3,98.50 | 2,57.74 | 4,88.51 | 1,79.64 |
| மொத்தம் .. .. | 1,20,16.00 | 1,48,02.34 | 3,01,81.87 | 4,34,85.69 | 3,58,29.92 |

ஜெ. ஜெயலலிதா,
முதலமைச்சர்.



165045

## தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், திட்டங்கள் பற்றிய குறிப்பு 1991 - 92.

### I. செயல்முறை நோக்கு—ஒரு கண்ணோட்டம்.

பொது மக்களிடையே அமைதியும், நல்லுறவும் நிலவவேண்டும் என்பதோடு அவற்றை மென்மேலும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதே அரசின் தலையாய நோக்கமாகும். இந்நோக்கத்தினை எய்த வேண்டும் என்பதற்காகவே அரசு காவல் துறையை ஏற்படுத்தியது. ஆகவே, காவல் துறை, அதன் முக்கியப் பணிகள் காரணமாக, அரசின் வலிமை மிக்க ஓர் அமைப்பாகத் திகழ்கிறது. காவல் துறையின் பணி அவ்வளவு எளிதான ஒன்றல்ல. சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப அவற்றின் பணிகள் மாறுபடுகின்றன. இப்பணி சிக்கல் நிறைந்த பல்வேறு கடைமைகளையும், பலதரப்பட்ட பணிப் பொறுப்புகளையும் கொண்டதாகும்.

2. தமிழ்நாடு காவல் துறையின் அதிகாரங்களையும், பணிப்பொறுப்புகளையும் பின் வருமாறு வகைப்படுத்தலாம் :—

பாதுகாத்தல் (Protective)

குற்றம் நிகழாமல் தடுத்தல் (Preventive)

துப்புத் துலக்குதல் (Detective)

முறைப்படுத்தல் (Regulatory).

'பாதுகாப்புப் பணி' என்பதில், பொதுமக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாப்பது உட்பட சமுதாயத்தில் நல்லுறவையும், அமைதியையும் பாதுகாத்தல், அதாவது சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பது ஆகியவை அடங்கும்.

'குற்றத் தடுப்புப் பணிகள்' என்பதில், இனக் கலவரம், தொழிலாளர் அல்லது மாணவர் கிளர்ச்சி ஏனைய காரணங்களால் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை தொடர்பான தகவல்களைச் சரியாக

## இணைப்பு 8.

1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரையிலும் (1992 சனவரி வரை) மதுவிலக்கு செயல்பாட்டு பிரிவால் துப்பறியப்பட்ட மதுவிலக்கு வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள்.

| வரிசை எண்ணும் விவரங்களும். | 1987. | 1988. | 1989. | 1990. | 1991-92 (1992 சனவரி வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 2,29,014 | 4,08,326 | 5,94,929 | 3,78,298 | 3,12,165 |
| 2. குற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 2,05,612 | 3,20,352 | 4,85,199 | 3,70,076 | 2,90,672 |
| 3. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 22,338 | 70,324 | 3,17,088 | 2,72,641 | 1,87,614 |
| 4. விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 27,649 | 28,613 | 1,900 | 822 | 468 |
| 5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 11,086 | 14,737 | 743 | 57 | 33 |
| 6. விசாரணை முடிவுறாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 1,44,539 | 2,06,678 | 1,65,468 | 96,556 | 1,02,557 |
| 7. நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டுவிடப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 23,367 | 83,109 | 39,556 | 3,516 | 5,124 |
| 8. புலனாய்விலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 35 | 4,865 | 70,174 | 4,706 | 16,369 |



## இணைப்பு 9.

1992 மார்ச்சுத் திங்கள் முதல் நாளன்றுள்ளவாறு குண்டர்கள் சட்டத்தின்படி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை (ஆண்டுவாரியாக, தரம் வாரியாக விவரம்).

| | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 (1992 பிப்ரவரி வரை). | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3)] | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள். | 62 | 45 | 87 | 100 | 106 | 237 | 349. | 126 | 96 | 129 | 80 | 1,417 |
| மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள். | 3 | .. | .. | 7 | 1 | .. | 3 | .. | .. | .. | .. | 14 |
| வனச்சட்டத்தின்கீழ் வரும் குற்றவாளிகள். | .. | .. | .. | .. | .. | .. | 3 | 2 | 2 | 51 | 67 | 125 |
| குண்டர்கள் .. .. | 76 | 204 | 462 | 367 | 346 | 322 | 284 | 116 | 228 | 191 | 58 | 2,654 |
| விபச்சாரத் தொழில் குற்றவாளிகள். | 3 | .. | 1 | 1 | 5 | 3 | 7 | 3 | 1 | 1 | .. | 25 |
| சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள். | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | .. | 2 |
| மொத்தம் .. | 144 | 249 | 550 | 476 | 458 | 562 | 647 | 247 | 327 | 372 | 205 | 4,237 |

தலைமை இயக்குநர் பதவித் தரத்திலான காவல்துறை அதிகாரி ஒருவரின் தலைமையில் '' தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் '' ஒன்றை அரசு ஏற் படுத்தியுள்ளது.

6. உளவுத் தகவல்—பாதுகாப்புப் பிரிவு, காவல் துறை தலைவர் (உளவுத் தகவல்) ஒருவரின் தலைமை யின் கீழ் இயங்கி வருகிறது. இரயில்வே காவல் படை யின் நிருவாகத்தை கவனிக்க, காவல்துறை தலைவர் பதவி ஒன்றுக்கும் இந்த ஆண்டில் தற்போதுள்ள அரசு, அனுமதி அளித்துள்ளது.

7. தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகளின்(ஐ.பி.எஸ்.) எண்ணிக்கை 180 ஆகும். 1-4-1991 ஆம் நாள் நிலவரப்படி, இந்திய காவல் பணியைச் சேர்ந்தவர்கள் 143 பேர் மட்டுமே இருந் தனர். இந்த ஆண்டு வயது முதிர்வு காரணமாக நான்கு அதிகாரிகள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றனர் ; உடல் நலமின்மையால் இரண்டு அதிகாரிகள் காலமாயினர். பதினெட்டு காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் பயிற்சிக்காக, சென்னை, காவலர் பயிற்சிக் கல்லூரியில் 16-12-1991 முற்பகல் சேர்ந்தனர்.

8. இணைப்பு—II-ல் காட்டியுள்ளவாறு, தமிழ் நாட்டின் காவல் துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 1—1—1992 நிலவரப்படி 68,987 ஆகும். 1991 ஆம் ஆண்டில் 2,670 நிருவாகப் பணி பதவிகளும், 146 அமைச்சுப் பணிப் பதவிகளும், 24 ஏனைய பதவி களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள், இணைப்பு—III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படையைச் சேர்ந்த 189 படைப் பிரிவுகளும் (Platoons) தமிழ் நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த 9 அணி களும் (Battalions) அடங்கிய அதிரடிப் படை சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் பணியில் உள்ளூர் காவல் துறையினருக்குச் சிறந்த முறையில் உதவி வருகின்றன. இந்த ஒன்பது அணிகளில் ஒன்று, மத்திய அரசுக்கு முகமையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



(ii) ஏனைய அமைப்புகள்

(அ) துப்பறியும் நாய்ப்படை :

10. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், புலனாய் வுப் பணியாளர்களுக்கு உதவியளிப்பதிலும் துப்பறியும் நாய்ப்படை முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை மாநகரம், தென் ஆர்க்காடு, மதுரை, கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு-அம்பேத் கர், சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்ட பொம்மன், தஞ்சாவூர் (மேற்கு), வ. உ. சிதம்பர னார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்று என்ற வீதத்தில் மொத்தம் 11 துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் தமிழ்நாட்டில் உள்ளன. 1991 ஆம் ஆண் டில், 1,336 வழக்குகளில் இந்த துப்பறியும் நாய்கள் ஈடுபடுத்தப்பட்டன. 587 வழக்குகளில், அவற்றின் பணி பயனுள்ளதாக இருந்தது.

(ஆ) குதிரைப் படைப்பிரிவு:

11. இம் மாநில காவல் துறையைச் சேர்ந்த குதிரைப் படைப் பிரிவு, ஆங்கிலேயர் ஆட்சி மரபுவழி வந்த ஒன்றாகும் ; இப்படைப் பிரிவு கும்பலையும், போக்குவரத்தையும் முறைப்படுத்துவதோடு, சிறப்பு நிகழ்ச்சிகளின்போது தொடர்ந்து நல்ல முறையில் பணி யாற்றி வருகிறது. சென்னை மாநகரிலுள்ள குதிரைப் படையில் 34 குதிரைகளும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள குதிரைப் படைப்பிரிவு ஒவ்வொன்றிலும் 10 குதிரைகளும் உள்ளன. இப்படைக்கு ஊக்கம் அளித்து, அவற்றை மிகவும் திறமையான வகையில் பயன்படுத்தும் நோக் குடன், குதிரைப் படையைச் சீரமைத்து, வலுப் படுத்த இவ்வரசு கருதியுள்ளது.

(இ) குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவு:

12. தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர் களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றவும், குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிப் பாகச் செயல்படுத்துவதில் அரசு, தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது

மதிப்பிட்டு முன் கூட்டியே சேகரித்து அவற்றைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அவை நடைபெறாவண்ணம் செயலிழக்கச் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவை அடங்கும்.

'துப்புத் துலக்கும் பணி' என்பதில் குற்றங்கள் குறித்து உடனடியாக புலன் விசாரணை செய்தல், குற்றங்களைக் கண்டறிதல், குற்றவாளிகளைக் கைது செய்து அவர்கள் மீது வெற்றிகரமாக வழக்குகளைத் தொடருதல் ஆகியவை அடங்கும். விரைவாக தொழில்கள் பெருகுதல், நகர்ப்பகுதிகளின் விரிவாக்கம், கிராமப் புறங்களிலிருந்து நகர்ப் பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்தல், பொதுவாக மக்களிடையே காணப்பெறும் ஒழுக்கப் பண்புகள் மாறுதல், குற்றவாளிகளின் செயல் முறைகளில் மாறுபாடு, புலன் விசாரணைப் பணியில் பொதுமக்களின் ஒத்துழையாமை முதலான காரணங்களால் காவலர்கள் தங்கள் கடமைகளை ஆற்றும்போது பல தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் புலன் விசாரணை செய்து குற்றங்களைக் கண்டறிவது மிகவும் கடினமாக இருக்கிறது. எனவே, அக் குற்றங்களைக் கண்டறிய காவல் துறையினர், நவீன கருவிகளையும், சிறந்த உத்திகளையும் கையாள வேண்டியுள்ளது.

'முறைப்படுத்து பணிகள்' என்பதில் போக்குவரத்துச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை அமல் செய்தல், மாநகரச் சாலைகளில் போக்குவரத்தை முறைப்படுத்தல், முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழிற்சாலைகள், நிறுவனங்கள், இன்றியமையா அமைப்புகள், முதலியவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தல் முதலியன அடங்கும். மதுவிலக்குச் சட்டம், வரதட்சணை தடைச் சட்டம், குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம், குண்டர்கள் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூக நலச் சட்டங்களைச் செயல்படுத்துவதும், இவ் வகையைச் சாரும் பணிகளாகும். இச் சட்டங்களின் மூலம், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, நலிந்த பிரிவினர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது ; அதே சமயம், சமூக விரோதிகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டு, தடுக்கப்படுகின்றன.



## II. அமைப்பும், நிருவாக அமைப்பும்.

3. இணைப்பு I-ல் காணப்படும் காவல்துறை குறித்த விளக்கப்படம், தமிழ்நாடு காவல் துறையின் அமைப்பு முறையை தெளிவுபடுத்துகிறது.

### (i) உயர் பதவி நிலை அமைப்பு முறை :

4. தமிழ்நாடு காவல் துறை, இம்மாநிலத்தில் பல பணியாளர்களைக் கொண்ட ஒரு பெரிய துறையாகும். இத்துறைக்கு, காவல் துறை இயக்குநர் தலைமை வகிக்கிறார். இவர், சட்டம்-ஒழுங்கு பராமரிப்புடன், மாநிலத்தின் காவல் துறையின் நிருவாகத்திற்கு ஒட்டு மொத்தப் பொறுப்பும் வகிக்கிறார்.

5. இம் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை நிருவகித்தல், பராமரித்தல் தொடர்பான பணிகளில் காவல்துறைத் தலைமை இயக்குநருக்கு, காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு) உதவுகிறார். காவல் துறை பணியாளர் நிருவாகத்தைக் கவனிப்பதற்கென்றே காவல்துறைத் தலைவர் (பணியாளர்) பதவி ஒன்றுக்கு தற்போதைய அரசு அனுமதியளித்துள்ளது. காவல்துறைத் தலைவர் (குற்றங்கள்), தனி வகைக் குற்ற வழக்குகளையும், தொழில் நுட்பப் பணிகளையும் கவனித்து வருகிறார். வனச் செல்வங்கள், நுகர் பொருள் வழங்கல் தொடர்பான குற்றங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு காவல் துறைத் தலைவரிடம் (வனப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், சிவில் பாதுகாப்பு உட்பட, ஊர்க்காவல் படை நிருவாகம், காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை) மற்றும் சிவில் பாதுகாப்பு இயக்குநர் அவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் காவல்துறைத் தலைவர் தலைமையில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஒன்றை 15-10-1991 முதற்கொண்டு தற்போதைய அரசு ஏற்படுத்தியுள்ளது. காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை உட்பட சீருடை துறைகளுக்குரிய பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறையைச் சீரமைத்து நியாயமாகவும், உரியவாறும் ஆள் சேர்க்கும் நோக்குடன், காவல் துறை

இச்சட்டம், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் காவல்
நிலையங்களாலும் அமல் படுத்தப்படுகிறது. சென்னை
மாநகர் தவிர, தமிழ்நாட்டிலுள்ள 25 காவல்
மாவட்டங்களில் 25 இயலூர்திக் காவல் பிரிவுகள்
செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள், ஒவ்வொன்றி
லும் காவல்துறை ஆய்வாளர் ஒருவர், காவல்துறை
உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர்,
நிலை—2 காவலர் இருவர் ஆகியோர் இருக்கின்றனர்.
ஒவ்வொரு பிரிவுக்கும் ஜீப் ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளது.
இத்தகைய இயலூர்திக்காவல் பிரிவு ஒவ்வொன்றும்,
அந்தந்த மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரின்
கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. காவல்துறைத் துணைத்
தலைவர் (குடியுரிமைப் பாதுகாப்பு) சென்னையைத்
தலைமையிடமாகக் கொண்டு, இச்சட்டம் செயல்படுத்
தப்படுவதை கண்காணித்து வருகிறார். காவல்துறைத்
துணைத் தலைவருக்கு (குடியுரிமைப் பாதுகாப்பு) உதவு
வதற்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை
ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக்கொண்டு
காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் தலைமையின்
கீழ் மூன்று கண்காணிப்புப் படைகள் 1987 நவம்பரி
லிருந்து செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த
இயலூர்திக் காவல் பிரிவுகள் தவிர இச்சட்டத்தைச்
செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை பற்றிய
தகவலை குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கண்
காணிப்பதற்கென்றே ஒவ்வொரு மாவட்டத்திலும்,
புள்ளி விவர ஆய்வாளர் ஒருவரும், காவல் துறை
உதவி ஆய்வாளர் ஒருவரும் உள்ளனர். பொருளாதார
நிபுணர் ஒருவர், சமுதாய வளர்ச்சி நிபுணர் ஒருவர்
ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி—பகுப்பாய்வியல்
பிரிவு ஒன்று தீண்டாமை நடைமுறையில் இருப்பதற்கு
வாய்ப்புள்ள கிராமங்களில் அதனை ஒழிப்பதற்காக
மாதிரி ஆய்வுகளை நடத்தி வருகிறது. இப் பிரிவு
குறைகளைத் தீர்ப்பதற்கான அறிக்கைகளைச்
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு
அனுப்புகிறது. இப்பிரிவு ஒரு நலஅமைப்பாகச்
செயல்பட்டு, ஆதி திராவிடர்களின் நியாயமான
குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக அரசு வகுத்த
அரசின் கொள்கைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்து
வதில் பிற துறைகளின் அலுவலர்களுடன் ஒருங்
கிணைந்து செயல்படுகிறது.



**(ஈ) தனி நீதிமன்றங்கள் :**

13. இந்த மாநிலத்தில் குடியுரிமைப் பாதுகாப்புச்
சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்காக,
நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட், அவருக்கு
உதவுவதற்குத் தேவையான பணியாளர் ஆகியோ
ருடன் நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன. இவை,
தஞ்சாவூர் மேற்கு (கும்பகோணம்), திருச்சிராப்
பள்ளி, மதுரை, திருநெல்வேலி--கட்டபொம்மன் ஆகிய
மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்
தகைய தனி நீதிமன்றங்கள், குடியுரிமைப் பாது
காப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளையும்,
ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்
படும் இன்னல்கள், கொடுமைகள் ஆகியவை குறித்த
பிற வழக்குகளையும் விசாரிக்கின்றன. குடியுரிமைப்
பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 1990 ஆம் ஆண்டில்
789 வழக்குகளும், 1991 ஆம் ஆண்டில் 861
வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. இதே
போன்று ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக
இழைக்கப்பட்ட இன்னல்கள், கொடுமைகள் தொடர்
பாக, 1990ஆம் ஆண்டில் 545 வழக்குகளும்,
1991ஆம் ஆண்டில் 552 வழக்குகளும் பதிவு செய்யப்
பட்டன.

**(உ) பெண் காவலர்கள் :**

14. பெண் காவலர் பிரிவு தமிழ்நாடு காவல்
துறைக்கு ஒரு அவசியமான உறுப்பாக அமைந்
துள்ளது. பெண் கைதிகளைச் சோதனையிடல்,
பெண் குற்றவாளிகளைக் கைது செய்து, நீதிமன்றங்
களுக்குப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுதல்,
இளம் குற்றவாளிகள் தொடர்பான பணிகளை
கவனித்தல், மகளிர் மருத்துவமனைகள், மகளிர்
கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பெண்கள் மீது
இழைக்கப்படும் குற்றங்களிலிருந்து பாதுகாத்தல்
போன்ற கடமைகளில் இப்பிரிவு மதிப்பிடத்தக்க
வகையில் உதவி வருகின்றது. 1991-ம் ஆண்டில்
இம் மாநிலத்தில் உள்ள பெண் காவலர்கள் படைப்
பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் மொத்த

எண்ணிக்கையானது, 10 காவல் துறை ஆய்வாளர்கள், 108 காவல் துறை உதவி ஆய்வாளர்கள், 100 தலைமைக் காவலர்கள், 1,039 காவலர்கள் ஆகும்.

1991 மார்ச்சில் 389 பெண் காவலர்கள் தெரிவு செய்யப்பட்டு 13-5-1991 ஆம் நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். தற்போதுள்ள அரசு, சென்னை மாநகரில் '' முற்றிலும் பெண் காவலர்களைக் கொண்ட காவல் நிலையம் '' ஒன்றை ஏற்படுத்த ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. இத்தகைய காவல் நிலையம் ஏற்படுத்தப்பட்டு விரைவில் செயல்படத் தொடங்கும்.

**(ஊ) சிறப்புப் பாதுகாவல் படை :**

15. இலங்கையிலிருந்து பல்வேறு போராளிக் குழுவினர் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவியது, அவர்களின் மறைமுகமான, வெளிப்படையான தீவிரவாத நடவடிக்கைகள் இந்தியாவின் முன்னாள் பிரதமர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது ஆகியன, அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்து கொல்வதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக முறையிலான அரசைத் திட்டமிட்டு நிலைகுலையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டவை எனக் கருதப்படுகின்றன. பிரபல தலைவர்கள், சீர் பெருமக்கள் ஆகியோரின் உயிருக்கு குறிப்பாக தமிழக முதல்வர் அவர்களின் உயிருக்குப் போராளிகள் / தீவிரவாதிகளினால் ஆபத்து ஏற்படும் நிலை இருந்து வருகிறது. நவீன முறைகளைப் பின்பற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை உரிய வகையில் சமாளிக்க வேண்டியுள்ளது. தற்போதுள்ள காவல் துறையினருக்கு, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைச் செயல்படுத்தல், குற்றவியல் உளவுத் தகவல்களைச் சேகரித்தல் ஆகிய பணிகளிலேயே அவர்களது முழு நேரமும் சரியாகிவிடுகிறது. எனவே, போராளிகளினால் பெரிய அளவில் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரமுகர்களுக்குத் தேவையான பாதுகாப்பை இந்த காவல் துறையால் போதிய அளவுக்கும் திறம்படவும் அளிக்க இயலவில்லை.



சீர் பெரு மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் தவறே நிகழாமல் இருக்கும் வகையில் இந்த அரசு " சிறப்புப் பாதுகாவல் பிரிவு (எஸ்.எஸ்.ஜி.) " ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற தேசிய பாதுகாப்புப் படையைப் (என்.எஸ்.ஜி.) போன்று முதல் அமைச்சருக்கும் ஏனைய முக்கிய சீர்பெருமக்களுக்கும் முழுப் பாதுகாப்பு அளிப்பதற்காக மாநில காவல் படையைச் சேர்ந்த தகுதியும் நேர்மையும் வாய்ந்த அலுவலர்களைக் கொண்ட சிறப்புப் பாதுகாவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது முகமையில் பெறப்பட்ட 39 தேசியப் பாதுகாவல் பிரிவுப் பணியாளர் இந்த சிறப்புப் பாதுகாவல் பணியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாடு காவல் துறையில் போதுமான பணியாளர்களுக்கு ஹரியானாவிலுள்ள மனேசரில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

## III. புலனாய்வுக் கருவிகள்.

**(அ) அறிவியல் கருவிகள் :**

16. அறிவியல், தொழில் நுட்பவியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் அதிகரித்து வரும் கணிப்பொறிகளின் பயன்பாடும் உலகமெங்கிலும் நிருவாக முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய முன்னேற்றங்களையும், புதிய தொழில் நுட்ப வளர்ச்சியையும், உணர்ந்துள்ள தமிழ்நாடு காவல் துறை குற்றங்களைக் கண்டறிவதில் புதிய உத்திகளைப் புகுத்தியதோடு, குற்றங்கள் தொடர்பான தகவல்கள், காவல் துறைப் பணியாளர்களைப் பயன்படுத்துதல் பற்றிய விவரங்கள், காவல்துறைப் பணியாளர் பற்றிய தகவல் விவரங்கள் ஆகியவற்றைக் கணிப்பொறிகளில் தொகுத்து வைப்பதிலும், புதிய முறையைப் புகுத்தியுள்ளது.

**(ஆ) கணிப்பொறிப் பிரிவு :**

17. காவல்துறையில் 1971 ஆம் ஆண்டிலேயே கணிப்பொறி வசதி அமைக்கப்பட்டது. குற்றம் தொடர்பான ஆவணங்களும், குற்றவாளி

ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு கணிப்பொறித் தகவல் தொகுப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள், தொலையச்சுத் தகவல் தொடர்பு மூலம் (Teleprinter Terminal) நேரடியாகத் தொடர்பு கொண்டு, மாவட்டங்களில் துப்புத் துலக்க முடியாத காணாமல் போன பொருட்கள் குறித்த வழக்குகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெற இயலும் வகையில், இக்கணிப் பொறி தகவல் பிரிவு மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. தேசிய குற்ற ஆவணப் பிரிவு, இந்த கணிப்பொறிக்கு பதிலாக நவீன கணிப்பொறி வாங்கத் திட்டமிட்டுள்ளது. அது செயல்படுத்தப்படும்போது காவல் துறை கணிப்பொறி இணைப்பை எற்படுத்துவதற்காக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், குற்றம் தொடர்பான ஆவணங்களை தேசிய அளவில் கணிப்பொறி மயமாக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 8 மாவட்டங்களில் 8 'பெர்சனல்' கணிப்பொறிகளும், 'மினி' கணிப்பொறி ஒன்றும் நிறுவப்படும்.

மோட்டார் வண்டிகள் போக்குவரத்து விபத்துக்கள் பற்றிய தகவல்களை கணிப்பொறி மயமாக்குவதற்காக, 1988 இல் ரூ. 3.92 இலட்சம் செலவில் இரண்டு 'பெர்சனல்' கணிப்பொறிகள் வாங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அவற்றுக்கான கூடுதல் பணியாளர்கள், கட்டிடங்களுக்கான வாடகை ஆகியவற்றுக்கும் அரசு அண்மையில் அனுமதியளித்துள்ளது.

(இ) தமிழ்நாடு விரல் ரேகை பதிவுப் பிரிவு :

18. சென்னையில் உள்ள தமிழ்நாடு விரல் ரேகை பதிவுப்பிரிவும், ஒவ்வொரு காவல் மாவட்டத்திலுமுள்ள ஓரிலக்க விரல் ரேகை பதிவுப் பிரிவுகளும், புலனாய்வு அதிகாரிகளால் சந்தேகப்படக் கூடியவர்கள், கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் ஆகியோரின் முன் நடத்தைகளை கண்டறிவதிலும், கொலை, கொள்ளை, திருட்டு முதலான குற்றங்கள் நடைபெற்ற இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகை பதிவுகளைக் கொண்டு குற்றவாளி இன்னாரென தீர்மானிப்பதிலும் புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவுகின்றன. சென்னையில் உள்ள தலைமை விரல் ரேகை பதிவுப்பிரிவில் மொத்தம்



5.5 இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழக மாவட்டங்களில் அமைந்துள்ள (Single digit) ஓரிலக்க விரல் ரேகை பதிவுப் பிரிவுகள் 26-ல் மொத்தம் 2.09 இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு நவம்பர் முடிய 1,099 வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

வடஆற்காடு-அம்பேத்கர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய மாவட்டங்களில் நீண்டகாலமாக கண்டுபிடிக்கப்படாமலிருந்த பயங்கரக் கொள்ளை குற்றங்கள் தொடர்பான 8 வழக்குகளில், தற்செயலாகப் பதிவான விரல் ரேகைகளை ஆந்திரப் பிரதேசம் ஐதராபாத்திலுள்ள ஓரிலக்க விரல் ரேகை பதிவுப் பிரிவு/விரல் ரேகை பதிவுப்பிரிவில் உள்ள ஆவணங்களைக் கொண்டு சென்னை தமிழ்நாடு விரல்ரேகைப் பிரிவுப் பணியாளர்கள் கண்டறிந்தனர். 8 வழக்குகளில் இழந்த சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 9.37 இலட்சம் ஆகும்.

(ஈ) குற்றத் தடய ஆய்வுத் துறை :

19. குற்றத்தடய ஆய்வுத் துறை, ஆசியாவிலேயே மிகவும் பழமையான நிறுவனங்களில் ஒன்றாகும். இதன் முதல் பிரிவு 1849 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மாநில அரசின் சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கும் தேவைப்படும் போதெல்லாம் மத்திய அரசுத் துறை நிறுவனங்களுக்கும் இத்துறை குற்றத் தடய ஆய்வுப் பணியை ஆற்றிவருகிறது.

இத்துறையின் முதன்மை ஆய்வுக் கூடம் சென்னையில் உள்ளது. இதில் துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணங்கள், ஆயத்துறை, நிழற்படப் பிரிவு, இயற்பியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி-வளர்ச்சி, [illegible]றை நீரியல் பிரிவு (செராலஜி), நஞ்சியல், போதைப் பொருள் பிரிவு, கருவிகள் பிரிவு என

தனித்தனியாக 13 பிரிவுகள் உள்ளன. மதுரை கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர், சேலம் ஆகிய ஆறு இடங்களில் மண்டல ஆய்வுக் கூடங்கள் உள்ளன.

வேலூரிலும், சேலத்திலும் உள்ள பிரிவுகள் மதுவிலக்கு வழக்குகளை மட்டுமே கவனிக்கின்றன. அந்தந்த இடத்திலேயே, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக, 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் குற்றத் தடய ஆய்வகங்கள் செயல்படுகின்றன. இவற்றுடன் சென்னைப் பெருநகரில் குற்றம் நடந்த இடத்தில் குற்றத் தடய ஆய்வுப் பணிக்காக 24 மணி நேரமும் செயல்படக் கூடிய நடமாடும் தடய ஆய்வுக் கூடம் ஒன்றும் செயல்படுகிறது.

இத்துறை குற்றத் தடய ஆய்வு தொடர்பான கல்வி வசதிகளையும் அளிக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரே அரசுத் துறை இதுவேயாகும்; சென்னைப் பல்கலைக் கழகம் குற்றத் தடய ஆய்வுப் படிப்பில் எம்.எஸ்.சி. பட்டமும், பி.எச்.டி. பட்டமும் அளிக்கிறது. இத்துறை, எம்.எஸ்.சி (சுற்றுச் சூழல்—நஞ்சியல்) எம்.டி. (தடய மருந்து), எம்.ஏ., (குற்றவியல்) போன்ற குற்றவியல், நஞ்சியல் தொடர்பான வகுப்புகளை நடத்துவதில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மாநில மருத்துவ நிறுவனத்திற்கும் உதவுகிறது. குற்றத் தடய ஆய்வு எம்.எஸ்.சி. படிப்பிற்கு ஆண்டுதோறும் இருபது மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இத்துறையை குற்றத் தடய ஆய்வுப் படிப்பில் பி.எச்.டி. பட்டம் அளிக்கும் ஆராய்ச்சி மையம் எனக் கருதி, அதற்கு சென்னைப் பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவை அங்கீகாரம் அளித்துள்ளன. தற்போது அறிஞர்கள் 26 பேர் குற்றத் தடய ஆய்வு தொடர்பாகப் பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இத்துறை, 1—1—1991 முதல் 31—12—1991 வரை 55,433 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,40,261 பொருட்களை ஆய்வு செய்துள்ளது.



சட்டத்தைச் செயலாக்கும் அமைப்புகளுக்குத் தடய ஆய்வுப் பணிகளை அளிப்பதுடன், இத்துறை சென்னை மாநகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மருத்துவ மனைகளில் நச்சுப் பொருட்களை உட்கொண்டதற்காகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் நஞ்சியல் மருத்துவ வசதிகளையும் அளிக்கிறது. சர்ச்சைக்குரிய குழந்தைகளின் தந்தை யார் என்று கண்டுபிடித்து இந்நாட்டிலுள்ள ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு உதவும் சமூக அமைப்பாக இத்துறை ஆய்வு மையம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

தற்போதுள்ள அரசு பின்வரும் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. அவை 1991-92-ல் செயலாக்கப்பட்டன :—

(i) எண். 70 KVA/56 KW/AMF—வகை டீசல் மின் உற்பத்தி எந்திரம் ஒன்று அமைத்தல்.

(ii) மானிடவியல் குறித்த புதிய பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்.

(iii) பயோ டெக் ஆட்டோமேடட் மைக்ரோ பிளேட் மாடல் EL 371 விசா ரீடர் சாதனம் வாங்குதல்.

தற்போதுள்ள அரசு, 1992-93 ஆம் ஆண்டில் செயலாக்குவதற்காக பின்வரும் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

(i) சர்ச்சைக்குரிய குழந்தைகளின் தந்தை யார் என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வு மையத்திற்கு ரூ. 10 இலட்சத்திற்கு '' HLA ஆண்டிசீரம் '' (HLA Antisera) வாங்குதல்.

(ii) குற்றத் தடய ஆய்வு உதவியாளர் நிலை-I என்கின்ற 10 பதவிகளை தடய ஆய்வு அதிகாரிகளாக நிலை உயர்த்துதல்.

(iii) போதைப் பொருள் பிரிவை விரிவாக்குதல்.

(iv) சாதனங்கள் வாங்குதல்—

(அ) கார்பன்-டை-ஆக்ஸைடு இன்குபேட்டரும் துணைச் சாதனங்களும்.

(ஆ) குளிர்பதன வசதியுடன் கூடிய நுண்ணிய, சாதாரண ''சென்ட்ரிஃப்யூகஸ்'' (Centrifuges)

(இ) நிழற்படப் பிரிவிற்கென்று ஐந்து நிழற்படச் சாதனங்கள்.

## IV. தகவல் தொடர்பு ஏற்பாடு

### (i) கம்பியில்லாத் தந்தி :

20. தமிழ்நாடு காவல்துறை திறமைவாய்ந்த தகவல் தொடர்பு அமைப்பினை தன்னகத்தே கொண்டு மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. நுண்ணலை தகவல் தொடர்பு அமைப்பு 545.5 கி.மீட்டர் வரை தகவல் வசதியினை கொண்டுள்ளது. மாவட்ட தலைமை இடங்களுக்கானத் தகவல் தொடர்பு இணைப்பு வசதிகள் 1164 கி.மீ. நீளத்திற்கு மீவுயர் அலை முறையில் உள்ளன. இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை—சம்புவராயர், காமராஜர் ஆகிய மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலக் காவல் தலைமையகத்துடன் நுண்ணலை (Micro wave) மீவுயர் அலை (V.H.F.) அதி மீவுயர் அலை (U.H.F.) வசதி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டத் தலைமை இடங்களான இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்கு நுண்ணலைத் தொடர்பு வசதி அளிப்பது பரிசீலனையில் உள்ளது. 1,075 காவல் நிலையங்களில் 1,015 காவல் நிலையங்களுக்கும், 121 உட்கோட்டங்களில் 105 உட்கோட்டங்களுக்கும் மீவுயர் அலை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 29 கட்டுப்பாட்டு அறைகள் இயங்கி வருகின்றன. இவை தவிர, மோட்டார் வண்டிகளில், 346 அதிமீவுயர் அலைக் கருவிகளும், மோட்டார் சைக்கிள்களில் 155 அதிமீவுயர் அலைக் கருவிகளும், இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன.



இலங்கைப் போராளிகளின் தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கத்துடன், கடலோரக் காவல் படையினருக்கும், கடற்படைக் கப்பல்களுக்கும் 10 அதி மீவுயர் அலைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1991 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களின்போது, தேர்தலை சுமுகமாக நடத்த, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது தொடர்பான தகவல்களை உடனடியாக அனுப்பும் பொருட்டு, 15 தனிவகை அதிமீவுயர் அலை ரிப்பீட்டர்கள் அமைக்கப்பட்டன.

### (ii) சுற்றுக்காவல் :

21. பரந்துபட்ட எல்லையினை ஆளுகை வரம்பாகக் கொண்டுள்ள புறநகர் பகுதிகளின் அவசரப் பாது காப்புத் தேவைக்காக உடனடியாகச் சென்று சுற்றுக் காவல் பணியைச் செய்ய வேண்டியது காவல் துறை யினரின் முதன்மையான பணியாகும். இம்மாநிலத்தி லுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஜீப்புகள் வழங்க வேண்டுமென்பது அரசின் திட்டமாகும். இதைக் கருத்தில் கொண்டு, காவல் படையை நவீன மாக்கல் என்கிற திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழங்கும் மானியத்திலிருந்து 123 டெம்போ டிராக்ஸ் வாங்கக் கருதப்பட்டுள்ளது. அத்துடன் நடப்பாண்டிலேயே 100 டெம்ப்போ டிராக்ஸ் ஜீப்புகளையும் (Tempo Trax Jeep) வாங்கக் கருதப்பட்டுள்ளது. இந்த வண்டிகள் தவிர, சென்னை மாநகரில் மட்டும் பயன்படுத்துவதற்காக 32 வண்டிகளை வாங்க, அரசு அனுமதி அளித்துள்ளது. காவல் அண்மையில் நிலையங்கள் அனைத்திற்கும் மோட்டார் வண்டிகள் வழங்கும் திட்டம், நிதிநிலையைப் பொறுத்து, படிப் படியாகத் தீவிரமாகச் செயலாக்கப்படும். இந்த வசதி, காவல் துறையினர் சுற்றுக்காவல் பணியை திறம்பட ஆற்ற பெருந்துணையாய் அமையும்.

## V. ஊக்கமளித்தலும் ஒழுங்குணர்வும்

22. காவல் துறையினரின் இடர்மிகுந்த ஆபத்தான பணியின் கடுமையைக் கருத்திற்கொண்டு, அனுதாபமுடனும் கருணையுடனும் அரசு இருந்து வந்துள்ளது. மனந்தளராத பற்றுறுதியும், கடமைப் பற்றும் அவர்களிடையே நிலைப்பெற்றிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, அவர்களை ஊக்குவித்து, அவர்களிடையே நல்ல ஒழுங்குணர்வை ஏற்படுத்தும் வகையில், ஊக்கத் திட்டங்கள், வெகுமதிகள், பரிசுகள், போன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை அரசு வகுத்திருக்கிறது.

### (i) காவலர் நல ஊக்கத் திட்டங்கள் :

**(அ) உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் :**

23. இத்திட்டம் 1980 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, 1984 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப் பட்டது. அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவா, மைதா, பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு போன்ற இன்றியமையா உணவுப் பொருட்கள், காவல்துறை இன்ஸ்பெக்டர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கும், காவல் துறை வானொலிப் பிரிவிலுள்ள தொழில் நுட்பப் பிரிவு பணியாளர்களுக்கும் சுருக்கெழுத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் மிகக் குறைந்த சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

**(ஆ) தமிழ்நாடு காவல் துறையினர் வீட்டு வசதிக் கழகம் :**

24. காவல் துறையினர் பணியைச் செவ்விய முறையில் மேற்கொள்வதற்கு, காவல் துறை அதிகாரிகள், காவல்துறை பணியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகில் வீடுகள் கட்டிக் கொடுப்பது இன்றியமையாததாகும். காவல்துறை பணியாளர்களுக்குக் குறிப்பாகக் கீழ்நிலையிலுள்ள பணியாளர்களுக்குத் தற்போதுள்ள வீட்டு வசதிகள் போதிய அளவிற்கு இல்லை. குறிப்பாக தற்போதுள்ள சூழ்நிலையில் காவல்துறைப் பணியாளர்களுக்கு



அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, காவல்துறையில் 42 சதவீதத்தினருக்கே வீட்டு வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முன்னாள் தமிழ்நாடு காவல் துறையினர் வீட்டு வசதிக் கழகம், இம்மாநிலம் முழுவதிலும் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியுள்ளது. இக்கழகம், 31—3—1989 அன்று கலைக்கப்பட்டது. இதனால், காவல் துறையினருக்கு வீட்டு வசதித் திட்டத்தை நடை முறைப் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்தன. காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த தற்போதைய அரசு காவல்துறை கூடுதல் டைரக்டர்-ஜெனரல் அவர்களின் தலைமையின் கீழ் தமிழ்நாடு காவல் துறையினர் வீட்டு வசதிக் கழகத்தை புதுப்பித்து அமைத்துள்ளது. தற்போது, தமிழ்நாடு காவல் துறையினர் வீட்டு வசதிக் கழகம் தன்னுடைய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இக்கழகம், காவல் துறையில் பணியாற்றுபவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டிய முக்கிய நோக்கத்துடன் குறுகிய காலத்தில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் சீரிய திட்டம் ஒன்றை நிறைவேற்ற கருதியுள்ளது. காவல் துறையினர் வீட்டு வசதிக் கழகத்திற்கு 1991-92ஆம் ஆண்டில் ரூ. 3.00 கோடி, 1992-93ஆம் ஆண்டில் ரூ. 3.4 கோடி மூலதனப் பங்குத் தொகையாக அரசு வழங்கியுள்ளது. இக்கழகம், நிலம் தயாராகவுள்ள பின்வரும் இடங்களில் 1,000 வீடுகள் கட்ட உத்தேசித்துள்ளது. இப்பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப் பட்டுள்ளது.

| கோட்டத்தின் பெயர் | தீயணைப்பு நிலையத்தின் பெயர் |
|---|---|
| 3. தென்மண்டலம், மதுரை-57—தொடர்ச்சி. | |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் கோட்டம் .. | 1. பாளையங்கோட்டை |
| | 2. திருநெல்வேலி (பேட்டை) |
| | 3. தென்காசி |
| | 4. கடையநல்லூர் |
| | 5. அம்பாசமுத்திரம் |
| | 6. நாங்குநேரி |
| | 7. சங்கரன்கோயில் |
| | 8. வாசுதேவ நல்லூர் |
| | 9. வள்ளியூர் |
| கன்னியாகுமரி கோட்டம் .. | 1. நாகர்கோயில் |
| | 2. கன்னியாகுமரி |
| | 3. குழித்துறை |
| | 4. குலசேகரம் |
| | 5. பத்மநாபபுரம் |
| சிதம்பரனார் கோட்டம் .. | 1. கோவில்பட்டி |
| | 2. தூத்துக்குடி |
| | 3. தூத்துக்குடி அனல் மின் நிலையம் |
| | 4. திருச்செந்தூர் |
| | 5. சாத்தான்குளம் |
| | 6. ஸ்ரீவைகுண்டம் |
| | 7. விளாத்திகுளம் |
| | 8. கழுகுமலை |
| 4. மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்—59 | |
| கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி கோட்டம் | 1. கோயம்புத்தூர் (தெற்கு) |
| | 2. கோயம்புத்தூர் (வடக்கு). |
| | 3. மேட்டுப்பாளையம் |
| | 4. திருப்பூர் |
| | 5. பொள்ளாச்சி |
| | 6. உடுமலைப்பேட்டை |



| கோட்டத்தின் பெயர் | தீயணைப்பு நிலையத்தின் பெயர் |
|---|---|
| கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி கோட்டம்—தொடர்ச்சி. | |
| | 7. வால்பாறை |
| | 8. பல்லடம் |
| | 9. ஈரோடு |
| | 10. தாராபுரம் |
| | 11. காங்கேயம் |
| | 12. கோபிசெட்டிப்பாளையம் |
| | 13. சத்தியமங்கலம் |
| | 14. கூடலூர் |
| | 15. உதகமண்டலம் |
| | 16. குன்னூர் |
| | 17. கணபதி |
| வேலூர்-அம்பேத்கார் கோட்டம் .. | 1. வேலூர் |
| | 2. இராணிப்பேட்டை |
| | 3. இராணிப்பேட்டை (சிப்காட்) |
| | 4. அரக்கோணம் |
| | 5. திருப்பத்தூர் |
| | 6. வாணியம்பாடி |
| | 7. ஆம்பூர் |
| | 8. குடியாத்தம் |
| | 9. சோளிங்கர் |
| | 10. நாட்றாம்பள்ளி |
| திருவண்ணாமலை-சம்புவராயர் கோட்டம் .. | 1. திருவண்ணாமலை |
| | 2. செங்கம் |
| | 3. போளூர் |
| | 4. செய்யார் |
| | 5. வந்தவாசி |
| | 6. ஆரணி |
| | 7. தண்டராம்பட்டு |
| | 8. ஜவ்வாதுமலை |

| கோட்டத்தின் பெயர் | தீயணைப்பு நிலையத்தின் பெயர் |
|---|---|
| சேலம்-தர்மபுரி கோட்டம்.. | 1. மேட்டூர் அனல் மின் நிலையம் |
| | 2. சேலம் |
| | 3. திருச்செங்கோடு |
| | 4. ஆத்தூர் |
| | 5. மேட்டூர் |
| | 6. நாமக்கல் |
| | 7. ராசிபுரம் |
| | 8. சங்ககிரி |
| | 9. ஏற்காடு |
| | 10. கொல்லிமலை |
| | 11. தர்மபுரி |
| | 12. ஒசூர் ( சிப்காட்) |
| | 13. கிருஷ்ணகிரி |
| | 14. அரூர் |
| | 15. பெண்ணகரம் |
| | 16. பாலக்கோடு |
| திண்டுக்கல்-அண்ணா கோட்டம் .. | 1. நத்தம் |
| | 2. வத்தலகுண்டு |
| | 3. திண்டுக்கல் |
| | 4. பழனி |
| | 5. ஒட்டன்சத்திரம் |
| | 6. வேடசந்தூர் |
| | 7. கொடைக்கானல் |
| | 8. நிலக்கோட்டை |

மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| வட மண்டலம் | 33 |
| மத்திய மண்டலம் | 56 |
| தென் மண்டலம் | 57 |
| மேற்கு மண்டலம் | 59 |
| மொத்தம் .. | 205 |



பிற்சேர்க்கை-V.

1987 முதல் 1991 வரை கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள், உடைமைகள் மற்றும் உயிர்ச் சேதம், காப்பாற்றப்பட்ட உடைமைகள்/உயிர்களின் விவரம்.

| ஆண்டு. | தீ விபத்துக்கள் எண்ணிக்கை. | சேதம். | | காப்பாற்றப்பட்டவை. | |
|---|---|---|---|---|---|
| | | உடைமை. | உயிர்கள். | உடைமை. | உயிர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | | ரூ. | |
| 1987 | 10,668 | 8,20,36,000 | 182 | 60,72,37,235 | 271 |
| 1988 | 10,200 | 3,98,75,900 | 126 | 35,01,03,900 | 148 |
| 1989 | 10,330 | 4,72,53,750 | 178 | 64,23,41,510 | 211 |
| 1990 | 10,341 | 7,36,94,873 | 140 | 64,32,81,907 | 274 |
| 1991 | 12,157 | 10,47,48,851 | 98 | 53,42,44,763 | 99 |

165045

-600 008.

| தொடர் எண். | பிரிவு. | இடம். | தற்போது கட்டக் கருதியுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தமிழ்நாடு சிறப்புக் காவலர் 1ஆவது அணி | திருச்சிராப்பள்ளி | 200 |
| 2 | தமிழ்நாடு சிறப்புக் காவலர் 3ஆவது அணி | மணிமுத்தாறு | 140 |
| 3 | ஆயுதம் தாங்கிய காவலர் | தஞ்சாவூர் | 150 |
| 4 | ஆயுதம் தாங்கிய காவலர் | விழுப்புரம் | 60 |
| 5 | ஆயுதம் தாங்கிய காவலர் | தருமபுரி | 60 |
| 6 | புளியந்தோப்பு | சென்னை மாநகரம். | 100 |
| 7 | இராஜா அண்ணாமலைபுரம் | சென்னை மாநகரம். | 130 |
| 8 | தெற்கு வெளித்தெரு | மதுரை மாநகரம். | 160 |
| | | மொத்தம் : | 1,000 குடியிருப்புகள் |



இதனால், தமிழ்நாடு காவல் துறையினர் வீட்டுவசதிக் கழகம், தமிழ்நாட்டில், இனிவரும் ஆண்டுகளில் காவலர் குடியிருப்புகளைக் கட்டும் பணிகளை பெருமளவில் மேற்கொள்ளக் கருதியுள்ளது.

**(இ) தமிழ்நாடு காவலர் நலநிதி :**

25. காவல்துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு, 1957ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவலர் நலநிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது. இந்நிதிக்கு அரசிதழ் பதிவுப் பெறாத உறுப்பினர்களிடமிருந்து (தாமாகவே முன்வந்து சேரும் உறுப்பினர்களிடமிருந்து) வசூலிக்கப்படும் ரூ. 4 முதல் ரூ. 28வரையிலான ஆண்டுச் சந்தாத் தொகை மூலமும், காவல்துறை அதிகாரிகள் வழங்கும் நன்கொடை மூலமும் நிதி திரட்டப்படுகிறது. இதைத் தவிர, அரசு ஆண்டு மானியத் தொகையாக 1985ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 5 இலட்சம் வழங்கி வருகிறது. தற்போதைய அரசு, 1991-92ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு மானியத் தொகையை ரூ. 10 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

இந்நிதி பின்வரும் செயல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது :—

(i) இறந்த காவல்துறை பணியாளரின் விதவை/அவரைச் சார்ந்திருப்போருக்கு இறந்த பணியாளரின் பதவித்தரத்திற்கு ஏற்ப ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை குடும்ப நிவாரணத் தொகை வழங்குதல்.

(ii) நீண்டகாலமாக நோயால் பீடிக்கப்பட்டவர்கள், கடுமையான காயங்கள் ஏற்பட்டு, நீண்டகாலத்திற்கு சிகிச்சை பெற வேண்டியவர்கள் போன்ற சில தவிர்க்க முடியாத சிறப்பு இனங்களில், அப்பணியாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

(iii) மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது, இருதய அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ. 5,000 வழங்குதல்.

களின் குழந்தைகள் மின்னணுக் கையாளவும், வண்ணத்தொலைக்காட்சிப் கருவிகளை கணிப்பொறி பாகங்கள் ஆகியவற்றை பெட்டிகள் பணியில் பயிற்சி பெறவும் தமிழ்நாடு இணைக்கும் கணிப்பொறி தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச்சங்கம் காவல்துறை அமைக்கப்பட்டது. கணிப்பொறி பாகங்கள் கணிப் பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுச் சாதனம் ஆகியவற்றைத் தயாரிக்கவும் காவல்துறைப் பணி யாளர்களின் குழந்தைகளுக்கு கணக்கீடு பொறிப் பணியில் பயிற்சி பெறுவதற்கும் திட்டம் ஒன்று உள்ளது.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் அளித்த பணிகளை, தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், தன்னிடமுள்ள 30 உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த விளையாட்டு பொம்மைகள்—விளையாட்டு பொருட்கள் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கம் 20 உறுப்பினர் களுடனும், தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த உலோகப் பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 30 உறுப்பினர்களுடனும் சென்னை புறநகர்ப் பகுதி யில் செயல்படுகின்றன.

சிவகாசியிலும் மணிமுத்தாறிலும் உள்ள தீக்குச்சி தயாரிப்புத் தொழிற்பிரிவுகளும், சென்னையிலுள்ள புத்தகம் கட்டும் பிரிவுகளும், காகித உறைகள் தயாரிக்கும் பிரிவுகளும் 1991 ஆம் ஆண்டில் காவல் துறைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்துள்ளன.

**(ii) பரிசுகளும், வெகுமதிகளும் :**

காவல் துறையினரின் போற்றத்தக்க கடமைப் பற்றுறுதியையும் பாராட்டத்தக்க பணியையும் போற்றுவதற்காகவும், பணிக்குரிய திறமையையும், தகுதியையும் வளர்த்துக் கொள்வதை ஊக்குவிக்கும்



பொருட்டும், மாநில அரசு ஏற்படுத்திய பின்வரும் விருதுகள், இந்த ஆய்வாண்டில் தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் வழங்கப் பட்டன.

(அ) பொங்கல் திருநாளில் வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம்.

(ஆ) அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று வழங்கப்படும் தமிழ்நாடு முதல மைச்சரின் காவல் பதக்கம்.

நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காக 51 காவல்துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் துணிவுடைச் செயலுக்காக 6 அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அண்ணா பிறந்த நாளான 1991 செப்டம்பர் 15ஆம் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது. அதன் விவரம் வரு வருமாறு :—

**துணிவுடைச் செயலுக்கான பதக்கம்.**

| பதவித் தரம். | வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 2 |
| ஆய்வாளர்கள் | 2 |
| ரவலர்கள் | 2 |
| | 6 |

துணிவுடைச் செயலுக்கான பதக்கம் பெற்ற வர்கள் ஒரு மொத்த மானியமாக ரூ. 3,000 பெறத் தகுதி உடையோராவர்.

(iv) காவல்துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரி களிலும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் உயர் கல்வியைத் தொடரும் வகையில், அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்குதல், தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டப்படிப்பு பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு படிப்புதவித் தொகை ரூ. 500 என்றும், தொழிற் கல்வி பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு ரூ. 1,500 என்றும் வழங்கப்படுகிறது.

(v) காவலர் குடியிருப்புகளில் உள்ள படிப்ப கங்களுக்கு நாளிதழ்கள், பத்திரிகைகள் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ. 500 வழங்குதல்.

1991-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 11,19,396 செலவிடப்பட்டுள்ளது. இதனால் 1,583 பேர் பயனைடந்துள்ளனர்.

**(ஊ) தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவி நிதி :**

26. தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு நினைவுப் படிப்புதவி நிதியிலிருந்து காவல்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர் களின் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் கல்லூரி அளவில் உயர்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வியைத் தொடரும் வகையில் ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரே சமயத்தில், காவலர் ஒருவரின் இரு குழந்தைகளுக்கு மட்டுமே படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்ற/இறந்த காவல்துறை பணியாளரின் குழந்தைகள் அப்பணியாளர் ஓய்வு பெற்ற/இறந்த நாளிலிருந்து 5 ஆண்டு கால அளவிற்கு படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். 1991ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 914 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக ரூ. 6,94,160 வழங்கப் பட்டது.



**(உ) தமிழ்நாடு காவல்துறையினர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் :**

27. காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குடும்பத்தினர் துணை வருவாய் பெறுவதற்கும் பொழுதுபோக்கு வசதிகள், கல்வி, மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அவர்களுக்கு செய்து கொடுப்பதற்கும் இயலும் வகையில், அவர்களி டையே நலப் பணிகளைத் தொடங்கி, மேம்படுத்தி, ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும். காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத் தினரால் நூல் நூற்றல், தையல், பாய் பின்னுதல், நெசவு, தீக்குச்சி தயாரித்தல், பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல் முதலியன போன்ற திட்டங்கள் 1991 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

காவல்துறைப் பணியாளர்களுக்கும், சில பொதுத் துறை நிறுவனங்களுக்கும், பள்ளிக் குழந்தைகளுக்கும், சீருடைகள் தைக்கும் பணியில் ஒன்பது தையல் பிரிவுகளும் இருபது மாதர் சங்கங்களும் (மகளிர் தையல் பிரிவுகள்) ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இருபது கூட்டுறவுச் சங்கங்களும் சிறுதொழில் பிரிவுகளும் உள்ளன. இங்கு காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்தினர் பனியன்கள், காலுறைகள், ஆடைகள், சர்ஜ் துணியிலான தொப்பிகள், கொசுவலைகள், தரைக்கம்பளங்கள், தரை விரிப்புகள், கூடைகள், பாலிதீன் பைகள் முதலியவை போன்ற பொருட்களைத் தயாரிக்கின்றனர்

ஆவடியில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு கூட்டுறவுப் பால்பண்ணைகளும் விருதுநகரில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றும் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் பண்ணைகள் செயல்படுகின்றன. இவ்வாறாகக் காவல் துறையினரின் குடும்பத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்கும் வகையில், கறவை மாடுகளை வளர்க்கவும், காய்கறித் தோட்டங்களை ஏற்படுத்தவும் ஊக்கப் படுத்தப்படுகின்றனர்.

சென்னை இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்ககம் ஆகியவற்றின் உதவியுடன் காவல்துறைப் பணியாளர்

நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்கான பதக்கங்கள்.

| பதவித்தரம். | வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| கூடுதல் கண்காணிப்பாளர் | 1 |
| துணைக் கண்காணிப்பாளர் | 6 |
| ஆய்வாளர்கள் | 16 |
| சார்பு ஆய்வாளர்கள் | 10 |
| தலைமைக் காவலர்கள் | 7 |
| காவலர் நிலை 1 | 4 |
| நாயக்குகள் | 1 |
| காவலர் நிலை 2 | 6 |
| | 51 |

நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் பெற்றவர்கள் அவரவர் பதவித் தரத்திற்கு ஏற்ப ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை ஒரு மொத்த மானியம் பெறத் தகுதியுடையோராவர்.

1992ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் காவலர்கள்/தலைமைக் காவலர்கள் பதவித்தரத்தில் உள்ள அப்பழுக்கற்ற பணிப்பதிவேட்டுடன் கூடிய 927 காவல்துறைப் பணியாளர்களுக்கு அவர்களின் 10 ஆண்டு பாராட்டத்தக்க பணியைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது. இப்பதக்கம் பெற்றவர்கள் மாதாந்திர பதக்கப் படியாக ரூ. 20-ம் (காவலருக்கு), ரூ. 25-ம் (தலைமைக்காவலருக்கு) 1-2-1992 முதல் பெறுவதற்குத் தகுதியுடையோராவர். இத்திட்டத்தின் கீழ் இந்த ஆய்வாண்டில் 1,451 காவல்துறைப் பணியாளர்களுக்கு இப்பயன் கிட்டியது.



மாநில விருதுகளுடன், இம்மாநிலத்தைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் மத்திய அரசு வழங்கும் பின்வரும் பதக்கங்கள் வழங்கப்பட்டன :—

(அ) 1991 சுதந்திர தினத்தன்று/1992 குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கம்.

(ஆ) 1991 சுதந்திர தினத்தன்று/1992 குடியரசுத் தினத்தன்று தகைசால் பணிக்காக வழங்கப்படும் குடியரசுத் தலைவர் காவலர் பதக்கம்.

பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கமும், தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் பதக்கமும் பின்வரும் பணியாளர்களுக்கு 1991 சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டன:—

**காவலர் பதக்கம்**

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் (ஐ.பி.எஸ்.) | 1 |
| துணைத்தளவாய் | 1 |
| துணைக் கண்காணிப்பாளர் | 2 |
| ஆய்வாளர்கள் | 3 |
| சார்பு ஆய்வாளர்கள் | 4 |
| தலைமைக் காவலர்கள் | 2 |
| காவலர்கள் | 2 |
| | 15 |

1988–89, 1990–91ஆம் ஆண்டுகளில் செலவிடப் படாமல் உள்ள தொகை ரூ. 77.85 இலட்சத்தை, 1991–92ல் பயன்படுத்தும் வகையில் மத்திய அரசு அதனை மீண்டும் செய்திறனாக்கியுள்ளது. ரூ. 77.85 இலட்சம் செலவில் 248 மீ வுயர் அலைச் சாதனங்களை வாங்க அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இத் துடன், 1991–92-ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ. 131.17 லட்சம் மானியமாக வழங்கியுள்ளது. மாநில அரசின் இணை மானியம் ரூ. 131.17 லட்சத் துடன் ரூ. 262.34 இலட்சம் செலவில் 123 டெம்போ ட்ராக்ஸ் ஜீப்புகள், 21மீவுயர் அலை கருவிகள், 69 மீவுயர் ஸ்டாடிக் மொபைல் சாதனங்களும் நடப்பு ஆண்டிலேயே வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காவல் துறையை நவீனப்படுத்தும் பணி தொய் வின்றி தொடர்ந்து நடைபெற வேண்டிய பணியாகும். இந்த நடவடிக்கை தற்போது வேகமும், விரைவும் பெற்றுள்ளது. இந்த வீதத்தில் பார்த்தால் தமிழ்நாடு காவல்துறை எல்லாவகையிலும் நிறைவு பெற்ற ஒரு புதிய காவல் படையாக வெகு விரைவில் மாறும்.

## VII. குற்றம்

31. தொழில் மயமாக்கல், நகர்மயமாக்கல், மாறிவரும் சமூக நிலைகள், நவநாகரிகம் முதலியவை குற்றத்தின் தன்மை, குற்றவாளிகள் செயல், குற்றம் குற்றவாளிகள் தொடர்பாகச் சமுதாயத்தினரின் போக்கு, குற்றத்தைக் கண்டுபிடித்து கட்டுப்படுத் தல் ஆகியவற்றில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில், காவலர்களின் பணி மேலும் மேலும் கடினமானதாகவும் சிக்கலான தாகவும் ஆகிவிடும். இத்தகைய நிலைமைக் கேற்ப செயல்பட, காவல்படையானது வாகனங் கள், தகவல் தொடர்பு வசதிகள் ஆகிய வற்றுடன் '' நவீனப்படுத்தல் திட்டத்தின் கீழ் '' மத்திய அரசு அளிக்கும் நிதி உதவியுடன் நவீனப் படுத்தப்பட்டு வருகிறது. குற்றம்/குற்றப்புலனாய்வுத் துறையில் நிறுவன நடைமுறைப் பயிற்சி காவல் படைக்கு அளிக்கப்படுகிறது. தொழில் ரீதியிலான அணுகுமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறது. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை,





கண்டுபிடிப்பு பிரிவு, நுகர் பொருள் சிலை திருட்டு கண்டுபிடிப்பு குற்றப்புலனாய்வுத்துறை, வழங்கல் தொடர்பான கண்டுபிடிப்பு குற்றப் வனப் பொருட்கள் களவு குற்றம் தொடர்பான புலனாய்வுத் துறை, வணிகக் குற்றம் தொடர்பான குற்றப் புலனாய்வுத் துறை போன்ற சிறப்புப் பிரிவுகள், தனிக் தன்மைவாய்ந்த குற்றங்களை கண்டுபிடிப்பதில் வல்லமை பெற்றுள்ளன. 1990-1991 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தெரிவிக் கப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்ட சொத்து குறித்த குற்றங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக் கப்பட்டுள்ளது :—

| குற்றத்தின் தன்மை. | 1990 | | 1991 | |
|---|---|---|---|---|
| | தெரிவிக்கப் பட்டவை. | கண்டுபிடிக்கப் பட்டவை. | தெரிவிக்கப் பட்டவை. | கண்டுபிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆதாயத்திற்காக கொலை. | 86 | 38 | 112 | 48 |
| கொள்ளை | 149 | 42 | 116 | 40 |
| வழிப்பறிக் கொள்ளை | 543 | 236 | 515 | 198 |
| வீட்டை உடைத்துத் திருடுதல். | 8,253 | 4,227 | 8,510 | 3,974 |
| பெரும் திருட்டு. | 25,204 | 17,067 | 25,850 | 17,534 |
| சிறு திருட்டு | 1,728 | 1,637 | 1,531 | 1,469 |
| கால்நடை திருட்டு | 770 | 676 | 649 | 591 |
| மொத்தம்.. | 36,733 | 23,923 | 37,283 | 23,854 |

| | 1990 | 1991 |
|---|---|---|
| கண்டு பிடிக்கப்பட்டதன் சதவீதம்.. | 65.1 | 64.0 |

**குடியரசுத் தலைவர் காவலர் பதக்கம் :**

| | |
|---|---|
| காவல்துறைத் தலைவர் (ஐ.பி.எஸ்) .. | 1 |
| துணை கண்காணிப்பாளர் .. | 1 |
| | 2 |

பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கமும், தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் காவலர் பதக்கமும் 1992 குடியரசு தினத்தன்று பின்வரும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன :—

**காவலர் பதக்கம் :**

| | |
|---|---|
| காவல்துறை துணைத்தலைவர் (ஐ.பி.எஸ்) | 1 |
| துணை கண்காணிப்பாளர் .. | 1 |
| ஆய்வாளர்கள் ... | 5 |
| சார்பு ஆய்வாளர்கள் .. | 1 |
| | 8 |

**குடியரசுத் தலைவர் காவலர் பதக்கம் :**

| | |
|---|---|
| காவல்துறைத் தலைவர் ... | 1 |
| கூடுதல் கண்காணிப்பாளர் .. | 1 |
| | 2 |

**ஊர்க்காவல் படைக்கான பதக்கங்கள் :**

29. தமிழ்நாடு முதலமைச்சர் ஊர்க்காவல் படை வீரர்களுக்கான பதக்கம், அண்ணா பிறந்த நாளான 15-9-1991 அன்று 6 ஊர்க்காவல் படை வீரர் களுக்கு அவர்களின் நிகரற்ற கடமைப்பற்றுறுதிக்காக வழங்கப்பட்டது. இப்பதக்கத்தைப் பெற்றவர்கள், அவரவர் பதவித்தரத்திற்கேற்ப ரூ. 1,000 முதல்



ரூ. 3,000 வரை ஒரு மொத்த மானியம் பெறத் தகுதியுடையோராவர். இந்த மாநில விருதுகளுடன், 1991 சுதந்திர தினத்தன்றும், 1992 குடியரசுத் தினத் தன்றும் பாராட்டத்தக்க பணிக்காக ஊர்க்காவல் படை சிவில் பாதுகாப்பு பதக்கம் 4 ஊர்க்காவல் படையினருக்கு, ஒவ்வொரு முறையும் இரண்டு வீதம் வழங்கப் பட்டன.

## VI. காவல் படையை நவீனப்படுத்தல்.

30. காவல்படையை நவீனப்படுத்துவது என்பது புதிய கோட்பாடாக இல்லாதபோதிலும் தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளால்/தீவிரவாதிகளால் ஏற் பட்ட அச்சுறுத்தலால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது. தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகள்/தீவிரவாதிகள் சுதந்திரமாக நடமாடினர். தற்போதைய அரசு பதவி ஏற்கும் வரை அவர்களின் நடவடிக்கைகள் கட்டுக் கடங்காமல் போய் விட்டன. இப்போராளிகள் நவீன ஆயுதங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன் படுத்தினர். இம்மாநிலத்தில் விரிவான அளவில் தகவல் தொடர்பு வைத்திருந்தனர். திறமை மிக்க தமிழ்நாடு காவல்படை பழமையான ஆயுதங்கள், சாதனங்களைக் கொண்டு போராளிகளோடு போராட முடியவில்லை. போராளிகளுக்கு எதிராகப் போராடக் கூடிய அளவுக்கு தமிழ்நாடு காவல்படையின் ஆயுதங் கள் இல்லை. எனவே காவல்படையை நவீனப்படுத்தி நிலை உயர்த்துவதும் தீவிரவாதிகளின்/போராளிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க அதனை வலுப்படுத்துவதும் மிக முக்கியமானதாகும் என்று உணரப்பட்டது. காவல் படையை ரூ. 80.45 கோடி செலவில் நவீனப் படுத்துவதற்குரிய செயற் குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மத்திய அரசு ரூ. 10 கோடியை வழங்கியுள்ளது. மத்திய அரசு வழங்கிய இந்த ரூ. 10 கோடி மானியத்தை பயன்படுத்தி படைக்கலன்கள், வெடி மருந்துகள், சிறப்பு பாதுகாப்பு தொகுதி, மோட்டார் வாகனங்கள் வாங்குதல், வெடி குண்டுகளை செயலிழக்கச் செய் யும் பிரிவு, நுண்ணலை திட்டங்கள் ஆகிய வகையில் காவல் படையை நவீனப்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

[1992 மார்ச் 17

32. அறிவியல் முறையில் • புலனாய்வுப்
பணியை மேற்கொள்வதும், சென்னையில் விரல்
ரேகைப்பதிவுப் பிரிவின் பணிகளும், மாவட்டங்களில் ஓரி
யக்க விரல்ரேகைப் பதிவுப்பிரிவுப் பணிகளும், தமிழ்நாடு
குற்றத் தடய ஆய்வுக் கூடம், நாய்ப்படை, கணிப்
பொறிப் பிரிவு ஆகியவற்றின் பணிகளும் திறமையான
முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சுருக்க
மாகச் சொன்னால், நவீன கருவிகளையும் தொழில்
ரீதியான திறமை, நடைமுறைகளைப் பயன்படுத்து
வதன் மூலமும் ஆதாயத்திற்காகச் செய்யப்பட்ட
கடுமையான, பரபரப்பூட்டும், குறிப்பிடத்தக்க கொலை
வழக்குகளும், கொள்ளை திருட்டு, வீட்டை உடைத்துத்
திருடுதல், பெரிய திருட்டு, வேலை வாய்ப்பு தருவதாக
மோசடி, ஏமாற்றுக் குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டு
மிகக் குறுகிய கால அளவுக்குள் சொத்துக்கள் மீட்கப்
பட்டுள்ளன. நிலுவையாக உள்ள எஞ்சிய வழக்கு
களைப் கண்டுபிடிப்பது முழுவேகத்தில் நடை
பெற்று வருகிறது. இவ்வாறாக சொத்து குறித்த
குற்றங்கள் பெரும் அளவுக்கு ஒடுக்கப்பட்டும்
கட்டுப்படுத்தப்பட்டும் உள்ளன. காவல் படை
விழிப்பாகவும் திறமையாகவும் செயல்பட்டிரா
விட்டால் சொத்து குறித்த குற்றங்கள் நிகழ்வது
அதிகமாயிருக்கும், இருப்பினும் அரசு மெத்தன
மாக இல்லை. ஆனால், அண்மைக்காலத்தில்
சொத்து தொடர்பான குற்றங்கள் அதிகமான
அளவில் பெருகிவருவது பற்றி அரசு நன்கு
அறிந்துள்ளது. இந்த நிலையில் காவல்துறை
செவ்விய முறையில் செயல்படும் வகையில் அது
முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## VIII. சட்டம்—ஒழுங்கு.

33. தமிழ்நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை
யில் சட்டத்தை செயல்படுத்துவதும் ஒழுங்கைப்
பேணிப்பாதுகாப்பதும் ஒரு சவாலுக்குரிய பணி
யாக ஆகிவிட்டது. வேறு சில மாநிலங்களில்
நிலவுவதைப்போல தமிழ்நாட்டில் கடந்த எட்டு மாதங்
களில் பெரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் இல்லாம
லிருந்த போதிலும், தற்போதுள்ள அரசு பதவி ஏற்கும்



1992 மார்ச் 17]

முன்னர் கடந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட
ஆண்டுகளில் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் சீர்கேடு
அடைந்திருந்தது. இந்நிலைமை பல்வேறு காரணங்
களினால் ஏற்பட்டிருந்தது. போராளிகள் அதிக
அளவில் வருதல், தமிழீழ விடுதலைப்புலிகள் சுதந்திர
மாக நடமாடுதல், வகுப்புவாத சக்திகளின் வளர்ச்சி,
புரட்சி இளைஞர் முன்னணி இயக்கத்தோற்றம், பெரும்
அளவில் வேலைவாய்ப்பின்மை ஆகியவையே இந்தச்
சூழ்நிலைக்கு முக்கிய காரணங்களாகும்.

34. தற்போதைய அரசு பதவி ஏற்றவுடன்
சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முன்னுரிமை அளித்து
அப்பணியை மேற்கொண்டது. தேவையான அடிப்
படை வசதிகள், சாதனங்கள் வழங்குவதுடன் சட்டம்
ஒழுங்கு நிருவாகத்தைச் சீரமைத்தல், காவலர்களிடம்
பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துதல் ஆகியவை
தொடர்பாக அரசு பல்வேறு நடவடிக்கைகளை
எடுத்தது. போராளிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட
நடைமுறைக்குச் சாத்தியமான அணுகு முறை,
அவர்களை இங்கிருந்து அகற்ற மேற்கொள்ளப்பட்ட
தொடர்ச்சியான நடவடிக்கை ஆகியன இம்மாநிலத்
தில் தீவிரவாத நடவடிக்கைகளை பெரிதும் ஒடுக்க
உதவின. தமிழ்நாட்டில், சட்டம்-ஒழுங்கை மேம்
பாடடையச் செய்வதில் அரசு வியக்கத்தக்க வகையில்
விரைவில் வெற்றி அடைய முடிந்தது. ஆனால்
மெத்தனத்துக்கு இங்கு இடமே இல்லை. இங்கு தங்கி
யுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சினம்கொண்
டுள்ளனர்; அவர்கள் தங்களுடைய நோக்கத்தை
நிறைவேற்றிட எதிர்பாராதவிதமான செயல்களில் ஈடு
படலாம். முக்கிய பிரமுகர்களையும், அதிகாரிகளையும்
கொலை செய்யவும், மிக முக்கிய நிறுவனங்களைத்
தகர்க்கவும், சிறைச்சாலைகளை உடைத்தெரியவும்
அவர்கள் தயங்க மாட்டார்கள். புலனாய்வுத்துறை
அதிகாரிகளின் விழிப்புணர்ச்சியும் தேசவிரோத
போக்குக்கு எதிரான முனைப்பான நடவடிக்கையும்
எவ்வித தடையுமின்றி தொடர்ந்து மேற்கொள்ளப்
படும். அவர்கள் தனித்தமிழ்நாடு அமைக்க வேண்டு
மென்று அறை கூவுகின்றனர். தீவிரவாதிகளின் பாதகச்
செயல்களை தடுப்பதும், அவர்களது கொடிய திட்

டங்களை தீவிர விழிப்புடன் எதிர்பார்த்து முறி யடிப்பதும் சட்டம்-ஒழுங்கு இயந்திரத்தை எதிர் நோக்கி யிருக்கும் தலையாய கடமைகளாகும்.

35. இடது சாரி தீவிர வாதிகளின் நட வடிக்கைகள், குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித் துள்ளன. தொழிலாளர்கள், மாணவர்கள், வேலை யற்ற இளைஞர்கள், உழவர்கள், அரசுப் பணி யாளர்கள் ஆகியோரிடையே அவர்கள் செல்வாக்குப் பெற்றுள்ளனர். ஏனைய நடப்பு பிரச்சினை களிடையே அவர்கள் விடுதலைப் புலிகளை வெளிப் படையாக ஆதரிக்கின்றனர். திரு. ராஜீவ் காந்தி அவர்களை கொலை செய்ததை நியாயம் என்கின்றனர். அவர்களுடைய நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண் காணித்து அவற்றை ஒடுக்க வேண்டும்.

36. சமய, சமூகப் பொருளாதார மற்றும் பல் வகை காரணங்களின் அடிப்படையில் சாதி வன் முறைகள் தலை தூக்கி உள்ளன. தமிழ்நாட்டில் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இடையேயும், கிறித்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயும் சில சமயங்களில் இரண்டு பெரிய சமூகத்தினரிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன. 1991-ல் இத்தகைய நேர்வுகள் 33 ஏற்பட்டன. இவற்றில் 5 பேர் உயிரிழந்தனர். 88 பேர் காயமுற்றனர்.

37. கீழே குறிப்பிடப்பட்ட நாட்களில் காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி, நிலைமையைத் திறமையாகக் கட்டுப்படுத்தினர் :—

| நாள். | இடம். | மாவட்டம். |
| --- | --- | --- |
| 18— 8—1991 | முதுகளத்தூர் | இராமநாதபுரம் |
| 1— 9—1991 | வடக்காடு | புதுக்கோட்டை |
| 30— 9—1991 | குளச்சல் | கன்னியாகுமரி |
| 17 —12—1991 | பேசின்பாலம் | சென்னை |
| 27—12—1991 | கோபிசெட்டிப் பாளையம். | பெரியார். |

காவல்துறை அண்மையில் கையாண்ட சில முக்கிய மான சட்டம்—ஒழுங்கு பிரச்சினைகளை இங்கு குறிப் பிடுவது பொருத்தமாக இருக்கும்.



(i) கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் ஊதியக் கொடை பிரச்சினை குறித்து நீண்ட காலமாக 78 பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஏற்படுத்திய சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ;

(ii) பி அண்டு சி ஆலை 1—4—1991 முதல் மூடப்பட்டதிலிருந்து அதன் தொழிலாளர்களிடையே நீண்ட காலமாக நிலவும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ;

(iii) பாரதீய ஜனதா கட்சியின் அகில இந்திய தலைவரும் அவருடைய தொண்டர்களும் 11-12-1991 அன்று கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை மேற்கொண்ட '' ஏக்தா யாத்திரை '' தமிழ் நாட்டின் வழியே சென்றபோது ஏற்பட்ட அமைதியற்ற நிலைமை;

(iv) காவிரி நீர்த் தகராறு தொடர்பான இடைக் கால தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து கர்நாடகத்தில் ஏற்பட்ட கடும் வன் முறையும் தீவைப்பும் கலவரமும், அதன் விளைவாக கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பெருமளவில் தமிழர்கள் ஓடிவந்ததும் தமிழகத்தில் ஏற்பட்ட பின் விளைவுகளும்.

## IX. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.

38. கடந்த மூன்று ஆண்டுகளில் இடதுசாரி தீவிர வாதிகள், இலங்கை தமிழ் போராளிகள் ஆகியோரின் பயங்கரவாத நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் பரவலாக இருந்தன. இத்தகைய தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டியது மிக அவசியம் என்று உணரப்பட்டது. சீர் பெரு பிரமுகர்கள், மிக முக்கிய பிரமுகர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு தர வேண்டிய பணியையும் கவனிக்க வேண்டியுள்ளது. இந்நோக்கங்களைக் கருத் திற் கொண்டு தீவிரவாதத்தை ஒடுக்கும் வகையில் பயிற்சி பெற வெவ்வேறு பதவித்தரத்திலுள்ள 40 காவல் பணியாளர்கள்(காவலர் முதல் ஆய்வாளர் வரை) முகை மைப் பணியில் மனேசரியிலுள்ள (அரியானா) தேசிய பாதுகாவலர் பயிற்சி மையத்தில் 28-10-1991 ஆம் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கும், தேசிய் பாது காப்பு படையில் ஆறுமாதங்களுக்கும் பயிற்சி பெற அனுமதித்து அரசு ஆணைகளைப் பிறப்பித்துள் ளது. மேற்சொன்ன பயிற்சியைத்தவிர மனேசரில்

உள்ள தேசிய பாதுகாப்புப்படை பயிற்சி மையத்தில் வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்து அப்புறப்படுத்தும் பயிற்சியையும், பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சியையும் பெற காவல்துறை அதிகாரிகளைக் கொண்ட ஒரு தொகுதியும் அனுப்பப்பட்டுள்ளது.

**வெடிகுண்டு விபத்து :**

39. தற்செயலாக ஏற்பட்ட 11 விபத்துக்கள் உட்பட இந்த மாநிலத்தில் 1991 ஆம் ஆண்டில், 30 வெடிகுண்டு விபத்து/வெடிவிபத்து சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. மாவட்ட வாரியாக வெடிவிபத்து சம்பவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டங்கள். (1) | விபத்து. பயங்கர வாதிகள். (2) | வகுப்பு வாத வெறியர்கள். (3) | குறிப்பிட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். (4) | தற்செயலாக ஏற்பட்டவை. (5) | இறந்தவர்கள். (6) | காயமடைந்தவர்கள். (7) |
|---|---|---|---|---|---|---|
| சென்னை மாநகர் | .. | .. | ... | 2 | 1 | .. |
| செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (மேற்கு) .. | 1 | .. | .. | .. | 18 | 38 |
| சேலம் .. | .. | .. | 1 | 2 | ... | 2 |
| பெரியார் .. | .. | .. | .. | 2 | 1 | 4 |
| காமராசர் .. | .. | .. | 2 | ... | .. | .. |
| இராமநாதபுரம் .. | .. | ... | 1 | 1 | 1 | 5 |
| பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் .. | .. | .. | 1 | .. | .. | ... |
| சிதம்பரனார் .. | .. | .. | 12 | 4 | 4 | 18 |
| திருநெல்வேலி கட்டபொம்மன் .. | .. | 1 | .. | .. | 2 | 1 |
| மொத்தம் .. | 1 | 1 | 17 | 11 | 27 | 68 |



வெடிகுண்டு விபத்து சம்பவங்களில் 27 பேர் உயிர் இழந்தனர்; 68 பேர் காயமடைந்தனர். அவற்றில், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் (மேற்கு) ஸ்ரீபெரும்புதூரில் 21-5-1991 அன்று ஏற்பட்ட கோர குண்டு வெடி விபத்தில் இந்திய முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் மற்றும் 17 பேர்களும் இறந்து போயினர். காவல் துறையினர் உட்பட 38 பேருக்கு காயம் ஏற்பட்டது. தீவிரவாதிகள் நடவடிக்கைதான் இதற்குக் காரணம். குறிப்பிட்ட கூட்டத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக ஏனைய பதினேழு சம்பவங்களும், தற்செயலாக பதினொரு வெடிகுண்டு விபத்துகளும் நிகழ்ந்தன.

40. வெடிகுண்டு விபத்து ஏற்பட்டு அதனால் இறந்து போனவர்களின் விவரம் வருமாறு :—

| நாள். (1) | இடம். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|
| 24- 2-1991 | ஈரோடு .. | பெரியார். |
| 21- 5-1991 | ஸ்ரீபெரும்புதூர் | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (மேற்கு) |
| 13- 6-1991 | நீராவி கரிசல் குளம். | இராமநாதபுரம். |
| 18- 7-1991 | சாலைமா நகர் | சென்னை. |
| 7-10-1991 | மணியாச்சி இரயில் நிலையம். | சிதம்பரனார். |
| 17-10-1991 | குளத்தூர் | சிதம்பரனார். |
| 5-11-1991 | அத்திநாதபுரம் | சிதம்பரனார். |
| 20-12-1991 | பிச்சுவிளை | சிதம்பரனார். |

'தடா' சட்டம்:

41. நாட்டின் பல பகுதிகளில், பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகியதால் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இது, குறிப்பிட்ட நோக்கத்திற்காக இயற்றப்பட்ட தனிச் சட்டமாகும். இடது சாரி தீவிரவாதிகள், இலங்கைப்

போராளிகள் ஆகியோர் வடிவில் தமிழ்நாட்டில்
பயங்கரவாத நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளில்
பெருகியுள்ளன. பயங்கரவாத நடவடிக்கைகளைத்
தடுக்கும் பொருட்டு, இவ்வரசு, 'தடா' சட்டத்தின்
விதித் துறைகளைப் பயன்படுத்தியது.

'தடா' சட்டத்தின் விதித் துறைகளின்படி, இவ்
வரசு, மாநகர சிவில் செஷன்ஸ் கூடுதல் நீதிபதியான
திரு. எஸ். எம். சித்திக் அவர்களை, 'தடா' சட்டத்
தின் விதித்துறைகளின்படி ஏற்படுத்தப்பட்ட அமர்வு
நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமித்தது. இச்சட்டத்
தின் கீழ் 128 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்
களில் அறுவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவ்
வரசு, 'தடா' சட்டத்தின் விதித் துறைகளை மிகவும்
எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் பயங்கரவாதத்
தைத் தடை செய்யும் நோக்கத்துடன் மட்டும் பயன்
படுத்துகிறது. மிகத் தீவிரமான வழக்குகளில் மட்டுமே
இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

## X. காவலர் பொதுமக்களுக்கிடையேயான நல்லுறவு.

42. குற்றத் தடுப்பு, குற்றக் கண்டுபிடிப்பு,
போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவது ஆகிய
பணிகளில் பொது மக்களின் நம்பிக்கையையும்,
ஆதரவையும் பெறுவதற்குக் காவலர்களுக்கும், பொது
மக்களுக்குமிடையே நல்லுறவு நிலவ வேண்டுவது மிக
வும் இன்றியமையாததாகும். பொது மக்களின் நல்
லெண்ணத்தையும், ஆதரவையும் பெறுவதில் தமிழ்
நாடு காவல் துறையினருக்கு முறையான பயிற்சி அளிக்
கப்பட்டுள்ளது. தங்களின் அன்பான நடத்தையாலும்,
பொது மக்களின் குறைகளைத் தீர்க்க நேர்மையான,
உண்மையான நடவடிக்கை எடுப்பதன் மூலமும் பொது
மக்களிடையே அரசினைப் பற்றியும், காவல் துறை
யைப் பற்றியும் நல்லெண்ணத்தை உருவாக்குவது
காவல் துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரின் தலை
யாய கடமையாகும்.

வெள்ளம், புயல், தீ விபத்துக்கள் முதலியவற்றால்
பாதிக்கப்பட்டு உதவி நாடும் மக்களுக்கு இடருதவி
அளிப்பதில் அரசு மேற்கொள்ளும் அனைத்து நிவாரண
நடவடிக்கைகளிலும் காவல் படையினர் பங்கு கொள்
கின்றனர். வகுப்புவாதச் சச்சரவுகளால் அல்லது



அரசியல் மோதல்களால் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை
எழும் நேரங்களிலும் மக்கள் பாதிப்பிற்குள்ளாகும்
இடங்களிலும் காவல் துறையினர் அவ்விடத்திற்கு
முதலில் விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்
படுத்தி, திறம்படச் சட்ட நடவடிக்கையை மேற்
கொள்கின்றனர். தவிரவும், பிரச்சினையைச் சுமூக
மாகத் தீர்ப்பதற்கு வழிகோலும் இணக்கப் பேச்சு
வார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும் அவர்கள் பொறுப்
பேற்கின்றனர். எண்ணிலடங்கா நேர்வுகளில் பிரச்
சனைக்குரிய தரப்பினர் மன நிறைவடையும் வகை
யில் குடும்பச் சண்டைகள், திருமணத் தகராறுகள்
முதலியவற்றைத் திறம்படவும். வெற்றிகரமாகவும்
தீர்த்து வைத்த பெருமையும் காவல் துறையினருக்கு
உண்டு. மக்கள் நலனுக்காக காவல் துறையினர்
தங்களை எந்த அளவுக்கும் வருத்திக்கொள்ள தயாராக
உள்ளனர் என்பது இதன்மூலம் விளங்கும்.

43. கிராம விழிப்புப் பணிக்குழுக்கள், மாவட்ட
போக்குவரத்துக் குழுக்கள் ஆகியவற்றை ஏற்
படுத்தல், சாலைப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு
நடவடிக்கைகளில் தேசிய மாணவர் படை, தேசிய நலப்
பணித் திட்டம் முதலிய அமைப்புகளைச் சேர்ந்தவர்
களையும் ஈடுபடுத்துதல், புறநகர் குடியிருப்பு சங்கத்
தினரைச் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்துதல் ஆகிய
வற்றின் மூலம், காவலருக்கும் பொது மக்களுக்கும்
இடையேயான உறவு மேலும் நெருக்கமாகியுள்ளது.

### ஊர்க்காவல் படை :

44. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல்
படைச் சட்டம், விதிகள் ஆகியவற்றின் கீழ், ஊர்க்
காவல் படை என்ற அமைப்பு காவல் படைக்கு உதவும்
ஒரு துணை தொண்டுபடையாகச் செயல்படுகிறது.
காவல் துறைத் தலைவர் ஒருவர் (I.G. of Police)
இந்த அமைப்பின் தலைவராக உள்ளார். இந்த
அமைப்பில், பிற பணிகளிலும், பிற துறைகளிலுமிருந்து
வந்துள்ள 10,010 ஆண்களும், 550 பெண்களும் சேர
அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஊர்க்காவல் படையில்
மொத்தம் 9,592 ஆண்களும், 452 பெண்களும் உள்ள
னர். ஊர்க்காவல் படையில், 418 ஆண்கள், 98
பெண்களுக்கான இடங்கள் காலியாக உள்ளன.

1991 ஆம் ஆண்டில், ஊர்க்காவல் படையினர் வழக்கம்போல், போக்குவரத்துக் கட்டுப்பாடு, இரவு ரோந்துப்பணி, கும்பல் கட்டுப்பாடு, சீர் பெருமக்கள் பாதுகாப்பு, சமூக சேவைப் பணிகள், கோயில் திருவிழா பாதுகாப்பு, பாரத் பந்த் போன்ற பல நேர்வுகளில் காவல் துறையினருக்கு உதவினர். ஊர்க்காவல் படையினரின் சேவை, பொதுத் தேர்தலின்போது செம்மையாகப் பயன்படுத்தப்பட்டது.

ஊர்க்காவல் படையினருக்காகும் செலவு ஆண்டிற்கு ரூ. 32 இலட்சமாகும். ஊர்க்காவல் படையினருக்கான செலவில் சில இனங்களுக்கு மத்திய அரசு 50 சதவீத உதவித் தொகை வழங்குகிறது.

**மக்கள் பாதுகாப்பு :**

45. இந்திய அரசினரால் சென்னை மாநகரம் முதல் வகை மக்கள் பாதுகாப்பு நகரம் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை மக்கள் பாதுகாப்பு தொண்டர் படை எதுவும் உருவாக்கப்படவில்லை. பணியாளர் அமர்த்துதல், செய்தித் தொடர்பு அறை (கட்டுப்பாட்டு அறை), பயிற்சி நிலையம் அமைத்தல் பற்றிய செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல்) ஆகவும் விளங்கும் மக்கள் பாதுகாப்பு படை இயக்குநர், அடிப்படை வசதிகள் இன்னமும் முழு உருப்பெறாத நிலையிலிருந்தாலும், மாநிலத்தில் வெள்ளம்/புயல் மீட்பு/துயர் துடைப்புப் பணிகள் போன்றவற்றில் மக்கள் பாதுகாப்பு புத்தறிவினை அளித்துள்ளார். ஆண்டுதோறும் அக்டோபர் முதல் சனவரி வரையிலான வடகிழக்கு பருவக்காற்று வீசும் காலத்தில், வெள்ளம், புயல் ஏற்படும்போது நடத்தப்பெறும் மீட்பு/துயர் துடைப்புப் பணிகளை மேற்பார்வையிட மாநில வெள்ளக் கட்டுப்பாட்டு மையம் ஒன்று மக்கள் பாதுகாப்புப் பணிகள் இயக்குநரின் அலுவலகத்தில் இயங்குகிறது. இந்தப் பணிக்காக காற்றடைப்பு படகுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. புயல்/வெள்ளக் காலங்களில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்ச்சிகளை எதிர் கொள்வதற்காக இந்தப்



படகுகளுடனும், சிறப்பு மீட்பு ஊர்திகளுடனும் அவற்றை இயக்குவதற்கு பயிற்சி பெற்ற பணியாளர்களும் கரையோர மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். இம்மாநிலத்தின் கரையோர மாவட்டங்களை அடிக்கடி தாக்கும் புயல்/வெள்ளம் ஆகியவற்றால் பாதிப்பு ஏற்படும் காலங்களில் இந்த ஏற்பாடுகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்துள்ளன.

## XI. 1991-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சில முக்கிய ஒப்பளிப்புகள்.

46. 1991-ஆம் ஆண்டில் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிதாக அனுமதிக்கப்பட்டவை பின்வருமாறு :—

அ. புதிதாக 9 காவல் நிலையங்களை அரசு உருவாக்கியதுடன் 5 புறக்காவல் நிலையங்களையும் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தியுள்ளது.

ஆ. ரூ. 87.76 இலட்சம் செலவில் 36 மோட்டார் ஊர்திகள் வாங்குவதற்கும் ரூ. 10.63 இலட்சம் செலவில் பழைய ஊர்திகள் 11-க்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்குவதற்கும் அரசு ஒப்பளித்துள்ளது.

இ. ரூ. 77.85 இலட்சம் செலவில் 248மீ உயர் அலைவரிசை சாதனங்களை (VHF) வாங்குவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

ஈ. சீர்பெரு மக்களின் பாதுகாப்புக்கு மிக முக்கியமாக தமிழக முதலமைச்சரின் பாதுகாப்புக்கு எதிராக வளர்ந்து வரும் மிரட்டல்களுக்கு எதிர் நடவடிக்கை எடுப்பதற்கு 'சிறப்பு பாதுகாப்புக் காவலர்' எனப்படும் சிறப்புப்படை ஒன்று அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. நிர்வாகம், தொழில், அமைச்சகப் பணிப்பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட இப்படை, தமிழக முதல்வருக்கும், சீர்பெருமக்களுக்கும் அருகிலிருந்து பாதுகாப்பினை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

## XII. புதிய திட்டங்கள்.

47. 1992-93ஆம் ஆண்டு காலத்தில் சில புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்க கருதப்பட்டுள்ளது அவை பின்வருமாறு :—

| தொடர் எண். (1) | திட்டங்களின் பெயர். (2) | தொகை (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 7 மாவட்ட தலைமையிடங்களில் துப்பறியும் நாய் பட்டிகள் கட்டுதல் (சிதம்பரனார், திருநெல்வேலி - கட்டபொம்மன், வட ஆர்க்காடு- அம்பேத்கர், கடலூர், சேலம், தஞ்சாவூர் மேற்கு மற்றும் இராம நாதபுரம்). | 31.68 |
| 2. | மதுரை (ஊரக) மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி கிராமத்தில் நில அளவை எண் 715-ல் ஆண்டிப் பட்டி காவல் நிலைய கட்டிடம் கட்டுதல். | 8.75 |
| 3. | சென்னை மாநகர காவல்—சென்னை மாநகர-காவல் அலுவலக வளாகத் தில் அமைந்துள்ள நிசென் ஷெட் டில் மேம்பாட்டு பணிகள். | 1.88 |
| 4. | ஆவடி தமிழ்நாடு சிறப்புக் காவலர் 5-வது அணி — துளைக்கிணறு அமைத்தல். | 0.08 |
| 5. | சென்னை மாநகர காவல்துறையின் ஆர். 1-காவல் நிலையத்திற்கு வடி கால் வசதி அமைத்துக் கொடுத்தல். | 2.53 |



| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 6. | மோட்டார் போக்குவரத்து வசதி- விழுப்புரத்தில் புதிதாக திறக்கப் பட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு வாகனங்கள் வாங்குதல். | 10.26 |
| 7. | சென்னையில் பணிபுரியும் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியைச் சேர்ந்த காவலர்களுக்கு உணவை விநியோ கிப்பதற்காக உணவு வண்டி வாங்குதல். | 4.19 |
| 8. | விரல்ரேகை பதியும் பிரிவிற்குத் தேவைப்படும் ஒரு ஜெராக்ஸ்மெஷின் வாங்குதல். | 0.70 |
| 9. | மாவட்டங்களிலுள்ள விரல்ரேகை பதிவு பிரிவுகளுக்கு கோப்புகள் அடுக்கும் எஃகு சிற்றறைகள் 128 வழங்கும் திட்டம். | 2.05 |
| 10. | தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி 8 மற்றும் 9 அணிகளில் பணி யாற்றும் பணியாளர்களுக்கு எவர் சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகள் வழங்கும் திட்டம். | 1.32 |
| 11. | செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். (மேற்கு) மாவட்டம் மேல்மருவத்தூர் கிரா மத்தில் நி.அ.பு. எண் 5/2-ல் காவல் நிலைய கட்டிடம் கட்டுதல். | 7.70 |
| 12. | கட்டிடங்கள் - இராமநாதபுரம் மாவட்டம் - கமுதி ஆயுதக் காவல் படை குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல். | 0.85 |

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 13. | கட்டிடங்கள்—தர்மபுரி மாவட்டம்—தர்மபுரி மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல். | 0.90 |
| 14. | கட்டிடங்கள்—மதுரை ஊரக மாவட்டம்-கம்பம் காவல் நிலைய குடியிருப்பு இல்லங்களில் இரட்டைக் குழாய் வசதி அளித்தல். | 1.23 |
| 15. | கட்டிடங்கள்—தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம் ; பேராவூரணி காவல் துறை காவலர் குடியிருப்பு இல்லங்கள் — 21 குடியிருப்பு இல்லங்களில் சிறப்பு பழுது பார்ப்பு பணிகள். | 2.35 |
| 16. | கட்டிடங்கள்—தஞ்சாவூரில் உள்ள காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் மேல்நிலை நீர்தொட்டி கட்டுதல். | 0.19 |
| 17. | கட்டிடங்கள்—சென்னை மாநகர காவல்துறை புதுப்பேட்டையிலுள்ள ஆயுதப்படை காவலர்களின் குடியிருப்பு இல்லங்களில் கைபம்புகள் அமைத்தல். | 0.33 |
| 18. | கட்டிடங்கள் —சென்னை மாநகர காவல்துறை அலுவலக வளாகத்தில் உள்ள பாரக்ஸ் ஷெட் 3-ல் காற்றை வெளியேற்றும் மின்விசிறிகளுக்கு வகை செய்தல். | 0.19 |
| 19. | கட்டிடங்கள் — கன்னியாகுமரி மாவட்டம் மாவட்ட குற்றப் பதிவேடுகள் அறையில் மின் விசிறிகள், விளக்குகள் ஆகியவற்றிற்கு வகை செய்தல். | 0.22 |



| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 20. | தமிழ் நாடு சிறப்புக் காவல் முதலாம் அணி, திருச்சிராப்பள்ளி வளாகத்தில் உள்ள காவல்துறை மருத்துவமனையில் ஈ.சி.ஜி. பிரிவு ஆய்வுக் கூடத்தைத் தொடங்குதல். | 0.88 |
| 21. | கட்டிடங்கள் — கோயம்புத்தூரில் (ஊரகம்) 44 காவலர் குடியிருப்புகளுக்கும் 12 தலைமைக் காவலர் குடியிருப்புகளுக்கும் மின் சாதனப் பழுதுபார்ப்புப் பணி. | 0.84 |
| | மொத்தம் .. | 79.12 |

## XIII. விளையாட்டுப் போட்டிகள்

48. விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு காவல் படை மற்ற எந்த முன்னணி மாநிலங்களுக்கும் எவ்வகையிலும் பிற்பட்டதல்ல. அவர்கள் சில துறைகளில் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானவர்கள் என்பதை பலமுறை தொடர்ச்சியாக நிரூபித்திருக்கிறார்கள். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற 1991ஆம் ஆண்டுக்கான 35-வது அகில இந்திய காவல் துறைப் பணியாளர் போட்டிகளில், பல போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறை சிறப்பு நிலையினை அடைந்தது இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இந்தப் போட்டியானது ஏறத்தாழ 17 வருடங்கள் கழித்து சென்னையில் நடைபெற்றது. இந்த அகில இந்தியப் போட்டியில் தமிழ்நாடு, துப்பாக்கி சுடுதலில் ஒட்டு மொத்த சாம்பியனுக்கான சுழற் கோப்பையைத் தட்டிச் சென்றது. காவற்படை நாய்களுக்கானப் போட்டியில் ஒன்றும், துப்பறிதலில் அறிவியல் நுட்பத்தை பயன்படுத்துவதில் ஒன்றும் என மேலும்

இரு தங்கப் பதக்கங்களையும் தமிழ்நாடு காவல் துறை வென்றது. காவல் துறைத் தலைவர் (சட்டம் - ஒழுங்கு) திரு. டபிள்யூ. ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள், தனிப்பட்டவர்களுக்கான துப்பாக்கிச்சுடுதல் பரிசினை வென்றார்.

49. சென்னையில், தமிழ்நாடு காவல்துறை நீர் விளையாட்டுப் போட்டிகள், கிராஸ் கண்ட்ரி ( cross country ) ஓட்டம், மாநில காவல் துறைப் பணியாளர் போட்டிகள் முதலியவை இந்த ஆண்டில் நடைபெற்றன. கோவையில் நடைபெற்ற தைய்க் வான்-தோ போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறை அணி கலந்து கொண்டு, ஆண் காவலர் ஒருவரும், பெண் காவலர் ஒருவரும் ஆக இரு காவலர்கள் தங்கப் பதக்கங்களை வென்றனர். லக்னோவில் நடைபெற்ற 6-வது முல்லிக் நினைவு கால்பந்து போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தமிழ்நாடு காவல் துறையின் கால்பந்து அணி தேர்வு செய்யப்பட்டது.

## XIV. முடிவுரை.

50. பல்வேறு அரசியல் கட்சிகள், பிற அமைப்புகள், குழுக்கள் முதலியவை மேற்கொள்ளும் எண்ணிலடங்கா ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், போராட்டங்கள், கூட்டங்கள் முதலியவற்றின்போது சட்டத்தைப் நெறிப்படுத்தி ஒழுங்கைப் பராமரிப் பதிலும் மாநிலத்தில் அமைதியும், சாந்தியும் நிலவச் செய்வதிலும் தமிழ்நாடு காவல் துறை மிகச் சிறந்த பணி ஆற்றியுள்ளது என்பது உண்மையே. இலங்கைப் போராளிகள்/தமிழீழ விடுதலைப் புலிகளையும் பிற தீவிரவாதிகளையும் அடக்கி, கட்டுப்படுத்தி அவர்கள் நடவடிக்கைகளைக் கண்காணித்து தடை செய்யும் பணிகளில் காவல் துறையினரின் பங்கும் ஆற்றிய பணி யும் மிகவும் பாராட்டுற்குரியது என்பதும் முற்றிலும் உண்மையே. இவ்வாறு செய்ததன் மூலம் பொது மக்கள் மதிப்பில் உயர்ந்த இடத்தை பெற்றதுடன் தங்களுக்கும் அரசுக்கும் அவர்கள் மிகுந்த பெருமையையும் புகழையும் பெற்றுத் தந்துள்ளனர். மீண்டும், சீர் பெருமக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில்



காணப்பட்ட அவர்களது தொழில் திறனையும் ஆற்றிய சாதனையையும் குறைத்து மதிப்பிட இயலாது. விரைந்து திட்டமிட்டு தயார் நிலையில் செயல்படுதல் மூலம்தான் அதிகரித்து வரும் குற்ற வழக்குகளின் போக்கை கட்டுப் படுத்த முடியும் என்பதை அவர்கள் நன்கறிவர். இந்நோக்குடன் இச் சவால்களை முழு மூச்சுடன் சந்திக்க அவர்கள் நன்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

சமுதாயம் வெகுவிரைவாக மாறி வருகின்ற இச் சூழ்நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகளும், விழைவு களும் கூட அதிகரித்து வருகின்றன. அத்தகையை தேவையை நிறைவு செய்ய, அக்குறிக்கோளை எய்தும் வகையில் காவல்படை சீரமைக்கப்பட்டு மாற்றி யமைக்கப்பட வேண்டும். காலங்காலமாக இருந்து வரும் மனப்பான்மைகள், தொழில்நுட்பங்களுங்கூட மாற்றப்பட வேண்டும். காவல் படைக்கு நியமனம் செய்வதிலிருந்து பணி ஓய்வு பெறுவதுவரை, பயனுள்ள தற்கால அணுகுமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். காவல் படையின் திறனையும், பலவீனங்களையும் அரசு நன்கறிந்துள்ளது. போதிய காவலர்கள், காவல் நிலையங்கள் இன்மை, காவலர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புதல், தகவல் தொடர்பு ஆகியவற்றின் பற்றாக்குறை ஆகியவை குறித்து, கிடைக்கும் நிதி ஆதாரங்கள், முன்னுரிமை வழங்க வேண்டிய பணிகள் அடிப்படையில் அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

சுருங்கக் கூறின், ஒருபுறம் போதிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமும், மற்றொரு புறம் படையின் செயல்திறனை ஊக்குவிப்பதன் மூலமும் மாநிலத்தில் காவல் துறை மிகுந்த திறனுடன் செயல் படுவதற்கான உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கு வதே அரசின் நோக்கமாகும்.

## இணைப்பு II.

1992ஆம் ஆண்டு சனவரி முதல் நாளன்றுள்ளவாறு காவல் துறைக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| 1. | காவல் துறை தலைமை இயக்குநர் .. | 2 |
| 2. | காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர்.. | 1 |
| 3. | காவல்துறை தலைவர் .. .. | 12 |
| 4. | காவல்துறை துணைத் தலைவர் .. | 24 |
| 5. | காவல்துறை கண்காணிப்பாளர்கள். | 75 |
| 6. | தளவாய் .. .. .. | 2 |
| 7. | காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் (நிலை 1/நிலை 2.) | 53 |
| 8. | துணைத் தளவாய் .. .. | 5 |
| 9. | காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 1). | 285 |
| 10. | காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 2). | 41 |
| 11. | உதவித் தளவாய் .. .. .. | 39 |
| 12. | ஆய்வாளர் .. .. .. | 1,344 |
| 13. | கூடுதல் ஆய்வாளர் .. .. | 7 |
| 14. | ஆய்வாளர் (சேமப்படை) .. | 120 |
| 15. | காவல்துறை உதவி ஆய்வாளர் .. | 4,236 |
| 16. | உதவி ஆய்வாளர் (சேமப்படை) .. | 628 |
| 17. | தலைமைக் காவலர்கள் .. .. | 6,293 |
| 18. | ஹவில்தார்கள் .. .. .. | 830 |
| 19. | காவல்துறை காவலர்கள்—தரம் 1. | 6,144 |
| 20. | காவல்துறை நாயக்குகள் .. .. | 620 |
| 21. | காவல்துறை லான்ஸ். நாயக்குகள்.. | 1,071 |
| 22. | காவல்துறை காவலர்கள் (நிலை 2). | 45,857 |
| 23. | காவல்துறை பெண் ஆய்வாளர்கள் | 10 |
| 24. | காவல்துறை பெண் உதவி ஆய்வாளர்கள். | 108 |
| 25. | காவல்துறை பெண் தலைமைக்காவலர்கள். | 100 |
| 26. | காவல்துறை பெண் காவலர்கள் | 1,040 |
| | | 68,947 |
| | மிகையான பதவிகள் .. | 40 |
| | பெரு மொத்தம் .. | 68,987 |

## இணைப்பு III.

### 1991-ல் அனுமதிக்கப்பட்ட பதவிகள் பற்றிய விவரம்.

நிர்வாகப் பதவிகள்.

| தொடர் எண். | பதவிகளின் வகை. | புதிதாக அனுமதிக்கப் பட்டவை. | தனி நிலைப் பதவிகள். | மொத்தம். | நீக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட மொத்த பதவிகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | காவல்துறைத் தலைமை இயக்குநர். | 1 | .. | 1 | .. | 1 |
| 2 | காவல்துறைத் தலைமை கூடுதல் இயக்குநர். | 1 | .. | 1 | .. | 1 |
| 3 | காவல்துறைத் தலைவர். | 4 | .. | 4 | .. | 4 |
| 4 | காவல்துறைத் துணைத் தலைவர்கள். | 3 | .. | 3 | — | 3 |
| 5 | காவல்துறைக் கண்காணிப்பாளர். | 9 | .. | 9 | .. | 9 |
| 6 | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர். | 1 | .. | 1 | .. | 1 |
| 7 | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர். | 11 | 26 | 37 | .. | 37 |
| 8 | காவல்துறை ஆய்வாளர். | 48 | 66 | 114 | 1 | 113 |
| 9 | காவல்துறை உதவி ஆய்வாளர். | 182 | 159 | 341 | 2 | 339 |
| 10 | காவல்துறை உதவி ஆய்வாளர் (சேமக் காவல் படை). | 2 | .. | 2 | .. | 2 |
| 11 | காவல்துறை தலைமைக்காவலர். | 165 | 144 | 309 | 3 | 306 |
| 12 | காவல்துறை காவலர் (நிலை 1). | 50 | 130 | 180 | .. | 180 |
| 13 | காவல்துறை காவலர் (நிலை 2). | 673 | 995 | 1,668 | 5 | 1,663 |
| | | 1,150 | 1,520 | 2,670 | 11 | 2,659 |



### அமைச்சுப் பணி பதவிகள்.

#### புதிதாக அனுமதிக்கப்பட்டவை

| | | |
|---|---|---|
| 1. | நேர்முக உதவியாளர்கள் .. .. | 10 |
| 2. | கண்காணிப்பாளர்கள் .. .. | 11 |
| 3. | உதவியாளர்கள் .. .. .. | 23 |
| 4. | இளநிலை உதவியாளர்கள் .. .. | 23 |
| 5. | சுருக்கெழுத்து தட்டச்சர் .. .. | 12 |
| 6. | தட்டச்சர் .. .. .. .. | 12 |
| 7. | பதிவுரு எழுத்தர் .. .. .. | 9 |
| 8. | அலுவலக உதவியாளர்கள் .. .. | 66 |
| | மொத்தம் .. | 166 |

### பிற பதவிகள்.

| | | |
|---|---|---|
| 1. | தொழில் நுட்ப அதிகாரி | 3 |
| 2. | ஆய்வாளர் (தொழில் நுட்பம்) | 5 |
| 3. | உதவி ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்) | 15 |
| 4. | வரைவாளர் .. .. .. | 1 |
| | மொத்தம் .. | 24 |

### மிகையான பதவிகள்.

| | | |
|---|---|---|
| 1. | காவல்துறைக் கூடுதல் கண்காணிப் பாளர். | 1 |
| 2. | காவல்துறைத் துணைக் கண்காணிப் பாளர்கள். | 5 |
| 3. | காவல்துறை ஆய்வாளர்கள் | 34 |
| | மொத்தம் ... | 40 |

## தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

## மானியக் கோரிக்கை எண். 16.

## கொள்கைக் குறிப்பு 1992–93.

### I. குறிக்கோள் — ஒரு கண்ணோட்டம்.

கடந்த 25 ஆண்டுகளில் ஆற்றிய மிகச்சிறந்த செயல்களாலும் மற்றும் சாதனைகளாலும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை, நாட்டிலுள்ள பெரிய மற்றும் திறமை மிக்க அமைப்புகளில் ஒன்றென புகழ் பெற்றுள்ளது. அடிப்படையில் பொது மக்களுக்குச் சேவை செய்யும் துறையாகிய இதன் பணிகள் பல்வேறுபட்டதாகவும், கணிசமானதாகவும் உள்ளன. இத் துறையின் தலையாய குறிக்கோள் தீ மற்றும் இதர விபத்துகளால் ஏற்படும் அபாயம், சேதம் மற்றும் அழிவிலிருந்து உயிர் மற்றும் உடைமைகளை காத்தலாகும். தீயணைத்தல் மற்றும் தீத்தடுப்பு தவிர, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வெள்ளம், புயல், பூகம்பம், கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கையினால் ஏற்படும் சீற்றங் களிலும், இரயில் விபத்துகள் போன்றவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரணம் அளித்தலும் இத் துறையின் பிற பணிகளுள் அடங்கும். மேலும், தேர்தல்கள், கலவரங்கள், பொருட் காட்சிகள், திருவிழாக்கள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவற்றில் காவல்துறைக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும் இத் துறையின் சேவை நீட்டிக்கப் படுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர் களையும், உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல இத் துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படு கின்றன. அரசு கட்டிடங்கள், தொழிற்சாலைகள், பொது மக்கள் கூடுமிடங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவைகளில் தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்தும் இத்துறை ஆலோசனை வழங்குகிறது. இத்துறை அல்லும் பகலும் எந்நேரத்திலும் இலவசமாக

தனது சேவை பொது மக்களுக்கு கிடைக்கும் வகையில் பணியாற்றி வருகிறது. இவை தவிர, பொது மக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம், தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், சென்னை நகர மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், படைக்கலச் சட்டம் மற்றும் விதிகள், தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் ஆகிய பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் உரிமம் வழங்கப் பட்ட மற்றும் உரிமம் வழங்கப்பட வேண்டிய இடங் களை ஆய்வு செய்யவும், சட்டப்படி தமிழ்நாடு தீயணைப்புத் துறை அலுவலர்களுக்கு கடமை உள்ளது. 1991-92-ம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்பு அலுவலர் களால் ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



II. நிறுவன மற்றும் நிர்வாக அமைப்பு.

நிறுவன அமைப்பு.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர்.

| | | | |
|---|---|---|---|
| துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை. | துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி. | துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை. | துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயமுத்தூர். |
| கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். |
| 1. வட சென்னை. | 1. திருச்சிராப்பள்ளி. | 1. மதுரை. | 1. கோவை-பெரியார்-நீலகிரி. |
| 2. தென் சென்னை. | 2. புதுக்கோட்டை. | 2. திருநெல்வேலி-கட்டபொம்மன். | 2. சேலம்-தர்மபுரி |
| 3. செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். | 3. தஞ்சாவூர். | 3. கன்னியாகுமரி. | 3. திண்டுக்கல்-அண்ணா. |
| | 4. தென்னாற்காடு. | 4. சிதம்பரனார். | 4. வேலூர்-அம்பேத்கார். |
| | 5. விழுப்புரம். | 5. காமராசர். | 5. திருவண்ணாமலை-சம்புவராயர். |
| | | 6. இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். | |

**நிர்வாக அமைப்பு.**

காவல்துறைத் தலைவர் தரத்தில் இந்திய காவல் பணியைச் சேர்ந்த அலுவலர் ஒருவரை துறைத் தலைவராகக் கொண்டு தீயணைப்புத்துறை இயங்கி வருகிறது. இத்துறை, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வட மண்டலம், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென் மண்டலம், கோவையைத் தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் மூன்று முதல் ஆறு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கும் நிர்வாக மற்றும் செயல் பணிகளில் ஒரு உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவியாக இருக்கிறார். தற்சமயம் இம்மாநிலத்தில் 19 கோட்டங்கள் பிற்சேர்க்கை IV-ல் குறிப்பிட்டுள்ளவாறு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தீயணைப்பு நிலையமும், ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளது.

**III. துறையிலுள்ள உள்ளமைப்பு வசதிகள்.**

**(அ) மனிதத் திறன் :**

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் உள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,763 ஆகும். ஒவ்வொரு பதவித் தரத்திலும் உள்ள பணியாளர்களின் விவரம் பிற்சேர்க்கை II மற்றும் III-ல் அளிக்கப்பட்டுள்ளன.



**(ஆ) தீயணைப்பு நிலையங்கள் :**

இம்மாநிலத்தில் இயங்கும் மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை பிற்சேர்க்கை IV-ல் உள்ளபடி 205 ஆகும். அவற்றுள் 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரத்திலும் இதர 184 தீயணைப்பு நிலையங்கள் பிற மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. மாநிலத்தில், தேவையான ஒவ்வொரு இடத்திற்கும் 25 கி.மீ. தொலைவுக்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது இத்துறையின் உடனடி குறிக்கோளாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் கடுமையான நிதி நெருக்கடி உள்ளபோதும், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி மற்றும் குடிசைப் பகுதிகள் போன்ற தீ அபாயம் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க அரசு ஒப்பளித்து வருகிறது. மிக விரைவாகவும், பாதுகாப்பாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும், மக்களுக்கும் சரியான நேரத்தில் போதுமான சேவை சென்று சேரும் பொருட்டு தீயணைப்புத் துறையை நவீனப்படுத்தல் மற்றும் சீர்திருத்துதல் மட்டுமின்றி புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கவும் அரசு ஆர்வமாக உள்ளது.

**(இ) ஊர்திகளும் சாதனங்களும் :**

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் 237 நீர் தாங்கி வண்டிகளும், 75 நோயாளர் ஊர்திகளும், 193 இதர துணை ஊர்திகளும் உள்ளன. இவை தவிர, இத்துறையில் 59 சிறப்பு சாதனங்களும் உள்ளன. இத்துறையை எல்லா வகையிலும் நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த ஆர்வமுடன் உள்ளது. பழைய மற்றும் பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. நகரத்தில் பல மாடிக் கட்டிடங்கள் மற்றும் சரியான அணுகு சாலைகள் இல்லாத குடிசைப் பகுதிகள் ஆகியவற்றில் ஏற்படும் தீயை அணைக்கவும், மீட்புப் பணிகளுக்கு செல்லவும், "ஸ்நார்க்கல்" என்ற நவீன தீயணைப்பு ஊர்தி ஒன்றும், ஜப்பான் நாட்டி

விருந்து பெறப்பட்ட ''ISUZU'' ஊர்தியில் கட்டு மானம் செய்யப்பட்ட ''மோரிட்டா'' சுழல் மேசை ஏணியும் உள்ளன. இந்த இரு ஊர்திகளும், சென்னை மாநகரத்தில் வைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிசைத் தீ விபத்துக்கள் மற்றும் பல மாடிக் கட்டிட தீ விபத்துக்களை அணைப்பதில் இவ் வூர்திகள் மிகவும் உபயோகமாக இருந்து வருகின்றன.

(ஈ) கம்பியில்லாத் தந்திகள்.

தீயணைப்பதிலும், மீட்புப் பணி புரிவதிலும் கால அளவென்பது முக்கியமான ஒன்றாகும். தற்சமயம் தீயணைப்புத் துறையில் சென்னை மாநகரம் முழுவதும் 65 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும், மாவட்டங்களல் 28 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. தீயணைப்பு ஊர்திகளுக்கிடையே தொலைத் தொடர்பு அமைப்பை நவீனப்படுத்தும் வகையில், கூடுதல் கம்பியில்லாத் தந்திக் கருவிகளை வாங்கி மாநிலத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் படிப்படி யாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) நோயாளர் ஊர்தி சேவை.

மாநிலத்தில் உள்ள 205 தீயணைப்பு நிலையங் களுள் பெரிய நகரங்களில் அமைந்துள்ள 75 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நோயுற்றவர்களும், காயம்பட்டவர்களும் நியாயமான கட்டணத்தை வாடகையாகப் பெற்றுக் கொண்டு மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனை களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். ஏழை எளிய மக்கள் இலவசமாக அழைத்துச் செல்லப்படு கின்றனர். சென்ற ஆண்டு நோயாளர் ஊர்திகள் 3,596 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. இவற்றுள் 3,201 அழைப்புகளுக்குக் கட்டணம் வசூலிக் கப்பட்டது. இக்கட்டண அழைப்புகளின் மூலம் ரூ. 6,36,436 வருவாயாக ஈட்டப்பட்டது. ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் படிப்படியாக நோயாளர் ஊர்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



(ஊ) பட்டறை.

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பெரும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காகச் சென்னையில் போக்குவரத்து பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இப்பட்டறை ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலரின் தலைமையின் கீழ் திறமை யாக இயங்கி வருகிறது.

(எ) பணியாளர்கள் தேர்வு.

நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் தீயணைப்போர்களை காவல் மற்றும் சிறைத் துறைக்குத் தேவையான பணியாளர்களுடன் சேர்ந்து தேர்வு செய்ய தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

(ஏ) பயிற்சி வசதிகள்.

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரடியாக நியமனம் செய்யப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. இப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக இரண்டு நிலையத் தீயணைப்பு அலுவலர்களும், இரண்டு முன்னணித் தீயணைப் போர்களும் உள்ளனர். 31-1-1992 வரை பயிற்சி பெற்ற பணியாளர்களது விவரம் பின்வருமாறு :—

| | நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி. (1) | தீயணைப்போர் பயிற்சி. (2) | முன்னணித் தீயணைப்போர் ஓட்டுநர்—கம்மியர் பயிற்சி. (3) | தீயணைப்புப் பயிற்சி. (4) |
|---|---|---|---|---|
| 1. துறையைச் சேர்ந்த பணியாளர்கள். | 5 | .. | 226 | ... |
| 2. மற்றவர்கள் | 25 | .. | — | — |

## IV. சிறப்பு சேவைகள் :

### (அ) உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள் :

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன்டியாக உதவிகளையும், நிவாரணங்களையும் தனது சேவை மற்றும் செயல் திறனால் அளிப்பதுடன், எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் கசிவு காரணமாக குறிப்பாக சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து பெறப்படும் அவசர அழைப்புகளையும் ஏற்று செயல்படுவதன் மூலம் இத்துறை தனியிடத்தைப் பெற்றுள்ளது. இத்துறையின் சேவை பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் கிடைக்கும். உதவிக்கான அழைப்புகள் அதிகரித்து வருகின்றன. 1991-92-ம் ஆண்டில் இத்துறை 2,763 அவசர மற்றும் மீட்பு அழைப்புகளை உடனடியாக ஏற்றுச் செயல்பட்டது. 1991-92-ல் (31-1-1992 வரை) மாநிலத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் 11,983 தீ அழைப்புகளை ஏற்று செயல்பட்டன. அவற்றுள் 196 அழைப்புகள், ரூ. 50,000-க்கு மேற்பட்ட பொருட்சேதமோ அல்லது உயிரிழப்போ கொண்ட பெருந் தீ விபத்துக்களாகும். மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களால், ஏற்பட்ட பொருட் சேதத்தின் மதிப்பு உத்தேசமாக ரூ. 10.48 கோடியாகும். அதே சமயம், காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு உத்தேசமாக ரூ. 53.43 கோடியாகும். 1987 முதல் 1991 முடிய உள்ள 5 ஆண்டுகளுக்கான தீ விபத்து விவரங்கள் பிற்சேர்க்கை V -ல் அளிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) குடிசைத் தீ விபத்துக்கள் :

குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் பெரும்பாலான தீ விபத்துக்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இத் தீ விபத்துக்களைச் சமாளிப்பதற்காக, கோடைக் காலத்தில், பற்கோல், கூரைக் கொக்கி போன்ற எளிய தீயணைப்பு சாதனங்களுடன் குடிசைப் பகுதிகளில் புற நகர்த் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் இப்பகுதிகளில் அல்லும் பகலும் எந்நேரமும் பணியாற்றுவதுடன், இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்தும் வருகின்றன. தொடர்பு கொள்வதற்காக இப் புறத் தீயணைப்பு நிலையங்களுக்கு ''வாக்கி-



டாக்கி'' கருவிகளும் வழங்கப்படுகின்றன. இப் புறத் தீயணைப்பு நிலையங்களின் திறமையான செயல்பாடு காரணமாக இவ்வாண்டு சென்னையில் குடிசைத் தீ விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளது. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் பணி புரிந்தது குறித்த கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் இதற்குச் சான்றாகும் :—

| ஆண்டு | | அழைப்புகள். |
|---|---|---|
| 1985 | .. | 80 |
| 1986 | .. | 74 |
| 1987 | .. | 68 |
| 1988 | .. | 58 |
| 1989 | .. | 61 |
| 1990 | .. | 48 |
| 1991 | .. | 48 |

## V. ஊக்குவித்தலும், சலுகைகளும் :

### (அ) வெகுமதிகள் :

இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது சேவையை ஊக்குவிக்கவும், பாராட்டவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. அவர்களுக்கு குடியரசு தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும், குடியரசுத் தலைவரது தீயணைப்புத் துறைப் பதக்கமும், வீரச் செயல்கள் மற்றும் சீரிய பணிக்கான முதலமைச்சரது காவல் மற்றும் தீயணைப்புத் துறை பதக்கமும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்டவை தவிர, ''தமிழ் நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம்'' என்ற புதிய பதக்கம் ஒன்றையும் ஒவ்வொரு பொங்கல் நாளன்றும் அளிப்பதற்காக அரசு உருவாக்கியுள்ளது. இப்பதக்கம் பெறும் ஒவ்வொரு தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்பவருக்கும் மாதம் ரூ. 20 ரொக்கப்படியும், முன்னணித் தீயணைப்போர், யந்திரக் கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 25 ரொக்கப் படியும் வழங்கப்படுகிறது. 1991–92-ம் ஆண்டில் மேற்கண்ட வெகுமதித் திட்டங்களின் கீழ் (31-1-1992 வரை உள்ள நிலவரப்படி)

பதக்கம் வழங்கப்பட்டவர்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| பதக்கம். (1) | பணியாளர்கள். (2) | | வெகுமதிகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|---|
| 1. சிறந்த சேவை அல்லது வீரச் செயலுக்காக குடியரசு தினத்தன்று வழங்கப்படும் தீயணைப்புத்துறைப் பதக்கம் (இந்திய அரசு பதக்கம்) | முன்னணித் தீயணைப்போர் | 1 | 3 |
| | யந்திரக் கம்மியர் ஓட்டி | 1 | |
| | தீயணைப்போர் | 1 | |
| 2. சிறந்த சேவை அல்லது வீரச் செயலுக்காக சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் தீயணைப்புத் துறைப் பதக்கம். (இந்திய அரசு பதக்கம்). | முன்னணித் தீயணைப்போர் | 1 | 2 |
| | யந்திரக் கம்மியர் ஓட்டி | 1 | |
| 3. அண்ணா பிறந்த நாளன்று வழங்கப்படும் தமிழக முதல்வரின் காவல் பதக்கம். | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 | 8 |
| | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 1 | |
| | முன்னணித் தீயணைப்போர் | 1 | |
| | தீயணைப்போர் ஓட்டி | 1 | |
| | தீயணைப்போர் (தகைசால்பணிக்கான பதக்கங்கள் இரண்டு) | 4 | |
| 4. தமிழக முதல்வரின் பொங்கல் பதக்கம். | முன்னணித் தீயணைப்போர் | 25 | 100 |
| | தீயணைப்போர் ஓட்டி | 59 | |
| | யந்திர கம்மியர் ஓட்டி | 4 | |
| | தீயணைப்போர் | 12 | |



**(ஆ) நலத் திட்டங்கள் :**

**(i) தீயணைப்புத் துறை சேம நல நிதி :**

துயருற்ற தீயணைப்புத்துறைப் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 1962ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நல நிதி துவக்கப்பட்டது. காச நோய், தொழு நோய், புற்று நோய் போன்ற கொடிய நோய்களால் அவதிப்படும் பணியாளர்களுக்கோ, அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ, சத்துணவிற்காகவும், பணியாளர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விக்காகவும், பணியாளர்களோ அவரைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்குகளுக்காகவும், இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கும் அடையாள உதவித் தொகையாக ரூ. 200 வழங்கப்படுகிறது. 1991ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 46 பணியாளர்களுக்கு ரூ. 9,200 வழங்கப்பட்டது. இந்நிதியில் உறுப்பினர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை 4,571. 1991ஆம் ஆண்டில் இந்நிதிக்கு சந்தாத் தொகையாக ரூ. 53,077 வசூலிக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31ஆம் நாள் முடிய இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரொக்க உதவித் தொகை ரூ. 2,29,875. ஒவ்வோர் ஆண்டும் இந்நிதிக்கு அரசு மானியம் வழங்குகிறது. அரசுப் பணியாளர்களின் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 60,000 உடன் இத்துறையின் சார்நிலைப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது உயிர் துறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு மேலும் ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. மேலும், பணியில் ஈடுபட்டிருக்கும் சமயம் காயம் ஏற்பட்டால், காயத்தின் தன்மைக்கேற்ப பணியாளர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை உதவித் தொகை வழங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது.

**(இ) புதிய வாகனங்கள் ஒப்பளித்தல்:**

இவ்வாண்டில் 26 நீர்தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்து பெறப்பட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. இதைத்தவிர, இன்னும் 26 நீர்தாங்கி வண்டிகளுக்கான கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் 30 ஊர்தி அடிச்சட்டங்கள் வாங்கி, அவற்றை நீர்தாங்கி வண்டிகளாகக் கட்டுமானம் செய்து தீயணைப்பு நிலையங்களுக்கு கண்டனம் செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 5 நோயாளர் ஊர்திகள் வாங்கப்பட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், விருத்தாசலம், முசிறி, ஒரத்தநாடு, சங்ககிரி மற்றும் சோழவந்தான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நோயாளர் ஊர்திகள் வழங்க இவ்வரசு ஒப்பளித்துள்ளது.

**(ஈ) பணியாளர் தேர்வுக்குழு அமைத்தல் :**

இதுவரை நிலையத் தீயணைப்பு அலுவலர்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும், தீயணைப்பாளர்களை தீயணைப்புத் துறையும் தேர்வு செய்தன. நிலையத் தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பாளர்களை காவல் மற்றும் சிறைத் துறைக்குத் தேவையான பணியாளர்களுடன் சேர்த்து தேர்ந்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுவை அரசு தற்பொழுது அமைத்துள்ளது.

**(உ) தீயணைப்புத்துறை சேமநல நிதிக்கான அரசு மானியத்தை உயர்த்துதல் :**

இவ்வாண்டு முதல் இந்நிதிக்கு அரசு வழங்கும் மான்யம் ரூ. 60,000-லிருந்து ரூ. 1,50,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**(ஊ) டெரிகாட்டன் சீருடை வழங்குதல் :**

உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவிக்கு கீழுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் இதுவரை ஒரு செட் டெரிகாட்டன்



சீருடையும், ஒரு செட் பருத்திநூலாலான சீருடையும் வழங்கப்பட்டன. இனிமேல் இவர்களுக்கு இரண்டு செட் டெரிகாட்டன் சீருடை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**(எ) உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி உயர்த்துதல் :**

நிலையத் தீயணைப்பு அலுவலருக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு அளிக்கப்படும் உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது;—

**உபரிப் பணிப் படி**
(Off-Duty Allowance)

| தற்போதுள்ள படி ஒரு நாளுக்கு | உயர்த்தப்பட்டுள்ள படி ஒரு நாளுக்கு |
|---|---|
| ரூ. 5 | ரூ. 10 |

**உணவுப் படி**
(Feeding Charges)

| | தற்பொழுதுள்ள படி (நாள் ஒன்றிற்கு நபருக்கு) ரூ. | உயர்த்தப்பட்டுள்ள படி (நாள் ஒன்றிற்கு நபருக்கு) ரூ. |
|---|---|---|
| (அ) பணியாற்றும் இடம் நகர எல்லைக்கு அப்பால் 8 கி.மீ. தூரத்திற்கு மேற்பட்டிருந்தால் வழங்கப்படும் உணவுப் படி. | 4.50 | 9.00 |
| (ஆ) 8 கி.மீ. தூரத்திற்கு உட்பட்டிருந்தால் வழங்கப்படும் சிற்றுண்டி/உணவுப் படி— | | |
| (1) 1 மணி முதல் 6 மணி வரை. | 2.00 | 3.00 |
| (2) 6 மணி முதல் 10 மணி வரை. | 3.00 | 6.00 |
| (3) 10 மணி முதல் 24 மணி வரை. | 4.50 | 9.00 |

### (ii) மலிவு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்குதல் :

காவல் துறையைப் போலவே, தீயணைப்புத் துறையிலும் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளை வகிப்பவர்களுக்கு முக்கிய உணவுப் பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1981ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு :—

| | வருடம். | செலவிடப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | 1986-87 | 28.00 |
| 2. | 1987-88 | 28.00 |
| 3. | 1988-89 | 29.00 |
| 4. | 1989-90 | 26.09 |
| 5. | 1990-91 | 25.95 |
| 6. | 1991-92 | 26.00 |

### (iii) குடியிருப்புகள் கட்டுதல் :

துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் நோக்கத்துடன் உடுமலைப்பேட்டை, இராணிப் பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் தீயணைப்புப் பணியாளர்களுக்கு அரசு குடியிருப்புகளைக் கட்டி, ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னையில், அசோக்நகர், மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளன. நந்தனத்தில் குடியிருப்புகள் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இக்குடியிருப்புகள் கட்டி முடிந்தவுடன் தீயணைப்புப் பணியாளர் வசம் உடனடியாக ஒப்படைக்கப்படும்.



## VI. தற்போதைய அரசு பதவியேற்றபின் அளித்துள்ள வசதிகளும் சலுகைகளும்.

### (அ) புதிய கோட்டம் உருவாக்குதல் :

இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் ஏற்படுத்தியுள்ள நிலையான தீ ஆலோசனைக் குழுவினால் வரையறுக்கப்பட்ட அலகின்படி, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கக் கூடிய தீயணைப்பு நிலையங்களின் அதிகபட்ச எண்ணிக்கை 8 ஆகும். இதனைக் கருத்திற் கொண்டும், மாநிலத் தீயணைப்புத் துறையின் சிறந்த சேவையை உறுதிப்படுத்தவும், காமராசர் கோட்டத்தை, இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கோட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் கோட்டமாகவும் இரண்டாகப் பிரித்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்புதிய கோட்டம் 1-3-1992 அன்று முதல் இயங்கி வருகிறது.

### (ஆ) புதிய தீயணைப்பு நிலையங்கள் துவக்குதல் :

இவ்வரசு பதவியேற்றபின் 1991-92-ம் ஆண்டில் கீழ்க்கண்ட ஒன்பது இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | திரூர் | செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 2. | அனுப்பானடி | மதுரை மாவட்டம். |
| 3. | நாவல்பட்டு | திருச்சிராப்பள்ளிமாவட்டம். |
| 4. | கணபதி | கோயம்புத்தூர் மாவட்டம். |
| 5. | பவானி | பெரியார் மாவட்டம். |
| 6. | கும்மிடிப்பூண்டி | செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 7. | ஊத்தங்கரை | தர்மபுரி மாவட்டம் |
| 8. | துவரங்குறிச்சி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 9. | ஆற்காடு | வேலூர்—அம்பேத்கார் மாவட்டம் |

## பிற்சேர்க்கை–II.

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை.

(களப் பணியாளர்கள்)

| வரிசை எண். | பதவியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநர் | 1 |
| 2. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர் | 4 |
| 3. | கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 20 |
| 4. | உதவிப் பொறியாளர் (தானியங்கி) | 1 |
| 5. | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 18 |
| 6. | நிலையத் தீயணைப்பு அலுவலர் | 201 |
| 7. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 15 |
| 8. | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர் | 15 |
| 9. | முன்னணித் தீயணைப்போர் | 603 |
| 10. | யந்திரக் கம்மியர் ஓட்டி | 195 |
| 11. | தீயணைப்போர் ஓட்டி மற்றும் யந்திரக் கம்மியர். | 907 |
| 12. | தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவிகள். | 3,517 |
| | மொத்தம் .. | 5,497 |



## பிற்சேர்க்கை–III.

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை (அமைச்சுப் பணியாளர்கள்)

| வரிசை எண். | பதவியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநரது நேர்முக உதவியாளர். | 2 |
| 2. | கண்காணிப்பாளர் | 24 |
| 3. | உதவியாளர் | 60 |
| 4. | இளநிலை உதவியாளர் | 62 |
| 5. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 5 |
| 6. | தட்டச்சர் | 25 |
| 7. | பதிவுரு எழுத்தர் | 22 |
| 8. | அலுவலக உதவியாளர் | 66 |
| | மொத்தம் | 266 |

## VII. புதிய திட்டங்கள் :

1992-93-ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சம் மதிப்பில் கீழ்குறிப்பிட்டுள்ள ஆறு இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கவும், திருவள்ளூர் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கட்டவும் அரசு உத்தேசித்துள்ளது :—

| | | |
|---|---|---|
| (1) | கொளச்சல் | கன்னியாகுமரி மாவட்டம். |
| (2) | தேன்கனிக்கோட்டை | தர்மபுரி மாவட்டம். |
| (3) | சேத்தியாத்தோப்பு | தென்னாற்காடு மாவட்டம். |
| (4) | வேதாரண்யம் | நாகப்பட்டினம்—காயிதே-மில்லத் மாவட்டம். |
| (5) | மண்டபம் | இராமநாதபுரம் மாவட்டம். |
| (6) | வில்லிவாக்கம் | சென்னை மாவட்டம். |

## VIII. முடிவுரை :

இவ்வாறாக, இந்த மாநிலத்தின் எந்த மூலையிலும் ஏற்படும் தீவிபத்துக்களைத் திறம்படச் சமாளித்து, மக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றி, தக்க சமயத்தில் இன்றியமையாத சேவை புரிவதன் மூலம், மிகப் பயனளிக்கக்கூடிய அரசு துறைகளில் ஒன்று எனத் தொடர்ந்து நிரூபித்து, தனது புகழை தீயணைப்புத்துறை தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது.



**1991-92-ல் பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்த கட்டிடங்களின் எண்ணிக்கை.**

| வரிசை எண். | சட்டங்கள் மற்றும் விதிகள். | ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டம் | 155 |
| 2. | தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகள் | 185 |
| 3. | பொது மக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம் | 534 |
| 4. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை நகர மாநகராட்சி சட்டம். | 280 |
| 5. | தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் | 163 |
| 6. | தொழிற்சாலை விதிகள் | 1,192 |
| 7. | ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் | 534 |
| 8. | படைக்கலச் சட்டம் மற்றும் விதிகள் | 1,264 |

## பிற்சேர்க்கை-IV.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கோட்டங்கள் மற்றும் தீயணைப்பு நிலையங்களின் விவரம்.

### 1. வடமண்டலம், சென்னை—33

| கோட்டத்தின் பெயர் | தீயணைப்பு நிலையத்தின் பெயர் |
|---|---|
| வட சென்னைக் கோட்டம் .. | 1. வண்ணையம்பதி |
| | 2. எஸ்பிளனேடு |
| | 3. ராயபுரம் |
| | 4. வியாசர்பாடி |
| | 5. செம்பியம் |
| | 6. கீழ்பாக்கம் |
| | 7. வேப்பேரி |
| | 8. தண்டையார்பேட்டை |
| | 9. வ.உ.சி. நகர் |
| | 10. எண்ணூர் |
| | 11. மணலி |
| தென் சென்னைக் கோட்டம் .. | 1. எழும்பூர் |
| | 2. திருவல்லிக்கேணி |
| | 3. மயிலாப்பூர் |
| | 4. தேனாம்பேட்டை |
| | 5. அசோக் நகர் |
| | 6. சைதாப்பேட்டை |
| | 7. கிண்டி |
| | 8. ராஜ்பவன் |
| | 9. தாம்பரம் |
| | 10. அம்பத்தூர் |
| செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். கோட்டம் .. | 1. காஞ்சிபுரம் |
| | 2. ஸ்ரீ பெரும்புதூர் |
| | 3. மதுராந்தகம் |
| | 4. செங்கற்பட்டு |
| | 5. திருவள்ளூர் |
| | 6. கும்மிடிப்பூண்டி |
| | 7. மறைமலைநகர் |
| | 8. செங்குன்றம் |
| | 9. உத்திரமேரூர் |
| | 10. பொன்னேரி |
| | 11. திருத்தணி |
| | 12. திரூர் |



### 2. மத்திய மண்டலம், திருச்சி—56

| கோட்டத்தின் பெயர் | தீயணைப்பு நிலையத்தின் பெயர் |
|---|---|
| திருச்சிராப்பள்ளி கோட்டம் .. | 1. திருச்சிராப்பள்ளி |
| | 2. ஸ்ரீரங்கம் |
| | 3. முசிறி |
| | 4. துறையூர் |
| | 5. பெரம்பலூர் |
| | 6. ஜெயங்கொண்ட சோழபுரம் |
| | 7. கரூர் |
| | 8. மணப்பாறை |
| | 9. அரியலூர் |
| | 10. புள்ளம்பாடி |
| | 11. அரவங்குறிச்சி |
| | 12. புகளூர் |
| | 13. நாவல் பட்டு |
| தென்னார்காடு கோட்டம் .. | 1. கடலூர் |
| | 2. சிதம்பரம் |
| | 3. நெல்லிக்குப்பம் |
| | 4. பண்ருட்டி |
| | 5. விருத்தாசலம் |
| | 6. உளுந்தூர்பேட்டை |
| | 7. காட்டுமன்னார்கோவில் |
| | 8. குறிஞ்சிப்பாடி |
| | 9. திட்டக்குடி |
| | 10. கடலூர் (சிப்காட்) |
| | 11. வேப்பூர் |
| விழுப்புரம் கோட்டம் .. | 1. விழுப்புரம் |
| | 2. கள்ளக்குறிச்சி |
| | 3. திண்டிவனம் |
| | 4. செஞ்சி |
| | 5. திருக்கோயிலூர் |
| | 6. சங்கராபுரம் |
| | 7. மரக்காணம் |